ஸ்ரீ:

312

# நாலடியார்

மூலமும்

சங்கசிந்தாமணி · ஆசிரியரும்

அகநானூற்றுப் பதிப்பாசிரியருமான

வே. ராஜகோபாலையங்கார்

எழுதிய உரையும்

சென்னை: மயிலாப்பூர்

கம்பர் விலாஸம்

ப்ரபவ௵ சித்திரைமீ

ரூ. 1-8

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

ஸ்ரீ.

# இப்புத்தகத்தில் அடங்கியவை

1. முகவுரை
2. சோதனைப் பத்திரம்
3. இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர் முதலி யனவும் அவற்றின் குறியீடுகளும்
4. நாலடியார் ஆராய்ச்சி
5. நாலடியார் மூலம்
6. ஷை குறிப்புரை
7. ஷை குறிப்பகராதி
8. செய்யுண் முதற் குறிப்பகராதி

ஸ்ரீ:

# சோதனைப் பத்திரம்

| பக்கம் | வரி | பிழை | | திருத்தம் |
|---|---|---|---|---|
| 29 | 17 | கிதை | ... | சிதை |
| 41 | 11 | கூடைரசே | ... | கூடைரச்சே |
| 43 | 4 | விடை | ... | விட |
| ,, | 14 | வறு | ... | மறு |
| 47 | 7 | பறம்பபயி | ... | பறம்பப்பயி |
| 50 | 3 | கிறந்த | ... | சிறந்த |
| 52 | 20 | மிலரொன் | ... | மிலமென் |
| 54 | 8 | யுறம் | ... | யுறழ் |
| 58 | 6 | கண்மரபி | ... | கணமர்வி |
| 106 | 22 | உடம்மை | ... | உடம்பை |
| 121 | 10 | உண்டவ | ... | உண்டாவ |
| 131 | 7 | றளர்ந்த | ... | றளர்த |
| 139 | 2 | செம்ம | ... | சம்ம |
| 177 | 15 | மந்த | ... | மாந்த |
| 189 | 18 | காண்ணை | ... | கண்ணை |

ஸ்ரீ:

# முகவுரை

தமிழ் நன்மக்களால் மேற்கணக்கு கீழ்க்கணக்கு
று பாகுபடுத்துக் கொள்ளப்பெற்ற பனுவல்வகையுள்
டியார் என்ற இந்நூல் பிற்கூறிய கீழ்க்கணக்கு வகை
ள் ஒன்று. கீழ்க்கணக்கு நூல்களாவன: நாலடி, நான்
க்கடிகை, இனியதுநாற்பது, இன்னாநாற்பது, கார்
பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணை
பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்
, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழ
ழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி
நிலை என்ற பதினெட்டுமாம். இதனை,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மிந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பதூஉங்
கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு"

பதனால் அறிக. இதனுள் நானாற்பது ஐந்திணை
பதனை நான்கு நாற்பது நான்கு ஐந்திணை எனக்
ள்க. நான்கு நாற்பதாவன இனியது, இன்னா, கார்,
வழி என்ற நாற்பதுகள். நாலைந்திணையாவன ஐந்
ணையம்பது முதலாகத் திணைமாலை நூற்றைம்பது

ஈறுகவுள்ள நான்குமாம். கீழ்க்கணக்கு எனப்படுவது, ஐம்பது முதலாக ஐந்நூறு இறுதியாக வுள்ள பாக்களை யுடையதாய், அறம் பொருள் இன்பங்களை விஷயமாக் கொண்டு வெண்பா என்ற ஒரு வகைப்பாவால் ஆக்கப் படுவது. இதனை,

"அகவலும் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறு
மிகுத்துடன் றொகுப்பது மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையும் அவ்வகை எண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே"

எனவும்

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்"

எனவும் வரும் பன்னிருபாட்டியற் சூத்திரங்களான் உணர்க. இவ்வாறு இதற்குப் பாவின் வரையறையும் எண்ணின் வரையறையும் கூறினாராயினும், சிறுபான்மை வெண்பாவினை லன்றி,அதன் இனமான வெண்செந்துறை யும் வருமெனவும், ஐம்பதிற் குறைந்து நாற்பதிலும் ஐந் நூற்றின் மிக்கு ஆயிரத்து முந்நூற்று முப்பதிலும் இயலு மெனவும் கொள்க.

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என வெண் செந்துறைப்பா முதுமொழிக் காஞ்சி யின் வந்தது. இனியது, இன்னா, கார், களவழி என்ற நான்கும் நாற்பது நாற்பது வெண்பாக்களான் வந்தன. திருக்குறள் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்வெண் பாவான் வந்தது.

இப்பனுவல்களுள் அறத்தையே முதன்மையாகக் கொண்டு இயலுவனவும், பொருளையே தலைமையாகக் கொண்டு விளங்குவனவும், இன்பத்தையே சிறப்பாகக் கொண்டு திகழ்வனவும் உள. கார்நாற்பதும் நாலு ஐந்திணைகளும் கைந்நிலையும் இன்பம் ஒன்றனையே விஷயமாக உடையன; களவழிநாற்பது பொருள் ஒன்றையே குறித்தியலுவது; நாலடி, நான்மணி, இனியது, இன்னா, முப்பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம், காஞ்சி, எலாதி என்ற பதினொன்றும் அறத்தை முதன்மையாகக்கொண்டு சிறப்பன. இப்பதினோ ரறநூலுள்ளும் ஆன்றோரால் 'நாலுமிரண்டுஞ் சொல்லுக் குறுதி' எனப் பாராட்டிப் புகழப்பெறுவன நாலடியாரும், திருக்குறளுமேயாம். இவ்விரண்டனுள்ளும் நாலடியார் வைராக்கியத்தைப் போதிப்பதிலும் உலக அனுபவத்தினைப் பொருத்தி உதாரணங் காட்டிக் கற்போர் நெஞ்சம் தீயவழியிற் செல்லாவண்ணம் கழறி நிறுத்துவதிலும் திருக்குறளினும் சாலச்சிறந்ததெனக் கூசாமற் கூறலாம்.

அவையறிதல் என்னும் அதிகாரத்து, சொற்களின் பொருளினை அறிதல் மிக அரிது, அதனை அறிந்தவனே அவைக்கு நாயகமாவான் என்னும் கருத்தடங்கிய,

'பெறுவது கொள்பவர் தோள்போல் நெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளியநூல்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்'

என்னு மிப்பாடலை நோக்குந்தோறும் கற்றோர் நெஞ்சங் களிக்காதிராது. பேதைமை என்னு மதிகாரத்து,

'கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும்—தானுரைப்பின்

மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப்படும்'

என்ற பாடலும் அமிழ்தினுமினியதே யன்றோ! கீழ்மை என்னும் அதிகாரத்து,

'காழாய கொண்டு கசடற்றோர் தஞ்சாரற்
றாழாது போவாம் எனவுரைப்பிற்—கீழ்தான்
உறங்குவாம் என்றெழுந்து போமாயஃ தன்றி
மறங்குமாம் மற்றொன்று சூழ்ந்து'

எனவும்

'பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கு—மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினும்கீழ் செய்யும்
கருமங்கள் வேறு படும்'

எனவும்,

'மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினும் செருப்புத்தன் காற்கேயாம்
எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்'

எனவும் உள்ள பாடல்களும் கற்றோர் உள்ளத்தினைக் கவராதிரா. இன்னும் கூடாநட்பு, அறிவின்மை, கயமை, பொதுமகளிர், கற்புடை மகளிர் என்னும் அதிகாரங்களுள்ளும் பலபல பாடல்கள் நாவினை விட்டு அகலாது இனித்தலை இந்நூல் கற்போர் எளிதிலுணர்வர்.

நிற்க இந்நூல் மற்றப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப்போல ஓர் ஆசிரியராற் பாடப்பெற்ற தொன்றன்றாகும். இஃது,

'எண்பெருங் குன்றத் தெணாஅ யிரமிருடி'

என்றும்,

'மன்னன் வழுதியர் கோன்'

என்றும் தொடங்கும் வெண்பாக்களான் உணரப்படும்.

இந்நூலில் ஐம்பத்திரண்டு பாக்களில் ஆடூஉ முன்னிலைகளும், ஆறுபாக்களில் மகடூஉ முன்னிலைகளும் பயின்றுள்ளன. அவ்வாடூஉ முன்னிலைகளுள் ஊர என மருதநிலத்தலைவனாக ஓரிடத்தும், வரைநாட மலைநாட குன்றநாட சாரல்நாட கானகநாட எனக் குறிஞ்சிநிலத் தலைவனாக முப்பத்திரண்டிடத்தும், கடற்சேர்ப்ப சேர்ப்பனெனநெய்தல்நிலத் தலைவனாகப் பதினெட்டிடத்தும், 'ஐய' எனப்பொதுவாக ஓரிடத்தும் பயின்றுள்ளன. இவற்றால் இம்முன்னிலைகட்கு விஷயமாக நிற்பவன் மலைவளனும் கடல்வளனும் மிகுதியாக வுடையவன் என்றும் நெல்வளன் சிறுபான்மை யுடையான் என்றும் ஊகித்தற்கிட னாகின்றது. அம்மலைவளன் கடல்வளன்களுள்,

'மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப' (224)

எனவும்,

'கனமணி

முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப' (146)

எனவும்

'சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட' (234)

எனவும் பயின்றுள்ளன ஆராயத் தக்கன. இவற்றுக்கு, முத்துக்களை அலைகள் கரையிலே கொணர்ந்து சேர்க்க, அவற்றை விசையாக வரும் கப்பல்கள் அலைத்து விடுகின்ற கடற்கரையை யுடையாய் என்பதும், மிக்க மணியோடும், முத்தோடும் விளங்கும் ஒலிக்கின்ற கடலடுத்த குளிர்ந்த சேர்ப்ப என்பதும், சந்தனமரங்கள்

மிகவுள்ள சோலைகளையுடைய மலைநாட என்பதும் பொருளாம். ஆகவே, சந்தனம் முத்து என்ற இவ் விரு வளன்களையும் உடைய நாடனை இந்நூலாசிரியர் முன்னிலைப் படுத்துள்ளார் என்பது புலனும். அத்த கையநாடு எஃதென்று ஆராயுமிடத்து, சீதாப்பிராட் டியாரைத் தேடுமாறு வானரவீரர்களைத் தென்திசை யிற் செல்லப் பணித்த சுக்கிரீவன் பாண்டிநாட்டி னைக் குறிக்கும்போது மணிமுத்துக்களால் அலங்கரிக் கப்பெற்ற கவாடத்தை யுடையது அந்நாடு என்று வருணிப்பதாக வால்மீகி பகவான் கூறுவதனின்றும், மிகப் பழைய காலந்தொட்டே முத்துக்கள் மலிந்த நாடு பாண்டி நாடென்பது அறியலாகும். கடைச்சங்க காலத்திலும்கூட அந்நாடு முத்திற்கும் சந்தனத்திற்கும் பெயர்போனதென்பது,

'தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முனைதிறை கொடுக்கும் துப்பிற் றன்மலைத்
தெறலரு மரபிற் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபே ராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பிற் றென்னவன்' (அகம் 13)

எனவும்,

'நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளிய
வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே' (புறம் 58)

எனவும் கூறப்படுதலான் அறியப்படும்.

இனி, பூங்குன்றநாட என இந்நூல் 128, 212 ஆம் பாடல்களில் முன்னிலைப் படுத்துள்ளவனும் ஈண்டு ஆராயற்பாலன். பூங்குன்றம் என்ற நாடு பண்டைச்

சங்க காலந்தொட்டே கேட்கப்படும் ஒரு நாடாகும். கணியன் பூங்குன்றனார் என்றொரு சங்கப் புலவர் நற்றிணையிலும் புறத்திலும் பாடிய ஆசிரியருள் ஒருவராவர். இவர் ஊரைத் தலைமையாகக் கொண்ட நாடு ஒன்றினுக்கு அரசனை இந்நூலாசிரியர் முன்னிலைப் படுத்துப் பாடியுள்ளார். இப்பூங்குன்றம் இப்போது மதுரை ஜில்லாவில் உள்ளதெனத் தெரிதலால் பூங்குன்ற நாடன் ஆவன் பாண்டியனே எனத் துணியப் படும். பெருமுத்தரையர் என்ற ஒருவர் இந்நூல் 200, 296 ஆம் பாடல்களிற் புகழப் பெறுகின்றார். இவரைப் பலரும் பலபடியாகக் கூறுவராயினும், இவரும் பூங்குன்ற நாட என்றும் 'முத்தோடிமைக்கும் முழங்குவரித் தண் சேர்ப்ப' என்றும் 'முத்தம், நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப' என்றும் முன்னிலைப்படுத்துக் கூறப்படுகின்றவரும் ஒருவரே எனத் துணிதற்கு இடனாகின்றது.

இனி இந்நூலின் காலத்தினைப் பற்றி நவீன நூலுணர்ச்சியாளர்கள் பலவாறு கூறுவராயினும், இது சங்க மருவிய மேற்கணக்கினோடு ஒரு காலத்தது என்று தமிழ் நன்மக்களாற் கொள்ளப்பட்டதாதலின் அதற்கு முரணான எந்தக்கோட்பாட்டினையும் நல்லறிவாளர் செவியில் ஏற்றுக்கொள்ளாரென்பதே துணிபு. தொல்காப்பியத்திற்கு உரையிட்ட இளம்பூரண அடிகள், பேராசிரியர், கல்லாடர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் தம் உரையகத்தே எட்டுத்தொகை நூல்களினின்றும் மேற்கோள்கள் காட்டுவது போல இந்நாலடியாரினின்றும் மேற்கோள்கள் காட்டிச் செல்வதனால், அன்னார் இதனைப் பிரமாணங்காட்டத் தக்கதொன்னூலுள் ஒன்று என்று கொண்டாரென்பது வெளிப்படை. 'நார்த்தொடுத் தீர்க்கிலென்',

'குடரும் கொழுவும்', 'மாண்ட குணத்தொடு', 'கடியெனக்கேட்டும்' என்று தொடங்கும் பாடல்களை நோக்கும்போது, பௌத்த ஜைனமதக் கொள்கைகள் தமிழ்நாட்டில் ஊன்றிப் பரவிய காலத்தே அஃதாவது மணிமேகலை சரிதைதோன்றிய காலத்தே இந்நூல் ஆக்கப்பட்டிருக்கலாம் என ஊகித்தற்கிடனுகின்றது.

மற்றும், இந்நூலின் 'மேன்மக்கள்' என்னும் அதிகாரத்துக் காணப்படும்,

'உடைய, பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து'

என்ற அடிகளையும் ஆராய்வோம். இவற்றின் பொருள் 'ஸகல ஐசுவரியமும் உடைய குகையை ஒருவன் பெற்றதுபோல அல்லவா நல்லகுலத்துப் பிறந்த மேன்மக்களை ஒருவன் நட்புக்கொண்டானுயின்' என்பதாம். இவ்வுவமையைக்கவி வாளாதே கூறிப்போந்தார் என்று கருதியொழியாது, ஏதோ ஒருபழஞ் செய்தியை உட்கொண்டே இவ்வாறு கூறியிருத்தல் வேண்டும் எனக்கொள்ளின், மாங்குடி மருதனர் மதுரைக் காஞ்சியுள்ளே கூறிய,

'தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி'

என்ற அடிகளிற் காணப்படும் ஒரு பழஞ்செய்தி நம் ஞாபகத்துக்கு வருகின்றது. இவ்வடிகளுக்கு ஆசிரியர் நச்சினர்க் கினியர், 'தென்திசை நிலத்தின் மலைகளெல்லாம் நிறையும்படிவாணன் என்னும் சூரன்வைத்த சீரிய பொருட்டிரள்'என்று உரை கூறிப்போந்தார். மாங்குடி மருதனர் காலத்துப் பெருநிதி மலைக்குகைகளில் சேமிக்கப்பெற்றிருந்த இத்தகைய செய்தி ஒன்று தமிழ் நாட்

டிற் பெருவழக்காக இருந்தது போலவே இந்நூலிற் செய்யுள் செய்த புலவர் காலத்தும் இச்செய்தி பெரு வழக்காக இருந்ததெனக் கொள்வதற்குத் தடையில்லை, மற்றும், 'வலம்படு முரசிற் சேர லாதன்........நன்னகர் மாந்தை முற்றத் தொன்னூர், பணிதிறை தந்த பாடுசா னன்கலம், பொன்செய் பாவை வயிரமொ டாம்பல், ஒன்றுவாய் நிறையக் குவைஇ யின்றவண், நிலந்தினத் துறந்தநிதியம்' என்றும், 'நன்னனுதியனருங்கடிப்பாழித், தொன்முதிர்வேளிர் ஓம்பினர்வைத்த, பொன்' என்றும், 'அணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண், வேண்முதிர் மாக்கள் வியனகர்க் கரந்த, அருங்கல வெறுக்கை' என்றும், 'பல்புகழ் நிறைந்த வெவ்போர் நந்தர், சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை, நீர்முதற் கரந்த நிதியம்' என்றும் (அகம் 127, 258, 265, 372) சங்கநூல்களிற் பெருநிதி நகரங்களிலும், யாற்றின் அடியிலும் சேமிக்கப் பெற்றிருந்த வரலாறு பேசப்படுதல்போல, இந்நூலிலும் பேசப் படுதலால், இது சங்ககாலத்து நூலென்றுதல், அதை ஒட்டிய நூலென்றுதல் கொள்ள யாதோரிழுக்கு மில்லை என்க.

இந்திரனை இறப்பச் சிறந்த தெய்வமாகக் கொள்ளும் ஜைன பௌத்த மத வழக்குப்பற்றி இந்நூலிலும்,

'சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்—எக்காலும்
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனா வெண்ணி விடும்'

என்றும்

'அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்
செங்கண்மா லாயினும் ஆகமன்—தம்கைக்

கொடுப்பதோன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தம் கையாற் றொழுது'

என்றும் இந்திரன் உவமை கூறப்படுகிறான். இந்திரனே யன்றி அவன்தேவியான இந்திராணியும் இறப்புச்சிறந்த தலைவிக்கு உவமையாக

'அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை'

என்று பாடப் பெற்றனள். நச்சினார்க்கினியரும் சிந்தாமணியுரையில் இந்நூலிலுள்ள 'சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா' என்ற பாடலைக் காட்டி, இதன் ஆசிரியர் ஜைன சமயத்தார் என்று கூறினர். இந்நூலினுக்குப் பால் இயல்கள் வகுத்த பதுமனாரும் "எட்டுமலைச் சாரலில் சமண முனிவர்கள் எண்ணாயிரவர் வசித்து வந்தார்கள். அவர்கள் தனித்தனி ஒவ்வொரு வெண்பாப் பாட,..........அவற்றுள் ஒரே விஷயத்தினை ஒவ்வொரு கருத்தால் தனித்தனி கூறும் நானூறு பாடல்களைப் பொறுக்கிச் சேர்த்து..............முடித்தாம்'' எனக் கூறினர். ஆகவே சமண முனிவர் பலரால் இந்நூல் பாடப் பெற்றதென்னும் கொள்கை வலியுறுகின்றது.

இந்நூலினை யான் ஓரிருபது வருடங்கட்குமுன் நற்றிணை யுரையாசிரியரும் என் மனத்தே யாண்டு முறைந்து என்னை அநுக்ரஹித்து வருபவருமான காலஞ் சென்ற பின்னத்தூர் அ. நாராயண ஸ்வாமி ஐயரவர்கள் பால் பாடங்கேட்டு வந்த காலத்து, அப்பெரியாரிடத்திருந்த இந்நூலின் இரண்டு ஏட்டுப் பிரதிகளுள் பல பல அரிய பாடபேதங்களும் உரை நயங்களும்

காணப்பட, அவற்றினை அவர்கள் ஆணையின்படி நான் என் புத்தகத்திற் குறித்துக் கொண்டிருந்தேன். அவ்விரண்டு ஏட்டுப் பிரதிகளுள் ஒன்றில் மாத்திரம் பதுமனார் விருத்தி என்று வரையப்பெற்றிருந்தது. மற்றொன்றிலுள்ள உரைப்பகுதியோ சிற்சில பாடல்களுக்கு முன்னைய ஏட்டிலுள்ள உரைக்குச் சிறிது மாறுபட்டிருந்தது. இவ்வுரையினை 'என்பது ஒரு பழைய உரை' என்று இந் நூற் பதிப்பிற் காட்டியிருக்கிறேன். இப் பிற்கூறிய உரையோடு பெரும்பாலும் ஒத்திருந்தது சென்னை அடையாற்றுக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள ஒரு பிரதி. இப்பிரதி அவ்வடையாற்றுக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் அ. கோபாலையரவர்கள் முயற்சியாற் பெற்றது. இப்பெரு நன்றி செய்த அவர்களை யான் என்றும் மறவேன்.

இவ்விருவகை யுரைகளையும் நோக்கி மகிழ்ந்த என் நண்பரிற் சிலர் இந்நூலை இவ்வுரைகளுடன் அச்சிற் பதிப்பித்தல் நலமெனப் பலகாலும் தூண்டி வந்ததோடு, அச்சிடற்கு வேண்டிய உதவிகளும் செய்வதாக வாக்களித்தமையால் துணிவுகொண்டு இதனை அச்சிட ஆரம்பித்தேன். இதனிடையில் சென்னை இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி ஒன்று கிடைக்கப் பெற்று, என் சிற்றறிவிற்கு எட்டியமட்டும் மூலத்தையும் உரையையும் ஒருவாறு சோதித்துச் சுருக்கமான உரைக் குறிப்புக்களோடும், நூலாராய்ச்சிக்கு இன்றியமையாத அரும்பத அகராதி முதலியவற்றோடும் அச்சிட்டு நிறைவேற்றினேன். இவ்வுரைகளின் சிறப்பினை இப்புத்தகத்தில் ஆங்காங்கு நோக்கி மகிழ்க.

இந்நூல் அச்சாகுங் காலத்து எனக்கு நேர்ந்த பல ஐயங்களைத் தெளிவித்தும் அப்போதைக் கப்போது எவ்

வளவு ஆயிற்று என்று அன்புடன் உசாவியும் என்னை ஊக்கியருளிய சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ப்ரஹ்ம ஸ்ரீ இ. வை. அநந்தராமைய ரவர்கள் திருவடிகளையும், யான் வேண்டியவண்ணம் உரிய பல திருத்தங்களைச் செய்தும் அச்சுப் பிரதியிற் பிழைகள் மலியாவண்ணம் ஊக்கத்துடன் சோதித்தும் அருள் புரிந்த சென்னை லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. மு. இராகவையங்கார் திருவடிகளையும் என்றும் மறவாத கடப்பாடுடையேன்.

இந்நூற் பதிப்பின்கண் என் அறியாமையாலும் நோய்காரணமாக எழுந்த அயர்ச்சியாலும் மனுஷ்ய ஸகாயமின்மையாலும் பல பிழைகள் காணப்படலாம். அறிஞர்கள் அவற்றினைப் பொறுத்துக் கொள்வார்களென்று நம்புகிறேன்.

மற்றுமிவ்வாறே திரிகடுகம் முதலிய நீதி நூல்களையும் பழைய உரையோடும் குறிப்புக்களோடும் பதிப்பிக்கவிருக்கிறேன். இத்துறையிற் பிரவர்த்திக்குமாறு என்னைத் தூண்டிவரும் ஸர்வேச்வரன் அந்நூல்களையும் முற்றுவித்தருள்வன் என அவன் திருவடித் தாமரைகளை அநவரதம் உபாஸிக்கின்றேன்.

கம்பர்விலாஸம்
மயிலாப்பூர்
ரக்தாக்ஷி ஹு பங்குனிமீ

இங்ஙனம்,
வே. இராஜகோபாலையங்கார்

ஸ்ரீ:

# இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூலின்பெயர் முதலியனவும் அவைகளின் குறியீடுகளும்

அகநானூற்று உரைகாரர் (அகம உரை)
அகநானூறு (அகம்)
அதிகாரம் (அதி)
ஆசாரக்கோவை (ஆசார)
ஆசிரியர் நல்லந்துவனர் (அந்துவன்
இளம்பூரணர் (இளம்)
இறையனர் களவியல் (இறை. களவு.)
இனியது நாற்பது (இனியது)
ஏலாதி (ஏலா)
கம்பராமாயணம் (கம்ப)
ஆற்றுப்படலம் (ஆற்று)
நகரப்படலம் (நகர)
கலித்தொகை (கலி)
சாரங்கதரன் கரிதை (சாரங்க)
சிலப்பதிகாரம் (சிலப்)
மங்கலவாழ்த்துப்பாட்டு (மங்கல)
மனையறம் படுத்தகாதை (மனையறம்)
அறங்கேற்றுகாதை( அரங்கு)
இந்திரவிழவூரெடுத்த காதை (இந்திர)
கடலாடுகாதை (கடலா)
கானல்வரி (கானல்)
கனுத்திற முரைத்தகாதை (கனு)
நாடுகாண்காதை (நாடு)
ஊர்காண்காதை (ஊர்காண்)
கொலைக் களக்காதை (கொலை)
துன்பமாலை (துன்ப)
ஊர்சூழ்வரி (ஊர்சூழ்)
அரும்பதவுரைகாரர் (அரும்பத)
அடியார்க்குநல்லார் (அடியார்
சீவகசிந்தாமணி (சிந்.)
சூத்திரம் (சூ.)
சேனுவரையர் (சேனு)
திரிகடுகம் (திரி; திரிக)
திருக்குறள் (குறள்)
திருக்கோவையார் (திருக்; கோவை
திருவாய்மொழி ஈட்டுரை (திருவாய். ஈடு)
தொல்காப்பியம் (தொல்.)
எழுத்ததிகாரம் (எழுத்து)
சொல்லதிகாரம் (சொல்.)
பொருளதிகாரம் (பொருள்)
செய்யுளியல் (செய்யுள்)
நச்சினர்க்கினியர் (நச்.)

நன்னூல் (நன்.)
உயிரீற்றுப்புணரியல் (உயிர்)
நான்மணிக்கடிகை (நான்மணி)
பதிற்றுப்பத்து (பதிற்.)
பதுமனுர் (பதுமன்)
பரிப்பெருமாள் (பரிப்)
பரிபாடல் (பரி)
பரிமேலழகர் (பரிமே)
பழமொழி (பழ)
பழைய உரை (ப. உரை; ப.உ)
பாடபேதம் (பா)
பாயிரம் (பாயி)
பிங்கலநிகண்டு (பிங்கல)
வானவர்தொகுதி (வானவர்)
புறநானூறு (புறம்)
புறப்பொருள் வெண்பாமாலை (வெண். மா)
பெரும்பாணாற்றுப்படை (பெரும்பாண்)
பேராசிரியர் (பேரா.)
மணிமேகலை (மணி)
மதுரைக்காஞ்சி(மது; மதுரை)
மயிலைநாதர் (மயிலை)
மோகவதைப்பரணி (மோக.)
வீரசோழியம் (வீர.)
அலங்காரப்படலம் (அலங்)

ஸ்ரீ:

# நாலடியார் ஆராய்ச்சி

## 1 ஊர்வன விலங்கு முதலியன

அரவு, 241
அரிமா, 141
அலவன், 123
அன்றில், 376
ஆ, 101
ஆமா, 377
ஆமை, 331
ஆன்கன்று, 101
ஈ, 41
எருவை, 351
கடமா, 300
கயல், 44
கலை, 399
கழுகு, 48
களிறு, 192
காக்கை, 41
கிளி, 283
குண்டை, 350
குதிரை, 398
குறும்பூழ், 122
கோழி, 341
சிதலை, 147
சிரல், 395
சிவல், 122
சேமா, 377
தகர், 376
தேரை, 193
தேனீ, 10
நரை 186
நாய், 70
பரிமா, 149
பன்றி, 257
நாகம், 240
பாம்பு, 126
புல்வாய், 149
புலி, 193
மந்தி, 237
மலங்கு, 375
மறி, 16
மான், 378
முயல், 176
யானை, 3
வண்டு, 29
வாவல், 26
விரியன், 33
வேங்கை, 240

## 2 மரம்புதல் முதலியன

அடம்பு, 107
ஆம்பல், 286
ஆலமரம், 197
கண்டல், 194
கமுகு, 219
கருணை, 200
கரும்பு, 34
கள்ளி, 262
களங்கனி, 103
காஞ்சிரம், 217

காந்தள், 283
இடை, 360
குவளை, 44
கோங்கு, 223
சந்தனம், 180
சாய், 389
சுரை, 315
தெங்கு, 216
நீலம், 374
பனை, 96
பாதிரி, 139
பெண்ணை, 216
பேய்ச்சுரை, 149
மரையிலை, 359
முல்லை, 45
விளவு, 261
வட்டு, 264
வழுதுணை, 264
வேங்கை, 180
வேம்பு, 112

## 4 ஒலிக்கருவி தொழிற்கருவிகள்

தண்ணம் 6
துடி 388
நெய்தற்பறை 392
பிணப்பறை 23
மணப்பறை23
முரசு 100
உளி 355
குறடு 208
சுட்டுக்கோல் 208
முட்டிகை 208
மூழை 321

## 5 சில விலங்குகளின் இயற்கை

அன்றில் துணைபிரியாதென்பது
ஆமா நக்கிக் கொல்லுமென்பது
கடமா தொலைச்சிய வேங்கை இடம்படினுண்ணாதென்பது
தகர் போர் செய்யுமென்பது
மலங்கு ஒருதலையை மீனுக்கும் ஒரு தலையைப் பாம்புக்கும் காட்டிப் பிழைத்து ஓடிப் போகுமென்பது
அரவு இடிக்கு அஞ்சுமென்பது.
கோழி குப்பையைக் கிளறுமென்பது
நாகம் விரியன் பெடையோடு கூடின் அற்பஆயுளுள்ள நாகத்தினைப்பெறு மென்பது.
நாய் புறந்தரப் பெறினும் எச்சிற்கு அவாவுமென்பது.

## 6 பண்டை மக்களின் வழக்குக்கள்

அலவனைக்கால் முரித்துண்டல்
பன்றிக்குக் கூழ்வார்த்தல்
வெறியாட்டு எடுத்தல்
பிணத்தை நாரிற் பிணித்து ஈர்த்தல்; பார்த்தவிடத்திற் போகடல்
யாமையை உலையிலிட்டுஅடுதல்
யானையைக்கொண்டு போர்க்கெழல்
யானைமீதேறி உலாப்போதல்.
புல்வாய்க்குப் பருமம் அமைத்து வையமூர்தல்

ஸ்ரீ:

# நாலடியார்

## மூலம்

### கடவுள் வாழ்த்து

வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை — யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

முதலாவது

# அறத்துப்பால்

## 1. துறவறவியல்

### (1) செல்வ நிலையாமை

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் — வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று. 1

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்காற் போல வரும். 2

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு — மேனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள. 3

நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று. 4

என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னாவ தென்று பிடித்திரா — முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிறீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம். 5

இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை — யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும். 6

தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு — மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில். 7

செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வ — மெல்விற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும். 8

உண்ணா னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழந்தானென் றெண்ணப் படும். 9

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார் — கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி. 10

## (2) இளமை நிலையாமை

நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் — புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னாங் கெழுந்திருப் பார். 11

நட்புநா ரற்றன நல்லாரு மஃகினா
ரற்புத் தளையு மவிழ்ந்தன — வுட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன கலி. 12

சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறு — மிற்செறிந்து
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு. 13

தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டேன்று
வீழா விறக்கு மிவண்மாட்டுங் — காழில்லா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று. 14

எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள் — டனக்குத்தா
யாகி யவளு மதுவானாற் றாய்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு. 15

வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில். 16

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை — நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து. 17

பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
யிருசிகையு முண்டீரோ வென்று — வரிசையா
லுண்ணுட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணு ரறிவுடை யார். 18

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு. 19

ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்
றோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின் — பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று. 20

## (3) யாக்கை நிலையாமை

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் — நிலமிசைத்
துஞ்சினு ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினு ரிவ்வுலகத் தில். 21

வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால் — வாழ்நா
ளுலவாமு னொப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல். 22

மன்றங் கறங்க மணப்பறை யாயின
வன்றவற் காங்கே பிணப்பறையாப் — பின்றை
யொலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம். 23

சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை — நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து. 24

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு — மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொ டென்னும் பறை. 25

நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால். 26

படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் — தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல். 27

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க — யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும். 28

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை — யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லான். 29

கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள் — வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து. 30

## (4) அறன்வலி யுறுத்தல்

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார். 31

ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே — யோவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை. 32

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை — நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார். 33

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க — கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு. 34

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர். 35

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம். 36

மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவாற் — றொக்க
வுடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும். 37

உறக்குந் துணையதோர் ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங் — கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும். 38

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். 39

மான வருங்கல நீக்கி யிரவென்னு
மீன விளிவினால் வாழ்வேன்மன் — னீனத்தா
லூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின். 40

## (5) தூய்தன்மை

மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் புக்கில்லை — யாக்கைக்கோ
ரீச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல். 41

தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானுன் — மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும். 42

தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே — யெக்காலு
முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல். 43

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
வுண்ணீர் களைந்தக்கா லுங்குநுங் கிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன். 44

முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
வெல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன். 45

குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு — மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள். 46

ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப் — பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு. 47

பண்டம் மறியார் படுசாந்துங் கோதையுங்
கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொன் — மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தன்
முடைச்சாகா டச்சிற் றுழி. 48

கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி — யொழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து. 49

உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச் — செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர். 50

## (6) துறவு

விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் னில்லாதாம் பாவம் — விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது. 51

நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார் — தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில். 52

இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா — மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு. 53

துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
யின்பமே காமுறுவ ரேழையா — ரின்ப
மிடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தா ரான்றமைந் தார். 54

கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமாற் — றுணிவொன்றி
யென்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு. 55

மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற் — பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார். 56

ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கா
னீக்கி நிறூஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர். 57

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா — னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன். 58

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக் — கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காமை வீடு பெறும். 59

துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளா
ரின்பமே காமுறுவ ரேழையா — ரின்ப
மிசைதொறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல். 60

---

48 ஆம் பாட்டு 'கண்டுபோரா' என்றும் பாடம்.

## (7) சினமின்மை

மதித்திறப் பாரு மிறக்க மதியார்
மிதித்திறப் பாரு மிறக்க — மிதித்தேறி
யீயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று. 61

தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ — மண்டி
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர். 62

காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தம்மைச் சுடுதலா — லோவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து. 63

நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ — ரோர்த்ததனை
யுள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ். 64

இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய — னெல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. 65

கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப — ரொல்லை
யிடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு. 66

மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
யாற்றாமை யென்னா ரறிவுடையா — ராற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று. 67

நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு — மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம். 68

உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு — முபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில். 69

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை — நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு. 70

## (8) பொறையுடைமை

கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க — பேதை
யுரைக்கிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையால்
வழுக்கிக் கழிதலே நன்று. 71

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற் — றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும். 72

காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவந்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ — போதெல்லா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
வாவ தறிவார்ப் பெறின். 73

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து — பெறுவதனா
வின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது. 74

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயி
னாற்றுந் துணையும் பொறுக்க பொறானாயிற்
றூற்றாதே தூர விடல். 75

இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது — துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது. 76

பெரியார் பெருநட்புக் கோடறாஞ் செய்த
வரிய பொறுப்பவென் றன்றோ — வரியரோ
வொல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர். 77

வற்றிமற் றாற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க — வற்ற
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார். 78

இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினு
மின்பத்தின் பக்க மிருந்தைக்க — வின்ப
மொழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை. 79

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க — வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல். 80

## (9) பிறர்மனை நயவாமை

அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலையா — னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றார
நம்பற்க நாணுடை யார். 81

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா — பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள். 82

புக்க விடத்தச்சம் போதரும் போதச்சந்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றாமைக் காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல். 83

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுமா லச்சமா — நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு. 84

செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ — யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
யலியாகி யாடியுண் பார். 85

பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க — மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்றொருவ
னேதின் மனையாளை நோக்கு. 86

அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று — நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து. 87

பரவா வெளிப்படா பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமநோ யோஒ கொடிதே
விரவாரு ளுணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும். 88

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் — வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும். 89

ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு — நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும். 90

## (10) ஈகை

இல்லா விடத்து மியைந்த வளவினா
லுள்ள விடம்போற் பெரிதுவந்து — மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு. 91

முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள — கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து. 92

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால். 93

இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மி — னும்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர். 94

மறுமையு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல் — வறுமையா
லீத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும். 95

நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்க
ளிடுகாட்டு ளேற்றைப் பனை. 96

பெயற்பால் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினுங் — கயப்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
வென்னை யுலகுய்யு மாறு. 97

ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா மாண்கட — னாற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து. 98

இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க முறைப்புதவி
னையம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும். 99

கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல். 100

## (11) பழவினை

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் — தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. 101

உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு — மொருவழி
யொன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து. 102

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில். 103

உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில். 104

திணைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற. 105

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற் — கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று. 106

இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லா — மடம்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும். 107

அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல் — வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும். 108

ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார் மற்றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது. 109

சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனா
லிறுகாலத் தென்னை பரிவு. 110

---

92 ஆம் பாட்டு 'முன்னர், பின்னர்' இடமுணர்த்தின. மது. 41.

## (12) மெய்ம்மை

இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை — நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து. 111

தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவ — ரக்காம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு. 112

காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவ — ரேலா
விடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர். 113

வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதா னெய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர். 114

நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர் வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல். 115

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார் — தடங்கண்ணா
யுப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பறா பேய்ச்சுரையின் காய். 116

தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
வென்னை யவரோடு பட்டது — புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
வுறற்பால யார்க்கு முறும். 117

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் — பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள ளீங்கு. 118

யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ ருபாயத்தின் வாழாதார் — யாஅ
ரிடையாக வின்னாத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார். 119

தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை — யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயனின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது. 120

## (13) தீவினையச்சம்

துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு — தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு. 121

இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர் — சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார். 122

அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே — யக்கா
லலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால். 123

நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும் — பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து. 124

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் — வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 125

சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயிற் — சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து. 126

யாஅ ரொருவ ரொருவர்தம் முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர் — சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு. 127

---

113 ஆம் பாட்டு 'கண்ணாடியன்ன' என்னும் சிந்தாமணிச் செய்யுளில் 'கண்ணாடி வென்று' என்னுமிடத்து 'கண் எல்லாரிடத்தும் உலாவி வென்று' என்று உரை கூறி, 'காலாடுபோழ்தின்' என்றாற்போல என்றார் நச். சிந்தாமணி **2327**. காலாடு போழ்தின் - செல்வாக்குச் சென்றுகொண் டிருக்கும் காலத்தில்.
**116** 'பெய்தடினும்' உயர்வு சிறப்பும்மை தொல். சொல். **257**. நச்.

உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை — தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும். 128

ஒக்கிய வொள்வாட் டென்னூர்கைப் பட்டக்கா
லூக்க மழிப்பதூஉ மெய்யாகு — மாக்க
மிருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு. 129

மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே — யெனைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனோ வில்லை யுயிர்க்கு. 130

குறிப்பு : 'பொறையுடைமை' என்னும் அதிகாரம் முதல் 'தீவினையச்சம்' என்னும் அதிகாரம் ஈறாக இல்லற வியலாகக் கொள்க. (130 ஆம் பாட்டு பாசம் - பிசாசு.)

இரண்டாவது

# பொருட்பால்

## 1. அரசியல்

### (14) கல்வி

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. 131

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து. 132

களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாகக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 133

ஞைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. 134

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல — தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. 135

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார் — காணு
யவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல். 136

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகவில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி. 137

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே — நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீர மிலாளர் தொடர்பு. 138

கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர் — தொல்சிறப்பி
னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. 139

அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங் — கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில். 140

## (15) குடிப்பிறப்பு

உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றா
ரிடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று. 141

சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது — வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு. 142

இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன — குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று. 143

நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு — மெல்லா
முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னோ
புணரு மொருவர்க் கெனின். 144

கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச — மெல்லா
மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார். 145

இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங் — கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
விற்பிறந்தார் கண்ணே யுள. 146

செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகு
மெவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை. 147

ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் — திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். 148

செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்விடத்துஞ் செய்யார் சிறியவர் — புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரா ணாற்றுத லின்று. 149

எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவ
ரற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும். 150

## (16) மேன்மக்கள்

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் — றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின். 151

இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர் — விசையி
னரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
வரிமாப் பிழைப்பெய்த கோல். 152

நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறா — ருரங்கவறா
வுள்ளமெனு நாரினாற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை. 153

செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படிற்
கல்வரையு முண்டா நெறி. 154

புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணாணல் பரிந்து. 155

கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
யிடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து. 156

கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார் — தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர். 157

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு. 158

பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை
யென்னானும் வேண்டுப வென்றிகழ்ப — வென்னானும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு. 159

உடையா ரிவரென் றொருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ — ருடைய
பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து. 160

## (17) பெரியாரைப் பிழையாமை

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும் — வெறுத்தபி
ணார்க்கு மருவி யணிமலை நன்னாட
போர்க்குதல் யார்க்கு மரிது. 161

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்து — மன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமி லறிவி னவர். 162

அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால — நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார். 163

விரிநிற நாகம் விடருள தேனு
முருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கு
மருமை யுடைய வரண்சேர்ந்து முய்யார்
பெருமை யுடையார் செறின். 164

எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று — தம்மை
யரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள். 165

நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை — விளிவின்றி
யல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு. 166

மன்னர் திருவு மகளி ரெழினலமுந்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா — துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லா
முழைதங்கட் சென்றார்க் கொருங்கு. 167

தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும் — பெரிய
வுலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டுங்
கலவாமை கோடி யுறும். 168

கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலு — மொல்வ
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண். 169

பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமை யடக்கந் — தெரியுங்காற்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தா
ரல்லல் களைப வெனின். 170

## (18) நல்லினஞ் சேர்தல்

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு — நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு. 171

அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். 172

அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற் — றொடங்கிப்
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு. 173

இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார் — பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின். 174

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா — மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. 175

ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின். 176

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாந் — தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து. 177

கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபு
லொல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம். 178

நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்ேறார் — கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும். 179

மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
வினத்தா லிகழப் படுவர் — புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனந் தீப்பட்டக் கால். 180

## (19) பெருமை

ஈத லிசையா திளமைசே ணீங்குதலாற்
காத லவருங் கருத்தல்லர் — காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள். 181

இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையா — ரச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தா
ரென்றும் பரிவ திலர். 182

மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மி — னறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறாங் காரண
மின்றிப் பலவு முள. 183

உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி
யிறைத்துணினு மூராற்று மென்பர் — கொடைக்கடனுஞ்
சாஅயக் கண்ணும் பெரியார்போன் மற்றையா
ராஅயக் கண்ணு மரிது. 184

உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற் — செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை. 185

பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோற் றோன்றுங் — கருநரையைக்
கொன்றன்ன வின்னா செயினுஞ் சிறியார்மே
லொன்றானுந் தோன்றா கெடும். 186

இசைந்த சிறுமை யியல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவா — மசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கட்
பகையேயும் பாடு பெறும். 187

மெல்லிய நல்லாருண் மென்மை யதுவிறந்
தொன்னாருட் கூற்றுட்கு முட்குடைமை — யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல். 188

கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று. 189

முற்றுற்றுந் துற்றினை நாளு மறஞ்செய்து
பிற்றுற்றுத் துற்றுவர் சான்றவ — ரத்துற்று
முக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாந்
துக்கத்து ணீக்கி விடும். 190

---

191 ஆம் பாட்டு ‘துஞ்சுக’, துஞ்சுவர்’ என்றும் பாடம்.

## (20) தாளாண்மை

கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போற்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு. 191

ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றன்
றாழ்வின்றித் தன்னைச் செயின். 192

உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு — மறிவினாற்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும். 193

இசையா தெனினு மியற்றியோ ராற்று
லசையாது நிற்பதா மாண்மை — யிசையுங்காற்
கண்ட றிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று. 194

நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள வல்லாற் பொருளில்லைத் — தொல்சிறப்பி
னொண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம். 195

ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடக்கி
யூக்க முரையா ருணர்வுடையா — ரூக்க
முறுப்பினா லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. 196

சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். 197

ஈனமா யில்லிருந் தின்றி விளியினு
மானந் தலைவருவ செய்பவோ — யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றா
ளரிமா மதுகை யவர். 198

தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங் — கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை. 199

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர் — கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும். 200

## 2. நட்பியல்

### (21) சுற்றந்தழால்

வயாவும் வருத்தமு மீன்றக்கா னோவுங்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும். 201

அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப் — பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன். 202

அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை
யெடுக்கல மென்னார் பெரியோ — ரடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு. 203

உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை — நிலைதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தா
லொற்கமி லாளர் தொடர்பு. 204

இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொ
லென்னு மிலரா மியல்பினாற் — றுன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
தலைமக்க ளாகற்பா லார். 205

பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்க
லக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலி
னுப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது. 206

நாள்வாய்ப் பெறினுந்தந் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகுங் — கேளா
யபராணப் போழ்தி னடகிடுவ ரேனுந்
தமராயார் மாட்டே யினிது. 207

முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டி யுண்பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டா ரெனப்படு வார். 208

நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ — விறுமளவு
மின்புறுவ வின்புற் றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறுக் கால். 209

விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம் — விருப்புடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போ டியைந்த வமிழ்து. 210

## (22) நட்பாராய்தல்

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே — குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுர மிலாளர் தொடர்பு. 211

இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது — பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று. 212

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் — யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய். 213

பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சிற்
சிலநாளு மொட்டாரோ டொட்டார் — பலநாளு
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு. 214

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி — தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில். 215

கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர் — தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு. 216

கழுநீருட் காரட கேனு மொருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம் — விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய். 217

நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினு
மீக்காற் றுணையு முதவாதார் நட்பென்னாஞ்
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ் செய்விளக்கும்
வாய்க்கா லனையார் தொடர்பு. 218

தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்று — ளிய
விகழ்தலிற் கோற வினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று. 219

மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇஇப் பின்னைப் பிரிவு. 220

## (23) நட்பிற் பிழைபொறுத்தல்

நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு. 221

செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு. 222

இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றோ — நிறக்கோங்
குருவவண் டார்க்கு முயர்வரை நாட
வொருவர் பொறையிருவர் நட்பு. 223

மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்
கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ. 224

இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் — பொன்னொடு
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்த
மில்லத்தி லாக்குத லால். 225

இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்த றகுவதோ — துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை. 226

இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்னா செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர் — கலந்தபிற்
றீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை. 227

ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினு
நோதக்க தென்னுண்டா நோக்குங்கால் — காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று. 228

தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி — னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல். 229

குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னாடித் திரிவேனே — னட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வறைகடல்சூழ் வைய நக. 230

## (24) கூடாநட்பு

செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
விறைத்துநீ ரேற்றுங் கிடப்பர் — கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கரும முற்றுந் துணை. 231

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன் மாண்ட பயத்ததா — மாரி
வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்காற் சீரிலார் நட்பு. 232

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றா — னுண்ணூ
லுணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த னிரயத்து ளொன்று. 233

பெருகு வதுபோலத் தோன்றிவைத் தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதே நந்து — மருகெல்லாஞ்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட
பந்தமி லாளர் தொடர்பு. 234

செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலு — மெய்யாக
வின்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும். 235

ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை யாம்பலொக் கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும். 236

முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னாதே
யொற்றுமை கொள்ளாதார் நட்பு. 237

முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனே — னட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக. 238

ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ — தேம்படு
நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு. 239

உருவிற் கமைந்தான்க ணாராண்மை யின்மை
பருகற் கமைந்தபா னீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்த ராகுத னாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று. 240

---

212 ஆம் பாட்டு 'நற்புடைக் கொண்டமை' என்றும் பாடம்.

# 3. இன்பவியல்

## (25) அறிவுடைமை

பகைவர் பணிவிடம் நோக்கித் தகவுடையார்
தாமேயு நாணித் தலைச்செல்லார் — காணா
யிளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா
தணங்கருந் துப்பி னரா. 241

நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம் — பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழூர்
கோத்திரங் கூறப் படும். 242

எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவருஞ் சுவர்க்கம் புகுதலாற்
றன்னாற்றா னாகும் மறுமை வடதிசையுங்
கொன்னாளர் சாலப் பலர். 243

வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
றீஞ்சுவை யாதுந் திரியாதா — மாங்கே
யினந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது. 244

கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து
முப்பிணி டுவரி பிறத்தலாற் றத்த
மினத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார். 245

பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப
வொராஅலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல
மரூஉச்செய் தியார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று. 246

உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம் — புணரிற்
றெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய். 247

நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு — நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான். 248

கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேற — லருமரபி
னோத மரற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு. 249

கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா — வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம். 250

## (26) அறிவின்மை

நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ — மெண்ணுங்காற்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம். 251

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேற் — றொல்சிறப்பி
னொவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து. 252

கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன் — மெல்ல
வெழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும். 253

கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு — மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று. 254

புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லுங் கடையெலாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து. 255

கற்றறிந்த நாவினார் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி. 256

பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றா
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்காற்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு. 257

பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு. 258

பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூஉ மீப்போ — லிழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னுருந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு. 259

கற்றா ருரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ் சுதைத்தலான் — மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ். 260

## (27) நன்றியல் செல்வம்

அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று. 261

அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கைந்நீட்டார் சூடும்பூ வன்மையாற்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடை யார். 262

மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை. 263

புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
யுணர்வ துடையா ரிருப்ப — வுணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடுத்து. 264

நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணந் — தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில். 265

நாறுத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீறய் நிலத்து விளியரோ — வேறய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து. 266

நயவார்க ணல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கட் செல்வம் பறம்ப பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணா யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை. 267

வலவைக ளல்லாதார் காலாறு சென்று
கலவைக ளுண்டு கழிப்பர் — வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருனையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து. 268

பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து. 269

ஓதியு மோதா ருணர்விலா ரோதாது
மோதி யனையா ருணர்வுடையார் — தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு
நல்கூர்ந்தா ரீயா ரெனின். 270

## 4. துன்பவியல்

### (28) ஈயாமை

நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவரையா
லட்டது பாத்துண்ட லட்டுண்ட — லட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைக் கதவு. 271

எத்துணை யானு மியைந்த வளவினாற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர் — மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பா
ரழிந்தார் பழிகடலத் துள். 272

துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை — வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும். 273

கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் றுய்க்கப் படும். 274

எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்து
மறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 275

எனதென தென்றிருக்கு மேழை பொருளை
யெனதென தென்றிருப்பன் யானுந் — தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது. 276

வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தா
ரிழந்தா ரெனப்படுத லுய்ந்தா — ருழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைந்நோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல. 277

தனதாகத் தான்கொடான் றாயத் தவருந்
தமதாய போழ்தே கொடாஅர் — தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியார் தான்கடியான்
பின்னை யவர்கொடுக்கும் போழ்து. 278

இரவலர் கன்றாக வீவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை — விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ். 279

ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங் — காத்த
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்புக்
குறைபதி மற்றைப் பொருள். 280

## (29) இன்மை

அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்து
மொத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதான்
செத்த பிணத்திற் கடை. 281

நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந் — தேரி
னிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து. 282

கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்காற்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங் — கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
விலாஅஅர்க் கில்லைத் தமர். 283

உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போற்
றொண்டா யிரவர் தொகுபவே — வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பா
ரொருவரு மிவ்வுலகத் தில். 284

பிறந்த குலமாயும் பேராண்மை மாயுஞ்
சிறந்ததங் கல்வியு மாயுங் — கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
வின்மை தழுவப்பட் டார்க்கு. 285

உள்கூர் பசியா லுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளூ ரிருந்துமொன் றாற்றாதா — னுள்ளூ
ரிருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று. 286

நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர் — கூர்மையின்
முல்லை யலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னு
மல்ல லடையப்பட் டார். 287

இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலி
னெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று. 288

கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
யடகு பறித்துக்கொண் டட்டுக் — குடைகலனா
வுப்பிலி வெந்ததின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால். 289

ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவா — நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லைத் தமர். 290

---

319 ஆம் பாட்டு 'சேர்க்கும்' என்றும் பாடம்.

## (30) மானம்

திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்து — மெரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மானமுடையார் மனம். 291

என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார் — தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய். 292

யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயிற்
காணவே கற்பழியு மென்பார்போ — ணுணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனான்
மறந்திடுக செல்வர் தொடர்பு. 293

இம்மையு நன்று மியனெறியுங் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலாற் — செம்மையி
னானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு. 294

பாவமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாத
லொருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோ
லருநவை யாற்றுத லின்று. 295

மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர் — நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார். 296

கடையெலாங் காய்ப்சி யஞ்சுமற் றேனை
யிடையெலா மின்னுமை யஞ்சும் — புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணய் தலையெலாஞ்
சொற்பழி யஞ்சி விடும். 297

நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்காற் — கொல்ல
னுலையூதுந் தீயேபோ லுள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம். 298

நச்சியார்க் கீயாமை நாணன்று நாணு
மச்சத்தா னாடு னன்று — மெச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண். 299

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
யிடம்வீழ்ந்த துண்ணா திறக்கு — மிடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின். 300

## (31) இரவச்சம்

நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றுந்
தம்மாலா மாக்க மிலரென்று — தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந்
தெருண்ட வறிவி னவர். 301

இழித்தக்க செய்தொருவ னார வுணலிற்
பழித்தக்க செய்யான் பசித்த றவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ வொருவ
னழித்துப் பிறக்கும் பிறப்பு. 302

இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர்
செல்லாரு மல்லர் சிறுநெறி — புல்லா
வகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட் டல்லான்
முகம்புகுத லாற்றுமோ மேல். 303

திருத்தன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினு
முருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லா
லருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதா மேல். 304

கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணு
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை — யிரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு. 305

இன்னா வியைக வினிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற் — கென்னைகொல்
காதல் கவற்று மனத்தினாற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு. 306

என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான் — குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட
விரப்பாரை யெள்ளா மகன். 307

புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
னன்ஞான நீக்கி நிறீஇ யொருவனை
யீயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே
மாயானோ மாற்றி விடின். 308

ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லாற் — பரிசழிந்து
செய்யீரோ வென்னானு மென்னுஞ்சொற் கின்னாதே
பையத்தான் செல்லு நெறி. 309

பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க — கிழமை
பொறாஅ ரவரென்னிற் பொத்தித்தந் நெஞ்சத்
தறாஅச் சுடுவதோர் தீ. 310

## 5. பொதுவியல்

### (32) அவையறிதல்

மெய்ஞ்ஞானக் கோட்டி யுறம்வழி விட்டாங்கோ
ரஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல். 311

நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவுடையார் — தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கு மல்லாக்காற்
ளூட்புடைக் கொள்ளா வெழும். 312

சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றூற்றல் வன்மையுந் தாந்தேறார் — கற்ற
செலவுரைக்கு மாற்றியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர். 313

கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாட்டத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர — மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும். 314

வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ — டொன்றி
யுரைவித் தகமகிழ்வார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல். 315

பாடமே யோதிப் பயன்றெரித றேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால் — கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனராய் நிற்பவே மற்றவரை
யீன்றாட் கிறப்பப் பரிந்து. 316

பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளியநூன் — மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள். 317

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு — மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு. 318

பொழிப்பகல நுட்பநூ லெச்சமிந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் — பழிப்பி
ணிரையாமா சேக்கு நெடுங்குன்ற நாட
வுரையாமா நூலிற்கு நன்கு. 319

இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ — விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றாதார்
புல்லறிவு தாமறிவ தில். 320

## 6. பகையியல்

### (33) புல்லறிவாண்மை

அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர் — பொருளல்லா
வேழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு. 321

அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்று தாங்கு. 322

இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்க
மெனைத்தானுந் தாங்கண் டிருந்துந் — தினைத்துணையு
நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றுக்கா லென். 323

உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றாற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற் — பலருள்ளுங்
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனொருவன்
றண்டித் தனிப்பகை கோள். 324

எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை — வைய
வயப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின். 325

மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை
யூக்கி யதன்கண் முயலாதா — னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னாச்சொ லில்லுட்
டொழுத்தையாற் கூறப் படும். 326

தாமேயு மின்புறார் தக்கார்க்கு நன்றாற்றா
ரேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார் — தாமயங்கி
யாக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னார். 327

சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளா — ரிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம். 328

வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்து
மறுமை மனத்தாரே யாகி — மறுமையை
யைந்தை யனைத்தானு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார். 329

என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை — யன்னோ
வளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொளவிழைக்குங் கூற்றமுங் கண்டு. 330

## (34) பேதைமை

கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப வாமை
நிலையறியா தந்நீர்ப் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு. 331

பெருங்கட லாடிய சென்றா ரொருங்குட
னோசை யவிந்தபின் னாடுது மென்றற்றா
லிற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு. 332

குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காம லெய்தியக் கண்ணு — நலஞ்சான்ற
மையறு தொல்சீ ருலக மறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர். 333

கன்னனி நல்ல கடையாய மாக்களிற்
சொன்னனி தாமுணரா வாயினு — மின்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான். 334

பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டுங் — கறுவினாற்
கோத்தின்னா கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து. 335

தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
யெங்கண் வணக்குது மென்பவர் — புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந் தற்று. 336

ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும் — யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர். 337

நல்லவை நாடோறு மெய்தா ரறஞ்செய்யா
ரில்லாதார்க் கியாதொன்று மீகலா — ரெல்லா
மினியார்தோள் சேரா ரிசைபட வாழார்
முனியார்கொ றாம்வாழு நாள். 338

விழைந்தொருவர் தம்மை வியப்ப வொருவர்
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை — தழங்குகுரற்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னாதே
யாய்நல மில்லாதார் மாட்டு. 339

கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும். 340

339 ஆம் பாட்டு 'தழங்குரல்' என்றும் பாடம்.

## (35) கீழ்மை

கப்பி கடவதாக் காலேத்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளேப்போவாக் கோழிபோன் — மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும். 341

காழாய கொண்டு கசட்டற்ருர் தஞ்சாரற்
ருழாது போவா மெனவுரைப்பிற் — கீழ்தா
னுறங்குவா மென்றெழுந்து போமாமஃ தன்றி
மறங்குமா மற்ருென் றுரைத்து. 342

பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா
தொருநடைய ராகுவர் சான்ருேர் — பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னுட
வற்ரு மொருநடை கீழ். 343

திணேயனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனேயனைத்தா வுள்ளுவர் சான்ருேர் — பனேயனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னுட
நன்றில நன்றறியார் மாட்டு. 344

பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கு — மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும். 345

சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோ
ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ — லெக்காலு
முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னே
யிந்திரனு வெண்ணி விடும். 346

மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும். 347

கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணோட்ட மின்றா
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கு — மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மெள்ளுமாங் கீழ். 348

பழைய ரிவரென்று பன்னாட்பின் னிற்பி
னுழையினிய ராகுவர் சான்றோர் — விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப
வெள்ளுவர் கீழா யவர். 349

கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை — யையகே
ளெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும். 350

## (36) கயமை

ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப — மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார். 351

செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை — வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது. 352

கணமலை நன்னாட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற் — குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா. 353

கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயற்பாற்றார் — கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர். 354

தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வுளிநீரர் மாதோ கயவ — ரளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
யின்னாங்கு செய்வார்ப் பெறின். 355

மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும். 356

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் — கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறுந் தீதாய் விடும். 357

ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள் — கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று. 358

இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது
நின்றாது மென்று நினைத்திருந் — தொன்றி
யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர். 359

நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரங் கிடையகத் தில்லாகு — மோரு
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க லன்ன ருடைத்து. 360

## 7. பன்னெறியியல்

### (37) பன்னெறி

மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும் — விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு. 361

வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து
மிழுக்கினைத் தாம்பெறுவ ராயி — னிழுக்கெனைத்துஞ்
செய்குறுப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது. 362

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
யட்டில் புகாதா ளரும்பிணி — யட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. 363

கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான் — பேர்த்துமோ
ரிற்கொண் டினிதிரூஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு. 364

தலையே தவமுயன்று வாழ்த லொருவர்க்
கிடையே யினியார்கட் டங்கல் — கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணரார்பின் சென்று நிலை. 365

கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை
துவ்வாக் கழிப்ப ரிடைகள் கடைக
ளினிதுண்ணே மாரப் பெறேம்யா மென்னு
முனிவினாற் கண்பா டிலர். 366

செந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலா — லந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு. 367

உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு. 368

இனியார்தந் நெஞ்சத்து நோயுரைப்ப வந்நோய்
தணியாத வுள்ள முடையார் — மணிவரன்றி
வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த னன்று. 369

புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல — புதுப்புனலு
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும். 370

## (38) பொதுமகளிர்

விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல — விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும். 371

அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மொடு
செங்கோடு பாய்துமே யென்றாண்மன் — செங்கோட்டின்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்கானை காட்டிக் கலுழ்ந்து. 372

அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்
செங்கண்மா லாயினு மாகமன் — றங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையாற் றொழுது. 373

ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்
காணமில் லாதார் கடுவனையர் — காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையா
ரக்கார மன்னா ரவர்க்கு. 374

பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு — மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறி வினார். 375

பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த
பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினா ணன்னெஞ்சே
நிற்றியோ போதியோ நீ. 376

ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லைக்க ணன்பினை
யேமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை. 377

ஏமாந்த போழ்தி னினியார்போன் றின்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா — மானைக்கிற்
றந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்து மென்பார். 378

ஊறுசெய் நெஞ்சந்தம் முள்ளடக்கி யொண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத் — தேறி
யெமரென்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னார். 379

உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாந் — தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர். 380

## (39) கற்புடைமகளிர்

அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் — விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை. 381

குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள். 382

நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு — மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில். 383

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ளூரா ணியல்பினா — ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண். 384

எஞ்ஞான் றுமெங் கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெழினு
மஞ்ஞான்று கண்டேம்போ னாணுதுமா — லெஞ்ஞான்று
மென்னை கெழீஇயினர் கொல்லோ பொருணசையாற்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார். 385

உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொரு — டெள்ளிய
வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம். 386

கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்
றொருங்கொப்பக் கொண்டானா மூர — னொருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா
தென்னையுந் தோய வரும். 387

கொடியவை கூறாதி பாணநீ கூறி
னடிபைய விட்டொதுங்கிச் சென்று — துடியி
னிடக்கண் ணனையம்யா மூரற் கதனால்
வலக்கண் ணனையார்க் குரை. 388

சாய்ப்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமற் — றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான். 389

அரும்பவிழ் தாரினா னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண — கரும்பின்
கடைக்கண் ணனையநா மூரற் கதனா
லிடைக்கண் ணனையார்க் குரை. 390

384 ஆம் பாட்டு "ஊர் நாண்" என்றும் பாடம்.

மூன்றாவது

# காமத்துப்பால்

## (40) காமநுதலியல்

முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
யுயங்காக்கா லுப்பின்றாங் காமம் — வயங்கோத
நில்லாத் திரையலைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு. 391

தம்மமர் காதலர் தார்சூ ழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க் — கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைந்தன்ன நீர்த்து. 392

கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று. 393

செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விர லூழ்தெறியா விம்மித்தன் — மெல்விரலி
னுள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோதன்
றோள்வைத் தணைமேற் கிடந்து. 394

கண்கய லென்னுங் கருத்திணுற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல் — பின்சென்று
மூக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து. 395

அரக்காம்ப னுறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ — வரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி. 396

ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து. 397

கடக்கருங் கானத்துக் காளைபின் னுளை
நடக்கவும் வல்லையோ வென்றி — சுடர்த்தொடீஇ
பெற்ரு ளொருவன் பெருங்குதிரை யங்நிலையே
கற்ரு னஃதாரு மாறு. 398

முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன் — கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி. 399

கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததென் — பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனுர் சென்ற நெறி. 400

நாலடியார் மூலம்

நிறைவேறியது

ஸ்ரீ:

# குறிப்புரை

நாலடியார் என்னும் இந்நூல் கடைச்சங்கத்தாரால் தொகுக்கப்பட்ட நானூறு வெண்பாக்களாலாகிய ஒரு நூல். நூல்களை அச்சங்கத்தார் மேற்கணக்கென்றும் கீழ்க்கணக்கென்றும் இரு வகையாகப் பாகுபடுத்து, பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்ற பதினெட்டு நூல்களையும் மேற்கணக்கென்றும்; நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்ற பதினெட்டு நூல்களையும் கீழ்க்கணக்கென்றும் வழங்கினர். ஆகவே இந்நூல் கீழ்க்கணக்கின்பாற்படும். கீழ்க்கணக்காவது அறம் பொருள் இன்பங்களைப் பற்றிக் குறைந்த அடிகளையுடைய ஒருவகைப் பாவால் வருவது.

கடைச்சங்கம் ஸ்தாபித்தற்கு முன்பு ஒரு காலத்தில் *"எட்டு மலைச்சாரலில் சமணமுனிவர்கள் † எண்ணாயிரவர்கள் வசித்து வந்தார்கள் ; அவர்கள் தனித்தனி ஒவ்வொரு வெண்பாப் பாட அவை பற்பலவாயின : அவற்றைச் சேர்த்துப் பார்க்கும்பொழுது

---

* சமணமுனிவர்கள் வசித்த மலைகளெட்டாவன : நீலகிரி, கிரௌஞ்சம், கோவர்த்தனம், திரிகூடம், காஞ்சி, யானைமலை, ஏமகூடம், விந்தம் என்பன. † எண்ணாயிரவரென்ற கூட்டத்தார் ; தில்லை மூவாயிரத்தா ரென்பதுபோலக் கொள்க ; இது எண்ணால் வந்த பெயரன்று ; மிகுதிபற்றி வந்தது.

அவைகளில் ஒரே விஷயத்தை ஒரே கருத்தால் விரித்துக் காட்டு கின்ற பல பாடல்கள் காணப்பட்டன ; அவற்றுள் ஒரே விஷயத்தினை ஒவ்வொரு கருத்தால் தனித்தனி கூறும் நானூறு பாடல்களைப் பொறுக்கிச் சேர்த்து நாற்பது அதிகாரமாக முடித்ததாம்" என்பது பதுமனார் கடவுள் வாழ்த்து உரையிற் கண்டது. இதனால் இந்நூல் வரலாற்றினை அறிக.

பதுமனார் எனப்பெயரிய புலவரொருவர் குறுந்தொகையுள் ஆறும் பாடலைப் பாடியவராகக் காணப்படுகின்றார். இப்பதுமனார் அப்பதுமனார் தாமோ அன்றி வேறானவரோ தெரிந்திலது. இந்நூல் இளம்பூரணர் முதலாக எல்லா உரையாசிரியர்களாலும் எடுத்துக் காட்டும் பிரமாண நூல்களுள் ஒன்றாதலால், இதன் தொன்மையும் சிறப்பும் நன்கறியற்பாலன. இரண்டடி வெண்பாக்களாலாகிய ஆயிரத்து முன்னூற்று முப்பஃது பாக்களுக்குக் 'குறள்' என்று பெயர் வழங்கப்பெறுவதுபோல நாலடி வெண்பாக்களாலாகிய இந்நூற்கு 'நாலடி' என்று பெயர் வழங்கப் பெறுவதாயிற்று. 'நாலடி நாற்பது' என்று வேறொரு நூலுண்மையின் இதற்கு 'நாலடி நானூறு' என்று வேறு பெயர் கொடுத்து வழங்குவர். திருக்கோவையார், திருவுந்தியார் என்பனவற்றில் 'ஆர்' சிறப்பினை யுணர்த்துவதுபோல ஈண்டும் 'ஆர்' சிறப்பினை யுணர்த்தும். இந்நூல் செய்தார் ஜைனமதக் கொள்கையுடையா ரென்பர் நச்சினார்க்கினியர் (சிந். 1089 உரை).

இனிப் பதுமனார் கல்வித்திறம்

"ஞாலத் துழிதரு நற்பாட்டே கொண்டடக்கி
நாலடி நானூ றெனப்பெயரால் — வாலிதின்
ஈட்டித் தொகுத்தா னிசைசால் பதுமனே
கூட்டமைந்த மூன்றுபாற் கொண்டு"

"நல்லோ ரருள்செய்த நாலடி நானூற்றின்
சொல்லோர் பொருளனைத்துந் தோன்றியதே — கல்வி
வரும்பதநூல் கொண்ட மதிவாணன் றன் வாக்கா
லரும்பத மிட்ட வழகு" என்ற பாடல்களாலறியப்படும்.

இனி நூலின் சிறப்பினை

"ஆலி னரசி னசோகி னணியிருளின்
மேலை மறையின் விரிந்தபொருள் — நாலடியாம்
வெள்ளாஅண் வேதத்தி னின்னுரையைக் கண்டக்காற்
கொள்ளாரோ நல்லோர் குறித்து" என்றும்

"நானூறும் வேதமாம் நானூறு நன்னூலாம்
நானூறுங் கற்றற்கு நற்றுணையாம்" என்றும்

"வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்க
ளெல்லாருங் கூடி யெடுத்துரைத்த — சொல்லார்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெரிந்து" என்பதனாலறிக; மற்றும்,

"எண்பெருங் குன்றத் தெணாஅ யிரமிருடி
பண்பொருந்தப் பாடியபா நானூறுந் — திண்பொருந்தி
நீரெதிர்கொண் டோடுதலால் நேரிசைப்பா வென்றதனைப்
பாரெதிர்கொண் டார்பயனைப் பார்த்து"

"மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றினிடை
யெண்ணி யிருநான்கோ டாயிரவர் — நண்ணி
யெழுதியிடு மேட்டுக்கு ளேடெதிரி லேறும்
பழுதில்லா நாலடியைப் பார்"

என்னும் பாடல்களோடு வேறுபல பாடல்களையும் ஆதாரம் காட்டி இந் நானூறு பாக்களுமெழுதிய ஏடுகளைப் பாண்டியன் வையை யாற்று நீரில் விட்டபோது அவை நீர்க்கு எதிரோடிச் சென்றன வென்றும் மற்ற ஏழாயிரத்து அறுநூறு பாடல்களும் நீர்வழியே ஓடிக் கடலடைந்தனவென்றும் கூறுவர்.

கடவுள் வாழ்த்து உரை: வான் - மேகத்தில், இடு - தோன்றுகின்ற, வில்லின் வரவு - இந்திர தனுசு போலும் (திரு மேனி கொண்டு அவன்) வருதலை, (இந்திரவில் இன்னவாறு தோன்றுமென்று அது தோன்று முறைமையை நூல்கள் கூறா

வாதலின்), அறியா - (ஞானத்தால்) அறிந்து, கால் - சீர்பாதங்கள், நிலம் தோயா - பூமியிற் பொருந்தப் பெறாத, கடவுளை - அந்த இறைவனை, எம் உள்ளது - எமது மனத்தில், முன்னியவை - கருதியன வெல்லாம், முடிக என்று - இடையூறின்றி இனிது முடிவனவாக என்று, நிலம் சென்னி உற - தரையில் தலைபடுமாறு, வாய்மையால் - மெய்ம்மையாக, வணங்கி - தொழுது, யாம் —, சேர்தும் - இடைவிடாது நினைப்போம் என்றவாறு.

அவன் வரவறிந்து, நாம் நினைந்தவை முடிகவென்று, நிலத்திற்றோயாத பாதங்களையுடைய அக்கடவுளை நிலத்திற்றோய்வித்த நம் தலையாலே வணங்குவோம் என்றவாறு.

"வாழ்த்தியல் வகையே நாற்பாக்கு முரித்தே" என்றதனால் வெண்பா வானியன்ற இவ் வாழ்த்து, தனக்கும் உலகிற்கும் பயன்பட வாழ்த்தியது என்றுணர்க. (தொல். பொருள். நச். 421)

சேர்தல் - இடைவிடாது நினைத்தல் (குறள் 3. பரிமே.)

பொது வியல்பாகிய கானிலந்தோயாமை எல்லாத் தேவர்க்கும் அமைந்து கிடக்கத் தன்னோடு ஒப்பாரு மிக்காரு மில்லாத இறைவனைக் 'கானிலந் தோயாக் கடவுள்' என்று வேண்டாது கூறினார், அருகதேவனுக்குப் 'பூமேல் நடந்தான்' என்னும் பெயரை உட்கொண்டென்க. வான், ஆகுபெயரால் மேகம்.

இனி, வான் இடுவில்லின் வரவு வாய்மையால் அறியா - மேகத்திலுண்டாகின்ற இந்திர தனுசின் வரவு போன்ற பிறப்பியல்பை மெய்யாக அறிந்து, நிலம் கால் தோயாக் கடவுளை உள்ளத்து முன்னியவை முடிக என்று யாம் நிலம் சென்னியுற வணங்கிச் சேர்தும் - பூமியின்மீது கால் பொருந்தாத கடவுளை மனத்து எண்ணியவை முடிவதாக என்று யாம் நிலத்தே தலை உற வணங்கி யடைவோம் என்று பொருள் கூறுவாரு முளர். அது நச்சினார்க்கினியர் கருத்தன்மை 'மற்றவன் தேவனுகி வானிடு சிலையிற்றோன்றி' என்னும் சிந்தாமணிச் (951) செய்யுட்கு அவர் உரைத்த உரையால் விளங்கும்.

முதலாவது 'அறத்துப்பால்' என்பது அறத்தினது பகுதியாம். அறமாவது தானம், தருமம், விரதம் பூசை என நால் வகைப்படும்; தவமும் விரதமும் துறந்தாராற் செய்யப்படும் அறமாதலானும், தானமும் பூசையும் இல்வாழ்வாராற் செய்யப் படும் அறமாதலானும் அவை துறவறம் இல்லறம் என இரண்டு பகுதியாக்கி அறத்துப்பால் கூறப்பட்டது. அவற்றுள்,

1. 'துறவறமாவது' தவம் மேற்கொண்டு ஞானத்தோடு ஒழுகுதல். அது வினை மாசு தீர்ந்து அந்தக் கரணங்கள் தூய வாதற் பொருட்டு விரதம் முதலியன காத்தலாம். அஃது எழு அதிகாரத்தாற் கூறப்படும். அவற்றுள்,

(1) 'செல்வ நிலையாமை'யாவது இன்பமனுபவித்தற்குக் காரணமாகிய பொருளினிலைத்தலில்லாமை. இளமை முதலியவற்றின் நிலையாமையைக் கூறாது இதனையே முதலிற் கூறியது, அறஞ் செய்தற்கு முக்கியமாக வேண்டுவது பொருளாகலின், அதன் நிலையாமை உணர்ந்தாலல்லது அப் பொருளைக்கொண்டு விரைவில் அறஞ் செய்ய மனம் ஒருப்படாதாகையால், இம்மை, மறுமை, வீடுகளைத்தரும் அறத்தை விரைந்து செய்தற் பொருட்டேயாம்.

1. அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு முதலியன.

சிகை - குடுமி; உவமை யாகுபெயராய்ப் பிசைந் தெடுக்கும் சோற்றுக் கவளத்திற்காயிற்று. அன்றி, கழிக்கப்பட்ட மயிர் களிலே எஞ்சி நிற்குங் குடுமியைக் குறிக்குஞ் சிகை என்பது, ஈண்டு உண்டெஞ்சிய உணவை உணர்த்திற்றென்றலுமாம்; தண்டாமல் ஆண்டிறுதியில் எஞ்சி நிற்கும் குடியிறையை 'ஆண்டைச்சிகை' என வழங்கியிருத்தலுங் காண்க. (திருவாய்மொழி ஈட்டுரை) ஓரிடத்து, தான் சிறப்போடு வாழ்ந்த அவ்விடத்தே என்றுமாம். அறுசுவை யுண்டியை மனைவி விரும்பி யுண்பிக்கவும் முற்கவளம் வெறுத்து பிற்கவளம் உண்டு வாழ்ந்த பெரும் பதமுடையாரும், பின் வறியராய்த் தாம் சிறப்போடு வாழ்ந்த அவ்விடத்தே கூழுக்கு இரந்து செல்வதைக் காணுதலினால், செல்வம் என்கின்ற ஒன்று நிலையுடையதாக மதித்துவைக்குந் தன்மையுடையதன்று.

2. அகடு உற - நடுவு நிலைமையாக, சகடம் கால் போல - வண்டியினது சக்கரம்போல, வரும் - உயர்ந்தும் தாழ்ந்தும் வரும்; (ஆதலால்), துகள் தீர் - குற்றம் அற்ற, பகடு நடந்த கூழ் - (நன்முயற்சியாகச் சொல்லப்பட்ட) உழவுத் தொழிலால் வந்த உணவை. தோன்றிய காலந்தொட்டு.........உண்க.

பகடு - ஏர் (புறம் 35); பகடு நடந்த கூழ் - ஏர்த்தொழி லான் வந்த உணவு. இவ் வுணவைச் சிறப்பித்துக் கூறினர், 'சுழன்றுமேர்ப் பின்ன துலகம்' (குறள் 1031) என்பவாகலின். அகடு, நடுவு; வயிறுமாம்.

3. யானை எருத்தம் - யானையின் பிடரி. பொலிய - விளங்க, ஏனைவினை - மற்றைத் தீவினை, உலப்ப - (அச்செல்வத் தைக்) கெடுப்ப, வேறு ஆகி - முன்புள்ள நிலையில் நின்று மாறு பட்டு, மாற்றார் - பகைவர்.

எருத்து - கழுத்தின் மேற்புறம், உலத்தல் - கெடுத்தல், ஏனைவினை யென்றதில் 'ஏனை' யென்பதனை அசை நிலையாக்கி, வினையுலப்ப - நல்வினைகெட என்று உரைப்பினும் அமையும். மனையாளையும் என்ற சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

4. கூற்று - எமதூதன், செறுத்து - கோபித்து, உடன் - விரைவில், ஒன்றின் ஒன்றின - இயைந்தன இயைந்தனவாகிய தருமங்களை, வல்லே செய்க - விரைவிற் செய்க.

'நின்றன நின்றன' என்பன துணிபு பற்றிய அடுக்கு. (தொல். சொல். நச். 411) 'வந்தது வந்தது' என்பன விரைவு பற்றி வந்த அடுக்கு. 'வந்தது'—விரைவுபற்றி எதிர்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது. ஐவகைக் குற்றத்தால் வரும் இருவினை களும் உள்ள வரையினும் உயிர் உடம்போடு கூடி நின்று அவ் வினைகளின் இருவகைப் பயன்களையும் நுகருமாதலால், அந்நாள் முழுவதும் வாழ்நாளெனப்பட்டது. கூற்று - எமனுக்கு ஏவல் செய்யும் மடங்கல். (பரி. 3-8)

5. உற பெற்றக்கால் - பொருந்தக் கிடைக்கப் பெற்றால், பின் ஆவது என்று - பிறர்க்கீதல் பின்னொரு காலத்தாவ தென்று நினைத்து, பிடித்து இரா - உலோபத்தால் இறுகப்

பிடித்திராமல், முன்னே - சரீரமும் பொருளும் அழிவதற்கு முன்னே, கொடுத்தார் - கொடுத்தவர், கோடு இல் தீ கூற்றம் - தன் செய்கையிற் கோணுதலில்லாத கொடிய எமதூதன், தொடுத்து - பாசத்தாற் கட்டி, செல்லும் - கொண்டு போகின்ற, ஆறு - வழியிலுள்ள, சுரம் - பாலை நிலத்தை, உய போவர் - தப்பப்போவார்.

கூற்றிற்குக் கொடுமையாவது, தன் தலைவனுன எமன் ஆணையைக் கண்ணேட்டமின்றிச் செய்தலாம்.

6. இழைத்த நாள் - (உடலோடு கூடி வாழ்வதற்கு) வரையறுத்த நாட்கள், இகவா - கடக்க மாட்டாவாம்; கூற்றம் - (ஆயுள் முடிவில் வரும்) எமதூதனை, பிழைத்து ஒரீஇ - தப்பி நீக்கி, குதித்து உய்ந்தார் - கடந்துபோய் உயிர் வாழ்ந்திருந்தவர். தண்ணம் - சாப்பறை, தழீஇம் தழீஇம் படும் - தழீஇம் தழீஇம் என முழங்கும்; ஆற்ற - மிகவும், வழங்குமின் - அறத்தின் பொருட்டு இன்றே கொடுங்கள்.

ஒருவி - ஒரீஇ என அளபெடுத்தது. தழீஇம் தழீஇம் - ஒலிக்குறிப்பு. தண்ணம் - பிணப்பறை, தண்ணுமை - தண்ணம் என விகாரப்பட்டதென்பது பதுமனர் விருத்தி.

7. கூற்றம் - எமதூதன், தோற்றம் சால் - தோற்றுதலமைந்த, ஞாயிறு - சூரியன், நாழியா - அளவு கருவியாகக் கொண்டு, வைகலும் - நாள்தோறும். (அறஞ் செய்யாதார்), பிறந்தும் பிறவாதாரில் - பிறந்தும் பிறவாதவர்களில் (வைத்து எண்ணப்படுவார்); ஆற்ற - மிகவும்.

தோற்றம் - விளக்கமும் ஆம். ஞாயிற்றை நாழி என்றதற்கேற்ப நாட்களைத் தானியமென்று கூறுமையால், இஃது ஏகதேச வுருவகம், நாழி - ஒரு முகத்தலளவுக் கருவி, பிறவாதாரில் - பிறவாதவரை ஒப்ப ஆவர் என்று ஐந்தாம் வேற்றுமை யொப்புப் பொருள் கோடலுமொன்று.

8. செல்வுழி - இனித் தாம் மறுமையிற் செல்லுதற்குரிய கதியை, எல்லில் - இரவில், கரும்கொண்மூ - கரியமேகம், மருங்கு அற - இருந்த இடமுந்தெரியாமல்.

செல்வர்; தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. செல் உழி - செல்லுழி, 'மெய்யீற் றுடம்படுமெய்' என்பர் நச். உடம்படு மெய்யல்லாத மெய். (நன். உயிர். 13 உரை)

9. ஒளி நிறுஉன் - தன்னிடத்துப் பிறர்க்குள்ள மதிப்பை நிலைக்கச் செய்யாமலும்; துன் அரும் கேளிர் - பெறுதற்கரிய சுற்றத்தார், கொன்னே - வீணாக.

ஒளியாவது ஒருவன் 'தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' (குறள் 971 உரை) புகழாவது இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி, இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாதுநிற்குங் கீர்த்தி. அஉ!, அருளின்கட் குறிப்பு, இது விட்டிசைத்துத் தனைக்கியைய முதற்கண் தனிக்குறில் நேரசையாக வந்தது. இழந்தான் - துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாக வந்தது. துன்னியகேளிர், அருங்கேளிர் என்க.

10. வான் - மேகங்கள், தோய் - தவழ்ப்பெற்ற, செற்றும் - வருத்தியும், வைத்து ஈட்டினார் - பொருளை வைத்துக் குவித்தவர், உய்த்து - பற்பல மலர்களினின்றுந் தேனை எடுத்துக் கொண்டு வந்து; ஈட்டும் - பின்பு இழக்கின்றதற்குச் சேர்க்கும், கரி - சாட்சியாகும்.

'வான்தோய் மலைநாட' எனவே, அம்மழை தான் ஓரிடத்திலும் நிலைத்திராது காற்றுச் செலுத்தும் வழிச் செல்லுதல்போற் செல்வமும் ஊழினால் அலைக்கப் பெற்று அது செலுத்தும் வழிச் செல்லும் என்று தொனித்தல் காண்க.

(2) 'இளமை நிலையாமை'யாவது இளமைப்பருவத்து நிலையாமையுணர்த்துவதாம். இங்கே இளமை என்றது பதினாறு வயது தொடங்கி முப்பத்திரண்டு வரையுமுள்ளதாய் விடயங்களில் மயங்குதற்கேற்ற யௌவனத்தை என்க. செல்வ மனுபவித்தற்குரிய காலம் இளமையாகலின் இது செல்வ நிலையாமையின் பின் வைக்கப்பட்டது.

11. குழவி இடத்தே - இன்பநுகர்தற்குரிய இளமைப் பருவத்திலேயே, புரைதீரா - குற்றம் நீங்காத, மன்னா - நிலைபெறுத லில்லாத, இன்னாங்கு - துன்பத்தோடு.

இன்னுங்கு ஒரு சொன்னீர்மைத்து. பதினறளவும் வேல் நிரம்பாவாதலின் குழவி என்று பெயர் ஏன்பது பதுமூன்று விருத்தி. என்று, வினைப்பொருண்மை குறித்து வந்தது என்றார் நச்சினார்க்கினியர் (தொல். சொல். 261). நரை என்பது ஈண்டு முதுமைப் பருவத்தை உணர்த்திற்று.

12. நட்பு நார் - நட்பினார்வைத்த பாசம், நல்லாரும் அஃகினார் - மகளிரும் அன்பு குறைந்தார்கள்; அற்பு தளையும் அவிழ்ந்தன - புத்திரர் முதலாயினோர் உன்பால் வைத்த அன்பாகிய கட்டும் தளர்ந்து போயின; ஆழ்கலத்து அன்ன கலி - கடலில் மூழ்கா நிற்கும் மரக்கலத்திலுள்ளார் கதறும் பேரொலி போலும் கூக்குரல், உள்காணாய் - இவை யனைத்தையும் உன்னுள்ளே ஆராய்ந்து பார்; ஊதியம் - பயன்.

வாழ்தலின் - இன் ஐந்தனுருபு ஏதுப் பொருட்டு. 'ஆழ்கலத் தன்ன கலுழ்' என்றும் பாடம். கலுழ் - துன்பம்.

13. சோர்ந்த - தம்மை யறியாமல் சரீரத்திருந்து வடிகின்ற, நடையினராய் - சலமலங்களை யுடையராய், பண்டம் - இச் சரீரமாகிய பொருள், பழிகாறும் - பிறரால் பழிக்கப்படுமளவும், இல் செறிந்து - இல்வாழ்க்கையிற் பொருந்தி, படரும் கண்ணினார்க்கு - ஒழுகும் கருத்துடையார்க்கு, ஏமநெறி - தமக்கு அரணாகிய தவநெறியில், படரும் ஆறு - துறந்து செல்லும் வகை, இல்லை என்பதாம்.

நடை - சலமலங்கள் என்பது ஓர் பழையவுரை; அவற்றுக்கு, இயக்கம் என்றும் பெயர் வழங்குதல் ஒப்பிடத்தக்கது; "இயக்கம் இரண்டு" என்றார் ஆசாரக் கோவையினும் (7). தளர்ந்த நடையினராய் என்னவுமாம். பழிகாறும் - செயப்பாட்டு வினைப் பொருளில் வந்த செய்வினை, ஏ - தேற்றம்.

14. மம்மர் கொள் - காம மயக்கங்கொண்ட, அம்மனை - தாய், அணங்கு ஆகும் - காம நோயுண்டாக்குகின்ற தெய்வப் பெண்ணாய் இருப்பள்காண்.

இப் பாடல், கையில் ஊன்றுகோற் கொண்டு நடக்கின்ற கூனற் கிழவி ஒருத்தியைக் காட்டி, 'இவள் இப்போது பிடித்

கிற கோல் இவள் தாயின் கையிலிருந்த காலத்து இவள் எல்லோரையும் காமநெறியால் உயிர் வாட்டும் தெய்வப் பெண்ணா யிருந்திருப்பள்' என்று கூறியதாக அமைந்துள்ளது. அன்றியும், 'இவள் தாயின்கோல் இவள் கைக்கோலாகுங் காலத்து, இவள் தாழா, தளரா, தலை நடுங்கா, தண்டுன்றா, வீழா இறக்கும்; இவள் மாட்டும் காழிலா மம்மர்கொள் மாந்தர்க்கு அணங்காகும்' என்று முதிய ஒரு கிழவி பக்கல் நின்ற அவளது அழகிய மகளை நோக்கிக் கூறியதாக உரைத்தலும் ஒன்று. காழ் - வயிரம், ஈண்டு - மனவுறுதி, மம்மர் - மயக்கம்.

15. அது ஆனல் - அவ்வாறு தாயை நாடிச் சென்றால், உலகு - மக்கள், தாய்கொண்டு - தாயையே தேடிக்கொண்டு, ஏகும் - செல்லும், அளித்து - எளிமைய் யுடையது. நாடிச் சென்றாள் - தேடிச் சென்றனள்; (இறந்தாளென்றபடி).

காலவசத்தால் இறந்துபோன ஒருத்தியைத் தனக்குத் தாய் நாடிச் சென்றவளாகக் குறித்தலின் தற்குறிப்பேற்ற வணி.

16. வெறி அயர் - தெய்வ மேறியாடலை விரும்பிச் செய்கிற, வெம்களத்து - கொடிய களத்து. வேல் மகன் - வேலையேந்திய பூசாரியினது, பாணி - கையிலுள்ள, முறி ஆர் - தளிர் நிறைந்த, நறும் கண்ணி - மணங்கமழும் மாலை, தயங்க - அசைந்து தோன்ற, மறி - (வெட்டுமாறு கொண்டுவந்து நிறுத்தப்பட்ட) ஆட்டுக் குட்டியானது குளகு - இலையுணவு, மன்னு மகிழ்ச்சி - நிலையாத இளமையால் வருங்களிப்பு.

வெறியாடலாவது - குறிஞ்சி நிலத்து மாக்கள் தம் நிலத்துத் தெய்வமாகிய முருகனை வழிபாடு செய்ய, ஒரு பூசைக் களத்தை நிருமித்து, கடம்பு முதலிய முருகனுக்குரிய பூக்கள் தொடுத்த கண்ணி சூடி, செந்தினையை வாரியிறைத்து, யாட்டுக் குட்டியை வெட்டிப் பலியிட்டு, ஆவேசங்கொண்டு ஆடுவதாம். முருகன் கோயிற் பூசாரி ஆடுவதே சிறப்புடையது. அவன் முருகனது வேலைத் தாங்கி ஆடுவான். 'செவ்வேள் வேலைத் தான் ஏந்தி நிற்றலின் வேலன் என்றார்' என்பர் நச். (தொல். பொருள். சூ. 60) களத்திற்கு வெம்மை கூறியது உயிர்க்கொலை கூறலின். ௸ ௸. குளகு - இலையுண்ணும் விலங்கின் உணவு.

**17.** வீழ்ந்தற்று - கழிந்தாற் போலும் நிலையற்றது ; வேல் கண்ணள் என்று - வேலொத்த கண்ணினை யுடையளென்று கருதி, நனி பெரிதும் - மிகவும் அதிகமாக, வெஃகன்மின் - விரும்பா தொழியும் , கோல் கண்ணள் ஆகும் - ஊன்றுகோல் ஆகிய கண்ணையுடையளாவள்.

18. பருவம் எனைத்து உள - வயது எத்தனை ஆகி யுள்ளன ? பல்லின்பால் ஏனை - பல்லின் பகுதி எத்தன்மைய ? இரு சிகையும் உண்டீரோ என்று - ஒரு கவளமே யன்றி இரு கவளமும் உண்டீரா என்று, வரிசையால் - முறைமையாக, உள் நாட்டம் கொள்ளப்படுதலால் - உள்ளத்தின்கண் ஆராய்ச்சி செய்யப்படுதலால், யாக்கை கோள் - உடலைப் பற்றிய விசாரத்தை ; அறிவுடையார் எண்ணார்.

எனைத்து - எத்தனை என்பதன்மரூஉ, எனையவெனற்பாலது ஏனை என நீட்டல் விகாரமுந் தொகுத்தல் விகாரமும் பெற்று வந்தது. இருசிகை - இருபோதுணவு என்றும் ; மெல்லுணவும் வல்லுணவுமாகிய வுணவுகளென்றும், இரண்டு கவளமாயினு மென்றும் கூறலுமாம்.

**19.** முற்றி இருந்த கனி ஒழிய - முதிர்ந்துள்ள பழங்கள் மாத்திரமே யல்லாமல், தீவளியால் - கடுங்காற்றினால், நல்ல காய் உதிர்தலும் உண்டு, (ஆதலால்), 'யாம் இளையம் - நாம் இப்பொழுது இளமைப் பருவமுடையோம், நல்வினை - அறத்தை, மற்று அறிவாம் - பின்னர் ஆராய்ந்து செய்வோம், என்னாது - எனக்கருதாது, கைத்து உண்டாம் போழ்தே - பொருள் கிடைத்த காலத்திலேயே, கரவாது - ஒளிக்காமல் அறம் செய்ம்மின்.

அறஞ்செய்தல் பின்னறிவாம் என அக்காலத்து வினைமாற்றுதலான் மற்று வினைமாற்றின்கண் வந்தது. (சேனா. 262)

**20.** தோள்கோப்பு - செல்லும் வழிக்கு ஆற்றுணவாகிய அறத்தை, காலத்தால் - இளமைப் பருவத்திலேயே, கொண்டு உய்ம்மின் - தேடிக்கொண்டு பிழையுங்கள், பீள் பிதுக்கி - முற்றாத கருவினின்றும் வெளிப்படுத்தி, கள்ளம் கடைப்பிடித்தல் - வஞ்சத்தை மறவாதொழுகுதல்.

தோட்கோப்பு - தோளிற்கோக்கப்படுவது; எனவே வழி நடப்பார்க்கு வேண்டிய கட்டமுது மூட்டையை யுணர்த்திய ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைப் பெயர்; தோட்பதன் என்றும் வழங்கும் (அகம் 79). இஃது உவமையாகுபெயராய் மறுமை வழிக்கு உணவுபோல்வதாகிய அறத்தை யுணர்த்திற்று. காலத்தால் என்பதன்கண் ஆலுருபு இடப்பொருள் தந்து நிற்றலின் வேற்றுமை மயக்கம். சுமந்ததாயும் அறியாவகை, கருவைப் பிதுக்கிப் பிள்ளையைக் கோடலாகிய அச்செய்கை கள்ளம் எனப்பட்டது.

(3) 'யாக்கை நிலையாமை'யாவது உடலினிலையற்ற தன்மையை உணர்த்துவது. புறத்ததாகிய செல்வ நிலையாமையையும் அகத்ததாகிய இளமை நிலையாமையையும் முறையே கூறி, அவ் விரண்டையும் பெற்று அனுபவித்தற்குரிய யாக்கை நிலையாமையைக் கூறுகின்றாராதலின் இஃது அவ்விளமை நிலையாமையின் பின் வைக்கப்பட்டது. யாக்கை (எலும்பு, மூளை, தசை, தோல், இரத்தம், இரசம், சுவேதநீர் என்னும் ஏழு தாதுக்களால்) கட்டப்பட்டது.

**21.** மலைமிசையே தோன்றும் பூரணசந்திரன் போல, யானையின் தலைமீதிருந்து தம்மேற் கவியக்கொண்ட வெண் கொற்றக் குடையையுடைய அரசர்களும், இப் பூமியின்கண் துஞ்சினார் என்று - இறந்தனர் என்பதாகப் பலருமறிய எடுத்துரைத்து இகழப்பட்டார்களே யன்றி, எஞ்சினார் - இறவாது தப்பி யிருந்தவர், இந்த உலகத்தில் ஒருவருமில்லை.

**22.** அலகு ஆ - ஒரளவாக, வயங்கு - விளங்குகின்ற, மண்டிலம் - சூரியனானவன், வீழ்நாள்படாது - அது தோன்றாத நாளும் உளவாகாமல், நிலவார் - நிலைத்து வாழமாட்டார், உலவா முன் - கழிந்து ஒழிவதன் முன், ஒப்புரவு - செய்யவேண்டிய தருமத்தை, ஆற்றுமின் - செய்யுங்கள்.

வயங்கொளி மண்டிலம் - சூரிய மண்டிலம்; (அகம் 11) "மண்டிலம்" என்றும், "வயக்குறு மண்டிலம்", "மையறு மண்டிலம்", "உருப்பவிர் மண்டிலம்", "உருகெழு மண்டிலம்", "அலங்குகதிர் மண்டிலம்" என்றும் வழங்குவர்.

23. 'சபையின் கண்ணே முதற்பகலில் கலியாண வாத்தியமாக முழங்கினவைகளே அத் தினத்திற்றானே அந்த மணப்பந்தலிலேயே அந்த மணக்கோலங் கொண்டவர்க்கே பிற்பகலில் பிணத்தின் பொருட்டுக் கொட்டப்படும் பறையாகி முழங்குதலுமாம்', என்று - எனக்கருதி, உய்ந்து போம் ஆறே - நற்கதி பெற்றுக் கடைத்தேறுதற்குக் காரணமாகிய துறவற நெறியையே, மாண்டார் மனம் - மாட்சிமைப்பட்ட அறிவுடையாரது நெஞ்சம், வலிக்கும் - உறுதியெனத் துணியா நிற்கும்.

24. பறை அடிப்போர் செத்த வீட்டிற்குப் போய், பிணப்பறையை ஒரு முறை முதலில் கொட்டுவார்கள்; சிறிது நேரம் பறைகொட்டா திருந்து, இரண்டா முறை கொட்டுவார்கள்; மூன்றாம் முறை கொட்டத் தொடங்கின பொழுது, சாவார் - இனி இறக்க நின்றவர், செத்தாரைக் கோடித் துணியால் மூடி, நெருப்பையுங் கைக்கொண்டு, சுமந்து செல்லா நிற்பார்; இவ்வுலக இயற்கை நன்றாயிருக்கின்றதே.

நன்றே, ஏ - எதிர் மறை, தீது என்னுங் குறிப்புணர்த்தும் (தொல். சொல். நச். 284); காண், கட்டுரைச் சுவைபட நின்ற இடைச் சொல்; இதனை அசை என்பாரும் ஆராய்ந்துபாரென்பாருமுளர். "செத்தாரை" என்பது "படுமகன் கிடக்கை காணூஉ" (புறம் 278) என்றாற்போல நின்றது.

25. உறவின் முறையார் கூட்டமாக நின்று, கல்லென்னு மொலி யுண்டாமாறு வாய்விட் டழாநிற்பப் பிணத்தைச் சுமந்துகொண்டு, சுடுகாட்டிற் செலுத்துவாரை நேரிற்கண்டிருந்தும், மணம் கொண்டு - கலியாணஞ் செய்துகொண்டு, இவ்வுலகத்தில் யாக்கை நிலைபெற்றிருத்தலும் அதனால் இன்பம் நுகர்தலும் நிச்சயமெனக் கருதும் புல்லறிவாளருக்குத் தொண் தொண் தொடு என்று ஒலிக்கின்ற சாக்காட்டுப் பறை யாக்கை நிலையாமையை அறிவிக்கும்.

தொண் தொண் தொடு என்பன ஒலிக்குறிப்பு.

26. தோலாற் செய்த பைபோலும் உடம்பினின்றும், செய்யக்கடவனவாகிய வினைகளை முற்றுப்பெறச் செய்து, பயனை

நுகர்விக்கும் உயிராகிய கூத்தாடி, வெளிப்பட்டுச் சென்று விட்டால், அவன் வாழ்ந்திருந்த நடன சாலையாகிய உடலை நாரினாற்கட்டி இழுத்தாலென்ன? நன்றாக ஆடையாபரணங்களை ஆராய்ந்தணிந்து குழிகளில் புதைத்து வைத்தாலென்ன? அவ்வாறன்றிக் கண்டகண்ட இடங்களில் எறிந்து விட்டாற்றா னென்ன? கண்ட பலரும் பழித்தாற்றானென்ன?

கூத்தாட வேண்டிப் பலவகையாகிய வேடங்களை மேற்கொண்டுவந்து நாடகமாடி அந்நாடக முடிந்த பிறகு தாம் மேற்கொண்டிருந்த வேடத்தை ஒழித்துச் செல்லுங் கூத்தரைப்போல வினைப்பயனை அனுபவிப்பது காரணமாக இருவினைக்கு ஈடாகிய பலவகைப்பட்ட உடல்களைத் தாங்கி அந்த அனுபவம் நீங்கியவுடன் தான் மேற்கொண்ட உடலைவிட்டுச் செல்லுகின்ற உயிர் இங்குக் கூத்தனென்று உவமிக்கப்பட்டமை காண்க. பார்த்த உழி என்பது பார்த்துழி என்று தொகுத்தல் விகாரம் பெற்றது. பிணத்தை ஈர்த்தல், அடக்கல், பெய்தல் முதலியன சிற்சில சமயத்தாரின் ஆசாரம். மணிமேகலை, சக்கரவாளக்கோட்ட முரைத்த காதையைப் பார்க்க.

**27.** மழைநீரில் தோன்றி யழிகின்ற குமிழியைப்போல பலமுறையும் உண்டாகி அழியும் தன்மையுடையது இவ்வுடம் பென்று நினைத்து, பிறவியாலுண்டாகும் மயக்கத்தினை, யாம் தீர்ப்போம், என்று உணரும் கலக்கமில்லாத நல்லறிவை யுடையாரை இப்பெரிய வுலகத்தில், ஒப்பவர் யாவருளர்?

**28.** உடம்பானது மலைமேல் அசைந்துகொண் டிருக்கிற மேகத்தைப் போலக் காணப்பட்டு, தோன்றிய அப்பொழுதே, நிலைபெறுதலின்றி நீங்கிவிடும்; ஆதலால், உடம்பை நல்வினை காரணமாக உறுதிப்பாடுள்ளதாக அடைந்தவர்கள் தாம் அடைந்துள்ள உடம்பினால் பெறுதற்குரிய பயனாகிய அறத்தைச் செய்து கொள்ளக் கடவர்.

உறுதிப்பாடாவது தேகத்தை நோயின்மை முதலிய குறைகளின்றிப் பெற்றிருத்தல். அதனை எய்தல் அரிதென்பார் யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவரென்றார். யாக்கையால் பயனாவது, அறம் செய்தல். மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்தது.

**29.** இப்பொழுதுதான் நின்றனன், இப்பொழுதுதான் உட்கார்ந்து இருந்தனன், இப்பொழுதுதான் படுத்திருந்தனன், ஆனால், தன் சுற்றத்தார் அலறியழும்படி இதோ இறந்தனன், எனப்படுதலால், புல்லினது நுனியின் கண்ணுள்ள நீர்த்துளியைப்போல, இவ் யாக்கை நிலையாமையையுடையதென்று கருதி, இப்பொழுதே அறவினை செய்க.

நிலையாமை என்ற விடத்து யாக்கை எனுஞ்சொல் அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. இனி இனி என்னும் இரண்டிடைச் சொல்லும் ஒரு தன்மைப்பட்டு இன்னினி என்றாயிற்று. இனி, இப்பொழுது.

**30.** மனிதர்கள், வரலாமாவென்று ஒருவரையுங் கேளாமலே வந்து, ஒரு குடும்பத்தில் பலவகைப்பட்ட முறைமையுடையவராய்ப் பிறந்து, மரத்திலுள்ள தம் கூடுகள் தம்மின் நீங்க யாதும் சொல்லாதே நெடுந்தூரத்தில் நீங்கும் பறவைகளைப்போல, தம் முடல்கள் உறவினரிடத்து ஒழிய நீக்கிவிட்டு, ஒருவரோடும் சொல்லாமலே இறந்து போவார்.

(4) 'அறன்வலி யுறுத்தல்' ஆவது அறத்தினை வலியுறுத்த லென்றாவது அறத்தின் வலியை யுறுத்த லென்றாவது விரியும். அறமாவது எல்லா உயிர்களுக்கும் இதமானவன செய்தலும் சொல்லுதலுமாம், இயம நியமாதிகளும் தான தருமங்களும் செபத்தியானங்களும் பாவனைகளும் ஓதலோதுவித்தல் முதலானவைகளைப் பண்ணுதலும், சாந்தியுடைமையும், நித்தியா நித்தியங்கள் அறிதலுமாம்; இதனை வலியுறுத்தலாவது இத் தன்மைப்பட்ட அறம் சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையும் தரும் என்று உலகத்தார்க் கறிவித்தல்.

**31.** முற்பிறப்பின்கண் செய்த தவங்காரணமாகப் பின்பு தவத்தைச் செய்யாதவர் ஓர் இல்லத்தின் மேனிலை முதலியவற்றைத் தலை நிமிர்ந்து பார்த்து, இவ் வீட்டிலுள்ளவரே எம்மைக் காப்பாரென்று கூறி, அதனுள்ளே இரத்தல் கருதி நுழையத் தலைப்படவே, வாயில் காப்போராற் றடைசெய்யப்பட்டுத் தாம் உள்ளே நுழையப் பெறாது, தலைவாயிலைப் பிடித்துக்கொண்டு மிகவும் துன்புற்று நிற்பர்.

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை யஃதிலார் மேற்கொள்வது" என்றபடி பிற்பிறப்பில் தவஞ் செய்வதும முற்பிறப்பில் தவஞ் செய்திலாருக்கு முடியா தென்பர், மேலைத்தவத்தாற் றவஞ்செய்யாதார் என்றார். அகத்தாரே வாழ்வார் என்ற பாடத்திற்கு 'இவ் வீட்டிலுள்ளவர்களே உயிர் வாழ்கின்றவராவர்' என்றும், 'அகத்து வாழ்வார் ஆரே!' எனக் கண்ணழித்து 'இவ்வகத்து வாழ்வார் எவரோ? என்ன நல்வினை செய்தார்களோ?' என்று கூறலும் ஒன்று.

**32.** உறுதிப் பொருளான அறச் செல்வத்தை விரும்பினதனால் நாம் உய்யக் கடவோம்; அறத்தை மறந்ததனால் நாம் உய்யாது போவோம் என்று நினையாத இழிதகவுடைய மனமே! ஒழியாது ஒரு வழிப்பட்டு நின்று தருமத்தைச் செய்து வாழப்புகுவை என்றாலும், நினது வாழ்நாள்கள் முன்னமே பெரும்பாலும் கழிந்தன; செய்வது உரை இனி நீ யாது செய்குவை? அதனைச் சொல்லுவாய்.

**33.** அறிவில்லான், முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனாகிய துன்பம் வந்து நேர்ந்தபோது வெவ்விதாகப் பெருமூச் செறிந்து மனம் வருந்துவான்; அத்துன்பத்தினை ஆராய்ந்து, முற்பிறப்பிற் செய்த தீவினையாலாயதென்று அறியவல்லாரே பிறவித் துன்பத்தினது எல்லையை கடந்து நீங்குவார்.

**34.** பெறல் அரும் யாக்கையை - பெறுதற்கரிய மக்களுடம்பை: ஆற்றவே கொள்க - மிகுதியாகச் செய்து கொள்வீராக; கரும்பு ஊர்ந்த சாறுபோல் - கரும்பினை ஆலையின்கண் இட்டு ஆட்டி எடுத்த சாறு உதவுதல் போல, பின் சாலவும் உதவி, மறுமைக்குரிய அறப்பயனை மிகவும் தந்து.

ஊர்தல் - அடர்தல்; 'ஊரும் உரன் சிறிதாயிற் பகை' (நான்மணி 101).

**35.** கட்டி - வெல்லக்கட்டி, சிறுகாலை - முற்பட்ட காலத்து, பரிவது இலர் - வருந்துதலிலர்.

**36.** கூற்றுவன் வருதல் இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது பின்றையே நின்றது என்றெண்ணி,

தீயவை ஒருவுமின் - பாவச் செயல்களினின்றும் நீங்குங்கள், ஒல்லும் வகையால் - இயன்ற அளவினுல், மாண்டார் அறம் - அறிவால் மாட்சிமைப் பட்டார் விதித்த அறத்தை.

**37.** எத்துணையும் ஆற்ற பல ஆனுல் - எவ்வளவும் மிகப் பலவுளவாதலினுல், தொக்க உடம்பிற்கே - எழுவகைத் தாதுக்களாற் செய்யப்பட்ட சரீரம் ஒன்றினுக்கே, ஒப்புரவு செய்து ஒழுகாது - செய்யத்தக்க நன்மைகளைச் செய்துகொண்டு காலங்கழியாது, உம்பர் கிடந்து உண்ண - மேலுலகத்தில் நிலைபெற்று நிரதிசய வின்பத்தினை நுகர்தற்பொருட்டு, பண்ணப்படும் - தவங்கள் செய்யத்தகும்.

**38.** உறக்கும் துணையது - மிகக் கொஞ்ச அளவாக இருப்பது, ஈண்டி - வளர்ந்து, இறப்ப - மற்றை மரங்களைக் காட்டிலும் மிகுதியாக, நிழல் பயந்தாங்கு - நிழலைக் கொடுத்தாற் போல, தான் சிறிதாயினும் - (அறத்தின் பொருட்டுக் கொடுக்கப்படும் பொருள்) தான் அளவிற் சிறிதாயிருப்பினும், வான் சிறிது ஆ போர்த்துவிடும் - பெரிய ஆகாயமுந் தன்னளவிற் சிறிதென்னும்படி மூடிவிடும்.

உறங்கும் - உறக்கும் என்று வலித்தது, செய்யுள் விகாரம் என்பாரு முளர். ஆங்கு, உவமை இடைச்சொல்.

**39.** வைகலும் - தினந்தோறும், வைகல் - நாள் கழிந்து போவதனை, தம் வாழ்நாள் மேல் - தம்முடைய ஆயுள் நாளிலே வைகுதல் வைத்து - கழிவதாக வைத்து, வைகலை உணராதார் - அந்த நாட்களைக் கணக்கிட்டறியுந் திறமில்லாதவர், வைகலும் - ஒருநாள் கழியவும், வைகல் வரக்கண்டும் - ஒருநாள் வருவதைப் பார்த்திருந்தும், அஃது உணரார் - அந்த விஷயத்தை யறியாதவராய், வைகலும் - தினந்தோறும், வைகலை - (தம் செயலும் அறிவும் கெட்டு விழும்படி வருகின்ற) தினத்தை, வைகும் என்று - தமக்குப் பொழுது போக்குதற்குத் தகுதியாக இருக்குமென்று, இன்புறுவர் - மகிழ்ச்சி யடைவார்கள்.

இப்பாடலை ஏந்தல் வண்ணத்திற்கு உதாரணம் காட்டி, 'சீர்முழுதும் வருதலின் வழிமோனைப் பாற்படும்' என்ருர் நச்.

(தொல். செய்யுள் 93, 231) இது 'சொற்பொருட் பின்வரு நிலையணி' என்பர் பரிமே. (குறள் 200).

40. ஈனம் - இழிதொழில், இ உடம்பு உறுதிசேர்ந்து நீட்டித்து நிற்கும் எனின் - இவ்வுடல் வலியுடைத்தாகி (முன்னமே விதித்துள்ள காலவரையறையைக் கடந்து) நெடுங்காலம் நிலைபெற்று நிற்குமானுல், மானம் அரும் கலம் நீக்கி இரவு என்னும் ஈன இளிவினல் வாழ்வேன் - மானமாகிய பெறுதற்கரிய ஆபரணத்தை விடுத்து, இரத்தலென்று சொல்லப்படும் இகழ்ச்சி யுண்டாக்குகின்ற இழி தொழிலால் உயிர் வாழ்வேன், மன் - அது மாட்டுகிலேன்.

(5) 'தூய்தன்மை'யாவது குடரும், புழுக்களும், கெட்ட நாற்றங்களும் தோன்றுமல் மூடியிருந்த தோலின் புறத்தைக் கண்டு நல்ல தென்றும் பரிசுத்தமுடைய தென்றும் மயங்குகிறவர்களுக்கு அதன் தூய்து அல்லாமையை அறியக்கூறும் அதிகாரம்.

41. யாக்கைக்கு ஈ சிறகு அன்னது ஓர் தோல் அறினும் - உடம்பின்கண் ஈயின் சிறகினை ஒத்ததாகிய ஒரு சிறிய தோல் அற்றுப்போனுலும், (அந்த இடத்திலுண்டாகிய புண்ணைக் குத்தித் தின்ன வருகின்ற) காக்கை கடிவது ஓர் கோல் வேண்டும் - காக்கையை ஒட்டுவதற்காகிய ஒரு கொம்பு வேண்டப்படும், இப்படிப்பட்ட நொய்யது - தாழ்ந்த தன்மையுடைய, ஓர் புக்கில்லை - உடம்பாகிய ஒரு வீட்டினை, (மாதர்களை என்றபடி) மாகேழ் மடம் நல்லாய் என்று - மாந்தளிர் போன்ற, நல்ல நிறத்தையும் இளமையுமுடைய நல்ல மா[illegible] வரற்றும் - இரங்குகின்ற, சான்றவர் - அறிவாலமை[illegible] கொல்.

புக்கில் - தனக்குரியதென்று சொ[illegible] சான்றவர் - இகழ்ச்சிக் குறிப்பு. துச்சிலெ[illegible] கெழு, கேழென்றுயிற்று. கெழு - நிறம். ([illegible]1)

42. மீபோர்வை - மேலே போர்த்[illegible], மாட்சித்து - பெருமையை யுடையது, ஆ[illegible] பொய் மறையா - அசுத்தத்தை மறைத்து, காம[illegible] அனுபவிப்பதை விரும்பாமல், அதனை - அ[illegible]மறியா

பார்க்கப்படும் - பையை உட்பக்கம் வெளிப்பக்கம் ஆகும்படி மறித்து நோக்கல்வேண்டும்.

துளைபல என்பதனால், மயிர்த்துவாரங்களு மிடையிடையே யுண்டாகுஞ் சிரங்குத் துளைகளும் மேக முதலியவற்றாலுண் டாகும் புண்ணின் துளைகளுங் கொள்க. "பைமறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்தே" என்று, இதனையே காட்டினார் களவியலுரையாசிரியரும். மற்று - அசைநிலை.

43. உண்டி வினையுள் உறைக்கும் என - உண்ணுந் தொழி லாலே சரீரத்துள்ள துர்நாற்றம் அதிகப்படுமென்று, கைவிட்ட மயல் - வெறுத்தொழித்த உடம்பாகிய செத்தைக்கு, தக்கோலம் தின்று - வால்மிளகு முதலிய வாசனைத்திரவியங்களைத் தின் பதனால், ஒழியுமே - உள்ளே நிறைந்த கெட்டநாற்றம் நீங் குமோ ? ஒரு பொழுதும் நீங்காது.

தக்கோலம் என நின்ற ஒரு மொழி தனக்கு இனமான தீம்பூ, இலவங்கம், கற்பூரம், சாதி முதலானவற்றையும் உட் கொண்டு நின்றது. "தக்கோலந் தீம்பூ தகைசா லிலவங்கம், கற்பூரஞ் சாதியோடைந்து" என்பதனை நோக்குக. மயல் - புல் என்பது பதுமனார் விருத்தி. பூவைச் சூடுதலால் தலைமயிர் மணக் கிறதும் இல்லாவிட்டால் சிக்குநாற்றம் நாறுகிறதும் வெளிப் படை; "முருகு புத்தப் புதுமலர்ப்பொற் புறமுடிக்கிற் கமழுமே, கருகு கற்றைக் குழலொ ழிக்கிற் பழைய சிக்குக் கமழுமே" என்றார் 'மோகவதைப்பரணி'யிலும். ஏ - எதிர்மறை.

44. உள் நீர் களைந்தக்கால் - உள்ளே யிருக்கின்ற நீரை நீக்கினால், நுங்கு சூன்றிட்ட அன்ன - நுங்கு தோண்டப்பட்ட பனங்காயின் குழிகளை யொத்திருக்கின்ற, கண்ணீர்மை - கண்களி னுடைய தன்மையை, பொருகயல் - போர்செய்கின்ற இரண்டு கயல் மீன்களென்று. கண் இல் புல் மாக்கள் கவற்ற - அறிவில்லாத பேதைகளாயினவர் என் மனத்தின்கட் காமக் கவலையை யுண்டாக்குதலால், விடுவேனோ - அதற்குடன்பட்டு நான் கைக்கொண்ட துறவைவிட்டு நீங்குவேனோ ?

45. புறங்காட்டு - ஊர்க்குப் புறம்பேயுள்ள சுடுகாட்டில், உதிர்ந்து உக்க பல் என்பு கண்டு ஒழுகுவேன் - சிந்திக்கிடக்

கின்ற பற்களாகிய எலும்புகளைப் பார்த்து ஒழுகு மியல்புடைய நான், முறுவல் - அந்தப் பற்கள், கவற்ற விடுவனே - மனத்திற் கவலையுண்டாக்க, (மயங்கித் துறவை) விடுவேனே ?

"பல்லையென்று மென்பெனுந்து பவளமுட் பொதிந்தகூர், முல்லையென்ப முறுவலென்ப முத்தமென்ப பித்தரே" என்றார் மோக்வதைப் பரணியிலும். மாக்கள் ஐயறிவேயுடைய மனிதர்.

46. கொழுவும் - மூளையும், தடியும் - தசையும், வழும்பும் - நிணமும், ஈர் கோதையாள் - குளிர்ந்த மாலையையுடையாள், எ திறத்தாள் - எப்பகுதியின் பாற்படுவள்.

நீ இங்கொரு மாதினைக்காட்டி இவள் குளிர்ந்த மாலையை யுடைய அழகு வாய்ந்தவளென்றனை ; ஆராய்ந்து பார்க்குமிடத் தில் குடருங் மூளையும் இரத்தமும் எலும்புகளும் பின்னிய நரம்பு களும் தோலும் இவற்றிடையிடையே வைத்துள்ள தசைக்கட்டி களும் நிணமுமாகும் இவற்றுள் உன்னாற்காட்டிய இவள் எப் பகுதியிலகப்பட்டவள் ? சொல்லிக்காண் ; என்பதாம்.

"குடர்வழும்பு தொடர்நரம்பு குருதியென்பு குழுவமங், கடல்வழங்கு மமிர்தமிந்த மகளிரென்ப கவிகளே" என்ப.

47. உவர்த்தக்க - வெறுக்கத்தக்க, கோதி - உள்ளே யுலாவு கின்ற வாயுவினால் சிதறப்பட்டு, குழம்பு - மலக்குழம்பை, அலையச்செய்து வெளிப்படுத்துகின்ற, கும்பத்தை - குடமாகிய உடம்பினை, கரும்தோலால் - பெரிய தோலினாலே, கண் விளக் கப்பட்டு - கண்மயக்கங்கொண்டு, பெய்வளாய் - அணிந்திருக்கிற வளைகளையுடையவளே !

பல உறுப்புக்களிருந்தும் தோளைக் குறித்தது அத்தோளின் மேற் கிடந்துறங்கு மின்பத்தை நோக்கி என்க. -"தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல், தாமரைக் கண்ணா னுலகு." என்றார் குறளினும். கையைக் குறித்தது அணைத்துமகிழு மின்பத்தை நோக்கி என்க. கருமை - பெருமை, கண்விளக்கப் படுதல் - தோன்றியுந் தோன்றாமையுமாகி மயங்கல்.

48. பண்டம் அறியார் - உடம்பாகிய பொருளினது தன் மையை உள்ளவாறு உணராமல், அச்சு இற்ற உழி - அச்சாகிய

உயிர் நீங்கியவிடத்து, மண்டி - நெருங்கி, பேர்த்திட்டுக்குத்தல் கண்டிலர்கொல் - மறித்து மறித்துக் குத்துதலைக் கண்டாரில்லையோ எனக்கூட்டுக. முடைச் சாகாடு - தீ நாற்றத்தையுடைய வண்டியாகிய உடம்பு. 'குத்தும் முடைச்சாகாடு' என்றும் பாடம்.

**49.** (சுடுகாட்டில்) கழிந்தார் இடுதலை - இறந்தவருடைய சிந்திக்கிடக்கின்ற தலைகள், உட்க - திடுக்கிட, ஒழிந்தாரை - இறவாது நின்ற மற்றையோரை (நோக்கி), போற்றி - மனத்தைப் புலன்களிற் போகவிடாமற் காத்து, நெறிநின்மின், இதன் பண்பு, இற்று - இத்தன்மையது, என்று சாற்றும் என முடிக்க. கழிந் தாழ்ந்தகண், ஒரு பொருட் பன்மொழி. (நன். மயிலை. சூ. **397**)

**50.** செம்மாப்பவரை - மனைவாழ்க்கையி லிறுமாந்திருப்பவரை, செயிர் தீர்க்கும் - காமமாகிய குற்றத்தினீங்கச் செய்யும்; செயிர் தீர்ந்தார் - குற்றத்தில் நீங்கியவர், தம்மை ஓர் பண்டத்துள் வைப்பது இலர் - தம்மையொரு பொருளாக மதித்தலிலர் என்க.

**(6)** 'துற'வாவது தாம் முன்பு ஒழுகப்பட்ட உலகவொழுக்கத்தினோடு இவ்வுடம்பின்மேலும் இவ்வுடம்பிற்குத் தொடர்ச்சியான பொருள்களின்மேலும் வைத்திருக்கின்ற பற்றினால் துன்பமும், மறுபிறப்பிற்கு ஏதுவும் உண்டாமென்றறிந்து நான் என்றும் என்னுடையவென்றும் உண்டாகின்ற செருக்கினைப் பற்றறுத்தலாம்.

**51.** ஆங்கு, உவமை இடைச்சொல்; தவமும், நல்வினையும் ஈண்டுத் துறவின்மேற்று. விளக்குமுன் இருள் கெடுதல்போலத் தவத்தின்முன் பாவம் கெடும்; விளக்கு நெய்யின்றி அணைந்தபோது இருள் மூடினாற்போலத் தவங்குறையப் பாவம் வந்து சேரும் என்க. "நீஇ ராடல் நிலக்கிடை கோடல், தோஒலுடுத்தல் தொல்லெரி யோம்பல், ஊஉ ரடையாமை யுறுசடை புனைதல், காட்டி லுணவு கடவுட் பூசை, ஏற்ற தவத்தி னியல்பென மொழிப" என்பதனால் தவத்தினியல்பை அறிக.

**52.** தொலைவு - முடிவு, சத்தம் - இலக்கணம், தலையாயார் பொருள் நிலையாமையையும் நோய் மூப்பு முதலியன வருதலையும் நினைத்துத் தவஞ் செய்வர். பேதையார் அதைவிட்டுச் சோதிட முதலியன கற்றுப் பிதற்றுவர் என்க.

53. ஏழிலாவது, வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பதுபோன்று காட்டுதல். மீக்கூற்றமாவது முதன்மை. நெடியார் - தாமதியார், இல்லம் - உயர் குடிப்பிறப்பு, மெல்ல - நாளடைவில், தலையாயார் இல்லம் முதலியன நிலையாமையை உணர்ந்து தாமதியாது துறப்பர் என்க.

54. ஏழையர் - அறிவில்லாதவர், ஆன்று அமைந்தார் - அறிவினால் விசாலித்து அடங்கின பெரியோர், இன்பம், இடை தெரிந்து - இடையீடுபடுதலை அறிந்ததனாலே, மனை ஆறு - இல் வாழ்க்கை நெறியை, சேர்தலை ஒழிந்தார் என்க. ஏழையர் இன்பமே விரும்புவர் என்க.

55. துணிபு ஒன்றி - துணிவுகொண்டு, என்னொடு சூழாது எழும் நெஞ்சே - என்னோடு ஒரு விஷயத்தையும் யோசிக்காமல் கெட்ட வழிகளிற் செல்ல எழுகின்றமனமே! இளமையும் கொன்னே கழிந்தன்று - யௌவனமும் பயன்படாமலே நீங்கிப் போயிற்று, இன்னே பிணியொடு மூப்பு வரும் - இப்பொழுதே நோயுடனே கூடிய கிழத்தனம் வந்தடையும், ஆல் - ஆதலால், நமக்கு, நல்நெறி சேர போதியோ - நல்ல வழியை அடைவிக்க வேண்டி வருகின்றனையோ என்க.

56. (தன் மனைவிக்கு) மாண்ட - மாட்சிமைப்பட்ட, மக்கட் பேறு இல்லையாகினும், பூண்டான் - மணஞ் செய்துகொண்டவன், கழித்தற்கு அருமையாதலால், மேல்முறைக் கண்ணே - முற்காலத்திலேயே, கடி என்றார் - மணத்தைக் 'கடி' என்ற பெயராலே 'நீக்கு' என்னும் பொருள்தோன்றக் கூறினர் என்க. மிடி - துன்பம்.

'என்' என்பது 'சொல்லுதல்' என்னுந் தொழில் குறித்துப் பெயர் வினைகட்குரிய விகுதிகளுடனே வரும்' என்று கூறுவர். (நன். மயிலை, சூ. 359, 420) கடி - இது பலபொருளொருசொல். நீக்குதற்கும் கலியாணத்திற்கும் பொருளமைந்து நின்றது.

57. ஊக்கி - ஒருப்பட்டு, உள் உடைய - முழுவதுங் கெடும்படி, தாக்க அரும் - தாங்குதற்கு அரிய, துன்பங்கள், தலை வந்தக்கால் - தம்மிடத்து வந்தால்; (அத்துன்பங்களை) நீக்கி, நிறூஉம் - தம்மை அந்த விரதங்களிலே நிறுத்துகின்ற, உரவோரே - மன

வலியினை யுடையவரே, திருவத்தவர் - மேன்மை யுடையராவார். உகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப்பெற்றது. (தொல். எழு. 483)

58. தம்மை - ஒரு தீங்குஞ் செய்யாத தம்மை, இகழ்ந்தமை பொறுப்பதன்றி, உம்மை - மறுமையில், எரி வாய் நிரயத்து வீழ்வரென்று இரங்குவதும் சான்றோர் கடன் என்க. இது "பிழைத்தோர்த் தாங்கும் காவல்" என்னும் பகுதிக்கு மேற்கோள். (தொல். பொருள். சூ. 76)

59. ஐ வாய - ஐந்து வழிகளையுடைய, வேட்கை - பொருள் கண்மேற்றோன்றும் பற்றுள்ளம், (தொல். பொருள். சூ. 247.) அவா - பேராசை, கைவாய் உய்க்கும் - துறவாகிய ஒழுக்கத்தில் தன் மனத்தைச் செலுத்துகின்ற, வலியுடையான், விலங்காமை - தப்பாமல், வீடுபெறும் என்க.

ஐந்து வழிகளில் வேட்கை யாங்ஙன முண்டாமோவெனில் மெய்க்குப் பரிசமும், வாய்க்குச் சுவையும், கண்களுக்கு ஒளியும், மூக்கினுக்கு நாற்றமும், செவிகளுக்கு ஓசையும் தன் மாத்திரைக ளாதலினால் அவற்றின் வழியே சென்று "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" என்று கொண்டு வீழ்தலினாலுண்டாவதாம்.

60. துன்பம், மீது ஊர கண்டும் - தம்மேல் இடையறாமல் வரக்கண்டும், துறவு, உள்ளார் - நினையாராய், இன்பம், இசை தொறும் - வந்தடையும்போதெல்லாம், பசைதல் - அவ்வின்ப மடைதலை, பரியாது - விரும்பமாட்டார். மேல், சொல்லால் அஃறிணையாதலால் பரியாது என்னும் அஃறிணை கொண்டது.

(7) 'சினமின்மை'யாவது சினத்தைக் கருதாமை; அது தம்மை யாவனொருவன் இழிவாகச் சொன்னவைகள் தம்மிடத் திருந்தனவானால் அவன் உண்மை சொன்னான் அதனை விலக்குவா மெனவும் அவைகள் இல்லாவிடிற் பொய் சொன்னான் அதனால் நமக்கு என்ன கெடுதி எனவும் கொள்வதோடு வேறெத்திறத்தானும் வரும் இடையூறு களுக்கும் முற்கூறியவகையே ஆராய்ந்து நீக்கிச் சின மில்லாதிருத்தலைக் கூறியது.

61. மதித்து - இவர் நல்லவரென்று மதித்து, இறப்பாரும் - போவாரும், இறக்க - போக, மிதித்து - தாழ்மைப்படுத்தி, இறப்பாரும் - மிகை செய்வாரும், போக, காயும் - கோவிக்கின்ற, கதம் - சினம், இல்லாமை நன்று என்க.

62. தண்டா - நீங்காத, தாங்குதல் - பிடித்து நிற்றல், கண்ட உழி - கோபத்திற்குக் காரணம் கண்டவிடமெல்லாம், அடி பெயராது - அடி பெயர்க்கச் செய்யாது, ஆற்ற இளிமண்டி வந்த போழ்தில் - மிகத்தாழ்வு மொய்த்து வந்தடைந்த காலத்திலும், முடிகிற்கும் - தாம்கொண்ட விரதத்தை விடாதபடி முடிக்கும், உள்ளத்தவர் - மனச் செருக்கையுடைய பெரியோர் உயிர் துறவார் என்றபடி. கண்ட உழி என்பது கண்டுழி என்று தொகுத்தல் விகாரம் பெற்றது செய்யுளாதலால்.

63. ஒருவன் காவாது தன் வாய் திறந்து சொல்லும் சொல், ஓவாதே - ஒழியாமல், தம்மைச் சுடுதலால், (அதற்காக) அமைந்த - நிரம்பிய, கேள்வி - கேள்வியினுலாகிய, அறிவுடையோர், கறுத்து - கோபித்து, காய்ந்தமைந்த - கொடுமையுடைய சொற்களைச் சொல்லார் என்க.

64. நேர்த்து - எதிர் நின்று, நீர் அல்ல - தகுதியல்லாத சொற்களை, சமமல்லாதவர் சொன்னுல், விழுமியோர் - மேலானோர், வெகுண்டு வேரார்; கீழ்மக்கள், ஓர்த்து - மனத்தில் ஆராய்ந்து நினைத்து, ஊர்கேட்ப உராஅய் உரைத்து - ஊரிலுள்ளார் கேட்கும்படி அவர்களை உராய்ந்து சொல்லி, துள்ளி - பதறி, தூணில் முட்டிக்கொள்ளுவார். நிகர் உவமை இடைச்சொல். (நன். மயிலை. சூ. 366)

65. இளைபொருள் இல்லான் - வளருகிற பொருளில்லாத வறியவன், எல்லாம் ஒறுக்கும் - எல்லாப் பகைகளையும அடக்க வல்ல, மதுகை - முதன்மை, உரன் - வலி, வலியுடையவன் பொறுமையே சிறந்த பொறுமை என்க.

போகங்களை அனுபவித்துச் சலித்த முதியவர் ஐம்பொறிகளை அடக்குதல் அருமையில்லை என்பதுதோன்ற இளையானடக்கம் அடக்கமென்ருர். ஏகாரங்கள், பிரிநிலை. இது எடுத்துக் காட்டுவமையணி.

66. இடும் நீற்றால் - மந்திரித்து இடுகிற விபூதியினால், பை அவிந்த - எடுத்த படம் அடங்கிய, நாகம் போல, தொல்லை குடிமையான் வாதிக்கப்பட்டு - பழமையாயுள்ள குடிப்பிறப்பால் தடை செய்யப்பட்டு, கயவர் வாய் - கீழ்மக்கள் வாயில் இயல்பா யுண்டாகிற, கல்லெறிந்தன்ன இன்னாச்சொல் - கல்லெறிந்தா லொத்த பேரொலியும் கொடுமையுமான சொற்களை, எல்லாரும் காணப் பொறுத்து, உய்ப்பர் - தம் நல்லொழுக்கத்தைச் செலுத் துவார். "உருத்தெழு குரல குடிஞைச் சேவல்.........வரைய, கல்லெறி இசையின் இரட்டும்" என அகத்தினும் (89) வந்தது காண்க.

67. பகைவராய் நின்று எதிர்த்தார்க்கும் தாம் எதிராகாமல் ஒதுங்கினால் அதனை அறிவுடையோர் இது வலியில்லாமை என்றிகழமாட்டா ராதலால், பகைவரெதிர்த்து ஆற்றாவண்ணம் துன்பஞ் செய்தாலும் அவர்க்கு மீட்டுந் துன்பஞ் செய்யா திருப்பது நல்லது.

68. கீழ்மக்கள் கொண்ட கோபம் நெடுங்காலமானாலும் அழியாமல், பரக்கும் - வளர்ந்துகொண்டே யிருக்கும்; பெரி யோர் கொண்ட கோபம் காய்ச்சிய நீர் தானே ஆறுவது போலத் தானே தணியுமென்க. அடுங்காலை - சான்றோரை அந்தச் சினம் வருத்துங்காலை எனலுமாம். ஓடுதல் - நீட்டித்தல், பரத்தல் - பரவுதல்.

69. செய்த உபகாரத்தை மறந்து மிக்க அபராதஞ் செய் தாலும் அவர்க்கு, தீங்கு ஊக்கல் - தீங்கினை முயன்று செய்தல், வான்தோய் - ஆகாயத்தை எட்டுவது போன்ற உயர்வினையுடைய, குடிப் பிறந்தார்க்கு, தவற்றினால் - தவறியுங்கூட, இல்லை என்க. "வானுயர் தோற்றம்" என்னுமிடத்து "வான்றோய் குடி" என்றாற்போல இலக்கணை வழக்கு என்பர் பரிமே. (குறள். 272.)

70. கூர்த்து - கோபம் மிகுத்து, கௌவிக் கொள - கடித் துப்பிடுங்க. நாய் கவ்வப் பேர்த்துக் கவ்வாராதல் போல, மேன் மக்கள் கீழ்மக்களுரைத்த கீழாய சொற்களை நற்சொற்கள் பயின்ற வாயாற் கூறார் என்க.

2. 'இல்லறமாவது' இம்மை மறுமைப் பயன்களை அடைதற்குச் சாதனமான கற்புடைய இல்லாளோடு செய்யப்படும் அறமாம். இஃது ஆறு அதிகாரத்தாற் கூறப்படும்.

(8) 'பொறையுடைமை'யாவது ஒருவன் தான் அறிவில்லாமையினாலாவது வேறு காரணத்தை முன்னிட்டாவது தமக்கு ஒரு துன்பஞ் செய்தால் தாமும் அவனுக்குத் துன்பஞ் செய்யாமல் பொறுத்திருப்பதும் ஒருவன் விரோதித்தால் தாமும் விரோதஞ்செய்ய இருவரும் தம் சேர்ந்தாருடனே கூடிக் கெடும்படி நேருமாதலால் அதனையறிந்து பொறுத்திருப்பதுமாம்.

71. கோதை - மாலை, சிதைந்து - வரம்பு கடந்து, பேதை சொல்லும் ; (ஆதலால்), ஒல்லும்வகையால் - கூடிய வகையினாலே, வழுக்கி கழிதலே - அவனிடத்தினின்றும் தப்பிப் போதலே, நன்று என்க.

மாலைபோல அருவியை மேற்கொண்டிருக்கும் மலை எனவே தன்னிடத்திலுள்ள மணிவரன்றி, மரங்கள் பறித்து வரும் அருவியைப் பொறுமையோடு ஏற்பதன்றி, அதனை மாலைபோல அலங்காரமாகவும் கொண்டுள்ள மலையை ஒக்கும் பெரியோர் தன்மை என்பது. தொகைமொழியின் பொருளாகக் கொள்க. தொகைமொழியாவது : "நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு, செஞ்சொலிற் காட்டுந் திறனே தொகைமொழி" என்பது. அஃதாவது தான் கருதிய பொருளைக் கதாசந்தர்ப்பத்திற் கேற்க நாட்டுச் சிறப்பின் முகத்தாலாவது வேறு முகத்தாலாவது வெளியிடுவதாம்.

72. தாரித்து இருத்தல் - பொறுத்திருப்பது, தகுதி, ஞாலம் - உயர்ந்தோர், சமழ்மையா கொண்டு விடும் - தாழ்வாகக் கொள்வர், தாரித்திராது வெகுடல் புகழ்மையாக் கொள்ளாது என்பது பொருள். இது எதிர்மறை கொண்டு முடிதலின், எதிர்மறை எச்சம். (நன். மயிலை. சூ. 359) மற்று, ஒரும் - அசைகள்.

73. போது - மலர்கள், மாதர் - அழகிய, மலிதல் - நிரம்புதல், ஆவதறிதல் - தமக்கு நன்மையாதலை அறிதல்.

மலரில் வண்டு ஆரவாரிப்பது அதனை மலரச் செய்தற்கே போலக் காதலார் கடுஞ்சொல்லும் ஒருவனை நல்வழிப்படுத்தவே யாம் என்பது தொகைமொழி. தீதாமோ, ஓ - எதிர்மறை.

**74.** அறிவது - யாவராலும் அறிவதற்கரியதும் அவசியம் அறியவேண்டியதுமான ஒழுக்கநெறி நூலொடு வேதாந்த நூலும்; உறுவது - மறுமைக்கு வந்தடைவனவாகிய தருமங்கள், உலகு உவப்ப - உயர்ந்தோர் உவக்கும்படி செய்து, ஊழினாற்பெற்றது கொண்டுவப்பார், துன்புற்று வாழ்தல் அரிது என்க. இதனால் உலகத்தாரிடத்துப் பொறுத்தல் கூறப்பட்டது.

**75.** இருவர் வேற்றுமையின்றிச் சினேகமாய் இருக்கும் பொழுது அவருள் ஒருவனிடத்தில் நம்பத்தகாத நடைப்பிசகு உண்டானால், தன்னால் தாங்கும் வரையில் பொறுக்கக் கடவன்; பொறுக்க முடியாவிட்டால் அவன் நடத்தையை உலகம் பழிக்கும். அதனாலே அவன் நட்பைத் தூரவிட்டொழிக்க. தேற்றா ஒழுக்கம் - பிறர்க்குத் தெளிவிக்கலாகாத ஒழுக்கம், அஃதாவது களவு, பிறர்மனை நயத்தல் முதலியன.

**76.** தன் நண்பர் தனக்குத் தீங்கு செய்தாலும் அவை இனியனவாய்க் கழிக என்றும் இது பூர்வ ஜன்மவினை என்றும் நினைத்துத் தன்னை நொந்துகொள்ள வேண்டுமேயன்றி, அந்த நண்பரைக் கைவிடுதல் மிருகங்களுக்கு மரியதாகும். அப்படி இருக்க மக்கட்கு எளிதோ? என்க. இஃது ஒழியிசை எச்சம். (நன். மயிலை. 359) இனி அ ஒழிக - இனி அவை நம் மனத்தினின்றும் விலகுக என்றுமாம். கானக நாடன் - குறிஞ்சிநிலத் தலைவன்; திணைப்பெயர்.

**77.** மலைநாட்டு அரசனே! பெரியோருடன் நட்புக்கொள்வது தாம் செய்த பொறுத்தற்கரிய தவற்றைப் பொறுப்பரென்றெண்ணியன்றோ? நன்மைகளைச் செய்பவர்க்குத் தமர்கள் கிடைக்க மாட்டாரோ? என்க. பெருநட்பு, என்றும் இடையறாத நட்பு. அரிய - கேட்கப்படாதனவும் காணப்படாதனவுமாகிய குற்றங்கள்; பயனின்றியே ஒலிக்கின்ற அருவியைத் தன்னிடத்திற் கொண்டுள்ள மலைபோலக் குற்றஞ்செய்கிற நட்பினரையும் ஏற்றுக்கொள்க என்பது தொகைமொழி.

78. தாம் வறுமையால் மிகவற்றிப் பசித்திருந்தாலும் பண்பி லாரிடத்துத் தம் வறுமையைச் சொல்லா தொழிக; உயிரை விடும் நிச்சயத்தை அப்போழ்து கொண்டில்லாதவர் தம் வறு மையை நீக்குபவரிடத்திலே சொல்லுவ ரென்க. நிலைமை பெற்ற வீடுபேற்றிற்கு உரிய உயிரை நிலையாமையான வறுமை கருதித் துறத்தல் பாவம் என்ற அறநூற்றுணிபு பற்றிப் பண் புடையாரிடத்து உரைத்து உயிரோம்புக என்றார். மற்று - அசைநிலை, மறைத்தல் - நீக்குதலென்னும் பொருளது, அற்றம் - தொழிற் பெயர்; அறுதலென்று பொருள்பட்டு வறுமைக் காயிற்று. "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" (கலி. 133.)

79. ஒருவன் தான் இன்பத்தை யடைந்தது போலத் துன் பத்தையும் அடைந்தாலும் தன் மனத்தை இன்பத்தினிடத்தே செலுத்துக. துன்பத்தைப் பொருட்படுத்தா தொழிக; அங்ஙனம் தான் அடையு மின்பமானது நீங்காமலிருப்பினும் செருக்குற்றுப் பழியான வழியிற் செல்லாதிருத்தலே தலைமை எனப்படும் என்க. இருந்தைக்க - இருந்தை என்னும் முன்னிலை வினைச் சொல்லானது ஈற்று வியங்கோள் விகுதிபெற்று இருந்தைக்க வென்றாயிற்று. "ஆய மடமகளி ரெல்லீருங் கேட்டைக்க" என்பதனுரை விசேடக் குறிப்பையும் "எழுதெழில் மலருண்க ணிருந்தைக்க வெனப்போனான்" என்பதனுரையையும் நோக்குக. (சிலப். துன்ப. ஊர்சூழ்.) இருக்க என்பது பொருள்.

80. ஒருவன், தான் கெட்டாலும் தக்கவர்க்குக் கேடு நினை யாமலும், தன் உடம்பு வற்றினாலும் உண்ணத்தகாதவரிடத்தி லுண்ணாமலும், ஆகாயத்தாற் கவிக்கப்பெற்ற உலகத்தைப் பெறுவ தானாலும் பொய்கலந்த வார்த்தை பேசாமலும் இருக்கக்கடவன் என்பதாம். தக்கார் - தகுதியுடையாரென்பது இங்கு பிறரைக் குறித்தது.

(9) 'பிறர்மனை நயவாமை'யாவது இல்வாழ்க்கைக்குத் துணையாக விருந்து தன்மரபினையும் இல்லறத்தினையும் பாதுகாக்கும் படி ஒத்த குலத்திலும் மறுப்படாத குடியிலும் ஆராய்ந்து மணந்து கொள்ளப்பட்ட பிறர் மனையாளை விரும்பா திருத்தலை யுணர்த்துவது. மனை - ஆகுபெயர்.

81. அச்சம் மிகுதியாமாதலாலும் அவ்வச்சம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு சிறிதுதான் இன்பமாதலாலும், அரசன் கொலை செய்வானாதலாலும், நரகிற் சேர்க்கு மிக்க கொடுவினையா மாதலாலும், நாணுடையவர் பிறன் மனைவியை விரும்பா தொழிக என்க. பெரிதால், அளவால், கொலையால், வினையால் என்பன. வேற்றுமை எதுப்பொருள், ஆல் - அதன் பொருள் படுவதோ ரிடைச்சொல், கும்பி - சேற்றின் பெயர், சேருகிற நரகத்துக்கு ஆயிற்று. கோ - அரசன், நிச்சல் - தினந்தோறும், நம்பு - நசை.

82. அயலான் மனைவியை விரும்புபவரைத் தருமமும் புகழும் நட்பும் பெருமையுமாகிய இந் நான்குஞ் சாராவாம்; அவற்றிற் கீடாகப் பகையும் பழியும் பாவமும் அச்சமுமாகிய இந்நாற் பொருளுஞ் சாருமென்பதாம். இப்பாடலில் நான்கு போய் நான்குவரு மென்றதனால், இது பரிவர்த்தனை அணி.

83. புக்க இடத்து - (பிறன் மனையாளிடத்தில்) போகும் போது, அச்சம், போதரும் போது - மீண்டு வரும்போது, அச்சம், துய்க்கும் இடத்து - இன்பம் அனுபவிக்கும்போது, அச்சம், அத்தீயொழுக்கம் பிறர் அறியத் தோன்றாமை காப்பு அச்சம்; எக்காலும் அச்சம் தரும், ஆல் - ஆதலால், (ஒருவன்), உட்கான் - இவற்றிற்கு அஞ்சாதவனாய், பிறன் இல் புகல் - பிறன் மனையாளை விரும்புதல், எவன் கொல் - என்னவாறோ?

84. காணில் - ஆராயுமிடத்தில், கை உறில் - அகப்பட்டுக் கொண்டால், கால் குறையும் - கால் வெட்டுப்படும், ஆண் இன்மை - பௌருஷமின்மை; மாண் இன்மை செய்யும் - மாட்சிமை இன்மையைச் செய்யும் என்றுமாம். மால் அச்சம் ஆம் நீள் நிரயத்துன்பம் பயக்கும் - பெரிய அச்சத்தைத்தரும் நீண்ட நரக துன்பத்தைத்தரும், துச்சாரி - பொல்லாத ஒழுக்க முடையாய்! நீகண்ட இன்பம், எனைத்து - எத்தன்மையது என்க.

காலைக் குறைத்தல் பண்டைய வழக்கு; "கவனமுறு சித்ராங்கி காதலின்பப் பேறு, தவறினசா ரங்க தரனும் - அவனை, அறுத்தனர்கை காலையென்றால்" என்பது சாரங்கதரன் சரிதை.

85. உம்மை வலியால் - முற்பிறப்பில் செய்த பாபபலத்தால், கொம்மை - இளமை, வரி - தேமல், தோள்களை, மரீஇ - சேர்ந்து

பழகி, பிறர் மனைமேல் - அயலாருடைய மனைவி இடத்தில், சென்றாரே - சென்றவர் தாம், இம்மை - இப்பிறப்பில், அலி ஆகி - நபும்சகராய், கூத்தாடி, அதனால், உண்பார் - சீவிப்பார்.

சிறியார் - "நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென் போரும், விடரும், தூர்த்தரும், நடரும் உள்ளிட்ட குழு" குறள். 46 ஆம் அதி. அவதாரிகை. பரிமே. "காமுகரும், சூதாடிகளும், பெண்டிரு முதலாயினார்" பரிப்பெரு. சென்றார் - அணைந்தொழுகினார். அலியாய்ப் பிறத்தலே யன்றி, வறுமையு மடைவா ரென்பது தோன்ற ஆடி யுண்பாரென்றார்.

86. ஒருவன், பலரறியப் பறையறைந்து நல்ல முகூர்த்தத்தில் தான் கலியாணஞ் செய்துகொண்ட தன் மனைவி காவல் மிக்க தன் வீட்டிலிருக்கையில் அயலான் மனைவியை விரும்பிப் பார்ப்பது என்ன நியாயமோ? என்க. இது தன் மனையாளைப் பிறன் விரும்புவதைத் தானறிந்த பொழுது தனக்கு உண்டாகும் மெய்ப்பாடெல்லாம் நினைக்க என்றது.

87. அயலார் பழிதூற்றச் சுற்றத்தார் அஞ்சி இரங்க ஒருவன் அயன் மனைவியை விரும்பி அனுபவித்தலானது பாம்பின் தலையை நக்கினாற்போன்ற தன்மைய தென்பதாம். அம்பலாவது சிலர் அறிந்த பழிச்சொல். எடுப்ப - எழுப்ப, மைந்துறுதல் - மயக்க முறுதல், துப்புரவு - சுகானுபவம், பெண் - மனைவிக்குப்பெயர்; "பெண்ணிடர் விடுப்ப வாழ்விற் சாதலே பெரிது" என்ற சிந்தாமணிச் செய்யுளுரையாலறிக. அல்குலுக்கு வமைசான்ற பாம்பின் தலை அழகுடைத்தென்று நக்கப் புகுந்தால் துன்புறுதல் வெளிப்படை. நிலைமையில் நெஞ்சம் - சஞ்சலபுத்தி.

88. உரவோர்கண் காமநோய் பரவா - அறிவுடையார் மனத்தின்கண்ணே தோன்றிய காமநோய் உள்ளே வளராவாம்; பல்லோர்கண் தங்கா - பலர் இடத்திலும் சென்று பொருந்தாவாம்; விரவாருள் நாணு படல் அஞ்சி - அக்காமங் கலவாத பெரியோர் கோட்டியில்; அன்றி, காமங் கலவாத ஸ்திரீகளிடையில் என்றலுமாம்; அவ்வுரவோர் வெட்கப்படுதற்குப் பயந்து, யாதும் உரையாது - அவரைச் சிறிதும் தேய்த்து வருத்தாமல், அடங்கி விடும்; ஓஒ கொடிது - இக்காமநோய் மிகக் கொடியது என்க.

89. அம்பு முதலிய வெல்லாம் சுட்டாலும் புறத்திலேதான் சுடும்; அப்படியன்றிக் காமம் மனத்தைக் கவலையுறச் செய்து சுடுதலால், அவ் அம்பு முதலியவற்றைக் காட்டிலும் அக்காமம் அஞ்சத்தக்க தொன்றாம் என்க.

90. ஊர்உள் எழுந்த - ஊரையெல்லாம் தனக்கு உள்ளாக்கிக்கொண்டு எழுந்த, உருகெழு - அச்சம் கெழுமிய, உயல் - பிழைத்தல்.

"ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு நீர்பெய்தக்காலே சினந்தணியு மற்றிஃதோ, ------ நீருட்புகினுஞ் சுடும்" என்றார் ஆசிரியர் நல்லந்துவனாரும். கலி 144. அகம் 278-ஆம் பாடலையும் நோக்குக.

(10) 'ஈகை'யாவது வறியவர் யாரேனு மொன்றை வேண்டி வந்தால், அவர் தம் வறுமையைக் கூறுவதன் முன்னே அறிந்து, தமக்கு இயன்ற அளவு உவந்து கொடுப்பதும் அறம் புகழென்பனவற்றைக் கருதிக் கொடுப்பதுமாம்.

91. தாம் பொருளின்றி வறியரானபோதும் தம்மை ஒருவர் வந்திரந்தால் இல்லை என்னுமல் செல்வமுள்ள காலம்போலக் கூடியவளவு மகிழ்ந்து கொடுப்பார்க்குச் சுவர்க்கத்தின் கதவு மூட்டப்பட்டிராது என்க. ஆண்டைக் கதவு - சுவர்க்க வாயிற்கதவு.

92. முனி தக்க மூப்பு - வெறுக்கத் தக்க முதுமை, கொன்னே - பயனில்லாதவைகளையே, பரவன்மின் - பரந்து செய்யா திருங்கள், பற்றன்மின் - பொருளை இறுகப் பிடியா திருங்கள், பாத்து உண்மின் - சோறு முதலியவற்றை இயல்புடைய மூவர்க்கும் தென்புலத்தார் முதலாய நால்வர்க்கும் பிறர்க்கும் பகுத்துக்கொடுத்து உண்ணுங்கள். "முன்னர் பின்னர்" என்பன இடமுணர்த்தி நின்றனவென்றார் நச். (மதுரை. அடி 41)

93. செல்வம் ஈண்டுங்கால் - செல்வம் சேருங்காலத்து கொடுத்து தான் துய்ப்பினும் - வறியவர்க்குக் கொடுத்து தாமும் அனுபவித்தாலும், ஈண்டும் - சேர்ந்துகொண்டே இருக்கும்; விடுக்கும் வினை உலந்தக்கால் - தீவினை வந்து உதவலால் நல்வினை

முடிந்த காலத்தில், மிடுக்கு உற்று பற்றினும் நில்லாது - வலிமையுற்றுப் பிடித்துக் கொண்டாலும் நிற்கமாட்டாது; இதனையறியாதபலர் நடுக்கு உற்று தன் சேர்ந்தார் துன்பம் துடையார் - வறுமையால் நடுக்கமடைந்து, தம்மை அடைந்தவரது துன்பத்தை நீக்குகின்றார்களில்லை என்க. இச்செய்யுள் அடி மறிமாற்றுப் பொருள்கோளுக்கு மேற்கோள். (நன். சூ. 419)

**94.** குண்டு நீர் ஞாலத்து - ஆழமாகிய கடல்நீர் சூழ்ந்த உலகத்தில், அடா அடுப்பினவர் - தமக்கென்று சோறு சமைக்கப் படாத அடுப்பினையுடைய வறியவர் யாரும், உம்மை கொடாதவர் என்பர் - முற்பிறப்பிற் பிறருக்குக் கொடுத்துண்ணாதவ ரென்று உலகத்திலுள்ளவர் சொல்லுவர்; (ஆதலால்), வைகலும் - நாள் தோறும், இம்மி அரிசி துணையானும் - இம்மி அரிசியினளவா னாலும், நும் இல் இயைவ கொடுத்து உண்மின் - உங்கள் வீட்டில் உங்களால் கொடுக்கக் கூடியவற்றைப் பிறர்க்குக் கொடுத்துப் பின்பு உண்ணுங்கள்.

இம்மி - ஒரெண்; மத்தங்காய்ப் புல்லரிசி, புல்லுநுனியுமாம்.

**95.** இம்மை மறுமைப் பயன்களை நோக்கி, வறியவர்க்குப் பயனுறுமாறு கொடுக்குங் கொடையானது தாமிப்போது அடைந்துள்ள வறுமை நிமித்தம் கொடுக்க முடியாதாயினும், தாம் பிறர்பாற் சென்றிரவாதிருத்தல் கொடுப்பதைக் காட்டிலு மிருமடங்கு நலமாகு மென்க.

**96.** நச்ச - விரும்பும்படி, வாழ்கின்றவர்கள், நடு ஊருள் - ஊரின் நடுவில், வேதிகை சுற்றுக்கோள் புக்க - திண்ணையானது சுற்றிக்கோடலைப் பொருந்திய, படு பனை அன்னர் - காய்த்துப் பயன்படுகிற பெண்பனையை ஒப்பாவார். கொழுத்தக் கண்ணும் - செல்வம் மிக்க விடத்திலும், கொடுத்து உண்ணாமாக்கள், இடுகாட்டுள் - பிணம் புதைக்கும் மயானத்து, ஏற்றைப் பனை - ஆண் பனையை ஒப்பார் என்க. 'வேதிகைச்சுற்று' என்று பாடமாயின் வேதிகையாற் சுற்றப்பெற்ற எனவும்; கோட்புக்க - காய்த்த, படு பனை - ஒலிக்கின்ற பனை எனவுங்கொள்க. கோள் - காய் (அகம் 2.) இடுகாட்டைக் கூறியது, புதைத்த பிணத்தின்மேற் பதுக்கை உயர்ந்து வேதிகைபோன் றிருத்தலை உட்கொண்டென்க.

**97.** கயம் புலால் புன்னை கடியும் - மடுக்களிலுள்ள புலால் நாற்றத்தைப் புன்னை மலர்கள் போக்கும், பெயல் பால் மழை - பெய்யுந் தன்மையுடைய மேகங்கள், பெய்யாக் கண்ணும், உலகம் செயல்பால செய்யாவிடினும் - உயர்ந்தோர் செய்யக்கூடிய உதவிகளைச் செய்யாவிட்டாலும், உலகு உய்யும் ஆறு என்னை - மனிதர்கள் பிழைக்கும் வழி எப்படி ? சேர்ப்பன் - நெய்தல் நிலத்தலைவன்.

கயத்திலெழுந்த புலாலைப் புன்னைமலர் கடிவதுபோல மக்களின் வறுமையைப் பேரியோர் போக்காநிற்பர் என்பது தொகைமொழியின் கருத்து. இது மழை பெய்யாவிட்டால் எப்படி உலகு உய்யமாட்டாதோ அப்படியே பெரியோருதவாவிட்டாலும் உய்யாதென்று இரண்டனையும் உலகு என்றதனோடு ஒரு தன்மையின் முடித்ததனால் இறுதிநிலைத் தீவகவணி.

**98.** மலிவு - வளம், கடற்கரையிலுள்ள தலைவனே ! மாற்றுமை - மறுக்காமல், ஆற்றுதார்க்கு - வறியவர்க்கு, தாம் வரையார் - தாம் இவ்வளவென்று கணக்கிடாமல், ஏற்றகை ஈவது - இரந்த கையிற் கொடுத்தல், ஆண் கடன் ஆம் - ஆண்மக்களின் கடமையாகும் ; ஆற்றின் - கொடுப்பதில், மாறு ஈவார்க்கு - கைம்மாறு கொடுப்பவர்க்கு, ஈதல், பொலி - சிறந்த, கடன் என்க.

சிலவிடத்துக் கொடுத்த கடன்றொகை முழுகிப் போதல் போலாது, இது மாறு ஈயப்படுதலின் 'பொலிகடன்' என்னப் பட்டது. கடலுக்கு வளமாவது அம்பர், சங்கு, பவழம், முத்து உப்பு என்பன உண்டாதல்.

**99.** இறப்ப - மிகவும், புதவு - வாயில், கடிஞை - பிச்சைப் பாத்திரம். நாள்தோறும் சிறிதாயினும் யார்க்கும் கொடுத்துவர, அறப்பயன் பூரணமாகு மென்க.

**100.** சான்றோரால், "இவர் ஸத்பாத்திரத்திற் கொடுத்தாரெனப்படுஞ் சொல் மூன்று உலகங்களிலும் கேட்கும் என்பதாம்.

கடிப்பு இடு - குறுந்தடிகொண்டு அடிக்கப்பெற்ற, கண் - வாத்தியத்தில் அடிக்கப்படுகின்ற இடம். காதம் - சற்றேறக் குறைய இரண்டேகால் மயில். "அணுத்தேர்த் துகள்பஞ்சித்

துய்ம்மயி ரன்றி, மணற்கடுகு நெல்விரலென் றேற - அணுத் தொடங்கி, யெட்டோடு மன்னுவிரற் சாணுக்கி; வச்சா ணிர ண்டுமுழ மாம்" "முழநான்கு கோலக்கோ லேந்நூறு கூட்டீ, டவைநான்கு காதத் தளவாம்" என்பதனுலறிக. காத மிரண்டு கொண்டது யோசனை. மூன்றுலகாவன: புகழாலிவ்வுலகமும், இவன் மரபினேரிருந்துள்ள பிதிருலகமும், இனி இவன் பெறு வதான சுவர்க்கமுமாம். இவன் கொடையைக் கீழ்மக்கள் வியத் தலால் புகழ்பரவாமை நோக்கிச் சான்ருேராற் கூறப்பட வேண்டு மென்றதாம்.

(11) 'பழவினை'யாவது முற்பிறப்பிற் செய்தவினை இப்பிறப்பில் நுகரப்படுதலும், இப்பிறப்பிற் செய்தவினை வருபிறப் பிலே நுகரப்படுதலுமாகிக் கிடப்பதாய் மாறி வருவது*

**101.** ஓர் இளங்கன்றைப் பலவாகிய பசுக்களினுள்ளே, உய்த்துவிடினும், குழ கன்று - அந்த இளங்கன்றனது, தன் தாயைத்தேடி, கோடலை - அடைந்து கொள்ளுதலில், சாமர்த்திய முடையது; (அதுபோல), தொல்லை பழவினையும் - முன் பிறப்பிற் செய்த கருமமும், தன்னை உண்டாக்கிய, கிழவனை - தலைவனை, தேடிக்கொளற்கு அவ்வாறு சாமர்த்தியமுடையது.

**102.** உரு - வடிவழகு, உட்கு - பலருங் கூசத்தக்க மதிப்பு, இவை எல்லாம நில்லாமையைப் பார்த்திருந்தும், ஒன்றேயும் - ஒன்ருனும், நல்லறம் இல்லாதவன் உடம்மைப் பெற்றிருந்தும் இறந்ததை ஒக்குமென்க.

**103.** உலகத்தில் செல்வ முதலிய வளப்பத்தை விரும்பா தவர் யாவருமில்லை; ஆனாலும் தாம் தாம் செய்த புண்ணியங் களுக் கேற்றபடி அந்தப்போகம் அளந்து வைக்கப்பட்டுள்ளன; எப்படி என்ருல் விளங்காயும் களங்கனியும் பிறர் செயலின்றித் தாமே உருண்டை வடிவமாகவும், கரிய நிறமாகவும் அமைந்துள் ளனபோல என்க. அளந்தன - அளக்கப்பட்டன எனக்கொண்டு செயப்பாட்டுவினை செய்வினைபோல் வந்ததென்பாருமுளர்.

---

* இங்குக் கூறப்படுகிற விஷயம் மிக விரிவாய்ப் பதுமனுர் வகுத்திருத்தலால் மூன்று நான்கு பக்கம் விரியுமென்றஞ்சி விடப் பட்டது.

104. உறல்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா - வந்து கூடும்படி யான தீவினைகளைத் தடுத்துவிடுதல் தேவர்களுக்கும் முடியாவாம், பெறல்பால் அனையவும் அன்ன ஆம் - பெறும்படியான தன்மை யுடைய நல்வினைகளும் அத்தன்மையவாம், மாரி வறப்பின் அதனை தருவாரும் இல்லை - மழையானது வறண்டால் அதனைக் கொடுப்பவருமில்லை, சிறப்பின் தணிப்பாரும் இல் - (அது), அதிகப்பட்டால் குறைக்க வல்லவர்களும் இல்லை என்க. 'மன்னாப் பொருளு மன்ன வியற்றே' என்ற சூத்திர வுரையில், "உறற்பால........ஆகா' என இல்லாப்பொருளும் எச்சவும்மை பெற்றவாறு காண்க" என்றார். நச். (தொல். சொல். 34)

105. பனை துணையார் - பனையளவாக உயர்ந்த பதவியில் இருந்தவர், தினை துணையர் ஆகி, தங்களுடைய பிரகாசத்தை உள்ளே அடக்கிக்கொண்டு, தினந்தோறும் பெருமை அழிந்து வாழ்வார் : யோசித்தால், மேலை - முன் பிறப்பில், செய்த வினை பயன் அல்லால் பிற, எவன் உண்டாம் - வேறு என்ன உண்டாம்?

'தினை' 'பனை' என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டு வன சில அளவை என்பர் பரிமே. (குறள் 104.) இக் கருத்துப் பற்றியே "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத் தார்க்கும் துய்த்த லரிது" என்றார்.

106. பலவாக அகன்ற கேள்விப் பயனைப்பெற்ற அறிவினை யுடையார் அழிவதும், கல்லாதவர்கள் வாழ்வதும் எக்காரணத்தா லென்று அறியவேண்டினால், அறி வென்னும் சாரம் அக் கல்லாதார் மனத்து இன்மையால், இஃது அசாரமென்று கூற்று அவரைக் கொள்ளாது என்று தெரிந்துகொண்மின் என்க.

107. அடம்பு அம் பூ - அடம்புகளின் குளிர்ந்த மலர்களை, அன்னம் கிழிக்கும், அலை கடல் - அலைக்கின்ற கடலின், தண் சேர்ப்ப - குளிர்ந்த துறைக்குத் தலைவனே! இடும்பை கூர் - துன்பமிகுந்த, நெஞ்சத்தார் - மனத்தையுடைய அனேகர், எல் லாரும் காண, நெடு கடை நின்று - பெரிய பலர் வீட்டு வாயில் களிலே நின்று, உழல்வது எல்லாம் - பிச்சைக்காகத் துன்புறுவ தெல்லாம், முன்னை வினை ஆய்விடும் - முற்பிறப்பிற் பிறருக்குக் கொடுத்து உண்ணாத தீவினைப்பயனாகி முடியும் என்க.

அடம்பு - கொடியடம்பு, மர அடம்பு என்று இருவகைப் படும்; அன்னம் இருந்து கோதுமிடமுடைமையால் மர அடம்பு என்க; அடப்ப மரத்துப் பூ, காய், தளிர் முதலிய யாவும் குளிர்ச்சியுடையன வென்பது ஆயுள்வேத முடையார் கூற்று. குளிர்ந்தமலரை அன்னங்கள் கோதிக்கிழித்தல் போலச் சிறந்த ஒருவனையும் ஊழ்வினை வருத்துமென்பது தொகைமொழி.

108. இயற்கையிலே சிறந்தவரென்பார், அறியாருமல்லர் என்றார்; அறியக்கடவ நூல்களையும் அவற்றோடு கேள்விகளையும் கேட்டு உணர்ந்தவரென்பார் அறிவதறிந்தென்றார். மக்கட்பிறப்பும் அறிவும் உளவாகவும் அறிவிற்குப் பொருந்தாத தீயவை செய்தல் முற்பிறப்பிற் செய்யப்பட்டு வந்தவினையே என்றார். நெய்தலின் வாசனையானது காற்றின் வழியோடித் தன் மணத்தை வீசுதல்போல ஒருவன் முற்பிறப்பிற் செய்த தீவினையானது அவனைத் தொடர்ந்தே வந்து மறுபிறப்பிற் பலித்துவிடுமென்பது தொகைமொழியின் கருத்து. "ஊழ்வினை யுருத்துவந் தூட்டும்" என்பதனை நோக்குக.

109. ஈண்டு வையத்துள் எல்லாரும் எவ்வளவானாலும், தீய - தீயவைகளை, வேண்டார், நல்லவைகளே (அவர்களால்) விழை பயன் - விரும்பப்பெறும் பயனாகும்; வேண்டினும் வேண்டாவிடினும் - நல்லவற்றை விரும்பித் தீயவற்றை விரும்பா விட்டாலும், உறல் பால - வந்தடையவேண்டிய ஊழ்வினைகள், நீண்டா விடுதல் அரிது - அடையாமல் விட்டுவிடுதலானது இல்லை என்க.

110. சிறுகாலை - முற்காலத்தில், பட்ட - உண்டாகிய, பொறியும் - வினைகளும், சிறுகா - செய்த அளவில்நின்றுங் குறையமாட்டா, பெருகா - அப்படியே பெருகவுமாட்டா, முறை பிறழ்ந்து - கிரமந்தப்பி. வாரா - வரவேமாட்டா, உறு காலத்து - துன்பம் வந்த காலத்திலே, ஊற்று ஆகா - உதவியாகமாட்டா, ஆம் இடத்தே - வரவேண்டிய காலத்தில், ஆகும் - வந்தே தீரும், அதனால் - அப்படி இருப்பதனால், இறுகாலத்து - (தீவினைப் பயனால்) கேடுவருங் காலத்தில், பரிவு - இரங்குதலானது, என்ன காரணம் என்க.

(12) 'மெய்ம்மை'யாவது உண்மைகூறுவதே தமக்குரிய விரதமாக மேற்கொண்டு சொல்லிற் சோர்வு பிறவாமல் குறித்துக் கூறுதலும், இப்படித் தாம்சொல்லும் மெய்ம்மையாலே பிறர்க்குத் தீங்கு வருவதாயிருந்தால் அங்ஙனந் தீங்குவாராத் திறத்தைநோக்கி இயன்றமட்டும் பிறழாமற் கூறுதலும், அவ்வண்ணம் முடியாவிட்டால் தம் உயிரை விட்டேனும் அவற்றைக் காத்தலுமாம். அவற்றுள் இஃது உலகியலின் மெய்ம்மை கூறப்பட்டது. பழவினையை அறிந்த அளவில் இப்பிறப்பில் நன்மையே செய்து இனி வருபிறப்பில் துன்பமற வாழவிரும்புதலாலும், அந் நன்மைக்கு மெய்ம்மை இன்றியமையாதாதலாலும் பழவினையின்பின் வைக்கப்பட்டது.

111. நிரைதொடீஇ! இயையாத பொருளை இல்லையென்று சொல்லுதல் யாவர்க்கும் குற்றமாகாது; இயல்புடையதேயாகும்; இரப்போர் ஆசைகெட இன்றைக்கு நாளைக்கு என்று திருப்பி நெடுநாள் வரையில் போக்கி, அப்பால் இல்லையென்று சொல்லுவதானது செய்ந்நன்றி மறந்தவரது குற்றத்தைக் காட்டிலும் குற்றமுடையதாகு மென்க. நிரை - வரிசை. தொடி - வளை.

112. தக்காரும் தக்கவர் அல்லாரும் எக்காலும், தம் நீர்மை - தங்கள் குணத்தில், குன்றல் இலர் ஆவர் - குறைதலில்லாதவராவார்; எப்படிப்போல வென்றால், அக்காரம் - சருக்கரையானது யாவர் தின்னினும் கையாது, வேம்பு தேவரே தின்னினும் கைக்கும் என்க. 'அக்காரம் யாவரே தின்னினும்' என்றவழி யாவர் இழிவு குறித்து நின்றது; தேவரே என்றவழி தேவர் உயர்வு குறித்து நின்றது.

113. குளிர்ந்த மலை நாட! காலாடு போழ்தில் - ஒருவன் முயற்சியோடு ஆள்வினைசெய்து பொருளீட்டிச் செல்வமுடையனயின காலத்து, கழி கிளைஞர் - மிக்க சுற்றத்தார்கள், வானத்து மேல் ஆடுமீனில் - ஆகாயத்தினிடத்தில் சஞ்சரிக்கின்ற நட்சத்திரங்களைக் காட்டிலும், பலர் ஆவர், ஏலா - தகாத, இடர் ஒருவர் உற்றக்கால், தொடர்பு உடையேம் என்பார் சிலர் - உறவுடையேம் என்பவர் சிலரே யாம்; இல்லை யென்க. கால் - தாள் - முயற்சி.

114. வடு - குற்றம், வையம் - உலகம், மன்னிய மூன்றுள் நடுவணது எய்த இருதலையும் எய்தும் - நிலைத்த மூன்று பொருள்களாகிய அறம் பொருள் இன்பம் என்றவற்றுள் நடுவண் உள்ளதான பொருளை அடைய, மற்றை இரண்டு பக்கங்களான அறமும் இன்பமும் ஒருவன் அடைவான், நடுவணது எய்தாதான் உலைப்பெய்து அடுவதுபோலுந் துயர் எய்தும் - அந்நடுவிலுள்ளதான பொருளையடையாதான் உலையிலிட்டு வேக வைப்பதுபோலும் துன்பத்தை அடைவான் என்க.

115. நல்ல வழிப் பசுவின் கன்றாயின், நாகும் - இளங் கன்றும், அதிக விலை பெறும்; அதுபோல செல்வமுடையவரானால் கல்வியில்லாவிட்டாலும் அவர் வாய்ச்சொல் ஏறும்; அற்ப ஈரமுள்ள காலத்தில் பூட்டிய ஏர் உட்செல்லாது மேலெழுந்தவாறு போவதுபோல, கற்றவராயினும் தரித்திரர் சொல் ஏறாது என்க.

116. தடம் - விசாலம்; அடங்காதார், இடம் பட - விரிவாக, உண்மையான அறிவினைத்தருகிற நூல்களைக் கற்றாலும், என்றும் அடங்கார்; இன் பேய்ச்சுரை காய் - கண்ணுக்கு அழகாயுள்ள பேய்ச்சுரைக்காய்கள், உப்பும் நெய்யும் பாலும், அயிர் - சருக்கரையும், காயம் - உறைப்பும், பெய்து - இட்டு, அடினும் - சமைத்துப் பார்த்தாலும், கைப்பு அறா - கசப்பு நீங்காதனவாகும் : பாறயிர் (பால் + தயிர்) என்றும் பாடம். "உப்பொடு....காய்" இஃது உயர்வு சிறப்பு. (தொல். சொல். சூ. நச். 257.)

117. விறல் - தன் பெருமையால் பிறவற்றை வெல்லும் வெற்றி, கமழ் - மணம் வீசுகின்ற, கானல் - கழிக்கரைச் சோலைகளையுடைய, வீங்கு - மிக்க, நீர் - கடலின், சேர்ப்ப - துறையையுடைய அரசனே! தங்களை இகழ்வாரைத் தாங்கள் அவருக்கு முன்னே நிந்திப்பாராக; அவரொடுபட்டது-அவரோடுண்டாகிய தொடர்ச்சி தான் என்ன? உறற் பால-சம்பவிக்க வேண்டியவை, உறும் - வந்தேதீரும் என்க.

புன்னைமலர் கழிக்கரையிற் புலால் நாற்றத்தைப் போக்கி மணம் வீசுதல் போலப் பிரதியிகழ்தலானது பகைவரின் நிந்தையை அடக்கி மேலெழுமென்பது தொகைமொழி.

118. பசுக்கள் தம்மில் ஒவ்வாமல் பல்வேறு வகைப்பட்ட வண்ண வடிவங்களை யுடையனவானாலும், அந்தப் பசுக்களிற் கறந்த பால் வெவ்வேறு நிறங்களையுடையன வல்லாதவாறுபோல, தரும வழியானது ஒரே தன்மையுடையதாகும்; பல நிறமுள்ள அப்பசுக்கள்போல, ஈங்கு - இவ்வுலகத்தில், பல உருவுகொளல் - சமயங்களும் பற்பல வேஷங்களை யுடையனவாயிருக்கும் என்க.

119. தேருங்கால் - நாம் ஆராயுமிடத்து, இவ்வுலகத்தில் யார் தாம் ஒரு புகழை அடையாதவர்? முயற்சியால் செல்வம் யார்தாம் பெற்று வாழ்வடையாதவர்? யார்தாம் வாழ்நாளின் நடுவில் வசையுரையை அடையாதவர்? யார்தாம், கடைபோக - வாழ்நாளின் முடிவுவரையில், செல்வம் உய்த்தார் - செல்வத்திற் பொருந்தினவர் ஆயினர் என்க. யார்தாமுலகத்திலே செத்தாரென்று சொல்லப்படாதார்; யார்தா முற்பிறப்பில் தருமஞ்செய்து அந்த உபாயத்தால் இப்பிறப்பிலே வாழாதார் என்பது ஒரு பழையவுரை.

120. தேரில் - ஆராயுமிடத்து, யம தூதனானவன் தம்முயிரைக்கொண்டு ஓடும்பொழுது, தம்மொடு செல்வது தம்மால் இப்பிறப்பிற் செய்யப்பட்ட நல்வினை தீவினைகள் அல்லால், யாங்கணும் - எவ்விடத்திலேனும், பிறிது இல்லை; ஆங்கு-அப்போது, தாம் தாம், போற்றி - பாதுகாத்து, புனைந்த - அலங்கரித்து வைத்திருந்த, உடம்பும் - சரீரமும், பயன் இன்று - பயனில்லை என்க.

(13) 'தீவினையச்ச'மாவது தீவினைப்பயனை அனுபவிக்கின்ற உயிர்களையும், அத்தீவினையைச் செய்வாரையும் நோக்கித் தாம் தம்மை அஞ்சுதல். இது மெய்ம்மையுடையார், தாம் மெய்ம்மையின் பயனை அனுபவிப்பதற்கு இடையில் தடைவாராமற் காத்துக்கொள்ள வேண்டுதலின் அந்த மெய்ம்மையின் பின் வைக்கப்பட்டது.

121. சுடு காடு - சுடுகாடுகள், துக்கத்துள் - மனைவாழ்க்கையென்கிற துன்பத்தின் கண்ணே, தூங்கி - பொருந்தியிருந்து, துறவின்கண் சேர்கலா - துறவறத்திற் சேர்ந்து பிறப்பறுக்கமாட்டாத, மக்கள் - மனிதர்களுடைய, பிணத்த - உயிர்போகிய உடல்களையுடையனவாம்; புலம் கெட்ட - அறியுந் திறமற்ற, புல் அறிவாளர் - அற்ப அறிவுடையாரது, வயிறு - வயிறுகள்

தொக்க - திரண்ட, விலங்கிற்கும்-மிருகங்களுக்கும், புள்ளிற்கும் - பறவைகளுக்கும், காடே - இடுகாடுகளே யாகும் என்க.

முந்தின பிறப்பிலே இப்படிப் பல ஜீவன்களைக் கொன்று தின்றவர்கள் இந்தப் பிறப்பிலே ஆயுள் வரையில் துறக்க மனம் ஒருப்படாமல் மறுமைக்கு உறுதியையும் இழந்து மனைவாழ்க்கையிலே இருந்து துக்கப்படுவர் என்பது பழைய உரை.

122. சுரும்பு - வண்டுகள், ஆர்க்கும் - ரீங்காரஞ்செய்கின்ற, காட்டுள் ஆய்-காட்டினுளிருந்து, வாழும், சிவலும் குறும் பூழும் - கவுதாரியையும் காடையையும், கூட்டுள் ஆய் - கூடுகளிலிருக்கும்படி, கொண்டு வைப்பார் தாம் மறுபிறப்பில், இரும்பு-விலங்குகள், ஆர்க்கும்-சப்திக்கின்ற, காலர் ஆய் - கால்களையுடையவராகி, ஏதிலார்க்கு-பகைவர்க்கு, ஆளாய்-அடிமைகளாய், கரும்பார் கழனியுள் சேர்வர்-வலிய நிலத்து வயல்களில் ஏவலாளராய்ச் சேர்வர் என்க.

காட்டில் தம் கருத்துப்படி வாழ்தலின்றி அவற்றின் இனத்தில் நின்றும் பிரித்துக் கூட்டிலடைத்து அவற்றாலாகிய பயனைத் தாம் பெறுதல்போலத் தம்மைத் தம்மிச்சைப்படி விடாமல் விலங்கிட்டு இனத்தாரில் நின்றும் பிரித்து இவராலாகிய பயனை ஏதிலார் கொள்வாரென்க. இனிக் கரும் பார் கழனி - இருள் நெருங்கிய துன்பம் விளைக்கும் நிலமுமாம், அஃதாவது நரகம். எனவே, நரகத்திற்றள்ளுண்பா ரென்பதுமாயிற்று.

123. அக் கால் - முற்பிறப்பில், அலவனை - நண்டுகளை, விரும்பி அதன் கால்களை முரித்துத்தின்ற பழவினைவந்து அடைந்தக்கால், அங்கை - உள்ளங்கையானது, அக்கேபோல் - சங்குமணியைப்போல விரல்களெல்லாம் அழுகி, ஒழிய - துண்டித்துவிழ, துக்கம் தொழுநோய் - துன்பந்தருகின்ற குட்டநோய், எழுப - உண்டாகப் பெறுவார்கள் என்க. தின்ற பாவத்தால் இவரைக் குட்டநோய் வருத்துமெனவும், காலை முரித்ததனால் இவர் விரல்களழுகி விழுவனவெனவுங் கொள்க.

124. நெய் போல்வதூஉம் - நெய்யைப்போலக் குளிர்ச்சியைத் தரும் பொருளும், நெய்யும் என்றபடி, எரிப்ப - உடலை எரிக்கும்படி சுட்டு, எவ்வம் நோய் - துன்பந்தரு நோயை உண்

டாக்கும்; அதுபோல, கோடாரும்-ஒழுக்கத்தில் மாறுபாடில்லாத வரும், கோடி - மாறுபட்டு, கொடிய தீவினை செய்பவரைச் சார்ந்து, பாப்ப - மிகவும், கொடு வினையர் ஆகுவர் என்க. நெருப்பெழச் சேர்ந்தக்காலென்றும் நோயார்க்குமென்றும் பாடம்.

போல்வதூஉம் என்பது உரையசை. "ஒப்பில் போலியுமப் பொருட்டாகும்" என்ற சூ. மேற்கோள் (தொல். சொல். 278.)

125. பெரியவர் சிநேகமானது பிறைச் சந்திரன்போல நாள்தோறும் முறைமுறையே, நந்தும் - வளரும்; சிறியோர்கள் நட்பானது, வான் ஊர்-ஆகாயத்திற் செல்லுகின்ற, மதியம்போல்-பூரண சந்திரனைப்போல, வைகலும் - தினந்தோறும், தானே தேயும் என்க, ஊர்தல் - போதல். (சிந். 286. நச். உரை.)

பெரியவருடனே செய்த நட்பு நல்வினை யுண்டாக்கும் சிறிய வருடனேசெய்த நட்புத் தீவினை யுண்டாக்குமென்பது கருத்து.

126. சான்றோர் என மதித்து நீ சார்ந்தாய்; சார்ந்தோய்க்கு அச் சார்ந்தாரிடத்தில் சான்றாண்மை இல் ஆயின், அவரைச் சார்ந்தோனே கேள், ஒருவன் செப்பு அகத்து, சாந்து - சந்தன முதலான வாசனைப் பண்டம், உண்டு என்று நினைத்துத் திறக்க, அந்தச் செப்பினுள் பாம்பு ஒன்றை, கண்டன்னது - கண்டாற் போன்றதை, உடைத்து - ஒத்துளது என்க. "சாந்தகத் துண்டென்று.........துடைத்து' என்பது அச்சமாகலின் அச்சவுவமை (தொல். பொருள். சூ. 294. பேரா.)

127. சாரல்-மலைப்பக்கங்களில், கனம் மணி நின்று இமைக்கும்-மிகுத்த இரத்தினங்கள் கிடந்துமின்னுகின்ற, நாடனேகேள், மணிதர்களது உள்ளக்கருத்து வேறாயும் செய்யும்செய்கை வேறாயுமிருத்தலால், ஒருவர் எண்ணத்தைத் தேரும் அளவினை உடையவர் யார் ஒருவர் உளர்? எவருமில்லை என்க.

மனத்தை வேறுபடுத்தி இப்படிச் செய்விப்பதுவும் தீவினைப் பயன்; இப்படிப்பட்ட தீவினையாளரைச் சேராமல் அஞ்சியிருக்க வென்பது பழைய உரை. மணி சாரலிற் கிடப்பினும் தானே பிரகாசித்துத் தானிருக்குமிடத்தைப் பிறருக்கு அறிவுறுத்துதல்

போல ஒருவரின் மனமொழி மெய்களின் தூய்மை தானே பிற ருக்குப் புலப்படுமென்பது தொகைமொழி.

128. புனல் தெள்ளி செதும்பு நின்று அலைக்கும் - மலை அருவிகொழித்து அடிவாரத்திலுள்ள ஊறற்சின்னீரில் விழுந்து ததும்பி யலையாநின்ற, அழகிய மலை நாட்டரசனே, உள்ளத்தான் நட்புக்கொள்ளாது, தமக்கு நன்மை பயக்கும் காரியத்தையேநாடும் தொழிலாகி, கள்ளத்தாலே நேசம் பண்ணினவரது மிக்க நேச மானது மனத்திலே குற்றப்பட்டு, துன்பமாய் முடியும் என்க.

புனலானது மணிகளைக்கொழித்துக் கொண்டுவந்து விழுந்து அலைத்தல்போல அவர்களின் வஞ்சனை யொழுக்கமும் நட்பாகக் கொண்டவர் மனத்தில் விழுந்து வருத்துமென்பது தொகை மொழி. இத்தகைய தீவினை யாளரை அஞ்சுக என்பது கருத்து.

129. ஓங்கிய ஒளிபொருந்திய வாளாயுதம் பகைவர் கையில், பட்டக்கால், ஊக்கம் - மனவெழுச்சியை, அழிப்பதூஉம் மெய் ஆகும், ஆக்கம் - தீயருக்குச்செய்யும் உபகாரம், இம்மை மறுமை ஆகிய இரண்டினையும், சென்று சுடுதலால், கல்லாரிடத்தினின்றும் தீர்வு, நீங்குதல் நல்லகாரியம் என்க. சிதைத்தலால் என்றும்பாடம்.

ஆக்கம் - இம்மை மறுமை யிரண்டும், தன் சீவனைக் கெடுக்கு மாதலால் என்பது ஒரு பழையவுரை.

130. மனை பாசம் கைவிடாய் - மனை வாழ்க்கையிலுள்ள பற் றினை விட்டொழித்தாயல்லை, எனைத்து ஊழி - எத்தனை ஊழிக் காலம், செய்த நன்று அல்லால் மற்றைப்பொருள்கள் சிறிது பொழுதானலும் உயிர்க்குப் பொருந்திய பயன் இல்லை என்க.

தன்னாற்செய்யப்பட்ட நன்றல்லது உயிர்க்கு உறுபயனில்லை என உருபுச்சொல் எஞ்ச வந்தது; இவ் உருபுச்சொல் வினை வினைக்குறிப்பா யடங்குதலின் வினையெச்சத்தின் பாற்படும். (நன். மயிலை. சூ. 359.) பாசம் - பிசாசுமாம்.

முன்செய்த தீவினைப் பயனால் தன்னுடைய நெஞ்சு தனக்கு வசம் ஆகாமல், மனத்தை வேறுபடுத்தும் என்க.

ஸ்ரீ:

# செய்யுண்முதற்குறிப்பகராதி

எண் - பாட்டெண்


| | | | |
|---|---|---|---|
| அக்கேபோல் | 123 | உண்ணொளி | 9 |
| அகத்தாரே | 31 | உபகாரஞ் | 69 |
| அச்சம் | 81 | உயிர்போயார் | 50 |
| அம்பலய | 87 | உருவுமிளமையும் | 102 |
| அம்புமழலு | 89 | உள்ளத்தான் | 128 |
| அரும்பெறல் | 34 | உறக்குந் | 38 |
| அறம்புகழ் | 82 | உறற்பால | 104 |
| அறியாரு | 108 | ஊக்கித்தாங் | 57 |
| அறிவதறிந் | 74 | ஊருளெழுந்த | 90 |
| அசுறுவை | 1 | ஊறியுவர்த் | 47 |
| ஆட்பார்த்து | 20 | என்னுனு | 5 |
| ஆவாநா | 32 | எனக்குத்தா | 15 |
| ஆவேறுருவின | 118 | ஏற்றகை | 98 |
| இசையாவொரு | 111 | ஒக்கியவொள் | 129 |
| இடம்பட | 116 | கடிப்பிடு | 100 |
| இடும்பைகூர் | 107 | கணங்கொண்டு | 25 |
| இம்மியரிசி | 94 | கரும்பாட்டி | 35 |
| இரும்பார்க்குங் | 122 | கல்லெறிந் | 66 |
| இல்லமிளமை | 53 | கழிந்தாரிடு | 49 |
| இல்லாவிடத்து | 91 | காணிற் | 84 |
| இழைத்தநா | 6 | காதலார்சொல் | 73 |
| இளையானட | 65 | காலாடுபோ | 113 |
| இறப்பச்சிறி | 99 | காவாதொருவன் | 63 |
| இன்பம் | 79 | குடருங் | 46 |
| இன்றுகொ | 36 | கூர்த்துநாய் | 70 |
| இன்னுசெயினு | 76 | கேளாதேவந்து | 30 |
| ஈண்டுநீர் | 109 | கொன்னே | 55 |
| உடாஅதும் | 10 | கோதையருவி | 71 |

சான்றோரென 126
சிறுகாபெருகா 110
செம்மை 85
செல்வர்யாம் 8
சென்றேயெறிப 24
சொற்றளர்ந்து 13
தக்காருந் 112
தக்கோலந் 43
தண்டாச்சி 62
தம்மையிகழ்ந்தமை 58
தம்மையிகழ்வாரை 117
தாஞ்செய் 120
தாழாத்தளரா 14
தான்கெடினு 80
தினைத்துணை 105
துக்கத்துட் 121
துகடீர் 2
துன்பம்பல 54
துன்பமே 60
தெண்ணீர்க் 44
தோற்போர்வை 42
தோற்றஞ்சால் 7
நட்புநார் 12
நடுக்குற்றுத் 93
நடுவூருள் 96
நரைவரு 11
நல்லாவின் 115
நார்த்தொடு 26
நிலையாமை 52
நின்றனநின்றன 4
நெடுங்கால 68
நெருப்பழற் 124
நேர்த்து 64
நேரல்லார் 72
படுமழை 27
பண்டமறி 48
பரவாவெளி 88
பருவமெனைத்து 18
பல்லாரறிய 86
பல்லாவு 101
பல்லான்ற 106
பனிபடு 17
புக்கவிடத் 83
புன்னுனி 29
பெயற்பான் 97
பெரியவர் 125
பெரியார்பெரு 77
மக்களாலாய 37
மதித்திறப் 61
மலைமிசைத் 21
மற்றறிவாம் 19
மறுமையு 95
மன்றங்கறங்க 23
மனைப்பாசங் 130
மாக்கேழ்மட 41
மாண்டகுண 56
மாற்றாராய் 67
மானவருங்கல 40
முல்லைமுகை 45
முன்னரே 92
மெய்வாய்கண் 59
யாஅருலகத் 119
யாஅரொருவர் 127
யாக்கையை 28
யானையெருத்தம் 3
வடுவிலா 114
வளம்பட 103
வற்றிமற் 78
வாழ்நாட்க 22
வானிடுவில் (கடவுள்)
விளக்குப் 51
வினைப்பயன் 33
வெறியயர் 16
வேற்றுமை 75
வைகலு 39

இரண்டாவது 'பொருளியல்' என்பது முதலில் அறவியல் கூறத் தொடக்கி, அதன் கண்ணே இல்லற இயல்பு கூறிவந்த ஆசிரியர் அந்த இல்லறத்தின் வழிக்குரியனவாகிய பொருள் இன்பமென்னும் இரண்டனுள் இருமைப்பயனும் பயப்பதான பொருட் பகுதியி னியல்பைக் கூறத்தொடங்கினர். அதனுள்,

1. 'அரசிய'லாவது, அரசனது இயல்பைக்கூறுதல். பொருளின் துணைக்காரணமான அவ்வரசனது இயல்பை எழதிகாரத்தாற் கூறத்தொடங்கி, அரசனது நெறிக்கு இன்றியமையாத கல்வி ஏனையோர்க்கும் பொதுவாதலால் அதனை முதற்கட் கூறுகின்றார்.

(14) 'கல்வி'யாவது தத்தங் குலத்துக்கொப்ப ஓதலும், கற்றலும் பொருள்களை விளங்கக் கேட்டறிதலும், பின்பு அவற்றைத் தான் வகுத்துக் கூற வல்லனாதலுமாம்.

131. குஞ்சி - புருஷர்களின் சிகை, கொடுந் தானை - வளைந்த வஸ்திரம், கோடு அழகு - அதனிற் பட்டுக்கரை சரிகைக்கரைகளின் அழகு, மஞ்சள் அழகு - அரிதாரத் திலகத்தின் அழகு, ஒருவர்க்கு இவை அழகு அல்ல, நடுவு நிலைமையோடு கூடிய கல்வியழகே அழகாகும் என்க.

132. இம்மைபயக்கும் - இப்பிறப்பில் நுகரப்படும் இன்பமெல்லாம் தரும், தம்மை விளக்கும் - தம்மைப் பிரவித்தப்படுத்தும், தாம் உளராக் கேடு இன்று - தாம் உயிரோ டிருக்கும் வரையில் அது கெடாது, எம்மை உலகம் - எத்தன்மையான உலகம், மம்மர் - மயக்கம், கல்விபோல் அஞ்ஞானம் தீர்க்கும் மருந்தினை யாம் காணவில்லை என்க. இப்பாடலை ஓதற்சிறப்புக்கு உதாரணமாகக் காட்டுவர் நச். (தொல். பொருள். சூ. 75.)

133. களர் நிலத்து - உவர்நிலத்திலே, பிறந்த உப்பினைச் சான்றோர்கள் மருதநிலத்து வயலில் விளைந்த நெல்லினும் சிறப்புடையதாகக் கொள்ளுவர்; அதுபோல, கடை நிலத்தோர் ஆயினும் - கீழ்க் குலத்திற் பிறந்தவராயிருந்தாலும், கற்று அறிந்தோரை, தலை நிலத்து - சான்றோரிருக்கும் உயர்ந்த நிலையிடத்திலே. வைக்கப்படுவதாகும் என்க.

ஐவகை நிலங்களுள் களர் நிலமாகிய நெய்தல் 'புலாலும் ஊனும் புதைபடு சேறும், உவர்நீர்க் குழியும் கவர்புள் ளினமும்' நிரம்பப் பெற்று நல்லோரடியிடு நெறியில்லா திருப்பினும் அதனிடத்து உண்டாகிய உப்பு மக்களுக் கின்றியமையாதது பற்றிக் களர் நிலத்து என்று நிலத்தை இழித்தும் உப்பினை விழுமிதாக் கொள்வரென உப்பைச் சிறப்பித்துங் கூறினர்.

134. வைப்புழி - வைத்தவிடத்தில், கோள்படா - பிறராற் கைப்பற்றப்பட மாட்டாது; வாய்த்து - தமக்குக் கிடைக்கப் பெற்று, ஈயில் - பிறருக்குக் கொடுத்தால், கேடு இல்லை - அழிவதில்லை; அரசர், செறின் - கோபித்தாலும், வௌவார் - கைப்பற்ற மாட்டார்; ஆதலால், ஒருவன் தன் பிள்ளைகளுக்குத் தேடி வைக்கிற ஆஸ்தி, விச்சை - கல்வியேயாம்; பிற அல்ல என்க.

135. கல்வி கரை இலவாம், கற்பவர் வாழ்நாட்கள் சிலவாம், மெல்ல நினைக்கில் - பொறுத்திருந்து ஆலோசித்தால், பிணி பலவாம், ஆதலால், நீர் ஒழியப் பாலையுண்ணுகின்ற, குருகில் - அன்னப்பறவைபோல, தெள்ளிதின் - நன்றாக, ஆராய்ந்து - ஆலோசித்து, தெளிந்து - இன்னது கற்கவேண்டுமென்று நிச்சயித்து, அமைவுடைய - பொருந்துவனவற்றை, கற்க என்க.

136. நூல் கற்ற மகன் துணையாக நல்ல கொள்ளுதலானது, காணில் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, தோணி இயக்குவான் - தோணியை ஓட்டுபவன், தொல்லை - பழமையாகிய, வருணத்து - சாதிபேதங்களுள், கடைப்பட்டான் என்று - கீழானவனென்று, இகழாதவராய், அவன் துணையாக, ஆறு - ஆற்று வெள்ளத்தை, போய் அற்று - கடந்துசென்ற அத் தன்மைத்து என்க. காணாய், முன்னிலையசை.

137. தவல் அரும் - கேடில்லாத, தொல் - பழமையாகிய, கேள்வி - கேள்விகளால் வரும், தன்மை உடையார் - குணங்களையுடையவராய், இகல் இலர் - தம்மில் மாறுபாடில்லாதவராய், எஃகு உடையார் - புத்திக் கூர்மையுமுடையாராய புலவர்கள், தம்முள் - தங்களுக்குள், குழீஇ - ஒன்றுகூடி இருந்து, நகலின் - மகிழும் மகிழ்ச்சியைக் காட்டிலும், அகல் வானத்து - அகன்ற ஆகா

யத்திற்கு, உம்பர் - அப்பால், உறைவார் - வசிப்பாரான தேவர்களது, பதி - சுவர்க்கமானது, இனிது ஆயில் - இனியதானல், காண்பாம் - பின்னர் நோக்குவாம்; இனியதில்லே என்க. உறையும்பதி என்ற பாடத்திற்கு அகல்வானத்து, உம்பர் - தேவர்கள், உறையும்பதி - வசிக்கும் சுவர்க்க உலகம் என்று பொருள் கூறுக.

"செல்வம் புலனே" என்ற சூத்திரத்து அறிவு பொருளாக உவகை பிறந்ததற்கு "இகலில.........காண்பாம்" என்ற அடிகளேக் காட்டுவர் பேரா. (தொல், பொருள். 259.)

138. கனை - ஒலிக்கின்ற, கற்றறிந்தார் கேண்மை கரும்பை நுனியில் தொடங்கி, தின்றற்று - தின்ருற்போன்ற தன்மையது. பண்பு இலா ஈரம் இலாளர் - நற்குணமும் இரக்கமுமில்லாதவருடைய தொடர்பு நுனி நீக்கி, தூரில் - அடியிலிருந்து, தின்றன்ன - தின்ருற்போன்ற, தகைத்து - பண்பினையுடையதாகும் என்க.

139. ஒள்ளிய நிறத்தையுடைய பாதிரிப் பூச்சேர்தலால், புத்தோடு - புதிய பானேயோடானது, தான் - தானே அந்த வாசனையைத் தண்ணீர்க்கு, பயந்தாங்கு - கொடுத்தாற்போல, கல்லாரே ஆயினும் கற்ருரைச் சார்ந்து ஒழுகின், நாளும்-தினமும், நல்லறிவு தலேப்படுவர் என்க. தலேப்படுதல் - அடைதல்.

140. கற்பின் - கற்கப்புகின், அலகு சால் - அளவுபட்டு அமைந்த, அறிவு நூல் கல்லாது - ஞானநூல்களேக் கற்காது, உலக நூல் ஓதுவது - உலகவின்பத்தினைப் பயக்கும் நூல்களே மனிதர் ஓதுவது கலகலவென்று பயனின்றிக் கூவும் அளவேயன்றிப் பிறவித்தடுமாற்றம் ஒழிக்கக்கொண்டு செலுத்தும் அளவை அறிவாரில்லே என்க. கலகல இரட்டைக்கிளவி.

அறிவுநூல் இறைவன் ஆகமநூல்; அவை :— அங்காமம், பூர்வாகமம், பகுசுருதியாகமம் என்பன. உலகநூல் :— மந்திரம், கணிதம், வைத்தியம், சோதிடம், காப்பியம், புராணம், கண்மருள் சாலம், தொழில்வகை நூல்களும் பிறவுமாம். அறிவுநூல் என்ற பாடத்தினும் அறிவனூல் என்று பாடமாயின் நேரிதாம். அறிவன் - கடவுள்.

(15) 'குடிப்பிறப்பாவது உயர்குடியிற் பிறந்தாரது தன்மையைக் கூறுவது. அருளும் செல்வமும் குலமும் ஒழுக்கமும் இடையீடுபடாமல் தொடர்பு பெற்றுவருவதே உயர்குடி எனப்படும்; உயர்குடியிற் பிறவாதவரும் இவரது ஒழுக்க முதலியவற்றைக் கண்டு, தாமும் அவ்வண்ணம் நடக்க வேண்டுமென்று விரும்பும்படியாக ஒழுகுதலே உயர் குடியிற் பிறந்தாரது தன்மையாம். நற்குடியிற் பிறந் தார்க்கே கல்விகளும் கேள்விகளும் பெரும்பாலும் அமை யுமாதலால் இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

141. குடி பிறப்பாளர் - நல்ல குடியிற் பிறந்துள்ளவர், உடுக்கை உலறி - தாம் உடுக்கும் வஸ்திரமானது உருக்கெட்டுச் சிதைந்து, உடம்பு அழிந்தக்கண்ணும் தம்கொள்கையிற் குன்றார்; அரிமா - சிங்கமானது, இடுக்கண் தலைவந்தக் கண்ணும் - துன்பம் நேர்ந்தாலும், கொடி புல் கறிக்குமே - படர்கின்ற புல்லைத் தின் னுமோ? தின்னாதென்க.

கொள்கையாவன:—அருளும், அன்பும், அடக்கமும், வாய் மையும், பொருள்படு மின்சொலும், பொய்யில்லாமையும், குர வரைப் பேணலும் மற்றுமாம். உடுக்கை - ஆடைக்குத் தொ ழிலாகுபெயர்.

142. வான் தோயும் மை தவழ் வெற்ப - ஆகாயத்தை அளா வும் மேகங்கள் தவழுகின்ற மலைநாடனே! சான்றாண்மை - அமைதி, சாயல் - மென்மை, நல்லொழுக்கம், ஆகிய இவை மூன் றும், வான்தோய் குடி பிறந்தார்க்கு அல்லது - வானைத் தொடுவது போலுயர்ந்த குடிப்பிறந்தார்க்கு அல்லது, பெருஞ்செல்வம் எய்தி யக் கண்ணும் பிறர்க்கு, படா - உண்டாகாவாம் என்க.

வான் தோய் வெற்பில் மை தவழ்தல்போல நல்ல குடியிற் பிறந்தாரே சான்றாண்மை முதலியன உடையவர் ஆவார் எனத் தொகைமொழிப் பொருள் கொள்க.

143. பெரியவர்களைப் பார்த்தவுடன், இருக்கை எழலும் - தாம் இருக்குமிடத்தைவிட்டு எழுதலும், எதிர் செலவும் - எதிர்கொ ண்டு செல்லுதலும், ஏனை - இன்னும், விடுப்ப - அவர்கள் நிற்க

வென்று சொல்லிய பிறகே, ஒழிதலொடு - நீங்கி வருதலும், இன்ன - ஆகிய இப்படிப்பட்டவைகளை, குடி பிறந்தார் குன்று ஒழுக்கம் ஆகக் கொண்டார் ஆதலால், அவர்களைக் கயவரோடு, ஒன்று-ஒருதன்மையாக, மதிக்கத்தக்கது அன்று என்க.

"இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்" என்னும் பகுதியுள் இது வழிபாடு கூறியது என்பர் நச். (தொல். பொருள் சூ. 75.) 'இருக்கை எழலும் எதிர் செலவும்' முதலியன பணிவின் இலக்கணமென்பர் பரிமே. 'குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும பணிவு' என்னுங் குறளுரையில் (960.)

**144.** நல்லவை செய்யின் இயல்பு ஆகும், தீயவை செய்யின் பலர் தூற்றும் பழி ஆகும், என்று உணரும் குடிப்பிறப்பு ஒரு வர்க்கு, புணரும் - பூர்வ ஜன்ம சுக்ருதத்தால் சம்பவிக்கும் எனில் அதனைக் காட்டிலும், ஊதியம் - இலாபமானது, என்னை ? என்க.

**145.** கல்விகற்காதிருந்தால் அதற்கு அச்சம், கயவர் - கீழ் மக்களுடைய, செய்கைக்கு அச்சம், சொல்லாமையுள்ளும் - தாம் தவறி ஒன்றுஞ் சொல்லாதிருப்பதனுள்ளும், ஓர் சோர்வு - தப்பி ஏதேனுஞ் சொன்னேமோ வென்பதனாலுண்டாகிய சோர்வுக்கு அச்சம், கொடுக்கும் பொருளெல்லாம் இரப்பார்க்கு ஒரு பொரு ளேனும் ஈயாமைக்கு அச்சம், ஆகிய இந்த அச்சங்கள் நற்குடிப் பிறந்தார்க்கு உண்டாகும். மாணா - மாட்சிமை யில்லாத, தாழ்ந்த குடியிற் பிறந்தவர்களோ, இம் மரத்தார் - இவ்வுலகில் மூளைத் துள்ள மரங்களுள் வைத்தெண்ணப் படுவார் என்க.

"இன்னாதிரக்கப்படுதல்" என்னுங்குறளுரையில், "இரக்கப் படுதல் - ஈவலென்றிருத்தல்; அதனை இன்னாதென்றது 'எல்லாம், இரப்பார்க் கொன்றீயாமை' கூடுங்கொல்லோ என்னும் அச்சம் நோக்கி" என்றார் பரிமே. (குறள். 224.)

**146.** கனம் மணி - மிருதியான இரத்தினங்கள், முத்தோடு இமைக்கும், முழங்கு உவரி - ஒலிக்கின்ற கடலினது, தண் சேர்ப்ப! இனம் நன்மை இன் சொல் ஒன்று ஈதல் மற்று முள்ள மனம் நன்மை என்ற இவை எல்லாம், இல் - நல்லகுடி யில், பிறந்தார் கண்ணே உள என்க.

இவற்றைச்சேரத் தொகைமொழிப் பொருளால் இற்பிறந் தாரைக் கடலாகவும், அந்த இற்பிறந்தாரிடத் தமைந்துள்ள இனநன்மை, இன்சொல், ஈதல், மனநன்மை இவைகளையெல் லாம் அக்கடலுள் அமைந்து கிடக்கு மணிகளும் முத்துக்களுமாக வும், இற்பிறந்தாரிடத்து இன நன்மை முதலியன பிரகாசித் தலை அந்த மணிகள் பிரகாசித்தலாகவும், கீர்த்திமிக்கிருத்தலை உவரி முழங்குவதாகவும் கூறினர்.

**147.** செய்கை - நன்றாகச் செய்யப்பட்டுள்ள கட்டிடம், "இட்டிகை நெடுஞ்சுவர்விட்டம் வீழ்ந்தென" அழிந்து, சிதல் - கறையான், மண்டிற்றாயினும் - மொய்த்ததாலும், பேர் இல், பெய்யா - மழைபெய்து நனையாத, ஒரு சிறை - ஒரு பக்கத்தை, உடைத்தாகும் ; அதுபோல, குடிப்பிறந்தார், எவ்வம் - துன்பங் களை, உழந்தக்கடைத்தும், செயல் பாலவை - செய்யவேண்டிய வைகளைச் செய்வர் என்க.

**148.** ஒருபக்கத்தில் ராகுவென்னும் பாம்பு கொளினும் மற்றொருபக்கத்தில், அம் கண் - அழகிய இடமகன்ற, மா - பெரிய, ஞாலம் - பூமியை, விளக்குறூஉம் - விளங்கச்செய்கின்ற, திங்கள்போல் - சந்திரனைப்போல், குடிப் பிறந்தார், செவ்வன்- செவ்வையாக, செல்லாமை - வறுமையானது, நேர் நிற்பினும், நேரே நின்றாலும், ஒப்புரவிற்கு - தாம் செய்யவேண்டிய கடப் பாடுகளுக்கு, ஒல்கார் - தளரமாட்டார் என்க.

செவ்வனே நின்பினும் என்னும் பாடத்திற்கு நன்றாக நிலைத்திருந்தாலும் என்க. அன்றி, செல்லாமை நேர் நிற்பினும்- வறுமை நேர்ந்து நின்றாலும், செவ்வன் ஒப்புரவிற்கு ஒல்கார் - செவ்வையான ஒப்புரவிற்குத் தளரார் என்க.

**149.** பொருளில்லாது வறுமை யுற்றிருக்கிற போதும் குடிப் பிறந்தார் செய்வன பொருளுள்ள காலத்தும் சிறியவர் செய்யார் ; புல்வாய் - மானானது, பருமம் - சேணத்தை, பொறுப்பினும் - முதுகில் தாங்கிக் கொண்டாலும், பாய் பரிமாபோல - தாண்டிச் செல்லுகிற குதிரையைப்போல, பொரு முரண் - போர்செய் தற்குரிய மாறுபாட்டை, ஆற்றுதல் இன்று - செய்ய வல்லதே

இல்லை என்க. புல்வாயைக் கூறியது, அச்சாதியுட் சில சேணந் தாங்கி வண்டி இழுத்தலுக்கும் சவாரிசெய்தலுக்குமே பயன் படலை உட்கொண்டென்க. பரிமாப்பேல என்றும் பாடம்.

150. நல்லகுடியிற் பிறந்தவர்கள், எற்று ஒன்றும்-யாதொன் றும் இல்லாமல் வறுமையடைந்த காலத்திலும், பொருளின்றித் தம்மை யடைந்தவர்க்கு, அசைவு இடத்து - தளர்ந்த விடத்துப் பற்றுக்கோல் போல்வார்; அகன்ற நதியானது நீர் வற்றிய காலத்தும், தோண்டினுல் தெளிந்த நீர் தெற்றென - விரைவாக, உண்டவதுபோலென்க. சேர்ந்தார் அசைவிடத்து என்றும் பாடம். குடிப்பிறந்தார் தம் சேர்ந்தார் எனற்பாலது, தன் சேர்ந் தர் என்று, பன்மை ஒருமை மயக்கமாய் வந்தது.

(16) 'மேன்மக்க'ளாவது நல்லோரை வணங்குதலும், தீயோரை யிகந்தொருவுதலும், கீர்த்தியைப் பேணிக்கொளலும், பழிக்கு அஞ்சுதலும் முதலான நற்குணங்களை யுடையா ரது நன்மையைச் சொல்லுதல்; நற்குடிப் பிறந்தார்க்கே மேலான குணங்கள் உளவாதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

151. அங்கண் விசும்பு - அழகிய இடமகன்ற ஆகாயம், பாரிததல்- பரப்புதல். திங்கள் தன்னிடத்துள்ள மாசினைச் சகிக் கும், சான்ருேர் அம்மாசினைச் சகியாராய்த் தேய்வர் என்க.

மன் - ஒழியிசைப் பொருளில் வந்தது. மாசினை ஆற்ருராத லால், திங்களை ஒவ்வார் என்றபடி. சிறப்பினுல் அஃறிணை உயர்திணை முடிபு எய்தியதற்கு மேற்கோள். (நன். மயிலை. 377.)

152. ஒரு காரியம் கூடுமாயினும் கூடாதாயினும் தம்பால் பழிவாராத வகையையே எண்ணுவர் சான்ருேர். நரியை நெஞ்சு கிழித்த அம்பினைக் காட்டிலும் சிங்கத்தைக் கொல்லாது அத னைப் பிழைத்தோடவிட்ட அம்புமேலாயவாறுபோல என்க.

153. பசியினுலே உடம்பு வற்றி நரம்பு மேலெழுமாறு தரித்திர முற்ருராயினும் வரம்பு கடந்து குற்றங்களை மேற் கொண்டு இரக்கப் புறப்படார், தம் அறிவினையே தறியாகக்

கொண்டு, முயற்சியென்னும் நாரினால் வறுமை யாற்றளர்ந்த மனத் தைச் சிக்கெனக் கட்டிக் கொண்டு, தமக்குள்ள பொருளளவி னாலே செய்யத் தக்க காரியங்களைச் செய்வரென்க. எழவெனற் பாலது எழுந்து எனத் திரிந்து நின்றது. குரம்பு - வரம்பு, உரம் - அறிவு; கவறு - பிளப்புள்ள பனைமட்டை, ஈங்குப் பற்றுக் கோடுக்கு ஆயிற்று. உள்ளம் - முயற்சி.

154. நல்வரைநாட - நல்லமலை நாடனே! போகிற விடத் திலே ஒரு நாள்காணினும், சான்றவர் தொல்வழி கேண்மை யின் தோன்ற - பழையவழியால் வந்த சிநேகம் போலத் தோன் றும்படி, புரிந்து - அன்பு செய்து, யாப்பர் - சிநேகிதராகத் தம்மோடு அவரைக் கட்டுவர்; சிலநாள் காலடி படின் கல்மலை யினும் வழிதோன்றும் என்க.

நல்லமலை தன்னை யடைந்த புதியவர்க்கும் தேன் பலாப் பழம் சுனைநீர் வள்ளிக்கிழங்கு முதலியன நல்குவதுபோலச் சான் றோர் ஒருநாட் பழகினும் உதவுவரென்பது தொகைமொழி.

155. கல்லாத ஒருவன் இலக்கணத்தோடு பொருந்தாததும் அருத்தமில்லாததுமான பூர்வபக்ஷ ஸமாதான கோடியைச்சொன் னாலும் நல்லார் வருந்தியும் கேட்பர், ஏனெனில் அக்கல்லாதவன் பலர் முன்னே அவமானப்படுதலுக்கு இரங்கி என்க. எழுத்து - இலக்கணம், எழுத்திற் புல்லாக்கோட்டி, வறுங்கோட்டி என்று கூட்டுக. கோடி என்பது கோட்டியென இரட்டித்து நின்றது.

156. சோலையினின்றும் வரைந்து கொண்ட கரும்பினைக் கணுக்கள் தெறிக்க நசுக்கி இடித்து நீர் பிழிந்தாலும், நல்ல சுவை யுடையதே யாகும், அதுபோலக் குற்றமுண்டாக வைது அவ மதித்தபோதும் நற்குடியிற் பிறந்த மேன்மக்கள் தம் வாயினால் கெட்ட சொற்களைப் பேசார் என்க.

157 குற்றமற்ற அறிவினையுடைய மேன்மக்கள் வஞ்சித்துக் களவு செய்யார், கள்ளுண்ணார்; நல்லோர்கள் நீக்கத்தக்க தீக்கரு மங்களை நீக்கி, விடத்தக்கனவற்றை விட்டுப் பிறர்பால் குற்றங் கண்டவிடத்து அவரை இகழ்ந்துரையார்; தவறியும் தம் வாயி னாற் பொய் கூறார்; வறுமை வந்து தளர்ந்தாலும் இரங்கார்

என்க. நீக்கத்தக்கன—கொலை, களவு, கள், காமம் என்பன; விடத்தக்கன அநாசாரங்கள்.

158. பிறர் இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாகவும், அயலார் மனைவியரை நோக்கலிற் குருடனாகவும், கொடிய புறங் கூற்றுக்கள் கூறுவதில் ஊமையாகவும் நிற்பானாகில் அவனுக்குக் கூறுபாடு அறிந்து எத் தருமோபதேசமும் செய்யவேண்டா என்க.

'பல்லார் மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை' என்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. (ஏலா. 20)

159. நல்லகுண மில்லாதார் தம்மிடத்திலே ஒருவர் பல காலுஞ் சென்றால், 'இவர் ஏதாகிலும் ஒன்றை விரும்புவர்' என்று நினைத்து இகழ்வார்கள். சீர்மையினை யுடையவர்களோ தம்மிடம் 'இவர் ஏதாயினும் ஒன்று வேண்டினால் நல்லது' என்று நினைத்துக் கண்டபோதெல்லாம் சிறப்புச் செய்வார்கள் என்க.

160. இவர் செல்வமுடையவரென்று அற்பரை விடாமற் பிடித்துக்கொண்டு அவர் பின்னே சென்று அற்பரே வாழ்வர்; எல்லா ஐசுவரியமும் நிறைந்த பிலத்தை ஒருவன் பெற்றாற்போல வல்லவா, நற்குலத்துப் பிறந்த மேன்மக்களைச் சேர்ந்தால் என்க. பெரியோர்களைச் சேர்ந்தால் இம்மையில் இன்பமும் புகழும் செல்வமும் உண்டென்றபடி.

(17) 'பெரியாரைப் பிழையாமை'யாவது, அறிவும் அடக்கமும் அன்பும் ஆசாரமுமென்று சொல்லப்பட்ட நற்குணங்களையுடைய பெரியோர்கள் சொல்லுகிற வசனங்களைக் கேட்டு, சொன்னபடியே மறவாமல் நிற்றலும், அவர்க்குப் பிழை செய்யாமையுமாம். இது மேன்மக்களோடு சேர்ந்து பழகும் முறை கூறுகின்றாராதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

161. ஆரவாரிக்கும் அருவியையுடைய அழகிய மலை நாடனே! பொறுப்பர் என்று எண்ணிக் குற்றந்தீர்ந்த பெரியோரிடத்து அவர் வெகுளத்தக்க காரியங்களைச் செய்யாமை ஆவசியகமாகும். அவர் வெறுத்தால், பின் அவர் வெகுளியைத் தீர்த்தல் யார்க்கும் அரிது என்க. வேண்டும், விதிப்பொருட்டு.

மலையைச்சேர்ந்த அருவி தன் உயர்ந்த நிலையினின்றும் ஆர்த்து விழுவதுபோலப் பெரியாரைப் பிழைத்தவர் அலறிவிழுவ ரென்பது தொகைமொழிப் பொருள்.

162. பொன்னைக் கொடுத்து அழைத்தாலும், வந்து சேர் தற்கு அரியரான பெரியோரை ஒன்றுங் கொடாமல் அவர் தாமாகவே வந்து தம்மைச் சேர்ந்திருக்கப் பெற்றும், நீதியோடு படாத அறிவில்லாதவர் பயனின்றியே நாளைக் கழிப்பார் என்க. அன்றோ - ஐயோ! கொன் - பயனின்மையை யுணர்த்திற்று.

163. ஒருவரைத் தாழ்வாக மதித்தலும் உயர்வாக மதித்த லுமாகிய இரண்டும் பெரியோர்களாலே செய்யப்படத் தக்கனவே யாகும். நீதியை உணராதாரும் செய்யும் முறையறியாதாருமான அற்ப மனிதர்களாற் செய்யும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் சாரமான நூல்களைக் கற்ற பெரியோர்கள் பொருளாக மதியார் என்க.

164. விரிந்த நிறத்தினையுடைய நாகம் பாதாளத்திலே இருந்தாலும் ஆகாசத்திலே இருக்கிற இடியின் மிக்க சினத்திற்கு அஞ்சும். அதுபோல அரிதாகிய அரண் காவலையுடைத்தாயிருந் தாலும் பெருமைக் குணமுடைய பெரியோர்கள் கோபித்த காலத்துப் பிழைசெய்தோர் பிழைக்கமாட்டா ரென்க.

165. எம்மை நீவிர் அறிந்தீரில்லை. எம்மைப்போல உயர்ந் தார் இல்லைகாணுமென்று தம்மைத்தாமே பெரியராகச் சொல்லி முடிவுசெய்கிறது சித்தாந்தமன்று. தர்மத்தை அறியுஞ் சான் றோர் தம்மை அருமையுடையராக மதித்துப் பெரியராகக் கொள் வதே சித்தாந்தமாகும் என்க. அரியர்-இன்றியமையாதவர் என் றபடி. கோள் - விசாரம் செய்த முடிவு.

166. பெருமை பொருந்திய குளிர்ந்த கடற்கரையையுடைய அரசனே! விடியற்காலத்துச் சூரியன் நிழற்போல் சிறியவர் கேண்மையால் அறிவு குறைந்து கொண்டே வரும். மாலைக் காலத்துச் சூரியன் நிழற்போலப் பழைய புகழுடையாராகிய பெரி யோர் கேண்மையால் அறிவு வளரும் என்க. பெருங்கடலையடுத்த காடு குளிர்ச்சி பெற்றிருப்பது போலப் பெரியாரைப் பிழையா தார் நன்மை எய்துவரென்பது தொகைமொழிப் பொருள்.

167. அரசர் செல்வமும் ஸ்திரீகளினுடைய யௌவன போகமும் அவரவர்களைச் சேர்ந்தவர்கள் அநுபவிப்பார்கள்; அதற்குத் தகுதி வேண்டாம். நெருங்கிய இலைகளாலே கவிந்து குளிர்ந்து நிழல் செய்யும் மரங்களெல்லாம் தம்மிடத்திலே சேர்ந்தவர்க்கு வேற்றுமை யில்லாமல் ஒருபடியாக நிழலைத் தரும்; அதுபோலப் பெரியாரை அணுகினோர் இன்பம் பெறுவரென்க.

168. தெளிய ஆராயும் ஆராய்ச்சியில்லாத அறிவீனரைப் பிரிந்தாலும் அந்நினைவினாலாகிய துன்பம் மிக உண்டாகும். பெரியதாய் வற்றாத நீர்மிக்க கழியையுடைய சேர்ப்பனே! யாரிடத்தும் கலந்து உறவுபண்ணுமை மிக நல்லதென்க. படர்நோய் - நினைத்தலாலுண்டாகும் துன்பம். பெரிய கடலும் தன்னைச் சார்ந்த கழியிற் பிரியாதவாறு போலப் பெரியோர் தம்மைஅடுத்த சிறியோரைக் கைவிடார் என்பது தொகைமொழிப் பொருள்.

169. புதியனவும் உறுதி பயப்பனவுமான நூல்களைக் கல்லாமலும் பெரியவர்கட் சென்று கேட்பனவற்றைக் கேளாமலும் கழிந்த நாளாயினும் தமக்கு ஸாத்யமானவற்றை இரப்போர்க்குக் கொடாத பகற்பொழுதாயினும் சொல்லுமிடத்து நற்குணமுடைய பெரியோரிடத்து உண்டாகா என்க.

பகலென்றது ஈண்டு ஒருநாளுள் முதற் பத்து நாழிகை கழிந்த இரண்டாம் பத்து நாழிகையை. "ஒருநாள் முதற் பத்து நாழிகையும் அறத்தின் வழி ஒழுகிப் பின் பத்து நாழிகையும் இறையின் முறைமை கேட்டுச் செய்த பொருளைப் பரிசிலர்க்குக் கொடுத்து மகிழ்ந்திருத்தலால்........." என்பது. புறப்பாட்டுரை (புறம் 69.)

170 பெரியவர்க்குப் பெருமையாவது நல்லோரிடம் வணக்கமுடைமை; ஒரு காரியத்தை முற்றுவித்தற்குத் தகுதியுடையார்க்கு உரிமையாவது தாம் வலியிலர்போல ஒடுங்கியிருத்தல், செல்வமுடையவரும் தம்மைச் சேர்ந்தவரது துன்பத்தை நீக்குவாராயின் செல்வமுடையாரே என்க. சிறுதகைமை, தலைவணக்கம். 'பெரும்பூட் சிறுதகை' என் புழிப்போல. (வெண்.மா.)

(18) 'நல்லினஞ் சேர்தலாவது, நல்ல இனத்தினைப் பொருந்துதல். அவ் இனமாவது நல்லதன் நலனும் தீயதன் றீமையும்

உள்ளவாறு அறியுஞ் சான்ருேர் குழு. இவ்வினத்தின் மறுதலையாவது சிற்றினமாம். நல்லினஞ் சேர்ந்து ஒழுகினார்க்கே பெரியாரைப் பிழையாமை கூடுமென்பது உணர்த்துதற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

171. அறிவில்லாத காலத்திலே அடக்கமில்லாதவருடனே கூடி, நெறியல்லாதன செய்து தீயவொழுக்கத்தில் ஒழுகியன வெல்லாம் வெயில் முறுகியபோது புல்லானது பனியின் சம்பந்தத்தினை விட்டாற்போல, சன்மார்க்கத்தினையறிந்த நல்லோரைச் சேர்ந்தாற் கெடும் என்க.

172. எஞ்ஞான்றும் அறநெறியை அறியுங்கோள், யமதூதன் கடுகி வருவானென்று எஞ்ஞான்றும் அஞ்சுங்கோள், பிறர் சொல்லுகிற கடின வசனங்களை எஞ்ஞான்றும் பொறுங்கோள்; கபடமான சொற்களைச் சொல்லுதலை எஞ்ஞான்றும் ஒழியுங்கோள்; தீவினையாளர்களுடைய சிநேகத்தை எஞ்ஞான்றும் வெறுங்கோள்; பெரியார் வாய்ச் சொற்களை எஞ்ஞான்றும் கேளுங்கோள் என்க.

இப்பாட்டினை "மாத்திரை முதலா" என்ற சூத்திரத்துப் பல நோக்கா யோடியதற்கு மேற்கோளாகக் காட்டுவர் இளம். (தொல் பொருள். 416) "நோக்காவது, கேட்போர் மீண்டும் நோக்கிப் பயன் கோடலையுடையவாகச் செய்யும் கருவி" என்பர் நச். (ஷை ஷை.) இப்பாட்டினுள் "ஒருவழி நின்ற எஞ்ஞான்றுமென்றதனைப் பிரித்துப் பிறவழியுங் கூட்டி முடிக்க வேண்டுதலிற் பிரிநிலை எச்சமாயிற்று. இதனை 'விளக்கு' (நடு நிலைத் தீபம்) என்ப" என்ருர் மயிலை. (நன். சூ. 359.)

173. என் நெஞ்சே! கேட்பாயாக, அடைந்தவரது பிரிவும், பொறுத்தற்கரிய நோயும், சாவும் முடங்கலான உடம்பெடுத்தவர்களுக்கு உடன்பிறந்தனவாதலால், அநேக காலமாகத் தொடங்கி வருகிற பிறப்பு இன்னுதது என்று அறிகிற பெரிய அறிவினையுடையாரை நன்கு புணர்வாயாக என்க. அம்மாவென்னும் அசைச் சொல் நீட்டம் விளியாகக் கொள்ளப்படும். (தொல். சொல். 153. சேனு. நச்.) உடங்கு - ஒருசேர என்றலுமாம்.

**174.** நன்றாய் ஆராய்ந்து பார்க்க, பிறப்பு இன்னாததே யாயினும் அதை யாரும் வெறார்கள். எக்காலத்திலோவெனில் மக்க ளாய்ப் பிறந்தகாலத்தும் மக்கட் பண்பினை இடையறாமற்செலுத்தி வரும் நெஞ்சினையுடைய நல்லவர்களுடனே எந்நாளும் தாமும் அந்த நட்பினை இடையறாமற் செலுத்தி நட்புக் கொள்ளப்பெறின் அக்காலத்து என்க. இந்தப் பிறப்பு நல்லது ஆகும். இறப்ப - மிக, இறப்ப இன்னாது என்று கூட்டலுமாம். மக்கட் பண்பாவது - நன்மக்கட்கே உரிய அன்புடைமை, நல்ல குடிப்பிறப்பு முதலியன.

**175.** ஊருக்குள்ளே முற்றத்தினீரும் ஜலதாரையினீரும் கூடிச் சமுத்திர நீருடனே சேர்ந்தால் பேரும் வேறாகிப் புண்ணிய தீர்த்தமெனப்படும். அப்படிப்போல் நல்ல குலத்திலே பிறவாத வரும் நல்ல குலத்திலே பிறந்த பெரியோர்களைச் சேர்ந்தால், மலை போலப் பெருந் தோற்றமுடையவராவர் என்க. பேரும் பெரி தாகி என்றும் பாடம். ஓரும், ஆராய்ந்து பார்க்கின்ற என்க; அசையும் ஆம். உரவுநீர் - மிக்கநீர், உலாவுநீருமாம். அது கட லுக்காயிற்று. குன்றுபோல் நிற்றலாவது,

"அளக்க லாகாப் பெருமையு மருமையு
மருங்ககல முடைமையு மேறற் கருமையும்" ஆம்.

**176.** ஓங்கிய அழகிய பரந்த ஆகாசத்தின் கண்ணே நல்ல கிரணங்களையுடைய வெள்ளிய சந்திரனைச் சேர்ந்துள்ளதனால் முயலும் தொழப்படும். அப்படிப்போல சிறப்பில்லாதவர்களாயி னும் மலையொத்த பெரியோர்களுடனே நட்புக்கொண்டால் மிக்க சிறப்பினைப் பெறுவர் என்க. குன்றுதல் - இல்லையாதல்; மகளிர் பிறைச் சந்திரனைத் தொழுதல் பண்டைக்கால வழக்கு. 'ஒள் ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்" (அகம் 239.) என்பதும் காண்க. சந்திரனிடத்து முயலிருப்பதாகக் கூறுவது கவிமரபு. 'குறுமுயன் மறுநிறம் கிளர மதிநிறைந்து......' என் பதுங் காண்க. (அகம் 141.)

**177.** பாலுடனே கூடின தண்ணீர் பாலாய்க் காணப்படுமே யல்லாது தண்ணீராய் நிறம் வேறாகத் தெரியத் தோன்றாது. அதுபோல ஆராய்ந்து பார்க்குமிடத்து நல்ல பெரியோர்களது பெருமையின் சம்பந்தத்தினாலே சிறியவர்களுடைய சிறுமைக்

குணமும் தோன்றுது மறையும் என்க. தெரிய எனற்பாலது தெரிந்து எனத் திரிந்து நின்றது.

178. உழுகின்ற கொல்லையிலே பெரிய கட்டையைச் சேர்ந்து நின்ற புல் உழவர் உழுகிற கலப்பைக்குப் பெயராது; அதுபோல வல்லமையில்லாத மெலிந்தவரேயாயினும் அறிவு ஆற்றல்களால் வன்மையுடையவர்களைச் சேர்ந்தவர்மேல் பகைவருடைய கோபமானது செல்லாது என்க.

'புனத்து இருங்குற்றி' என்க. 'செல்லாவாம் செற்றூர் சினம்' என்பதற்கு 'சத்துருக்கள் படை செய்ய மாட்டார்கள், அவர்களை வெல்லப்போகாது' என்பது ஒரு பழையவுரை.

179. நிலத்தினது நன்மையினாலே வளர்ந்த நெல்லைப் போலத் தாம் தாம் சேரும் குலத்தினது நன்மையினாலே சான்றவர்களாக ஆகின்றூர்கள். நன்றாய் ஓடுகிற கப்பலை ஒரு சுழல் காற்று வந்து கெடுத்தாற்போலத் தீய சேர்க்கை யுண்டானால் நல்ல குணமும் கெடும் என்க. நல்ல காற்றினாலே நல்வழியில் நன்றாயோடுங் கப்பலும் தீவளியால் திசை தடுமாறிச் சிதைதல் இயல்பாதல்பற்றி, நல்லினஞ் சேர்ந்த வழியும் தீயினத்தின் ஒருவுதல் ஆவசியகமென்பதாயிற்று. இதனை 'ஊதியம் என்பது ஒருவர்க்குப் பேதையார் கேண்மை ஒரீஇவிடல்' என்னுங் குறளால் அறிக.

180. மனத்திலே குற்றமில்லாதவரா யிருந்தாலும் தாம் சேர்ந்த தீய இனத்தின் கூட்டுறவாலே ஒருவர் இகழப்படுவர். எவ்வாறெனில், காடழிக்கப்பட்ட கொல்லையானது தீப்பற்றிய காலத்து ஆண்டுள்ள நல்ல பரிமளமுள்ள சந்தனமும் வேங்கையும் சேர்ந்து வேமாறுபோல என்க. 'மனத்தான்' என்பது உருபு மயக்கம். மனத்தாலும் என்று பொருள் கொள்ளலுமாம். எறிபுனம், வெட்டிச் சுட்ட கொல்லை. (புறம் 231.) குறிஞ்சி நிலத்துக் குறவர் தினை விதைத்தற்குத் தரிசாய்க் கிடந்த காடுகளை வெட்டிச் சுடுதல் மரபு. 'தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்' என்பது அகம் 368. கீழ்ப்பாடலில் மெல்லியர் துணைவலி பெற்றாராயினுந் தீயினஞ் சேர்ந்தாற் கெடுவரென்றூர், இப்பாடலில் இறப்பச் சிறந்தாரும் அவ்வினஞ் சேரக் கெடுவரென்று கூறினார்.

(19) 'பெருமை'யாவது குல ஒழுக்கத்தினாலும் கல்வி யொழுக்கத்தினாலும் தயையும் தருமமும் உடைமையினாலும் தீங்கு வந்தடுத்த காலத்தும் தம் நற்குணங்களைக் கைவிடாமையினாலும் பெருமையுடையாரது இயல்பு. நல்லினஞ் சேர்ந்தார்க்கே இப்பெருமை சித்தித்தலின் இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

181. ஒருவர்க்கு ஒன்றைத் தானங் கொடுக்கவோ கூடவில்லை. யௌவனமும் நீங்கி நெடுங்கால மாகிவிட்டது; அதனால் முன்பு ஆசையுடனிருந்த மகளிர் இப்போது நினைக்கின்றார்களில்லை. அப்படியிருக்க, ஆசை வைத்து ஸம்ஸாரத்தில் இருந்து வாழக்கடவோம் என்னும் ஆசையினை விட்டொழித்துத் துறந்து போவதே நமக்குச் சிறந்த பொருளாவது. போலும் - ஒப்பில் போலி. (தொல். சொல். சூ. 278.) இப்பாடல் நெஞ்சினை நோக்கிக் கூறியதாக எழுந்தது.

182. இந்தச் சம்சார வாழ்க்கையிலே நின்று இன்பமுற்றோம் என்றும், இப்பிறப்பிலே எல்லாப் பொருளையும் போகங்களையும் பூர்ணமாக அடைந்தோமென்றும் நினைத்து ஐசுவரியத்தை மெய்யென்று நம்பிப் பிறகு தமக்கு வருகிற துக்கத்தை விசாரியாமல் மறந்து காலங்கழிப்பர் அறிவில்லாதவர். அந்த ஸம்ஸார வாழ்க்கை இருந்தாற்போல விருந்து கெடும் என்றறிந்த ஞானிகள் சுகதுக்கம் இரண்டற்கும் ஒருபடியாக இருந்து, துக்கம் வருங்காலத்து வருந்தார் என்க. ஏமுறுதல் - இன்புறுதல்; மயங்குதலுமாம். பொச்சாத்தல் - மறத்தல்.

183. மறுமைக்கு உறுதியாகிய தர்மங்களை மயக்கமில்லாமற் செய்து, நரகத்தில் விழாதவாறு நீங்கள் அறிவுடையவர்களாய் வாழுங்கோள். நீங்கள் நின்றவிடத்தில் நிற்கும்போதுதானே பொருள்கள் நிறம் மாறுகின்றன. அஃதேயன்றி ஒரு காரணமுமின்றிப் பல புதிதாகவும் உண்டாகின்றன. அதை நீங்கள் காண்டீராக என்க. மறுமைக்கு வித்து ஆவது அறம். அது வீட்டுலகிற் சென்று முளைத்து இவனுக்குப் பயன்படுதலால். சிறுமைப்படல், சிறியோர் தன்மையைப் பொருந்தல் என்றலும், சிற்றினஞ்சேறல் என்றலும் ஆம்.

184. மழை பெய்யாத காலத்தும், நடுவே யூறுகின்ற நீரை யுடைய மணற்கேணி தன்னிடத்திலுள்ள தண்ணீரை இறைத்துக் கொண்டுபோய் ஓர் ஊராரெல்லாரும் உண்டாலும், அவர்களுக்கு நீர் கொடுக்கவல்லதாகும் என்று பெரியோர் கூறுவர். தரித்திரம் வந்த காலத்தும் பெரியோர் ஏற்பார்க்கு இல்லை யென்னுமல் சுபாவமாகக் கொடுக்கிறவாறு போலச் செல்வமுற்ற காலத்தும் சிறியோர் மகிழ்ச்சியுடன் கொடார் என்க. ஆஅஅயக் கண்ணு மென்றும் பாடம்.

உறைத்தல் - மழை துளித்தல். மழையில்லாக் காலத்து மணற்கேணி பல ஊற்றுக் கண்களால் நீர் சுரவாமற் போனாலும் நடுவிலுள்ள ஓர் ஊற்றுக்கண்ணால் சுரத்தல்பற்றி நடுவேயூறு கின்ற எனப்பட்டது. மற்றையார் என்பார் பெரியோரின் வேறான சிறியோர். 'பெரியோர்' என்பதில் ஓர் விகுதி அப்பெரி யோரின் அருமை குறித்து ஒருமைக்கண் வந்தது; மற்றையார் என்பதில் ஆர்விகுதி அத்தகையார் பலர் என்பது குறித்துப் பன் மைக்கண் வந்தது. மணற்கேணி போலப் பெரியோர்க்கு ஈதலும் சிறியோர்க்கு ஈயாது தாழ்த்தலும் இயல்பென்பதூஉம் பெற்றாம்.

185. மிக்க நீரைக் கொடுத்து உலகத்து மக்களையெல்லாம் ஊட்டின ஆறு தண்ணீரில்லாமற் போனவிடத்தும் அந்த ஆற் றிலே கல்லுகிற அவ்வூற்றிலே நீர் ஊறுவதுபோல, பெரியோர் கள் தம் ஐசுவரியத்தைப் பலருக்கும் கொடுத்து வறுமையடைந்து வாடியவிடத்தும், தங்களுக்கான மாத்திரம் செய்யத்தக்க கடமை களைச் செய்து சில பேருக்காவது கொடுப்பரென்க. கல்லூற்று, வினைத்தொகை. கல்லுற்றுழி என்றும் பாடம்.

186. பெரிய மலையையுடைய நாடனே ! பெரியவர்களிடத் திலே உண்டாகிய குற்றம் வெளிய எருதின்மேல் போடப்பட்ட சூடுபோல வெளிப்படத் தெரியும். பெரிய இடபத்தைக் கொன் றதோடொத்த குற்றத்தைச் சிறியோர் செய்தாராயினும் அச் சிறியோரிடத்திலே அந்தக் குற்றம் தெரியாது மறையும் என்க. நரை, இடபம். தோன்றா கெடும், ஆகாரவீற்று அஃறிணைப் பன்மை முற்றுமுன் வலிஇயல்பாயிற்று: ஒன்றானும், சிறிதும்: 'தோன்றாக்கெடும்' என்றும் பாடம்.

187. பொருந்திய சிறுமைக் குணத்தை உடையராய பண்பில்லாதாரிடத்திற் கலந்து உறவுகொண்ட நாளெல்லாம் துன்பமேயாகும். நெறியல்லாதவற்றை விளையாடுமிடத்தும் வேண்டாத நல்ல அறிவினை விரும்புமவர்களிடத்துப் பகையுண்டாயிருந்தாலும் பெருமையுண்டாகும் என்க. அசைதல், தளர்தல். ஈண்டு நெறியிற்றளர்ந்தலை உணர்த்திற்று. செல்வக் கடுங்கோ ஆழியாதன் "நகையினும் பொய்யா வாய்மையான்" என்று புகழப்படுதலும் ஈண்டு நோக்கத்தக்கது. (பதிற். 70)

188. மெத்தென்ற இயல்பையுடைய நல்லாரிடத்து மெத்தெனவே ஒழுகுக. அது கடந்து பகைவரிடத்திலே யமதூதனும் அஞ்சத்தக்க பலத்தினைச் செய்க. முழுதும் கபடமாயிருக்கிறவரிடத்துக் கபடமாகவே ஒழுகுக. எல்லா நன்மைக் குணமும் உடையாரிடத்து நன்மையை விட்டு விலகாது ஒழுகுக, என்க. மென்மை, உட்குடைமை, சலம் என்ற இடங்களில் ஆய்விடல் என்னும் தொடரைத் தனித்தனியே பெய்து முடிக்க. மெல்லியல் நல்லாருள் என்னும் பாடத்திற்கு மெல்லிய இயல்பும் நற்குணமுமுடைய ஸ்திரீகளிடத்தில் என்று பொருள் கூறுக. சலவர் - பொய்யருமாம்.

189. பரிசுத்தமான மனமுடையவர் தன்னைக் கடியவனுகப் பண்ணி, ஒருவன் மிகவும் கொடிய கோட்களைச் சொல்லி வேறுபடுத்தி விட்டாலும், தம் மனத்திலே வேறுபாடு சிறிதுமில்லாமல், உறுதியான மனமுடையவர்களாய், அசையாமல் நின்று எரிகிற விளக்கினுள்ளே யிருக்கிற சுடர்போலே தங்கள் குணம் சலியார் என்க.

கடுக்குதல், அச்சுறுத்தலுமாம். துளக்கமிலா விளக்கின் சுடர் போலத் தூயவருடைய மனம் சலியாதென்பது கருத்து.

190. முற்பட உண்ணும் உணவினை நாடோறும் தருமம் செய்து, அதனல் வருகிற பயனைப் பெரியார் உண்பர். அப்படி உண்ட பயனனது காமம் வெகுளி மயக்கங்களாகிய மூன்று குற்றங்களையும் கெடுத்துத் தாம் பிறக்கிற பிறப்பெல்லாவற்றுள்ளும் அம்மலங்களினின்றும் தம்மை நீக்கிவிடும் என்க. பிற்றுற்றுத் துற்றல், விருந்தோம்பி மிச்சில் மிசைதலுமாம்.

(20) 'தாளாண்மை'யாவது இடைவிடாத மெய் முயற்சியை ஆளுந் தன்மை. அதனை ஆள, பொருளும் பெருமையும் உறவும் உண்டாமாதலாலும் பெருமையுடையார்க்கே இஃது அமையு மாதலாலும் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

191. தண்ணீரை மிகுதியாகக் கொள்ளாத குளத்தின் கீழுள்ள பயிரைப்போல, உறவினர் கொடுப்பதனைஉண்டு இருப்போர் பின்பு அந்த உறவின் முறையாரில்லாதபோது இறந்து படுவர். வாளைக் கையிலேந்திச் சுழற்றிக்கொண்டு கூத்தாடுகின்ற கூத்தியின் கண்கள்போல இடைவிடாமல் எந்நாளும் ஊக்கமாயிருக்கின்றவர்களுக்கு ஒரு காலத்திலும் பொருள் வருவாய் தவறுவதில்லையென்க. குளத்து நீர் வற்றியபோது பயிர்கள் சாதலைக் கூறின முகத்தால் புட்கள் வேற்றுக் குளங்களுக்குச் சென்று உயிர்வாழ்தலையும் கூறி, நட்டாரை நம்பித் தாம் மடிந்திருத்தல் அரசர்க்கு மிக்க இழுக்கினைத்தரும் என்று கூறினருமாயிற்று. 'வாளமலையாடும்' என்னுமிடத்து "வாளை எடுத்து நின்று ஆடுங் கூத்து" என்று சிலப். அரும்பத. பொருள் கூறியவதனல் 'வாளாடு கூத்து' என்பதற்கு வாளைக் கையிலேந்திச் சுழற்றிக்கொண்டு கூத்தாடுதல் என்க. 'மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின் வாளாடு கூத்திவந் தாடினள்' என்று பயின்று வருதலால், கூத்தியருள் வாளாடு கூத்தியரென்பார் ஒரு சாரார்போலும்.

192. அசைந்து ஆடுகிற கொம்பாய் வழியருகே நின்றது கூடப் பெரிதாய் வைரம் முற்றியவுடனே யானையைக் கட்டுகிறதற்கு உதவும் ஒரு தறியாகும். ஒருவன் முயற்சியினுலே தன்னைக் குறைவில்லாமற் செய்து கொள்வானுனல் அவன் செல்வமுடையவனுதலும் அவ்வாறேதான் என்க.

193. வலிமிக்க புலி தனக்கு இரையாகிய மாமிசம் கிட்டாதபோது ஒருநாளைக்குச் சிறிய தேரையைப் பிடித்தும் தின்று கிடக்கும். அறிவினுலே செய்த உத்தியோகம் பலிக்கவில்லையென்று மனம் சலிக்க வேண்டாம். இடைவிடாமல் முயலுகின்ற ஒழுக்கத்தினுலே மேலான தொழில்களும் கைகூடும் என்க. காற்றொழில் - உத்தியோகம். சிறு தொழிலும் ஆம். கை, ஒழுக்கம்.

194. தன்னுடைய முயற்சி ஒருகாலத்துப் பலித்ததில்லை யாயினும் அதனை ஒருவழியாக முயன்று முடித்துத் தளராமல் நிற்பது ஒருவனுக்குச் சாமர்த்தியமாகும். முயன்ற காரியமெல் லாம் பலிக்குமாயின், மகளிர்களுங்கூடச் செல்வமுடையவர்கள் ஆவாரன்றோ என்க.

கண்டல், முள்ளி; முள்ளியைக் கடலலைகள் சிதைக்கின்ற குளிர்ந்த கழிக்கரையையுடைய நாடனே என்றது வலிமையில் லாத முள்ளிச்செடியை மோதி அழிப்பது வலிய அலைக்குப் பெருமையில்லாதவாறு போல எளிய காரியங்களைச் செய்து முடித் தல் வலியோர்க்கழகன்று என்பது தொகை மொழியின் பொருள். புருஷர் வாழ்வது ஆண்மையில்லை என்று பொருள்பட்டு நின்ற மையால், தொழில்பற்றி, மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம், எதிர்மறை. கண்டல், தாழையும் ஆம்.

195. இவர் நல்ல குலம் என்றும் இவர் தீயகுலம் என்றும் சொல்வதுமாத்திரமே யல்லாமல், அதில் ஒரு பயனுமில்லை. பழைய சிறப்பினையுடைய சுத்தமான பொருளால் மாத்திரமே அல்ல, தவம் கல்வி முயற்சி என்ற இவற்றாலும் ஒருவருக்குக் குலம் மேலாகக் கூறப்படும் என்க. பொருட்குத் தொல் சிறப்பா வது, நடுவணது எய்த இருதலையும் எய்தலாம். ஒண்பொருளாவது அறத்தினால் ஈட்டப்பெற்றதும் தக்கார்க்கு ஈயப்படுவதுமாகியது. ஒன்றோ, என்பதனை எண்ணிடைச் சொல்லாக்கி, பொருளும், தவமும், கல்வியும், முயற்சியும் ஒன்றுசேரக் குலனும் எனலுமாம். எல்லாவற்றிற்கும் முயற்சி வேண்டும் என்பது ஒரு பழைய உரை.

196 தாங்கள் கருதின காரியம் முடியுமளவும் தங்கள் அறி வினை வெளிப்படாமல் அடக்கிக்கொண்டு, அந்நினைத்த காரி யத்தைப் பிறர் அறிய வெளியிடார் அறிவுடையவர்கள். பிறர் நினைத்த நினைவை அவர்களுடைய காரியங்களைப் பார்த்தே ஆராய் ந்து அறியும் நுட்ப புத்தியுடையார் குறிப்பிலே உலகம் தங்கிற்று என்க. அறிவு, ஊக்கம், உறுப்பு என்பன அவ்வவற்றாற் செய்யப் படும் காரியங்களை உணர்த்தின. ஊக்கமுரையார் என்பதற்குத் தம் வலிமிகுதியை எடுத்துச் சொல்லார் என்றலுமாம். ஊக்கம் உறுப் பினால் ஆராய்தல் என்பதற்கு வலிமிகுதியைக் கண் தோள் மார்பு

முதலிய உறுப்புக்களால் ஆராய்தல் என்று உரைப்பினும் அமையும். ஊக்கம் வலிமிகுதியென்று பொருள்படலை "ஊக்கமுடையான் ஒடுக்கம்" என்னும் குறள் உரையிற் காண்க.

அமைச்சரின் இலக்கணங் கூறுமிடத்து அவர் "பகைவர் சூழ்வனவற்றைத் தாமறிந்து அழித்து, அவர் அறிந்து அழியாதன தாம் சூழ்வர்" என்ற பரிமேலழகர் விசேடவுரை நினைக்கத்தக்கது.

**197.** கறையானல் தின்னப்பட்ட ஆலமரத்தை அதிலே பிறந்த அதன் வீழ் ஊன்று கோலாகத் தாங்கினாற்போல, தன்னுடைய பிதாவுக்கு ஒரு குற்றம் தோன்றினவிடத்து மைந்தனானவன் பாதுகாக்க அது கெடும் என்க. குதலைமை, தளர்ச்சி.

198. யானையினுடைய புகர்முகத்தைப்பிளந்து புண்படுக்கும் கூரிய நகங்களையும் வலிய முயற்சியினையுமுடைய சிங்கத்தை ஒத்த வலிமையுடையவர்கள் தாம் செய்கின்ற உத்தியோகத்திற்கு அழிவு வந்து வீட்டிலே யிருக்கத்தக்க கேடுவந்தாலும், மானங் கெடத்தக்க காரியங்களைச் செய்வாரோ? செய்யார் என்க. இல் இருக்க எனற்பாலது இல்லிருந்து எனத் திரிந்து நின்றது. தலை வருதல், முடிவடைதல். 'தலைப்போகன்மையின்' என்பது புறம் (223). நோன்றான், வலிய காலுமாம். "ஆளி, யுயர்நுதல் யானைப் புகர்முகத்து ஒற்றி, வெண்கோடு புய்க்கும்" என்று பயிலுதல் உண்மையால், அரிமா யானையை அடித்தலை அறிக. (அகம் 252.)

**199.** இனிய கரும்பிலே பிறந்து, திரண்ட அடியையுடைய குதிரையின் பிடரிமயிர் போலும் அதன் பூவானது தேனோடு கூடிய வாசனையை இழந்தாற்போல மிக உயர்ந்த குலத்திற் பிறந்ததனால் என்ன பயனுண்டாம்? தன்னுடைய பெயரை நிலை நிறுத்தும் மிக்க ஆண்மையில்லாவிட்டால் என்க. பெயர் பொறிக்கும் பேராண்மையாவது நடுகலிடத்துப் பெயரும் பீடும் எழுதி, பீலி சூட்டிப் பூசிக்கப் பெறுதல். இமயத்தில் புலியுங் கயலும், வில்லும் பொறித்தல் போன்றதுமாம். பெயர் பொறித்தற்கு ஏதுவான ஆண்மை என்க.

**200.** பெரிய செல்வத்தையுடைய முத்தரையர் என்பார் மிகவும் சந்தோஷத்துடனே கொடுக்கிற கறியோடு கூடிய

சோற்றை முயற்சியில்லாத கயவர்கள் விரும்பிப் புசிப்பர். தாம் மிக விரும்பிச் செய்யும் உத்தியோகத்தினலே வந்த புல்லரிசிக் கூழும் மேலோருக்கு அமிருதமாக இருக்கும். அவர்கள் கருணைச் சோறு என்ற பெயரையும் கேட்டறியார் என்க.

முத்தரையர் என்ற பெயருடையார் இந்நூல் செய்தார் காலத்து விளங்கிய சிற்றரசர் வகுப்பின ரென்ப. "தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்றால் அம்மா அறிவை முயக்கு" என்னுங் குறளோடு இப்பாடலை ஒப்பிடுக.

2. 'நட்பிய'லாவது அரசர்க்கு அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் துணையாகிய நட்பினரது திறன் கூறும் இயலாம். அரசர்க்கு இன்றியமையாதனவான அங்கம் ஆறனுள் நட்பு ஒன்றுதலாலும் அஃதில்வழி அரசன் நீதி செல்லாதாதலாலும், இவ்வியல் வேண்டப்பட்டது. அரசனது அங்கம் ஆறுவன "படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்." இவ்வியலுள் உறவினரைத் தழுவுதலும், நட்பினரைச் சோதித்தறிந்து நட்டலும், நட்டபின் ஒருகாலத்து அறியாமையால் அவர் செய்த பிழையைப் பொறுத்துக் கோடலும், தீயநட்பினரை ஒருவுதலுமாகிய உபாயங்கள் கூறப்படும். அவற்றுள்,

(21) 'சுற்றந்தழா'லாவது, அரசன் தன் கிளைஞரைத் தன்னின் நீங்காமல் அணைத்தல். மந்திரச்சுற்றமும் அடங்குதற்குப் பொதுப்படச் சுற்றமென்றார். 'திரியாச் சுற்றமொடு முழுது சேண்விளங்கி நடுக்கின்றி நிலியர்' (புறம் 2) என்று அரசர் ஓம்படுத்துக் கூறப்படுதலின், இச்சுற்றமும் ஒருதலையாகத் தழுவற்பாலதாம். தாளாண்மையுடைய அரசர்க்கே இது கூடுமாதலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

"பகைவர் கையா லடிபட்டுவந்தடைந்தவர்களையும், கருப்புக் காலங்களிலே உண்ண உடுக்க இல்லாமல் வந்தடைந்தவர்களையும் கைவிடாது, அவர்கள் துக்கத்தைப் பரிகரித்தலும் தம்முடைய உறவின் முறையார்களும், கிளையிலுள்ளார்களும் தீங்குற்ற காலத்து, அத்தீங்கு தமக்கு வந்ததுபோல எண்ணிப் பரிகரித்து வருதலும் ஆம்" என்பது ஒரு பழைய உரை.

201. கருப்ப முற்பத்தியான காலத்திலே மசக்கை என்ற நோவும் பிறகு கருப்பத்தைச் சுமந்திருக்கிற வருத்தமும் பிள்ளையைப் பெறுகிறபோதுள்ள நோவும் இவை முதலான துக்கங்களும் மடியிலே கிடக்கிற பிள்ளையைக் கண்டவுடனே தாய் மறந்ததுபோலத் தான் தனியனுயிருந்து தளர்ந்த துக்கமெல்லாம் க்ஷேமம் விசாரிக்கிற தன்னுடைய சுற்றத்தாரைக் காணவே கெட்டுப்போமென்க.

வயா, வேட்கைப் பெருக்கம்; அஃதாவது "கருப்பந்தாங்கி வருத்தமுற்று, நுகரப்படும் பொருண்மேற் செல்லும் வேட்கை" என்பர் நச். (தொல். சொல். சூ, 371.) கவான் - பக்கமுமாம். அசைதல் - தங்கியிருத்தல்; தளர்தலுமாம். ஈன்ற அக்கால் என்பது ஈன்றக்கால் என அகரம் தொகுத்தது செய்யுள் விகாரம்.

202. வெயில் மிகவும் கடுமையாய்க் காய்கிறபோது மரமானது அந்த வெயிலையெல்லாம் தான் மேலே பொறுத்துக்கொண்டு, தன்னண்டையிலே வந்தவர்களுக்கெல்லாம் ஒருபடியாக நிழலைக் கொடுத்து அவர்களுடைய தாபத்தைப் போக்கியும், பழுத்த மரம் பலருக்கும் அநுபவமாவதுபோலத் தன்னுடைய திரவியங்களைப் பலரும் அனுபவிக்கப் பண்ணி, அவர்கள் வருத்தத்தை நீக்கித் தான் வருந்தி வாழ்கின்றதே நல்ல முயற்சியையுடைய புருஷனுக்கு லக்ஷணமாவது என்க. அழல், சூரியவுஷ்ணம். 'அழன்மேய்ந் துண்ட நிழன்மா யியவு' என்பது அகம் 395. கேனொர்த்தல் - ஒருபடியாக எல்லார்க்கு மொத்தல்.

203. ஒன்றன்மேலொன்றாக அடுக்கிய பக்கமலையையுடைய நாடனே! தம்மைச் சேர்ந்தவரைப் பெரியோர் தாங்கமாட்டோம் என்னார்கள். அஃதென்போலவெனில் மேன்மேலும் கனத்த காய்களைப் பலவாகக் காய்த்தாலும் தன் காயைப் பொறுக்கமாட்டாத கொம்பில்லாதவாறு போல என்க. எடுத்தல், நிலையினின்றும் உயர்த்துதல். எடுக்கலம் என்பது எடு என்ற பகுதியும் கு என்ற சாரியையும் பெற்று எடுக்கு என்றாகி, பின்பு எதிர்மறை இடைநிலை அல்லும்; தன்மைப் பன்மை விகுதி அம்மும் பெற்று உகரங்கெட்டு அகரமேறி முடிந்தது. யாம் எடுக்கமாட்டோம் என்பது பொருள். வன்காய் என்பதில், வன்மை பெருமையையும்

கனத்தையும் உணர்த்திற்று. தம்சேர்ந்தார் எனற் பாலது தன் சேர்ந்தார் என்று ஒருமைப் பன்மை மயக்கமாய் வந்தது. பெரு மலையானது அடுக்கிய பல மலைக் கற்களைத் தன் சிகரத்து ஏற்றி வைத்துக் கொண்டிருத்தல் போலத் தன் சுற்றத்தை உயர்த்துதல் பெரியோர்க்கு அழகென்பது தொகைமொழி. "தொகைமொழி எனினும் சுருக்கமெனினும் ஒக்கும்" (வீர. அலங். 11.)

204. உலகத்தார் அறிய முடிய நட்புக்கொண்டாலும், சிறியவர்களுடைய நட்புச் சிலநாளொழிய நில்லா; தளர்ச்சியில்லாதாருடனே கொண்ட நட்பானது தாம் கொண்ட தவமாகிய நெறிக்கோரிடையூறு வருங்காலத்தும் அதற்குத் தளராமல் நிற்கிற பெரியோர் நிலைபோல நிலைகெடாமல் நிற்கும் என்க. ஒல்குதல் - தளர்தல். நட்பு நில்லாவாய்ச் சிலகாலமே நிற்கும் எனலுமாம். இது தழுவக்கூடாத நட்பினரை விலக்க வேண்டுமென்றும் தழுவக்கூடிய நட்பினரை அணைத்தல் வேண்டுமென்றும் கூறிய முகத்தால் பெரியோருடன் கொண்ட நட்பு நன்னெறியில் உய்க்குமென்று குறிப்பித்தாராயிற்று.

205. இவர் நல்லவர் இவர் பொல்லாதவர், இவர் எம்மைச் சேர்ந்தவர் இவர் அன்னியர் என்று சொல்லப்பட்ட பேச்சே சிறிதும் இல்லாதவராகும் இயல்புடைமையினாலே, தளர்ந்தார் துன்பங்களை ஆராய்ந்து, அவரைச் சென்று கிட்டி அந்தத் துன்பங்களை நீக்குவார் யாவர்சிலருண்டோ, அவர் எல்லார்க்கும் பெரியவர் ஆதற்கு உரியார்என்க. நல்லோர் தீயோர் என்ற வேற்றுமைஇன்றி இடர் உற்றுழி உதவுக என்பதாயிற்று. சிற்றினத்தார் கேண்மை தீப்பயன் தருமென்று கீழ்ப்பாடல்களிலெல்லாங் கூறிவந்த ஆசிரியர் இப்போது நல்லார் பொல்லார் யாவரையும் ஒருபடியாகக் கருதி இடர்தீர்க்க என்றது என்னையோவெனின், இறப்பச்சிறந்தானை ஓர் இறைவன் தீயினத்தாலே தீங்குறலும் நல்லினத்தாலே நலனுறலும் இலனாய்த் தன் பெருவலியின் முன்னே மற்றையார் பெருமையை, விளக்குமுன் இருள்போல் மாய்விக்க வல்லன் என்பதை உணர்த்தற்கென்க. அஃது இலங்கையர் வேந்தனான இராவணன் போரிலே தன் சேனை முழுவதும்படத் தனியனாய் அகப்பட்டகாலத்து, அவனது நிலைமையை நோக்கிய இராமன் அவனை

வதைப்பதைவிட்டு 'நீ இன்றுபோய் நாளை நின் சேனையோடு வா' என விடுத்து உதவியதுபோலும் ஊராண்மையாகும். துன்பந் துடைப்பார் யார் என்பதூஉம் பாடம். இன்னர் என்பது இனி மையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புமுற்று. இத்தகை யர் என்று பொருள்படும் இனையர் என்பது ஈண்டு இன்னாரின் வேறாய தீயர் என்று பொருள்பட்டு நின்றது.

206. பொன்னின் கலத்திலே புலிநகத்தைப் போலே வெள்ளையான சோற்றை மிகவிட்டு, சர்க்கரையும் போகட்டுப் பாலும் வார்த்து அன்னியர் உண்பிக்க, அவர் கையிலே மனங் கைத்து உண்டலினும், உப்பில்லாத புல்லரிசிக் கூழைத் தன் உயிர்போலு மிருக்கிற சுற்றத்தார் பக்கலிலே எந்தக் கலத்தில் வார்த்துச் சிறிதளவு குடித்தாலும் மனம் திருப்தியடையும் என்க.

அமரார் தம் மனத்தே கைக்கத் தாம் உண்டலினும் என் றும், அமரார் கைத்தாகிய புழுக்கலை உண்டலினும் என்றும் கூறலு மாம். முன்னையதில் கைத்து என்பது எச்சத் திரிபு. பெய்தல் - மிகச் சொரிதல். பொற்கலத்திற்கு மறுதலையாய் எக்கலத்தானும் என்ற துணையால், கலம் யாதுமின்றிக் கையே கலமாகக் கூழை உறிஞ்சிக் குடித்தாலும் என்றும் கொள்க. புழுக்கல் - புழுக்கிய உணவு: புலியுகிர் போன்ற புழுக்கல் ஆவது - பிடித்தால் அடங்கி, விட்டால் வெவ்வாறாகும் அன்னம் என்பது ஒரு பழைய உரை. இத்தகைய அன்னத்தைச் சர்க்கரையும் பாலுங் கூட்டி யுண்ணும் உணவின் சிறப்பினையும், மிக்க நீரை யூற்றித் தளரக் காய்ச்சிய கூழை உப்பும் இன்றி உண்ணும் உணவின் இழிவையும் விளக்கினார். புற்கைக்கு 'தயங்குநீர்த் தண்புற்கை' 'நெடுநீர்ப்புற்கை' என்னும் அடைகள் கொடுக்கப்படுதல் காண்க. (நால 210; புறம் 64.)

207. காலத்தாலே உபசாரத்தோடு, இட்டாலும், பகைவர் வீட்டிலே இட்ட இனிய கறிச்சோறு வேம்புபோலவிருக்கும். அந்தி வேளையிலே உறவின் முறையார் ருசியற்ற இலைக்கறியை இட்டாலும் அவரிடத்திலே அது ருசியாயிருக்குமென்க. நாள் வாய், விடியற்காலையில். வெங்கருனை - சூடான கறியுணவு எனலுமாம். வேளாண்மை வெங்கருனை, ஒப்புரவு செய்து இட்ட விரும்பத்தக்க கறிச்சோறு எனலுமாம்.

208. கருமானுடைய செம்மட்டியைப் போல வெறுப்பில்லாமல் தினந்தோறும் நன்மை போலவும் ஹிதம்போலவும் சொல்லிப் பதம்பண்ணி உண்கின்ற சில உறவினர் நெருப்பிலே இரும்பைப் போகட்டுத் தான்மாத்திரம் திரும்பி வருகிற குறடு போலக் கைவிட்டுப் போவார்கள்; அக்கருமானுடைய உலையாணிக் கோலைப்போலத் தம் உறவின்முறையார் எரிகிற நெருப்பிலேயும் முழுகுமவரே நட்பினர் என்று சொல்லத் தக்கார் என்க.

கொட்டியுண்டலாவது தாளம் போட்டு உண்டல்; அஃது பிரபுக்களுக்கு இச்சகம் பேசி வயிறு வளர்த்தல். "இச்சை பல சொல்லி இடித்து உண்கை" என்றார் பிறரும். கொட்டுதல் - தாளம் போடல் என்னும் பொருட்டாதலைக் 'கொட்டி அளந்தறியாப் பாடலும்' (திரிக. 57) என்பதனால் அறிக. பதம் பண்ணும் தொழிலையுடைய செம்மட்டிக்கு வஞ்சகர் உவமை கூறப்பட்டார். சுற்றத்தார் துன்புறும்போது தாமும் துன்புறுதலே சுற்றந்தழுவுதலினிலக்கண மென்றாராயிற்று. தம் உயிர்த்தோழனை வேள்பாரி மூவேந்தர்களாலும் வஞ்சித்துக் கொல்லப் பெற்றபோது கபிலர் பிரிவாற்றாது வடக்கிருந்து உயிர்துறந்த புறப்பாட்டு வரலாறு ஈண்டு சிந்திக்கத்தக்கது.

209. நல்ல வாசனையை யுடைத்தா யிருக்கிற பூவினாலே கட்டப்பட்ட குளிர்ந்த மாலையையுடைய பெண்ணே! ஒரு நட்பினருக்கு ஒரு நட்பினர் இறக்குமளவும் இம்மையில் அவர்களுடனே இன்புறுவன வற்றிலே இன்புற்றெழுந்து அவர் துன்புறுவன வற்றிலே தாமும் துன்புறாது போனால் அவருக்கு மறுமையிலே செய்யும் உதவிதான் யாதொன்றுண்டு என்க.

அரசர்க்கு 'துணைநலம் ஆக்கந்தரூஉம்' என்றபடி நட்பினரால் எய்தற்பாலன அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுமே யாதலாலும், அவை இம்மையிலேயே எய்துவன வாதலாலும் நட்டார்க்கு ஒரு நட்டார் மறுமையிற் செய்வது ஒன்றுமில்லை என்றார்.

210. தம்பால் விருப்பில்லாதார் மனையிலே வேறாயிருந்து உண்ணுகின்ற காட்டுப் பூனைக் கண்போன்ற ஒளியும் ஸ்வாகோவ்

ணமுமான கறியுண்வும் வேம்புபோலே கைக்கும். தன்னைத் தான் விரும்புவது போன்ற விருப்பமுடைய சுற்றத்தார் மனை யில் தளும்பத் தளும்ப நீர் கூட்டி அட்ட பழைய குளிர்ந்த கூழும் எலும்பு அளவும் சென்று இனிக்கும் அமிர்தமாகும் என்க. வேறு இருந்து உண்டலாவது "வாயார் பெருநகை வைகலும்" நகாது மனம் வேறுபட்டு உண்டல். வெருக்குக்கண் ஒளியுடைத் தென்பது "வெருகிரு ணோக்கி யன்ன கதிர்விடு..." என்னும் அகப்பாட்டானுணர்க (73). புற்கை, மிக்க நீர் கூட்டி யடப் பட்ட கூழ் என்பது கீழ் 206 ஆம் பாடலினும் கூறப்பட்டது காண்க. தயங்குதல், அசைதல். என்றும் என்போடு இயைதற்குக் காரணமாகிய அமிழ்தம் என்றுமாம். என்பு, உடம்பு. (குறள் 72)

(22) "நட்பாராய்தலாவது ஒருவருடைய பல குணங்களையும் ஆராயாமல் விரைந்து நட்புக் கொண்டவர் பின்பு அவர் பால் ஒரு குற்றங் கண்டவிடத்து நட்புவிடுதல், "விலங் கிற்கும் விள்ளல் அரிது" என்றபடி இழிவாதலால் நட்புக் கொள்ளுமிடத்துக் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் குணமும் நன்மையும் வாய்மையும் பழுதுசெய்யாத தன் மையுமாகிய இவைகளை நன்றாக ஆராய்ந்து நட்புச் செய் தலாம். கீழதிகாரத்திற் கூறிய சுற்றத்தார்போல நல்ல நட்பினரும் அரசர்க்கு அறம் பொருள் இன்பங்களுக்குத் துணையாக இருத்தலின், இது சுற்றந்தழாலின் பின் வைக் கப்பட்டது.

211. நட்புக் கோடலின் கருத்தினை உணர்ந்தும், கல்வி கற்றும் அறிந்தவர்களுடைய நட்பு, கரும்பின் குருத்திலிருந்து அடிவரையில் தின்றாற்போல நாளுக்கு நாள் ருசி யதிகரித்துக் கொண்டேவரும். இனிமைக் குணமில்லாதவருடைய நட் பானது அக்கரும்பின் அடியிலிருந்து குருத்திற்கு நேரே தின்று கொண்டு போனதுபோல நாளுக்கு நாள் ரஸம் குறைந்து கொண்டே வரும் என்க.

நட்புக் கோடலின் கருத்தினை யுணரலாவது, 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற்

'பொருட்டு' என்று உணர்தல். கற்றறிந்தாரின் கருத்தினை அறிந்து அவரோடு கொண்ட கேண்மை யெனினும் பொருந்தும்.

212. பொன்னைக் கொழித்து அருவி விழுவதனாலே பக்ஷிகளெல்லாம் பறந்தோடுகின்ற பூக்களையுடைய மலைநாடனே! நல்ல குடிப்பிறப்பைக் கருதி, 'இவர் நடுவே வேறாகாதவர்' என்று ஒரு பக்ஷமாக நட்புக் கொண்டதேயல்லாது மற்றொரு பக்ஷமாகிய மனத்தினை நன்கு ஆராய்ந்தறிந்து நட்புக் கொள்ளப்பட்டதொன்று அன்று என்க.

நல்லிற்பிறப்பு என்று கூட்டுக. மனத்தால் குடிப்பிறப்பு மனந் தூய்மை என்ற இருபக்கமும் ஆராய்ந்து அறிந்து நட்புக் கொள்ளப்பட்ட தொன்றல்லாததாய், நல்லிற் பிறப்பொன்றே எண்ணி, இவர் இடையில் திரியார் என்று கொண்ட நட்பு நன்மை அல்லாதது ஆகும் என உரைப்பினும் ஆம். கெழு கேழ் என்றாய்ப் பொருந்துதலை உணர்த்திற்று. (தொல். சொல். சூ. 303 நச் உரையை நோக்குக.) பொன்னோடு பொருந்தி என்பது பொருள். மலையிடத்துப் பிறந்த அருவியானது நீரைக் கொழித்தலை விட்டு ஒரு காலத்துப் பொன்னைக் கொழித்து விழுந்து, பக்ஷிகள் அஞ்சி இரிதற்கிடனாதல் போல நற்குடியிற் பிறந்தோரும் ஒரு காலத்து வெருவத் தக்கன செய்தல் கூடுமென்பது தொகை மொழிப் பொருள். "குடிப்பிறப்பு ஒன்றனையுங் கொண்டு நட்புக் கொள்ளாமல் அவர் மனத்தினையுந் தீர ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்" என்பது ஒரு பழையவுரை. அதற்கு உதாரணம் அடுத்த பாட்டிற் கூறுவர். மனமறிய, மனம் அறிந்ததனாலே என்று காரணப் பொருட்டாய் வந்தது.

213. யானையைப் போலே இருக்கிறவர்களுடனே கொள்கிற நட்பை விட்டு நாயைப் போலே யிருக்கிறவர்களுடைய நட்பினைக் கொள்ளக்கடவன். யானை தனக்குக் கவளம் இட்டு வளர்க்கிறவனையே ஒருகாலத்தில் கொல்லும். நாய் தன்னை வளர்க்கிறவன் எறிந்த வேல் தன் உடம்பிலே பட்டு உருவாநிற்கவும், தன் வாலைக் குழைத்து அன்பு பாராட்டும் என்க.

இது ஒருவரை நட்புக்கொள்ளுமிடத்து அவருடைய உயர் குடிப்பிறப்பினையும் மனந்தூய்மையையும் நோக்கவேண்டுமென்

றும், குடியும் குலமும் உண்டென்று நட்புக் கொள்ளாமல் அவர் மனத்தினை நன்றாய் ஆராய்ந்து மனந் தூயரா யிருப்பின் குடியும் குலமும் இல்லையாகிலும் நட்புக்கொள்க என்றும்விதித்தாராயிற்று.

"பெருமையும் சிறுமையும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்து (285) கழியச் சிறிதாக உவமித்ததற்கு 'யானை யனையவர் ........வேண்டும்' என்பதனைக் காட்டினர் பேரா. 'நட்புரீஇ' என்றும் பாடம். அறிந்தறிந்தும், நன்றாய் அறிந்தும்.

214. மனத்தினுலே ஒருநாளும் நட்புக்கொள்ளாதவர் எந்நாளும் தம்மருகில் இருந்தாராகிலும், நட்பினராகார். தம் நெஞ்சிலே எந்நாளும் சினேக பந்தம் உடையார் தாம் கொண்ட நட்பினைத் தந்நட்டோர் தம்மை விட்டு அகன்று பலநாளும் தூரத்திலுள்ளார் ஆயினும் கைவிடுதலில்லை என்க.

நட்புக்குப் "புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமைதரும்", (குறள் 785) " தூர்ந்தொழுகிக் கண்ணுந் துணைகள் துணைகளே; சார்ந்தொழுகிக் கண்ணுஞ் சலவர் சலவரே" (திரிக. 51.) என்பன ஈண்டு சிந்திக்கத்தக்கன.

215. கொம்பிற் பூத்த பூப்போல மலர்ந்து பின் குவியாது தலை நாளிலே நட்புக்கொண்ட சந்தோஷம் போல இருக்கிறதே நட்பாகும். தோண்டிய குளத்திலே யிருக்கிற தாமரை அல்லி ஆம்பல் முதலிய பூக்களைப்போல முன்னம் மலர்ந்து பின்பு முகுளிதமாவதுபோலக் கண்டபோது சந்தோஷமாக நட்புக்காட்டிக் காணுதபொழுது இகழ்ந்து பேசுகிறவர்களைப் பெரியோர் விரும்புவதுமில்லை; நட்புக்கொள்ளுவதுமில்லை என்க.

கோடு, கிளை. கூம்புதல், குவிதல். வேட்டல், நட்புக்கோடல். தொடுதல், தோண்டுதல். தொட்ட என்பது தோட்ட என நீண்டது. பின்னையதான கூம்புதல், இகழ்தல் என்று பொருள் பட்டது. 'உலகந் தழீஇயது ஒட்பம் மலர்தலும் கூம்பலுமில்லது அறிவு' என்னுங் குறளுரையில் இப்பாடலின் கருத்தினை உரைநடையில் மடுத்தனர் பரிமே.

216. கடையான அதமருடனே கொண்ட சினேகம் பாக்கு மரத்துக்குத் தினம் நீரூற்றுவது போல எந்நாளும் பிரியஞ்

சொல்லி ஆகவேண்டும்; மத்திமருடனே கொண்ட சினேகம் தென்னைமரத்தைப் போலச் சிலநாள் பின்னே திரிந்து ஆக வேண்டும்; உத்தமருடனே கொண்ட சினேகம் பனைமரத்தைப் போல ஒரு நாள் கண்டு பேசியபோதே அமையும் என்க.

தொன்மையுடையாராவார் நற்குடியிலராயினும் மனம் தூய் மையாகிய சிறப்பினை உடையார். எண்ணரும் பெண்ணை என்றது, பனைக் கமுகு தெங்குகளைப் போல மக்களால் மதிக்கப்படாதிருத் தல். எண்ணுதல் - மதித்தல். அருமை, ஈண்டு இன்மைமேற்று. பனங்கிழங்கினை நட்டவர் பின்பு அதற்கு நீரூற்றி வளர்க்க வேண்டுவதில்லை. தென்னைக்குச் சில வருஷங்கள் நீர் ஊற்றியே வளர்க்கவேண்டும். பாக்கினுக்குத் தினம் நீரூற்றவேண்டும்.

217. கழு நீரிலே வெந்த பச்சை இலைக்கறியானாலும் நட் பினர் கையிலே ஒருவன் பெற்றால் அது சிறந்ததான அமிருதம் போல இருக்கும். சிறந்த தாளிப்போடும், துவையலோடும் பொரு ந்திய வெள்ளைச் சம்பாச்சோறே யாயினும் விரும்பாதவர் கை யகத்து உண்டல் எட்டிக்காய்போலாகும் என்க. காரடகுஎன்பது இலைக்கறியினும் இழிந்த கறியை உணர்த்திற்று. குய், தாளிப்பு; "குய்கொள் கொழுந்துவை" என்றார் புறத்தினும் 160.

218. நாயின் கால்விரலைப்போல மிகவும் சேர்ந்திருந்தாலும் ஈயின் காலளவுச் சிறுமையும் உதவி செய்யாதவர்களிடம் நட்பு என்னபயனும்? வயலால் தனக்கு ஒரு பயனும் இல்லாவிட்டா லும் தூரத்திலே யிருக்கிற தண்ணீரைக்கொண்டுபோய் அந்த வயலுக்குப் பாய்ச்சி, அதனை விளைவிக்கும் வாய்க்கால் போன்றவர் நட்பினை. அவர் தூரத்தே யிருந்தாலும் சென்று கொள்ளவேண்டும் என்க. ஈக்கால், ஈச்சிறகு என்பன மிகச் சிறுமைக்கு ஓர் அளவு

219. மனம் சுத்தமில்லாதாரிடத்துக் கொண்ட நட்பினும் பகை நல்லது. மருந்திலே தீராத வியாதியை அனுபவித்தலி னும் சாதல் நல்லது. ஒருவனை நெஞ்சுநோவ வைவதினும் கொல்லுதல் நல்லது. இல்லாத குணத்தைப் புனைந்து சொல்லிப் புகழ்தலினும் வைதலே நல்லதென்க.

220. பலருடனே மருவிப் பலநாளும் கலந்து நடந்து ஆராய்ந்த பின்னர் பொருளாகத் தக்கவரை நட்புக் கொள்கிறது

ஒருவனுக்கு உறுதியாகும். பல்லினாலே கடித்துப் பிராணனைப் போக்கும் பாம்புடனேயும் நட்புக்கொண்டபிறகு அதை விடுகிறது மனத்திற்குத் துன்பமா யிருக்குமாதலால் என்க.

தன்னோடு நட்ட நாகராஜனான தக்ஷகனை இந்திரன் ஜனமேஜயன் யாகத்தீயில் விட்டுவிட அஞ்சி அவ்வரவரசனுடன் தானும் அத்தீயில் விழுந்தழியத் தீர்மானித்து விண்ணுலகினின்றும் இழிந்தனனென்னும் புராண கதை ஈண்டு நினைக்கத்தக்கது. பரிதல் - அறுத்தல்; ஈண்டுக் கடித்தல். மருவி, பொருவி, பரிந்து, மருவி, என்பன நான்கு மாத்திரை அளபெடுத்தன. (தொல். எழுத்து. 6. நச். உரை.)

(23) 'நட்பிற்பிழை பொறுத்த'லாவது, தாம் நட்புக்கொண்டவர் பொல்லாத காரியங்களைச் செய்தாராயினும், அவர் அறியாமையாற் செய்தாரென்றுதல், தம்மிடத்திலே விசுவாசத்தினாலே செய்தாரென்றுதல் கொண்டு அவர் செய்த குற்றங்களைப் பொறுத்தல்.

221 ஒருவர் நல்லவரென்று, தாம் மிகவும் விரும்பி நட்புக் கொள்ளப்பட்டவரிடத்து ஒரு நட்புமில்லையாயினும் அதனைப் பிறரறியாமல் அடக்கிக்கொண்டு போகக் கடவர். அஃது என் போல எனின் நெல்லுக்கும் உமியை அடக்கிக் கோடல் உண்டு; நீருக்கும் நுரையை அடக்கிக் கோடலுண்டு; பூவிற்கும் புறவிதழை அடக்கிக் கோடலுண்டாயவாறு போல என்க.

'உயிரை ஆக்கும் நெல்லும் நீரும்' என்றும் 'நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர்' (புறம் 186 உரை; சிந். 2908) என்றும் சிறப்பித்து கூறப்படும் நெல், நீர் என்ற இரண்டும் மங்கலமாதலோடு நாற்றமுடைமையும் காலத்தின் மலர்தலும் வண்டிற்கு நெகிழ்தலும் கண்டோருவத்தலும் விழையப்படுதலு முடையதாய சிறந்த பூவும் சிறப்பில்லாத உமி, நுரை, புறவிதழ் என்றதும் அங்கங்களை அடக்கிக்கொண்டிருத்தல்போல அரசனும் சிறப்பில்லாதவராயினும் தன் நட்பினரைத் தழுவிக்கோடல் வேண்டுமென்றுராயிற்று. உமியுண்டு, நுரையுண்டு, புறவிதழுண்டு என்பனவற்றிற்கு உமியை அடக்கிக் கோடலுண்டு, நுரையை அடக்கிக் கோடலுண்டு, புறவிதழைஅடக்கிக்கோடலுண்டு என்றுபொருள்

தந்து உரைக்கப்பட்டது. நெல்லிற்கு என்னுமிடத்துச் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

222. கட்டுகிற கரையைத் திரும்பத் திரும்ப உடைத்துக் கொண்டுபோகும் தண்ணீரை நச்சிப் பிழைக்கின்றவர் அந்த நீருடனே பிணங்கிக் கொண்டிரார்; பின்னை யந்த நீரைப் போக வொட்டாமல் அணைபோட்டுக் கட்டுவார்கள். அப்படிப்போல தாம் வெறுக்க வெறுக்கத் தீயன செய்தாராயினும் தாம் வேண்டி ஆக்கிக்கொண்ட நட்பினர்களைப் பொறுத்துக் கொள்வர்கள் என்க. செறுதோறு என்பது செறுத்தோறென்று வலிமிக்கு நின்றது. செறுதல், தடுத்தல். வயல்தோறும் எனினும் அமையும்; செறு, வயல். உம்மை விகாரத்தாற்றொக்கதென்க. செம்புனல் என்றார் உழவர்க்கு மிகவும் ஆவசியகமான புதுப்புனலை. புதுப்புனலைக் கண்டு உழவர் கலி சிறந்து ஆர்த்தலும், அரசர் விழவு அயர்தலும் தமிழ்நாட்டு வழக்கு. இதனை, 'உழவர் ஓதை மதகோதை உடை நீரோதை தண்பதங்கொள் விழவர் ஓதை சிறந்தார்ப்ப' என்னும் சிலப். கானல்வரிப் பாட்டானும், 'மலிபுனல் பொருத மருதோங்கு படப்பை ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்றுறைக் கலிகொள் சுற்றமொடு கரிகால்காணத் தண்பதங்கொண்டு' என்னும் 276 ஆம் அகப்பாட்டானும்; (தண்பதங் கொள்ளல் - புதுப்புனலாடல்) வையையைப் பற்றிய பரிபாடற் பாட்டுக்களானும் பிறவற்றானும் அறிக. முன்னையதான வெறுப்ப - வெறுக்கத்தக்கன; பின்னையதான வெறுப்ப - மிக எனலுமாம்.

223. பொன்னைப்போல நிறத்தையுடைய கோங்கமலரிலே அழகிய வண்டுகள் ஆரவாரிக்கும் உயர்ந்த மலைநாடனே! மிகவும் பொல்லாத காரியத்தைத் தன்னுடனே நட்புக் கொண்டவர் செய்தாராயினும் பொறுக்கத் தகுவதொன்று அன்றோ? ஏனெனில் ஒருவர் பொறுக்கவே இருவர்க்கும் நட்பு உண்டாகுமாதலால் என்க.

உயர்வரை வினைத்தொகை. உரு, வடிவழகு; உருவ என ஈறு திரிந்தது (அகம் 1. உரை. தொல். சொல். 302. நச்) தன்னிடத்துள்ள தேனையெல்லாம் நுகர்ந்து தன்னை யிறுதியிற் றுறக்கும் வண்டினுக்கு நெகிழ்ந்து, பின்னையும் பல புதுமலர்களை ஊழ்த்து அதனை நுகர்விக்கும் கோங்குபோல அரசனும் தன் நட்டார் செய்

யும் மிகைகளைப் பொறுத்துக் காலங்களில் உள்ளம் நெகிழ்ந்து, உதவி செய்தல் கடனென்பது தொகை மொழியின்பொருள். தன் வடிவழகாலே கோங்கினை மயக்குறுத்திய வண்டென்பார் உருவவண்டென்றார். நிறக் கோங்கென்றது நல்ல ஜாதியைக் குறிப்பித்தது. அதனை உபமேயத்தினும் பொருத்திக் கொள்க. கோங்கின் நிறம் பொன்னை ஒக்குமென்பதனை 'கோங்கின், காலுறக் கழன்ற கண்கமழ் பனிமலர், கைவிடு சுடரிற்றோன்றும்' (அகம் 153.) என்பதனால் அறிக.

224. மடிகின்ற அலைகள் கொணர்ந்து ஒதுக்கிய தூய வெள்ளிய கிரணங்களையுடைய முத்துக்களைத் தீவிரமாக வருகின்ற கப்பல் கரைகளிலே சிதறச்செய்யும் கடற்கரையை யுடையவனே! தம்மால் நட்பு விட்டுவிடுதற் கரியவர் நற்குணங்களை யுடையவரல்லாதவராயின், அவர் தம் நெஞ்சினைச் சுடுகிறதற்கு மூட்டிய தீயாவர் என்க. கப்பல் விரைந்து கரையை நோக்கி வருதலால் அலை பலமாய்மோதி, கரையிலே ஒதுங்கிக் கிடந்த முத்துக்களைப் பரதமாக்கள் வாரிக்கொள்ள ஒட்டாமல் சிதற அடித்தும், மீண்டும் கடலிலேயே மடுத்தும் விடுகின்றன என்றாராயிற்று. கப்பல் இவ்வாறு மனம் நோவத் தீங்கிழைத்தாலும், அது விடுதற்கரிய தொன்றுதல் போல நட்டாரும் இயல்பிலரேனும் விடற்கரியர் என்பது தொகை மொழிப்பொருள்.

225. பொன்னையும் தானியத்தையும் நல்ல வீட்டையும் சுட்டுப்போட்ட நெருப்பினைத் தினந்தினம் இருக்கிற விடந்தேடிக் கொண்டு வந்து வீட்டுக்குள்ளே வைத்து ஆக்கிக்கொள்ளுதலால் பொல்லாத காரியங்களைச் செய்தாராயினும் விடப்போகாதவர்களைப் பொன்னைப்போலே தக்கவிடத்து வைத்துச் சோர்வு படாமற் காத்து அடக்கிக்கொள்ள வேணும் என்க

'அல்குபத மிகுத்த கடியுடைவியனகர்' என்றும்; 'கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பு' என்றும் (அகம் 49, 145) 'நெல்லுடைமை கூறியவதனால்', இல்லிற்கு அஃதுடைமையே நன்மையாவது. பொன்னொடு கூடிய நல்லில் என்றமையால் தன தானியங்களும் பிற சம்பத்துக்களும் நிறைந்த இல்லினைக் கூறினாராயிற்று. பொன்னும் நல்லில்லும் சிதைந்தமைக்கு இல்லவர் சோர்வே

காரணமன்றித் தீயின் குற்றமன்றென்று கொண்டு, அத்தீயினைத் தொழலும் வேண்டுமென்க.

226. தம்மை விட்டுப்போகாதவர்கள் பொல்லாத காரியங்களைச் செய்தாராயினும் அவர்களை விட்டுவிடப்போமோ? அணுகுதற்கரிய தன்மையினையுடைய ஆகாசத்தைத் தன் முகடுகளாற் குத்துகின்ற நீண்ட மலையை யுடையவனே! தன் கண்ணைக் குத்திற்றென்று தன்கையைத் தறிக்கப்போமோ என்க.

ஓராதாரமுமின்றி நிற்கின்ற ஆகாயமானது தன்னைக் குத்தியிடிக்கின்றதென்று மலையைக் குறைத்து விடுதலில்லையாதல் போல, இன்னா செய்த நட்பினரைவிடப் போகாதென்பதாம். ஆகாயம் நிராதாரமாக நிற்கின்றதென்பதனை 'வறிது நிலைஇய காயம்' (புறம் 30.) என்பதனால் அறிக. கீழ்ப் பாடலில் தீய இயல்புடையார் தம் தீய இயல்பினாலே தீங்கிழைத்தாராயினும் அணைக்கவென்றார்; இப்பாடலில் நல்லியல்பும் உபகார குணமுமுடையாரும் அறியாமையால் ஒரு கால் தீங்கிழைத்தாராயினும், அவரையும் அணைக்க என்றாராயிற்று. விண்குத்து நீள்வரை வெற்ப என்பதற்கு விண்ணைக்குத்தும் நீண்ட மூங்கில்களையுடைய மலைநாடனே என்றலுமாம். வரை, மூங்கில், கணுவுடைமையால்.

227. விட்டு விளங்குகின்ற நீரையுடைய குளிர்ந்த கடற் கரையையுடையவனே! நட்புக்கொண்டபின் அந்நட்பினர் பொல்லாத காரியஞ் செய்தாராயினும் அதனைக் குற்றமாக எண்ணார்கள் சான்றோர்கள்; நட்பினராய் ஒன்றுகூடிய பின் அவர் செய்த குற்றங்களை அடக்கிக்கொள்ளாமல் பிறரறியச் சொல்லும் உறுதியற்ற அறிவினர், அக்குற்றஞ் செய்தவரைப்பார்க்கிலும் கடையர் என்க. இலங்குதல், விட்டு விளங்குதல். 'இலங்கிழை' என்புழிப்போல வெண். மா. விழுந்தெழுந்து ஒளிவிடுதலுமாம். 'முலைமுகஞ் செய்தன முள்ளெயிறிலங்கின' என்புழிப்போல (அகம் 7.) 'துன்னியார் குற்றமுந் தூற்றுமரபினார், என்னைகொல் ஏதிலார் மாட்டு?' என்று பலராலும் இகழப்படுதல் நோக்கி 'திண்ணறிவிலாதார் தாமும் அவரிற்கடை' யென்றார். கடல்நீர் தன்னோடு கலந்த உப்

பின் உவர்ப்பினைக் குற்றமாக எண்ணாது விழுந்தெழுந்து ஒளிவிடு தல்போல அரசனும் தன் நட்பினர் குற்றத்தைத் தானுந் தழுவிக் கோடல்வேண்டுமென்பது தொகைமொழிப்பொருள்.

228. ஒலிக்கின்ற அருவியையுடைய நாடனே! அன்னியர் செய்த தீங்குகள் பிராணவாதை தருவதொன்றாயினும், ஆராயு மிடத்து 'உறற்பால நீண்டா விடுதலரிது' என்று, 'தன்னையே தான் நோவின் அல்லது' அவ்வன்னியரை நொந்து கொள்ளற் குத் தக்க காரணம் யாதுளது? ஒன்றுமில்லை. அவ்வாறிருக் கும்போது காதல் பொருந்தியவர் செய்த தீங்குகள் நெஞ்சத் துள்ளே கிடந்து சீரியவாகும் என்க.

செய்த விழுமியவாம் எனற்பாலது விழுமிதாம் என்று பன் மைக்கண் ஒருமை மயங்கி வந்தது. சீதாபிராட்டியாரைக் கண்டு திரும்பி வந்த வானரவீரர்கள் மதுவனத்தை அழித்தாராயினும், அக்குற்றம் சுக்கிரீவனுக்குப் போக்யமாயிருந்த தென்னும் இராமா யண வரலாறு ஈண்டு சிந்திக்கத் தக்கது. மலையினின்று வருபுனல் ஓயாது ஒலிக்கின்றதாயினும், மக்கள் அதனை ஓர் அழகாகக் கருது வது போலக் காதலார் குற்றஞ்செய்வாரேனும் அதுவும் ஓர் சுவையேயாம். 'பண்ணிய யாழொக்கும் நட்டார் கழறுஞ் சொல்' (நான்மணி 100) என்றார் பிறரும்.

229. தமர் என்று தம்மால் நட்புக்கொள்ளப் பட்டவரிடத் திலே தமரல்லாமையைத் தாம் காணில், அவரைப் பண்டை நட்பினருள்ளும் அதிகமாக நன்கு மதித்து, அவர் செய்த குற்றங் களைத் தம் மனத்தில் அடக்கிக்கொள்க என்க. 'தம்மை' என் புழி இரண்டனுருபிற்கு ஏழனுருபின் பொருள் கொடுத்துரைக் கப்பட்டது. கீழ்ப்பாடலில் தமர் குற்றங்களைப் போக்யமாகக் கொள்ள வேண்டுமென்றார் இப்பாடலில் அது கூடாவிடில், 'முகநட்டு அகநட்பு ஒரீஇ விடல்' என்றார்.

230. ஒருவனுடைய குற்றத்தினையும் நல்லகுணத்தினையும் அவனை நட்புக்கொண்டபின் இது குற்றம் இது குணம் என்று சோதித்துக்கொண்டு திரிவேனானால், நட்பினன் கூறிய இரகசியத் தை வெளியிட்டவன் செல்லும் தீக்கதியை நான் அடைக; அஃ

தேயன்றி ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த வையகத்தார் என்னை இகழ்க என்க. 'என்மகன் இராமன் நாடிழந்ததற்கும் காட்டிற்கேகியதற்கும் நீயே காரணம் என்ற கோசலைமுன் பரதன் செய்யும் சபதங்களுள் 'மறைகாவா விட்டவன் செல்லுந்தீக்கதியை நான் அடைக' என்று கூறி, அதன்பின் 'செய்ந்நன்றி கொன்றவன் செல்கதியை நான் அடைக' என்று கூறலான் செய்ந்நன்றி மறத்தலோடொப்ப இதுவும் பெரும்பாவமென்று கொள்ளப்படும். 'ஊழி பெயருங் காலத்து யாவருஞ் செய்த இருவினையும் நீங்குதலின், அக்காலத்தும் செய்தி (செய்ந்நன்றி) கொன்றோர்க்கு உய்தியில்' (புறம் 34 உரை) என்று கூறுவது நோக்கி, செய்ந்நன்றி மறத்தலின் பாவத்தை உணர்க. 'அருமறை காவாத நட்பும்...ஒற்றாளெனப்படுவார்' (திரிக. 55) என்றார் பிறரும். இப்பாடலை நட்பின் குசியறிந்த ஒருவன் கூறிய வஞ்சினமொழி எனக்கொள்க.

(24) 'கூடா நட்'பாவது குடியாலும் குணத்தாலும் ஆசாரத்தாலும் தம்மனத்திற்கு ஒவ்வாதவரும் மனத்தாற் கூடாதிருந்தே, தம் காரியம் முடியுமளவும் புறத்தாற் கூடியொழுகுநருமாயுள்ளவர்களது நட்பு. இத்தகைய நட்பினரை அஞ்சி ஒழுகல் வேண்டுதலின் இது நட்பிற் பிழை பொறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

231. கரிய குன்றத்தினின்றும் மிக்க அருவிகள் விழுகின்ற நீரெல்லையையுடைய நல்ல நாடனே! தீய நட்பினர் தம் காரியம் முடியுமளவும் கட்டுகள் எல்லாம் அற்றுப் பிரிந்த பழைய கூரையையுடைய வீட்டிலே மழைபெய்யும்போது ஒழுகுகிற தண்ணீருக்குச் சேற்றை அணையாகக் கோலிக்கொண்டும், அந்த அணைக்குள்ளே விழுகிற தண்ணீரைத் தம்மேல் ஏற்றும், அதிகமான போது இறைத்தும் கிடப்பர் என்க. செறித்தல் - பொருத்துதல். அஃதில்லாத கூரை, கட்டுப்பிரிந்த கூரை. கரை - கறுப்பு. சுனையாய் மலையில் தங்கியிருந்த நீர் மிகுதியான வழி அம்மலையைத் துறந்து அருவியாய் விழுந்துபோய் விடுவதுபோல புறத்தாற் கூடிய நட்பினரும் தம் காரியம் முற்றியவழிப் பிரிவர் என்க.

232. வெள்ளிய அருவியையுடைய நாடனே! சீரியவருடனேகொண்ட நட்பு மிக்க சிறப்பினையுடையதாய் மழையினாலே

விளையுள்கள் மிக வுண்டானாற்போல நன்மையைத்தரும்; சீரியவர் அல்லாருடனே கொண்ட மிக்க நட்பானது மழை பெய்யாக் காலம்போல வறுமையாகவிருக்கும் என்க.

மாரியால் என்னும் மூன்றனுருபு தொக்கது. மாண்ட பயத்தது என்பது பயம் மாண்டது என்று மாற்றியுரைக்கப்பட்டது.

**233.** நுண்ணிதான அறிவினையுடையாரோடு உறவு செய்ததிலுண்டான பயனை அனுபவித்தல் விருப்பத்திற் றேவருலகத்தை ஒக்கும்; நுண்ணிதான நூலை அறியமாட்டாதாராகிய பயனில்லாருடனே உறவுகொண்ட பயன் நரகத்திலே அனுபவிக்கிறதுபோல விருக்கும் என்க.

நுகர்தல் - அனுபவித்தல்; விழைவிற்று - விருப்பத்தையுடையது- ஊதியம் - இலாபம்; அது மக்கட்பிறப்பானகிய இலாபம். ஒன்று - ஒப்பு. நுண்ணிதான அறிவினையுடையாராவர் புலவர்; 'தேவரனையர் புலவர்'' (நான்மணி 75) என்பர்; ஆதலால், அவரோடு கூடி நுகர்வுடைமை சுவர்க்கபோகத்தை ஒக்குமென்றார். 'ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு' என்பவாதலால், நூலுணர்ச்சியில்லாத மாக்களோடு கூட்டுறவு நரகானுபவம் போலும் என்றார்.

**234.** அருகுதோறுஞ் சந்தனமரங்கள் நிறைந்த சோலையையுடைய மலைநாடனே! மனத்திலே நட்புக் குணமில்லாதாருடனே கொண்ட உறவு வளருவதுபோலத் தோன்றி வைக்கோல் நெருப்புப்போல ஒருபொழுதும் நில்லாமற் கெட்டுப்போம். என்க.

நந்துதல் - ஆதலும், கெடலுமாகிய பொருள்படுவதோர் சொல். ஈண்டுக் கெடல் என்று பொருள்பட்டது; சாரல் - பக்கமலை, பந்தம், கட்டு; சினேகக் கட்டின் ருசி என்க.

**235.** செய்யத்தகாத காரியத்தைச் செய்வதாகத் துணிதலும் செய்யத்தக்க காரியத்தைச் செய்யாமல் நெடுநாள் விட்டுவைத்தலும் நிச்சயமாக இன்பம் வரத்தக்க காரியத்தை யிகழ்தலும் ஒருவர்க்கு அப்பொழுதே துக்கத்தைக்கொடுக்கும் என்க.

'செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்பதும், 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை' என்பதும் காண்க.

**236.** ஒரு குளத்திலே தோன்றி ஒருவழிப்பட வளர்ந்த விடத்தும் விரிந்த நன்மையையுடைய குவளையை ஆம்பல் சரி ஒவ்வாததைப்போலப் பெரியாருடனே உறவுகொண்டாலும், நல்ல குணமில்லாதார் காரியங்கள் வேறாயிருக்கும் என்க.

குவளை - செங்கழுநீர்ப்பூ. ஆம்பல் - வெள்ளாம்பல். யாமை வாளை கரும்பிற்கொண்ட தேன் இவற்றினோடு கூட்டிக் குவளை யானது மருதநிலத்து மக்களாற் குறிஞ்சி முல்லைகளாகிய வன் புலத்துத் தம் சுற்றத்தார்க்குப் பெறுதற்கரிய உணவாகவிருந்திடும் சிறப்புடைத்தாகலானும், ஆம்பலரிசியுணவு தலைமழித்த கழிகல மகளிரும் அடைமதிற்பட்டோரும் அபராணத்தில் வருந்தியுண் ணும் இழிவுடைத்தாகலானும், குவளையை ஆம்பலொக்கல்லா எனப்பட்டது. இவற்றினை 'கீழ்மடைக்கொண்ட வாளையும்...... யாமையும்......கரும்பிற்கொண்ட தேனும் பெருந்துறை...குவ ளையும் வன்புலக் கேளிர்க்கு வருவிருந்தயரும்' (புறம் 42) என் றும், 'அளியதாமே சிறு வெள்ளாம்பல்......பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப்பொழுது மறுத்து, இன்னா வைகலுண்ணும் அல்லிப் படூஉம் புல்லாயினவே' (ஷை 248) என்றும், 'சிறு வெள்ளாம்ப லல்லி யுண்ணும் கழிகல மகளிர் போல' (ஷை 280) என்றும், 'செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு, தடந்தாளாம்பன் மலரொடு கூட்டி...இடூஉக் கடந்து வாளமருழக்கி...வேந்த ரோட்டிய...பாரி' (அகம் 78) என்றும் வந்துள்ளவற்றான் அறிக.

**237.** இளைய சிறுகுரங்கு முந்திப்போய்த் தன் தகப்பன் கொண்டுவந்த கனியைப் பயற்ற நெற்றைப்போ[illegible]லாலே நெரித்துக் குற்றிப் பறிக்கிற மலைநாடனே! ஒருவ[illegible]ாரு டனே கொண்ட வுறவு பொல்லாதென்க.

முற்றல் - முற்றிய கனி. நெற்று - சுண்டுப் பயற்றம் நெற் றினை உணர்த்திற்று. இது மந்தியின் விரல்போன் றிருத்தலால்.

ஞெமிர்த்திடுதல் - தழும்பாக்குதல், நெரித்தல்; ஞெமுக்கிட்டு என்றும் முற்பட்டத்தாதையை என்றும் பாடங்கள்.

**238.** என்னால் நட்புச் செய்யப்பட்டவன் தனக்கு ஒரு துன்பம் வருங்காலத்து என்னுடைய உயிரை அந்நட்புச் செய்தவன் கையிலே கொடேனாகில், நட்புச்செய்தவனது காதன் மனையாளைக் காவலழித்தவன் புக்க நரகத்திலே புகக்கடவேன்; பெரிய புகழையுடைய பூமியிலுள்ளவர்கள் என்னைச் சிரிப்பாராக என்க.

**239.** பசுவின் நெய்வார்த்திருக்கிற கலசத்திலே அந்த நெய்யைக் கொட்டிப் போட்டு வேப்பெண்ணெயை வார்த்து வைத்ததனோடொக்கும். தேன்படுகின்ற மலைநாடனே! நல்ல அறிவினையுடையவர் உறவைவிட்டுப் புல்லறிவாளருடனே நட்புக்கொள்ளுமாறென்க.

வேம்பு அடு நெய் - வேப்பங்கொட்டையைக் காய்ச்சிய நெய்.

**240.** வடிவினால் நல்ல அழகையுடையவனிடத்து ஒப்புரவில்லாதது காய்ந்து பருகுவதற்கு அமைந்த பாலிலே நீரைக் கலந்ததனோடொக்கும்; அறிவுடையவர் பொல்லாதவர்களைச் சேர்ந்து தீயராகுதல் நாகப்பாம்பு விரியன் பெடையோடே கூடினதோடொக்குமென்க.

'நாகம் விரியன்பெடையுடனே புணர்ந்தால், அதின் வயிற்றிலே கற்பமுற்பவித்த அந்த நாகத்திற்கு ஆயுசு குறைந்துபோமாறுபோலப் பொல்லாதவனைச் சேர்ந்தால் நல்லவனுங் கெட்டுப் போவான்' என்பது ஒரு பழைய உரை.

**3.** 'இன்பவியல்' லாவது இன்பம் எய்துதற்குரிய ஒழுக்கங்களைக் கூறும் இயலாம். அவை அறிவுடையாராதலும், அறிவின்மையின் நீங்கியாராதலும், நன்றியைப் பயக்கும் செல்வமுடையாராதலுமென மூன்றுமாம். நட்பினரை உடையாரே இன்பம் எய்துதற்குரியாராதலால், இது நட்பியலின்பின் வைக்கப்பட்டது.

(25) 'அறிவுடைமை'யாவது "இயற்கையறிவினனாதலும், அறம் பொருளின்பம்வீடென்னும் நான்கினையும் நூல்சொன்ன முறைமையாலே அறிந்து அறிவுக்குத் தக்கதாக இம்மைக்

கண் நடந்து மறுமைக்கு உறுதியாகிய காரியங்களைத் துணிந்தறிதலும், உலகவியற்கை யறிந்து உலகத்துக்குத் தக்கதாக ஒழுகுதலுமாம்.”

**241.** பகைவர் இளைத்தவிடம் பார்த்துப் பெருமைக் குண முடையார் தாமாகவே தலையிறக்கிக் கொள்வார்கள். (அந்தப்பகை வரைக்கொல்லப் படையெடுத்துப்போகார்.) ஆராயுங் காலத்து, சந்திரனை மறைக்கும் இராகு அந்தச் சந்திரன் பிறையா யிருந்தகா லத்துமறையாது பூரண சந்திரனானபோது, மறைக்கும் என்க.

வீரரல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும், புண்பட்டார் மேலும், மூத்தார் இளையார் மேலும் போர்க்குச் செல்லுதல் படை மடமாதலின் (புறம் 142 உரை), தகவுடையார் அது செய்யார் என்க. தகவு - பெருமை. தலைச்செல்லல் - மேற்செல்லல். அணங் குதல் - வருத்துதல், அணுகுதல்.

**242.** குளிர்ந்த கடற்கரையையுடையவனே! தரித்திரரான மனுஷ்யருக்கு, அணிகலமாவது அடக்கமுடைமை. ஒருகால் வரம்புகடந்து அடக்கமின்றி நடந்தாராகில் தாம் வாழ்கின்ற ஊராராலே தாம் குடி பழிக்கப்படுவார் என்க.

சீர்-உயர்வு. மாத்திரை-அளவு. ‘சிறிய சுருக்கத்துவேண்டும் உயர்வு’ என்பவாறலும், அவ்வுயர்ச்சிதான் அளவிறத்தலாகாது என்று விதித்தாராயிற்று.

**243.** எந்நிலத்திலே விதைத்தாலும் எட்டிவிதை தென்னை மரமாகாது; தென்னாடாகிய நரகத்திலே பிறந்தவரும் பூமியிலே பிறந்து தருமத்தைச்செய்து சுவர்க்கத்திற்குப் போவார்கள். தன் னுடைய அறிவினது நன்மையே மறுமைக்கு உறுதி ஆவது. வடக்காகிய சுவர்க்கத்திலே பிறந்தவரும் மறுமைக்கு உறுதியாகிய பயனைச் செய்துகொள்ளாமல் நரகத்திலே விழுகின்றவர் பலர் உளர் என்க.

தென்னன் நாடு தென்னாடு. தென்னவன் - கூற்றுவன்; இதனைத் ‘தென்னவற்பெயரியதுன்னருந் துப்பின்’ என்னும் மது ரைக் காஞ்சியடிக்கு நச்சினார்க்கினியர் உரைத்த விசேடவுரையால்

அறிக. கூற்றுவன் நாடு நரகமாயிற்று. "தேவரெல்லாரும், யாம் சேரவிருத்தலின், மேருத்தாழ்ந்து தென்திசை உயர்ந்தது" (தொல். எழுத்து. பாயி. நச். உரை) என்னும் தொடர்நோக்கி, வட திசை சுவர்க்கமாதலறிக.

244. வேம்பினிலையிலே வாழைப்பழம் பழுத்தாலும் தன்னுடைய இயல்பான தீஞ்சுவை சற்றுங் கெடாது; அதுபோலத் தான் சேர்ந்த இனம் பொல்லாதாயினும் பெரியோர்கள் அக்கூட்டுறவாலே மனம் பொல்லாதாகிறதில்லை; பண்டையினும் குணச்சிறப்புறுவர்என்க.

245. கடற்கரையிலும் நல்ல நீருண்டாம்; மலைச்சாரலிலேயும் உப்புநீர் தோன்றும்; ஆதலால் தாங்கள் இணங்கின இணக்கத்தின் வழியே யாகார். கரைகளை மோதுகின்ற அலைகளையுடைய குளிர்ந்த கடற்கரையையுடையவனே! அறிவுடைய மனிதராவார் தம்மறிவின்வழியிலே ஒழுகுவார் என்க.

246. பருத்த அரையையுடைய புன்னைமரத்தாற் சிறப்புப்பெற்று, மிகக் குளிர்ந்த கடற்கரையையுடையவனே! ஒருகால் விட்டு நீங்குதலும் ஒருகால் கூடுதலும் செய்யக்கடவதொன்றல்ல. மருவிய செய்கையை எல்லாவிடத்துமுடையவர் யாவர் ஒருவருடனேயும் நட்புக்கொள்ளாமல் இருக்கிறது நல்லது என்க.

247. ஒருவர் அறிவிக்க அறியும் அறிவுடையாரை நட்புச் செய்யவே இன்பங்கள் பொருந்தும்; அறிவை அறிவிக்கவும் அறியமாட்டாதாரை விட்டு நீங்கவே, பல துன்பங்களும் நீங்கும் என்க.

'பிணிபயிலும் புல்லன்னர் புல்லறிவினுடைவர்' (நான்மணி 33) என்பவாதலால், அவரைப் பிரியப் பிரியுமாம் நோய் என்றார்.

248. நல்ல நிலையிலே தன்னை நிறுத்திக்கொள்ளுவானும், தன்னை முன்னின்ற நிலையினின்றும் கெடுத்துக் கீழாக்கிக் கொள்வானும், முன்னின்றநிலையினும் தன்னை மேன்மேலும் உயர்ச்சி பண்ணிக் கொள்ளுவானும், தன்னைத் தலைமையடையும்படிசெய்து கொள்ளுவானும் தானே என்க.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம், கருமமே கட்டளைக் கல்' (குறள் 505) என்பதுங் காண்க.

249. தமக்கு ஒரு கருமஞ் செய்துகொள்ளுகை காரணமாக அறிவில்லாதார்பின்னையும் பெருமைக் குணமுடையார் செல்லுகின்றது, பெறுதற்கரிய மரபினை யுடைய திரைகள் ஆரவாரிக்கும் பேரொலியையுடைய கடற்கரையை உடையவனே! அது அறியாமையல்ல அறிவுடைமையேயாம் என்க.

கரும வரிசை, கருமத்தின் தகுதி; வரிசை தகுதி என்று பொருள் படலைத் 'தத்தம் வரிசையான் இன்புறூஉம் மேல்' என்பதனால் அறிக. ஓதம் - அலை. 'நிலைஇய பண்பிலர் நோலர் என்றொன்று, உளைய உரையாது உறுதியே கொள்க' (பழ. 253) என்பது ஆன்றோர் ஆணை என்க.

250. 'பொருள் வரவானதிய காரியங்களை உட்படுதலும் போக போக்யங்களை அனுபவித்தலும், தர்மத்தினைத் தகுதியுடைய பெரியவர்களுக்குச் செய்தலும் ஆகிய இவை மூன்றுகாரியமும் ஒரு பிறப்பிலே முட்டுப்படாமல் ஒருவருக்கு வந்து எய்துமாகில் அதுவல்லவோ சிறந்த யாத்திரையாகப் போய்,தான் கருதின தீவிலே பலிப்புண்டாக வியாபாரம் பண்ணி, இடையூறின்றியே வந்து தன் பட்டினத்தைச் சேரவிட்டிருந்த கப்பலையுடையவன் மனம்போலே அமைதியுடையது' என்பது ஒரு பழைய உரை.

(26) 'அறிவின்மை'யாவது தன்னுடைய அறிவில்லாமையைக் கண்டு மாதா பிதா குரு முதலானவர்கள் தனக்கு அறிவு வரத்தக்கதாகச் சொன்ன வச்னங்களையும் உட்கொள்ளாமல் அவர்களை உதாசீனம்பண்ணி, நூல் கூறுவனவற்றையுமிகழ்ந்து, உலகத்தியற்கையான முறைகளை விட்டு, தன்னறியாமைக்கேற்ற வொழுக்கங்களை ஒழுகி, எல்லாராலும் இகழப்படுதலும், மறுமைக்கு உறுதியல்லாதன செய்தலுமாம். இஃது அறிவுடைமையின் மறுதலையாகலின் அதன் பின் இது வைக்கப்பட்டது.

251. கூர்மையான அறிவில்லாமையே ஒருவர்க்கு வறுமையாவது; கூர்மையான அறிவுடைமையே பெரிய செல்வமாவது;

விசாரிக்குங்காலத்துப் பெண்ணிலக்கணங்களும் சில நிறைவுரு மையால் அவற்றினை விரும்பி, ஆண்மைம்மையமுற்றும் இழந்த பேடியும் பூணுளோ கண்ணுக்கினிதான ஆபரணங்களை என்க.

'தனக்குப் பாழ் கற்றறிவில்லா உடம்பு' என்பவர்கலான், நுண்ணுணர் வின்மையை வறுமை என்றார். 'அறிவுடையார் எல்லாமுடையார்' என்பவாதலால் நுண்ணுணர் வுடைமையைப் பெருஞ் செல்வமென்றார். செல்வம் அறிவைப்போல சொர்க்க மோக்ஷங்களைக் கொடாதென்பது ஒரு பழைய உரை.

252. பல நூல்களையுங் கற்றறிந்து கேள்வியால்வரும் பயனை உணர்வார் பெருமை அழிந்து துக்கப்படுகிறகாரணம் அறிந்தீரில் லையோ? பழைய சிறப்பினையுடைய சரஸ்வதி அவர்களிடம் வசித் தலினாலே மகாலக்ஷ்மி பிணங்கி அவர்களிடம் சேராமாற் போவா ளென்க. முந்தின ஜன்மத்திலே இவர் கல்விக்குத் தவசுபண்ணிச் செல்வத்துக்குத் தவசு பண்ணாமையால் இந்த ஜன்மத்தில் வறிய ராய்த் துன்புறுகின்றார்கள்; கல்விக்கும் செல்வத்துக்கும் தவசு பண்ணத் தக்க அறிவு வேணும் என்பது ஒரு பழைய உரை.

253. பிதா படி என்று தனக்குச் சொல்ல இது உறுதியாகிய சொல்லல்லவோ என்று அதனை உட்கொள்ளாமல் இகழ்ந்தவனை ஒருவர் அறிவுகொளுத்த எழுதிய ஓலை ஒன்றனைப் பலர்கூடிய அவையின் முன்னே மெல்லக் கொடுக்க, அதற்கு அவன் கோபித் துக்கொண்டு எல்லாரும் பார்த்தறியத் தன் கல்வியில்லாமையை யறிவித்து, அவரைப் புடைக்க ஒரு கோலை எடுத்துக்கொள்ளு வான் என்க. கழறுதல்-வைதல்; 'கழறுப வென்பவவன்பெண்டிர்' (அகம். 76) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

254. கல்வியில்லாமல் வளர்ந்தானொருவன் உலகத்திலே நல்ல அறிவாளரிடம் புகுந்து மெள்ள (மௌனமாக) விருந்தாலும் அது நாய் இருந்ததனோடு ஒக்கும்; ஒரு வசனத்தைச் சொன் னாலும் அது நாய் குரைத்ததனோடு ஒக்கும் என்க.

255. இலக்கணத்தோடு பொருந்தாத பூர்வபக்ஷ ஸமாதான கோடியையுடைய கடையானவன் அறிவுடையோர்கள் நடுவே புகுந்து தான் கல்லாததைச் சொல்லுவன். பெரியோர்களோ

தாம் கற்றவற்றையும் அறிவில்லாதாரிடம் அவர்கேட்பினும் சொல்லார்; அஃதேனெனில் தாம்சொல்லுகிற விடத்திலே அந்தச்சொல் மதிக்கப்படாமல் விடப்படுமென்று எண்ணி என்க. கோட்டி என்பதற்குக்கீழ் 155 ஆம்பாடலிலும் இப்பொருளே கொள்ளப் பட்டது; கடாவுதல் - கேள்விகேட்டல்.

256. கற்றறிந்த நாவினையுடையவர் தாம் சொல்லுகிற வசனங்களிலே தப்புவரப்போகிறதே என்று அஞ்சி ஒன்றையும் சொல்லார். கல்லாதார் அந்தத் தப்பு வசனங்களுக்குப் பயப் படாதே சொல்லுவார்கள். அஃதென்போலவெனில் பனைமரத் தின்மேலே உலர்ந்த ஓலை சலசலவென்று சத்தமாயிருக்கும்; எப்பொழுதும் பச்சோலை சத்தமில்லாமலிருக்கும் என்க.

257. நன்மை யறியாத மனிதர்க்கு அறத்தினது வழியைச் சொல்லுங் காலத்து மலைமேலே அடிக்கிற முளைபோலத் தலைமுறிந்து செவியிலே சென்று ஏறுவாகும்; ஆதலால், அவ்வுபதேசம் பன்றிக்குக் கூழ்வார்க்கிற தொட்டியிலே தேமாங்கனியைப் பிழிந் ததனோடொக்கும் என்க.

பத்தர்க்குப் பன்றிப் பத்தர் என்ற பெய ருண்மையால், (சிலப். நாடு. 110. அடியார். உரை; மதுரை. அடி 91. நச். உரை) கூழ் வடித்தற்குரிய பன்றிப் பத்தரிற் றேமா வடித்தற்றூல் எனவுமாம். பன்றிப்பத்தராவது, நீர் இறைக்கும் ஒரு வகைக் கருவியாம்; இதனை ஆம்பி என்ப.

258. பால்வார்த்துக்கழுவிப் பலநாள் உலர்த்தினும் கரிக்கு வெள்ளிதாகிய நிறமுண்டாகாது; அதுபோலக் கோல்கொண்டு அதட்டிக் குத்திச்சொன்னாலும் புண்ணிய மில்லாதவனுக்கு அறிவு புலப்படாதென்க. வால் - வெண்மை ;இருந்தை - கரி.

259. தேன்பொழிந்து நன்றாய் மணத்தாலும், பூவிற்றேனைக் குடிக்கச்செல்லாது இழிந்த மல முதலியவற்றையே விரும்பும் ஈயைப்போல நெஞ்சிலே கலந்த இழிகுணங்க ளுடையவர்க்குத் தகுதியை யுடையார் வாயினின்றும் வரும் தேன்போலு மினிய தெளிந்த சொல்லின் ஸாரம் என்ன பயனுண்டாம் என்க.

பூ மிசைதல் என்று மேல் வருதல்நோக்கிப் பொழிந்து என்பதற்குத் தேன் பொழிந்து என்று பொருள் கூறப்பட்டது. மிசைதல் - உண்டல். தேர்வு - ரசம்.

260. கற்றுணர்ந்தவர்கள் சொல்லும் குற்றமற்ற நுண்ணிய கேள்வியினையுடைய உறுதிச் சொல்லைக் கீழாயினன் தன் மனத்தில் தரித்துக்கொள்ளாமல் தள்ளிவிடுதலால், தன்னைப்போலும் பிறிதொரு கீழாயினன் முகத்தைப் பார்த்துத் தானுமொருகூட்டங் கூடிக்கொண்டு அதிலே பிரியமாய்ப் பேசுவான் என்க.

(27) 'நன்றியில் செல்வ'மாவது தாம் ஈட்டிய செல்வத்தாலுள்ள அனுபவத்தைத் தாமே அறியாதாரிடத்துந் தம்முறவினருக்கு உதவாத பேதையாரிடத்தும் ஒன்றினை வேண்டிவந்தார்க்குக் கொடாதே துர்முகரா யிருப்பாரிடத்தும் நிற்கும் செல்வமாம் என்பது ஒரு பழைய உரை. அறிவின்மை காரணமாகவே செல்வம் நன்றி பயவாதொழிதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

261. குறைதலில்லாததாகிப் பழங்கள் மிகப் பழுத்திருந்தாலும் பொரிந்த அரையினையுடைய விளாமரத்தில் வௌவால் செல்லாததுபோலக் குணமிலாதார் மிக்க அணுமைக்கண் மெத்த ஐசுவரியமுடையராயிருந்தாலும் அவர் செல்வம் பெரியோர்களால் விரும்பப் படுவதொன் றன்று என்க. அருகுதல் - குறைதல்.

262. அள்ளிக்கொள்ளத் தக்கதாய குறிய மொட்டுக்களையுடையதாயினும், சூடும்பூவை விரும்புவோர் கள்ளியின் மேலே கைகளை நீட்டார் அது சூடுதற்குரிய பூவல்லாமையாலே; அதுபோலச் செல்வம் மெத்த உண்டாயிருந்தாலும் கீழ்மக்களை அறிவுடையார் குறுகார் என்க.

263. அனேகமான அலைகளையுடைய கடற்கரையிலே தாமிருந்தாலும் வலிதாகத் தண்ணீர் ஊறுவதும் உவரில்லாததுமான கிணற்று நீரிடத்துப்போய்ச் சாப்பிடுவார்கள்; அப்படிப்போலக் கொடாதவர்கள் ஐசுவரியவான்களாய்ச் சமீபத்திலேயிருந்தாலும் அவர்களை நத்தாமல் தூரத்திலே போயாகிலும் கொடுக்கிறவனிடத்திலே அறிவுடையவர் பொருளை வேண்டுவர் என்க.

264. அறிவுடையார் மிடித்திருக்க அறிவில்லாமல் வட்டுப் போலவும் வழுதுணங்காய் போலவும் இருக்கிறவர்கள் பட்டுப் புடவையும் நல்லபுடவையும் உடுத்து வாழ்ந்திருக்கிறபடியி னாலே பொருந்தின கடல்சூழ்ந்த பூமியிலே புண்ணியம் வேறுபட் டிருக்கும் என்க. வட்டுகறி முள்ளி; வழுதுணங்காய்-கத்தரிக்காய்.

265. நல்லவரும் நயத்தினை உணரத் தக்கவருமாய் இருப்ப வர் வறியராயிருக்க, நயமில்லாரும் கல்லாதவருமாயிருப்பார்க்குச் செல்வம் வருகைக்குக் காரணம் முன்செய்த வினைப்பயன் அல்லா மல் வேல்போலும் நீண்ட கண்களையுடையவளே ! இப்போது நினைத்து வருகின்றதொன்று அன்று என்க.

266. நல்ல செந்தாமரை மலர்மேல் உறையும் பாவை போன்ற மகாலக்ஷ்மியே! நீ பொன்போன்ற நல்ல மக்களைத் துறந்து அவரின் வேறான மணவாத புறவிதழ் போன்ற அற்ப மக்களிடம் புகுவாய்; அதற்குத்தொல்லை வினைப்பயனே காரண மாதலால், அந்நன்மக்களும் புன்மக்களும் இந்நிலத்துச் சாம்பராய் நசிக்கக்கடவர் என்க.

நன்மக்களையும் சேர நசிக்க என்றார், தர்ம காமங்களை ஆக்கிக் கோடற்கு ஆவசியகமான அர்த்தம் அவரிட மின்மையால். இனி, செல்வத்திற்கு முற்பிறப்பிலே தவம் செய்யாத பாபி ஒருவன் வறுமையுற்று வருந்திக் கூறும் கூற்றாக இப்பாடல் செய்யப்பட் டுள்ளதாகக் கொண்டு, வேறு பொருள் கூறி அபசாரப்படுவாரு முளர். கல்விக்குப்போலச் செல்வத்திற்கும் தவஞ் செய்யவேண்டு மென்று கீழ் 252 ஆம் பாடலிற் கூறப்பட்டிருத்தலின் யாம் கூறிய பொருளே பொருத்தமாதல் உணர்க. தகடு தன்னுள்ளே மணங்கம ழும் பூவை வைத்திருந்தும் மணத்தை அடையாததுபோல, தர்ம காமங்களுக்குரிய அர்த்தத்தை வைத்திருந்தும் புன்மக்கள் அவற் றினை அடைவதில்லை என்பது கருத்து. இனி, பாவைக்குத் தகட் டினை அடையாக்கின், அது தன் கர்ப்பத்திற் பூவினை வைத்துக் காத்து வெளிப்படுத்திருப்பதுபோலப் பல்லுயிரையும் காத்தீன்ற ஜகன்மாதாவான மகாலக்ஷ்மியே! என்க. நாறு என்பது குருதிக் கோட்டுக் குஞ்சரநக்ரம் என்புழிப்போல நின்றது. விளியர், வை தற்பொருளில் வந்த வியங்கோள்.

267. நயமுடையாரிடத்திலே யிருக்கிற வறுமைக்கு நாண மில்லையோ? ஒருவர்க்கும் பிரயோசனமில்லாதாரிடத்துள்ள செல் வமானது கல்லொடு கூட்டிய அவ்வரக்குப்போலப் பிரியாது நிற் கின்றதே! வேல்போலுங் கண்ணையுடைய மகாலக்ஷ்மியே! இந்த இரண்டும் நயந்தாராதே நீங்காமல் நிற்கின்ற இந்த அதிசயங் காணுயோ நீ என்க.

கொடாத லோபியிடத்திலே ஏற்று நிற்கிறபேர் படுகிற துக் கங்களைப் பாராமலிருக்கிறாயே என்றவாறு. 'திருக்குழாம் ஒண் செய்யாள் பார்த்துறின் உண்டாகும்' என்பவாதலால், மகாலக்ஷ்மி யைக்கடாக்ஷிக்குமாறு பிரார்த்தித்தது இப்பாடல் என்க. ஒருவர்க் கும் பிரயோசனமில்லாதாரிடத்து நிற்குஞ் செல்வம் ஏற்கிறவர்கள் பசி நோயைத் தணிக்கவில்லை என்பது ஒரு பழைய உரை.

பறம்பு - மலை; ஈண்டு, கல்லுக்கு ஆயிற்று. பயின் - அரக்கு; அரக்குங் கல்லுங் கூட்டிற்பிரியாது என்பதனை 'பயினொடு சேர்த் திய கற்போற் பிரியலம்' (அகம் 1) என்பதனால் அறிக.

268. நாணிலிகள் அல்லாதார் கால்நடையாக வழிநடந்து தூரதேசங்களுக்குச் சென்று இழிந்த கலவை யுணவுகளை உண்டு வருந்திக் காலங்கழிக்க, நாணிலிகளோ அப்படி வழிநடவாமல் தம் வீட்டிலே சுகமாக இருந்து, நெய்யும் பாலும் மேலே ஆறுபோல ஒழுகும்படி நல்ல உணவைக் கருனை முதலிய பொரிக் கறியோடு உண்டு மகிழ்வர் என்க.

வலவைகள் - நாணிலிகள்; வலவை களிடத்தே பெருஞ் செல்வந்தங்கி யிருத்தலும் மாண்புடையாரிடத்தே வறுமை தங்கி யிருத்தலும் பிரத்தியக்ஷமாம்.

வலவைகள் அல்லார் 'இட்டாற்றுப் பட்டு ஒன்று இரந்த வர்க்கு ஆற்றாது, முட்டாற்றுப்பட்டு முயன்று உள்ளூர் வாழ்தலின் நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைந்நீட்டும், கெட்டாற்று வாழ்க்கையே நன்று' என்று கொண்டு, காலாறு சென்று கலவை கள் உண்டு கழிப்பர் என்றார்.

நாணமில்லாதவர்கள் தூரதேசங்களிலே போய்க் கிடைத்த விடத்திலே சோறாகிலும் கூழாகிலும் உண்டு நாளைக்கழிப்பர்;

நாணமுடையவர்கள் தூரதேசங்களுக்குச்செல்லாராய் தம்முள்ளே அடங்கியிருந்து கிடைத்திருந்த மாத்திரஞ் சாப்பிட்டுத் தங்களுடம்பிலே வேர்வை வடிய வீட்டிலேயிருந்து வயிற்றை வளர்த்துக்கொண்டிருப்பர் என்பது ஒரு பழைய உரை.

269. பொன்னிறத்தினை யுடைய செந்நெல் கதிருடனே கருவும் வாட மின்னலுடனே விளங்காநின்ற மேகமானது கடலுக்குள்ளேயும் பெய்யும்; அதுபோலக் கொஞ்சமான அறிவுடையவர் 'பெரிய செல்வத்தைப் பெற்றால், தரித்திரருக்குக் கொடாமல் வலிமையினால் பறித்துக்கொண்டுபோகிற பேருக்கும் தன்னைப் போலே செல்வத்தைப் பெற்றவர்களுக்கும் கொடுப்பரென்க.

காற்றால் அலைப்புண்ட மேகம் தான் விரும்பாத விடத்திற் பெய்தலை நலிவார்க்குக் கயவ ரீதற்கு உவமையாகக் கொள்க.''ஈர்ங் கைவிதிரார் கயவர் கொடிறுடைக்குங் கூன்கையரல்லாதவர்க்கு'' என்றார் வள்ளுவனாரும்.

270. ஓதினாராயினும் ஓதாதவரோ டொப்பர் அறிவில்லாதார்; ஓதாதாராயினும் ஓதினவரோடு ஒப்பர் அறிவுடையவர்; மிகுந்த தரித்திரவான்களாயினும் ஒருவரைச்சென்று இரவாராகில் பரிசுத்தரான செல்வரோடொப்பர்; செல்வருங் கொடாராகில் தரித்திரரோடொப்பர் என்க.

'செல்வரெனினும் கொடாதவர்நல்கூர்ந்தார்; நல்கூர்ந்தக்கண்ணும் பெருமுத்தரையரே செல்வரைச்சென்றிரவாதார்' எனமேல் 294 ஆம் பாடலில் வந்துள்ளமையும் நோக்குக.

4. 'துன்பவியல்' லாவது, இன்ன இன்ன ஒழுக்கங்களால் துன்பமெய்தற்பால தெனக்கூறும் இயலாம். அஃது ஈயாமை, இன்மை, மானம், இரவச்சம் என்னும் நான்கு அதிகாரங்களாற் கூறப்படும்; அவற்றுள்,

(28) '''ஈயாமை'யாவது ஒரு பொருளைக் கண்டவிடத்து அதன் மேல் ஆசை செல்லுதலும், பொருள் கொடுக்கிற காரணமாகக் கோபமுண்டாதலும், பொருள் தனக்கு மெத்த வந்தவிடத்தும் ஆசையடங்காமையும்; ஒருவர்க்கு ஒன்

றைக்கொடுத்தால் அதில்குறைவுமென்று லோபத்தால்ஒரு வர்க்கு ஒன்றைக் கொடாமையுமாம்." இது நன்றியில் செல்வம்போலப் பிறர்க்குப் பயன்படாததொன்றாதலால், அதன்பின் இது வைக்கப்பட்டது

271. தம்முடன் சிநேகம் பண்ணின பேருக்கும் பண்ணாத பேருக்கும் தமக்குள்ள மாத்திரம் சமைத்த அமுதை அவர்களுக் குக் கொடுத்துத்தாமும் உண்டாராகில், அஃது இல்லறதர்மத்திற்கு அழகு. அஃதன்றிச் சமைத்ததை வைத்துக்கொண்டு ஒருவரையும் வரவொட்டாமல் கதவை அடைத்துக்கொண்டு தாம் மாத்திரம் உண்டு உயிர் வாழும் மறுமைக்கு உறுதியைச் செய்து கொள் ளாதவர்க்குச் சொர்க்கத்தின் கதவு அடைத்திருக்கும் என்க.

அடுதல் - சமைத்தல்; பிரமசாரி வானப்பிரத்தன், சந்நியாசி என்ற மூவரும் அட்டு உண்ணாதவராகையால், அட்டுண்டு வாழ் தல் இல்லறத்தார் தர்மமாயிற்று. அவர்க்கு விருந்தினர், பண்டை யறிவுண்மையிற் குறித்து வந்தாரும் அஃதின்மையிற் குறியாது வந்தாருமென இருவகையினராதலின் அவ்விருவரும் ஈண்டுக் கூறப்பட்டார். ஆவது - சொர்க்க மோக்ஷங்களுக்காவது. 'இல்லா விடத்தும் இயைந்த வளவினால் உள்ள விடம்போற் பெரிது உவந்து - மெல்லக் கொடையொடு பட்டகுணனுடை மாந்தர்க்கு அடையாவாம் ஆண்டைக் கதவு' என்பதும் நினைக்கத்தக்கது.

272. எவ்வளவானாலும் பொருந்தியவளவினால் கொஞ்சமாத் திரம் தர்மத்தைப் பண்ணினவர் தலைவராவர்; பெரிய செல்வங்கள் வந்தவிடத்தும் அறத்தைச் செய்யாது பின்னைச் செய்வோமென்று இருக்கிறபேர் கடுக இறந்தொழிந்து கடல்சூழ்ந்த உலகத்திலே பழி யாகிய கடலின் முழுகினார் என்க.

273. தான் தேடின பொருளை நன்றாக உண்டு கழியாமலும், துறந்தபேருக்குக் கொடுக்காமலும் அப்பொருளைச் சும்மாவைத்து இறந்துபோன அறிவில்லாதவனை அவன் தேடிவைத்துப்போன பொருளும் அவனைச் சிரிக்கும்; உலகத்திலே அருளுடையாரும் அவனைச் சிரிப்பார்கள் என்க.

பொருள் அவனைச் சிரித்தலாவது, கள்வர் முதலாயினரால் அது கவரப்பட்டு ஒழிய, உலகம் அவனைச் சிரித்தலாம்.

**274.** ஒருவர்க்கு ஒன்றைக் கொடுத்தலும் தானுண்டலும் தெளியாத குறுகிய நெஞ்சினையுடையவன் பெற்ற பெரியசெல்வம் தன் குடியிலே பிறந்த அழகிய கன்னியரைப் பக்குவ காலத்திலே பிறன் வந்து மணஞ்செய்து அனுபவிக்கிறது போல, கொடாதவன் செல்வமும் பிறனால் அனுபவிக்கப்படும் என்க.

**275.** அலை யெறிகிற பெருங் கடலைச்சேர்ந் திருந்தும் உலகத்தார் நீர்வற்றுகிற சிறிய கிணற்றிலூறுகிற ஊறலைத்தேடி உண்பார்; அதுபோல, மறுமைக்கு உறுதி யறியாதவர் ஐசுவரியத்திலும் அறிவுடையோரிடத்திலுள்ள மிக்க தரித்திரமே நல்லது என்க. மறுமைக்கு உறுதி அறியாதார் ஆக்கமாவது, பழிமலைந்து எய்திய ஆக்கம். சான்றோர்க்கு அவ்வாக்கத்தினும் நல்குரவே சிறந்ததென்றார், நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையுள்ள பழியை மேற்கோடல் அவர் சால்போடு இயையாமையின்.

**276.** என்னுடையது என்னுடையது என்று இருக்கிற அறிவில்லாதவன் தேடிவைத்த பொருளை யானும் என்னுடையது என்னுடையதென்றிருப்பேன்; தன தாயின் தான் ஒருவனுக்கும் ஒன்றையுங் கொடுக்கிலன்; தானு மநுபவிக்கிலன்; இவையிரண்டையும் யானும் செய்கின்றிலேன் அந்தப்பொருளை என்க.

**277.** ஒருவருக்கு ஒன்றைக்கொடாத செல்வரினும் தரித்திரர் பிழைத்தார்; அஃதெப்படி எனில், பொருளைப் புதைத்து வைத்தவிடத்தில் ஒருவன் எடுத்துப்போக அதனை இழந்தானென்ற சொல்லினையுந் தப்பினார். வருத்தப்பட்டு வந்தபொருளைக் காக்கிற கவலையுந் தப்பினார். புதைத்தற்குத் தோண்டுகிறதையும் தப்பினார்; இவர் பொருளுடையவரென்று பலவான்களாலே நோவக் கைபிணித்துக் கட்டியடிக்கப்படுகின்றதனையும் தப்பினார்; இப்படிப்பலவகையாலும் வருகிற துக்கங்களைத் தப்பினார் செல்வமிலாதார் என்க.

278. தான் தேடியபொருளைத்தான் உள்ளபொழுதே கொடுத்திலன். தன் தாயத்தார்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் அப்பொருள் உரித்தாயிருக்கின்றதாயினும், அவர் கொடுக்க வலியிலர்; தான்

இறப்பதன் முன்னரே தானே கொடுப்பானாயின் அந்தச் சுற்றத்தார் வேண்டாமென்று சொல்லார்; தானிறந்துபோனபின்பு அவர் அதனைச் செலவழிக்கிறபோது தான் வந்து வேண்டாமெனச் சொல்லான்; ஆதலால், கொடாமலிருக்கிற காரணம் யாது என்க

**279.** இரக்கின்றவர் கன்றைப்போலவும் கொடுக்கிறவர் பசுவைப்போலவும் உபாயத்தால் கொடுக்கிறதே ஒருவர்க்கு வண்மை யாவது; அந்த உபாயத்தை ஒழித்துப் பசுக்கறக்க வல்லவர்கள் அழுத்திவருத்தக் கறக்கும்போது சுரக்கும் பசுவைப்போலஆயுதங் கொண்டு உடம்பிலே நோவப் பண்ணுகிற பேருக்குக்கொடுக்கிறது கீழ்மக்கள் இயல்பாம் என்க.

இரவலரிடத்து வள்ளல்களுக்கு இயல்பாயுண்டாகிய வாத்ஸல்லியத்தை விளக்க அவரைக் கன்றாகவும் பசுவாகவும் உவமித்தார். 'கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால்சோர நனைத்தில்லஞ் சேறாக்கும்' என்றும், 'காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த பால்' என்றும் பயின்றுள்ளமை கொண்டு, கன்றுக்கு மனம் நெகிழ்ந்து சுரக்கும் இயல்பு எருமைக்கும் உண்டு என்பாருளராயின், அதற்குப் பசுவைப்போலக் கன்றிற்கு விரகிற் சுறக்கும் ஆற்றலில்லை என்க. விரகிற் சுரத்தலாவது, கறக்கிறவர்க்கு வேண்டிய வளவு பால்கொடுத்துஅவர் இனிப்பாலில்லை என்னும்படி வஞ்சனையால் மடியை வற்றவைத்து அவர் விட்டபிறகு தன் கன்றுக்குத் தான் ஒளித்துவைத்திருந்த பாலைக்கொடுத்தல். வள்ளல்கள் தெய்வத்தால் தாழ்வுற்று ஒன்று மிலராயவிடத்தும் வறியவர்க்குச் சிறிதாயினும் கொடுப்பர் என்பது கருத்து. இது, தன் தம்பியால் நாடுகொள்ளப் பட்டுக்காடுபற்றியிருந்த குமணன் பெருந்தலைச்சாத்தனார்க்கு வாள் கொடுத்ததுபோன்ற பெருவண்மையாம். கீழ்களோ, "கரும்பு போல் கொல்லப் பயன்படும்" என்க.

280. பொருளைத் தேடுதலுந் துன்பம் அங்ஙனம் துக்கப்பட்டுத் தேடின பொருளைக் களவுபோகாமற் காக்கிறது மிகவுந் துன்பம், காத்த பொருள் சிறிது குறையுமாயினுந் துன்பம், அந்தப் பொருள் கெட்டுப்போனாலுந் துன்பம், ஆதலால் துன்பத்துக்கெல்லாம் இருப்பிடமாயிருக்கும் இந்தப்பொருள் என்க.

இப்படித் துன்பத்திற்குக் காரணமாயிருக்கிற பொருளைப் புதைத்துவையாமற் கொடுக்கவேணு மென்பது கருத்து.

(29) 'இன்மை' யாவது உலகத்துள்ள மனுஷ்யரால் எண்ணப் படாமற் செய்வதும், பசிபிணிக ளுண்டாக்குகிறதும், இன்பங்களை அனுபவியாமற்புரிவது,பிறராலிகழப்படுவது மான வறுமையாம். இது முற் பிறப்பிற் பிறர்க்கு ஈயா தார்க்கே வந்து எய்துவது ஒன்றாதலின் ஈயாமையின் பின் வைக்கப்பட்டது. 'உம்மைக் கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத் தடாஅ அடுப்பினவர்' என்பதனால் முற்பிறப்பிற் கொடாதவரே இப்பிறப்பில் வறியராய்ப் பிறப்ப ரென்பதனை அறிக.

281. துவர் ஊட்டிய புடைவைகளை யுடுத்துக்கொண்டு திரிந் தாராயினும் பத்தாக எட்டாக ஒரு சிறு பொருளுடையராயிருந் தால், எல்லாருடனேயும் சரியாக வைத்தெண்ணப்படுவார்கள். தங்களுக்கு எல்லா வழியாலும் ஒத்திருக்கும் நல்ல குடியிலே பிறந்தாராயினும் தரித்திராயிருந்தால் அவர்கள் செத்த பிணத் திலும் கடையாக வைத்து எண்ணப்படுவார்கள் என்க.

பொன் வெள்ளி முதலிய உலோகங்களைச் சந்நியாசிகள் ஸ்பரிசித்தலுங் கூடாதென அறநூல் விதியுண்டேனும், அவ் விதியைக் கடந்து பொருள் வைத்திருந்தாரே மதிக்கப்படுவார் என்றமையால் உம்மை இழிவு சிறப்பு. மற்ற மூன்று ஆச்சிரமத் தினரும் கண்டமாத்திரத்திற் றொழத்தக்க இறப்பச் சிறந்த சந்நி யாசிகட்கும் இன்மை தீதெனக் கூறிய முகத்தானே அதன் இழி வைப் புலப்படுத்தினாராயிற்று. அத்து - சிவப்பு பத்து எட்டு என் பன அப்பொருளுக்கு ஆகு பெயர். பாடு பெருமை.

282. நீரைப் பார்க்கிலும் இலேசானது நெய்யென்று சொல்லுவார்கள். நெய்யைப்பார்க்கிலும் புகை இலேசென்பது எல்லாரும் அறிந்தது. ஆராயுங்காலத்து இரப்பென்னும் துன்ப முடையவன் சென்று புகும் புகையும் புகுதற்கரிய வாயிலை நுழைந்து என்க. இரப்பவன் மிகவும் அற்பமென்பது கருத்து. நிரப்பிடும்பை என்று கண்ணழித்து, பொருள் தேடுகிற துன்பம்

எனலுமாம். நிரப்பு இப்பொருட்டு ஆதலை 'நிரப்பிடும்பை. பல் பெண்டிராளனறியும்' என்புழியுங் காண்க. (நான்மணி 96)

283. கொல்லைப்புனத்திலே கிளிகளைக் கல்லினைக்கொண்டு ஓட்டும் காட்டையுடைய நாடனே! ஓங்கியகல்லையுடைய மலையின் மேலே காந்தட்பூ மலராக்காலத்து, சிவந்த கால்களையுடைய வண் டினங்கள் போகாவாகும். அதுபோல வறுமை யுற்றபேருக்கு உற வின் முறையா ரில்லை என்க. பொறி, ஈண்டுப் பாதத்தினை உணர்த்திற்று.

284. சரீரத்தைவிட்டுச் சீவனுடைந்து போயினவிடத்து அப்பிணத்தைக் காக்கைகள் கொத்தவந்து கூடினாற்போல ஒரு வர்க்குச் செல்வமுள்ள காலத்து அனேகம்பேர் அடிமையாய் வரு வார்கள். பிறகு அந்தச் செல்வங் கெட்டுப்போய்த் தரித்திரம் வந்து, வண்டுகள்போலப் பல திக்குகளிலும் சென்று, பெற்ற உணவுகளை உண்டு அவாகள் திரியுங்காலத்து அவரைக்கண்டு மிடி யாலே துன்பமற்றீரோவென்று வினவுவார் இவ்வுலகத்திலில்லை என்க. தொண்டாயிரவர் - ஒன்பதினாயிரம்பேர் எனலுமாம்; தொண்டு-ஒன்பது(மலைபடு. 21). உடைந்துழீஇ என்றும் பாடம்.

285. ஓசையையுடைய அருவி கல்லின் மேற்புறத்தைக் கழுவுகிற கூட்டமான மலைகளையுடைய நாடனே! வறுமையுடை யவர்க்குப் பிறந்த குலங் கெடும்; பெரிதாகிய ஆண்மைத்தனமும் கெடும்; சிறப்புடைத்தான கல்வியுங் கெடும் என்க.

286. உள்ளே மிகுகின்ற பசியினாலே தம்மிடத்தில் ஒன் றை விரும்பிவந்தவர்களுக்கு உள்ளூரிலேயிருந்தும் ஒன்றை உதவ மாட்டாதவன் உள்ளூரிலேயிருந்து ஒரு பயனுமில்லாமல் தன் வாழ்நாளைக் கழியாமல், தான் தூர தேசங்களிலேபோய் ஊர் தோறும் புதியனாய்த் திரிந்து உயிர் வாழ்தலே நன்று என்க.

287. தம்முடைய நயமான ஒழுக்கத்தையே யல்லாமல் நிரம்பி எழுந்த அறிவையுஞ் சேர இழந்துவிடுவர்; கூர்மையா யிருக்கிற முல்லையரும்பைத் தமக்குச் சரியில்லையென்று வருத்து கின்ற பற்களையுடையவளே! நாடோறுந் தம்முடைய குடும்பத் துக்கு வேண்டுவதை அன்றன்று தேடிக்கொண்டுவந்து சேர்க் கின்ற துக்கத்தையுடையவர் என்க.

288. இல்லிலேயிருந்து வாழ்கிறவிடத்துப் பொருள்குறுகி இரக்கிறவர்களுக்கு ஒன்றைக் கொடுக்க இயலாமல் முட்டியவழித் தன்னுடைய முயற்சி யுற்சாகங்களினாலேயும் ஒன்றுமாகாமல் உள்ளூரிலேயிருந்து வாழ்கிறதிலும் தூரதேசங்களிலே போய்வீடுகடோறும்புகுந்து கையேற்கிற கெடுவழி வாழ்க்கையே நன்று என்க.

இட்டாறு - குறுகியவழி. கீழ் 286 ஆம் பாட்டில் இல்லறத்தானாகஇருந்தே வேற்றூர்சென்று இரத்தல் நல்லது என்றார்: இப்பாடலில் துறவியாகி இரத்தல் நன்று என்றார்.

289. முன்பு தாம் செல்வத்துக்குப் பண்ணின தவம் மாண்டகாலத்து வறியராய் வருந்தி, கடகங்களை இட்டிருந்த கைகளினாலே இலைக்கறி பறித்தற்குத் தூற்றினைப்பிடித்து வளைத்து, அந்த இலைக்கறியைப் பறித்துவந்து வேக வைத்து, பனங்குடலையே கலமாகக் கொண்டு உப்பில்லாமல் வெந்த இலைக்கறியைத்தின்று மனங்குறைந்து வாழ்வார் என்க.

290. நல்ல நீர்மையினையுடைய அருவிகள் ஒருகாலத்தும் அறாமல் மிகுகிற சிறப்பினையுடைய குளிர்ந்தமலைநாடனே! புள்ளிகளையுடைய அழகிய வண்டுகள் ஒருகாலத்துப் பூத்துத் தம்மிடத்துள்ள தேனை அருந்தச்செய்து இப்போது மாறிப்போன கொம்பின்மேற் போகாது; அதுபோல ஐசுவரியம் குறைந்தாருக்கு உறவின் முறையார் இல்லை என்க.

ஆர்த்த - நுகர்வித்த, 'வருநிதி பிறர்க்கார்த்தும் மாசாத்துவான்' என்புழிப் போல (சிலப். மங்கல. 33) இதற்குக் 'கால் கை சிறகுகளை விரித்துக்கொண்டு திரிகிற' என்பது ஒரு பழையவுரை.

(30) 'மான'மாவது எவ்விடத்திலும் தன் குடிக்கேற்ற ஒழுக்கஞ்சிதையாமற்காத்தொழுகுதலும், அவ்வொழுக்கத்துக்கு அழிவுவரின் தன் பிராணனைவிட்டு அதை ரக்ஷித்தலுமாம். 'சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு' என்ப ஆகலின், இஃது இன்மையின்பின் வைக்கப்பட்டது.

291. தமது செல்வ பலத்தால் திறமையில்லாதார் செய்கின்ற பெரிய ஆரவாரத்தினைக் கண்டவிடத்தும், எரிந்து மண்டிக் காடு தீப்பட்டாற்போல வேகாநிற்கும் மானமுடையார் மனம் என்க.

292. தம்முடைய வறுமையைச் சொல்லுவதன் முன்னரே அறிந்து அவ்வறுமையைத் தீர்க்கவல்ல இயல்புடையார்க்குந் தாம் பட்ட வறுமையைச் சொல்லாத தம் நெஞ்சத்தைத் தமக்கு உரித்தாகப் பெற்ற மானமுடையவர் பசிநோயால் எலும்பு தோன்ற ஊன் கெடினும் பண்பிலாதார் பின்சென்று, தமது வறுமை தோன்றச் சொல்வரோ என்க.

முன்னையதான ஓகாரம் எதிர்மறை; பின்னையது இரக்கக் குறிப்பு. தம் வறுமையை ஒருவருக்குஞ் சொல்லார் என்பது ஒரு பழைய உரை.

293. ஐசுவரியவான்கள் வந்தால் நம்முடைய மனையிற் கொண்டு புகுந்து, நம்மாலேயான உபசாரங்களைச் செய்வோம்; அந்தச் செல்வமுடையாரிடத்திலே நாம் போனால், நம்மைத் தம்முடைய மனையினுட் கொண்டு புகுந்தால் தம்முடைய மனையாள் காணில் அவள் கற்பழியும் என்பார் போல நாணிச் சோற்றைப் புறங்கடையில் வைத்து இடுவராதலால் செல்வருடைய உறவை மறந்திடுக என்க.

294. இப்பிறப்பினையும் நன்றாக்கும்; இறந்துபோன பிறகு பூமியிலே தன் கீர்த்தியையும் அழியவிடாது; மறுமைக்கு நன்மையினையும் விளைப்பிக்கும்; வெறுப்பில்லாமல் புழுகுமணவா நின்ற மயிரினையுடையாய்! மானமுடையோரால் மதிக்கப்பட்ட நடக்கை ஒருவர்க்கு மிகவும் நன்று என்க.

இயலுதல் - உலாவுதல்; ஈண்டுப் புகழுடம்பு உலாவுதல்; இயல்நெறி - இயலுதற்கான வழி என்க. மதிப்பு, மதிப்புக்கு ஏதுவாகிய நடக்கையை உணர்த்தினமையால் ஆகுபெயர். அது, பெருஞ்சித்திரனார் தமக்கு வெளிமான் தம்பி சிறிது ஈயவர, அதனைக் கொள்ளாது வெறுத்துப் போய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடுகள் கொடுப்பக் கொணர்ந்துநின்று, வெளிமானூர்க் கடிமரத்து யாத்து, 'நின்னூர்க் கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த நெடுநல் யானை எம்பரிசில்' (புறம் 162) என்றதும், தம் மனைவியை நோக்கி, 'நின்னயந்துறைநர்க்கும் நீ நயந்துறைநர்க்கும், பன்மாண் கற்பினின் கிளைமுதலோர்க்கும், கடும்பின்

கடும்பசி தீர யாழ நின் நெடுங்குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும், இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது, வல்லாங்கு வாழ் தும் என்னாது நீயும் எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே' (டை 163) என்றதும் போல்வது.

**295.** பாவமேயன்றிப் பழிப்பு வசனங்களு முண்டாகத் தக்க காரியங்களைத் தாங்கள் சாகவரினும் சான்றவர் செய்யார்; சாவுதுதான் ஒருவர்க்கு ஒருநாளில் கணப்பொழுதைத் துன்பமே யல்லாமல் அந்தப் பாவமும் பழியும்போல எப்பொழுதும் உளதாய குற்றங்களைச் செய்யமாட்டாது என்க.

'பிராணனைவிட்டாலும் மானத்தைக் காக்கவேண்டும்' என் பது ஒரு பழைய உரை. அருநவை - தீராத குற்றம்.

**296.** வளப்பத்தையுடைய பெரிய பூமியில் உயிர் வாழ்பவ ரெல்லாருள்ளும் செல்வராயினும் ஒருவர்க்கு ஒன்றைக் கொடாத வர் தரித்திரரேயாவர்; வறுமை வந்தவிடத்தும் பெரிய முத்தரை யர்போன்ற செல்வரோடொப்பார் செல்வரை யடைந்து இரந்து உயிர்வாழாதார் என்க.

ஒருவர்க்கு ஒன்றனைக் கொடாமைக்குக் காரணம் ஆசையாத லாலும், அவ்வாசை 'நல்குரவு என்னும் நசை' (குறள் 1043) என் றபடி நல்குரவாதலாலும், கொடாதவரை நல்கூர்ந்தாரென்றார். 'வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை' என்பது பொய்யாமொழியாதலால், ஒருவரிடத்து ஒன்றினை வேண்டாத வரைச் செல்வரென்றார். கீழ் 270 ஆம் பாடலிலும் நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார்; செல்வரும் நல்கூர்ந்தார் ஈயாரெனின் என்று கூறப்பட்டது நோக்குக.

**297.** கடையானவரெல்லாரும் மானத்தினும் காயும் பசிக் கஞ்சுவர்; இடையானவரெல்லாரும் அதனினும் சாவுக்கஞ்சுவர்; விற்போலும் வளைந்த புருவத்தின்கீழ் வேல்போலும் நீண்ட கண் களையுடையவளே! தலையானவரெல்லாம் உலகம் சொல்லும் பழிப்புரைக்கே அஞ்சி விடுவர் என்க.

'சாதலின் இன்னாததில்லை' என்பவாகலின், ஈண்டு இன்னா மையைச் சாதலென்றார். மானங் கெடவருங் காலத்து அத்

ணிலும் பசியை அதிகமாகக் கொள்ளுவர் கடையாயினர், அதனைப்பொறுத்தாராயினும் பிராணனை அதிகமாக நினைப்பர் இடையாயினர். மானத்தையே முதன்மையாக நினைத்து உயிரைவிடுவர் தலையாயினர் என்பது கருத்து. 'தனக்கு ஒவ்வாச் சொற்பட்டாற் சாவதாம் சால்பு' என்றார் பிறரும் (நான்மணி 4).

298. 'இவர் நல்லவர், மிகவும் இரங்கத்தக்கவர், இப்பொழுது தரித்திரராயினர்' என்று இகழ்ந்து செல்வராயினர் கொஞ்சமாகப் பார்க்கிற காலத்திலே கருமானுடைய உலை ஊதுகிற தீயைப் போல உள்ளே வேகாநிற்கும் தலைமையுடைய சான்றோர் மனம் என்க. சிறுநோக்காவது, சிறுமைதோன்ற நோக்குவது.

299. தம்மை விரும்பிவந்தவர்க்கு ஒன்றைக்கொடாதிருப்பது நாணமன்று; எல்லாநாளும் பயத்தினாலேவருகிற நாணமும் நாணமன்று; தன்னை எளியவனாகவைத்துக் குடிப்பிறப்பாலும் ஒழுக்கத்தாலுந் தன்னிலும் மேலானவர்கள் செய்ததைச் சொல்லாதிருப்பதே நாணம் என்பது ஒரு பழைய உரை.

300. கடமானைக் கொன்ற காட்டிலுறை வேங்கைப் புலியானது அந்தக் கடமான் இடப்பக்கம் கீழாக விழுந்ததானால், அதனைத் தின்னுமற் போய்விடும்; அதுபோலப் பெரியோர்கள் விரிந்த ஆகாசம் கவித்த உலகமெல்லாம் பெறினும் மான மழிய வந்தாகில் அதனை விரும்பார்கள் என்க.

'தொடங்கு வினைதவிரா அசைவில் நோன்றாட், கிடந்துயிர் மறுகுவதாயினும் இடம்படின் வீழ்களிறு மிசையாப் புலி' (அகம்29) என்பதனால் புலியின் அத்தகைய மானத்தைஅறிக.

(31)'இரவச்ச' மாவது வறுமையுற்றா ரொருவரை அவ்வறுமை தானே தள்ளிக்கொண்டுபோய் இரப்பிக்கும்பொழுது, தங்கள் பிரகாசமெல்லாம் அடங்கி, கண்கள் குழிந்து, கடுகப் பேசவுங் கூடாமல் ஒடுங்கி, தாம் அறிந்த தர்மங்களை மதுரமாகச் சொல்லித் தமது வறுமையைப் புலப்படுத்துங்காலத்து ஐசுவரியவான்கள் அதனைச் செவியிலே ஏற்காது அவரை எளியாராக நினைத்துக் கடைக்கணித்தலையும், கொடுப்பாரைப்போலே யிருந்து, பிறகு ஒன்றுமில்லையெனவே, பெருமூச்செறிந்து செயலற்றுப்போகும் போக்கையுங் கண்டு, அந்த இரப்பினை அஞ்சுதலாம்.

மானமுடையாரே இரவினை அஞ்சுவ ராதலால் இஃது, அதன் பின் வைக்கப்பட்டது.

**301.** ‘இந்த வறுவியார் நம்மாலே ஆகின்றாரல்லது எந்த நாளும் இவர் தம்மாலே நாம் ஆகும்படியான ஒரு காரியமுமுடைய ரல்லர்’ என்று தம்மை மயங்க நினைத்த மனத்தினையுடையார்பின் தெரிந்த அறிவினையுடையார் செல்லக்கடவரோ என்க.

மயங்க நினைத்தலாவது ‘செல்வம் சகடக்கால் போலவரு’ வதனைச் செருக்கால் நினையாமை. ‘தெருண்ட வறிவினவர்’ என்புழி இன்சாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது.

**302.** இழிவான காரியங்களைச் செய்து தமதுமனம் சந்தோஷப்பட நன்றாய் நிறைய உண்கின்றதிலும் பழிக்கத்தக்க காரியங்களைச் செய்யாமல் பசித்தல் ஒருவர்க்குக் குற்றமோ? கண்இமைத்து விழிக்கிற மாத்திரமாயிருக்கும் ஒருவன் இறந்துபிறக்கிறது என்க

‘அப்படிப்பட்ட பிறப்புக்காக இழிவான காரியங்களைச் செய்யாமல் நல்ல காரியங்களைச் செய்யவேணுமென்பது கருத்து.’

இழி, பழி, முதனிலைத் தொழிற்பெயர்கள். இழித்தற்கு பழித் தற்கு என்க. அழித்து, இவ்வுடலை யழித்து எனலுமாம்.

**303.** வறுமையினாலே இரக்கத் துணிந்து இரவாமலிருப் பாருமில்லை. அப்படி இரந்துகொண்டு திரிந்தாலும் சிறிதுதூரத்தி லேயே எதிரேவந்து தழுவிக்கொண்டு வீட்டுக்கு வாருமென்று கூட அழைத்துக்கொண்டுபோய் உண்ணுமென்று உபசரிப்பாரு மில்லை; அப்படி உபசரித்தாரிடத் தல்லது சாப்பிடச் சம்மதியார் மேலானபெரியோர்கள் என்க.

“உலகத்தில் இப்படிச் செய்வா ரில்லாமையால், இரப்பினை அஞ்சக்கடவன்” என்பது ஒரு பழைய உரை. முகம் - அதிதி யானவன் உள்ளே நுழைதற்கு இடமாகிய இல்லத்தான் நோக்கு; புகுதல் - அவ் இல்லத்தான் நோக்கிய அந்நோக்கெதிர் சென்று புகுதல்; முகம் புகுதல் என்பது இல்லத்தான் முகனமர்ந்து நோக்க, அந்நோக்கினுக்கு எதிர்சென்று புகுதல்

304. மகாலக்ஷ்மி தன்னை விட்டு நீங்கினாலும் தெய்வங் கோபித்துக் கொண்டாலும் செல்வர்பாற் சென்று இர என்னும் நெஞ்சத்தைக் கோபித்துக்கொண்ட மனத்தினனாய், இரவாமை யாகிய உயர்ந்த ஒழுக்கத்தை நினைக்கினல்லது பொருளைத்தேடிப் புதைத்து வைக்கும் அறிவில்லார் பின்சென்று எனக்கு இல்லை யென்று அவர்கள் முகம்பார்க்கத் தாம் நாணிக் கழுத்தை வளைத்துக் கொண்டு நில்லார் மேலாயினார் என்க.

305. ஒளியாத உறுதியான நயையுடைய கண்களைப்போல் வாரிடத்தும் இரவாமல் உயிர்வாழ்வதே ஒருவருக்கு வாழ்க்கையா வது; இரக்கக்கடவேன் என்னும் நினைப்பினுள்ளும் ஒருவர்க்கு நெஞ்சு வெந்து உருகாநிற்கும். ஆதலால், இரக்கிறவன் மனம் எப்படி இருக்கும் என்க.

'கரவாது உவந்தீயும் கண்ணனார் கண்ணும் இரவாமைகோடி யுறும்' என்றும் 'இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள, உள்ள தூஉம் இன்றிக்கெடும்' என்றும் கூறினர் பொய்யில் புலவர் என்க.

306. தமக்கு இன்னாமையான பொல்லாததே பொருந்தக்க டவது, நல்லதே பொருந்தாம விருக்கக்கடவது என்று சொல்லித் தன் நெஞ்சினைத் தானே இரக்க ஆசை நீங்கிவிடுதலால், பொருண் மேற் காதலையுடைய மனத்தினாலே துன்பமிகுத்துக் கண்ணுங் குழிந்து அன்னியர் பக்கற்சென்று இரக்குமிரப்பு என்ன காரணந் தான் என்க. காதல்கவற்றல் - காதலால்வருத்தல்.

307. மலையின் அகலமெல்லாம் பொன்னைக்கொழித்து விழு கிறஅருவியினையுடைய மலைநாடனே! இந்த உலகத்திலே எந்நா ளும் முன்பு பிறந்தவர்கள் வடிவல்லாமல் பலரும் புதியவர்களாய்ப் பிறந்தாலும் இரக்கிறவர்களை இகழ்ந்து பேசாதவனே என்றும் பிற வாதவன் என்க. எல்லாரும் இரப்பவர்களை இகழ்வதால், இகழாதவனே உத்தமபுருஷன் என்பதும், அவனே மோக்ஷமடை தற்கு உரியான் என்பதும் கருத்து. மகன் - உத்தம புருஷன். 'மகனே தோழி என்றனள்' (அகம். 48) என்புழியும் காண்க.

'இல்லெனக்கு ஈக என்பவனை நகுவான்......யாதும் கடைப் பிடியாதா'ன் என்றார் பிறரும் (திரிக. 75).

**308.** தன்னுடைய வறுமை தன் மேனியை அழிக்கத் தன் னெஞ்சினுள்ளே நல்லறிவினைக் கெடுத்து, அறிவில்லாமையை நிறுத்திக்கொண்டு, ஒருவரிடத்திலேபோய் எனக்கு யாதானு மொன்றனைத் தரவேணுமென்று இரக்க இரக்கப்பட்டவன் இல்லையென்று மறுத்தானாகில் தான் சாகாமலிருப்பனோ என்க.

"இரப்பவர் சொல்லாடப் போஒம் உயிர்" என்றார் வள்ளுவ னாரும். மாற்றுதல் - மறுத்தல்.

**309.** "ஒருவர் ஒருவரைச் சேர்ந்தால் அவர் நினைவின்படியே ஒழுகவல்லராய் மனங்கொள்ள நடந்துபோவதல்லது பெருமை கெட்டு எமக்கு யாதானும் சிறிது தந்து உதவி செய்யமாட்டீரோ என்று சொல்லுஞ் சொல்லைப்பார்க்கிலும் மெள்ளத் தான் துறந்து போய்த் தவம்பண்ணும் நல்லவழி இன்றோ" என்க.

மேற்பாடலில் இரத்தலினும் இறத்தல் சாலுமென்றார், இப் பாடலில் துறத்தல் சாலுமென்றார். ஏகாரம் எதிர்மறை. வறுமை யால் ஒடுங்கிஒழுகும் வாழ்க்கை என்றுமாம்.

**310.** பழைய நட்பே காரணமாக ஒருவர் தம்பால் விரும்பி வந்தவிடத்து அப்பழைமைக்குப் பொருத்தமாக யாதானும் ஓர் உதவியைத் தாம்செய்க; அவ்வாறன்றி அவ்வுரிமையினாலே வந்த அவரை இவர்தாங்கி உதவிசெய்யாரெனில், வந்தடைந்தவர் தம் நெஞ்சத்தில் மூட்டப்பட்டு அணையாமல் நின்று சுடுகின்ற நெருப்பு அது ஆகும் என்க.

கந்து - பற்றுக்கோடு. பசைதல் - விரும்புதல். கிழமை - உரி மை. பொத்துதல் - மூட்டுதல். பொறுத்தல் - தாங்குதல், ரக்ஷித் தல். கிழமை அவர் பொறாரென்னின் என்று கூட்டுக. இது பாஞ்சாலனான துருபதன் துரோணாசாரியன் கிழமையைப் பொறாது எள்ளியபோது, அத்துரோணாசாரியனுக்கு உண்டான மனக்கொதிப்புப் போன்றதொன்று.

'பழைய உறவே காரணமாகத் தாமும் அவரும் கலந்து நடந்த முறைமையினைக் கொண்டு, அவ்வுறவினாலே அவரை வினவாமல் ஒன்றைச்செய்தால், அப்படிச்செய்த காரியத்தை அவர்

பொருளாகில், தன் நெஞ்சிலே மூட்டப்பட்டு ஆறுமல் இருந்து கொண்டு சுடுகிறநெருப்பல்லவோ' என்பது ஒரு பழைய உரை.

5. 'பொதுவிய' லாவது, அரசியல் முதலாக முற்கூறிய வியல்களுக்கும் பகையியல் முதலாகப் பிற்கூறும் இயல்களுக்கும் பொதுவாகிய இயலாம்.

(32) 'அவையறித' லாவது கற்ற அறிவினையுடையவர் திரட்சியை அறிதல்; 'அஃதாவது உலகத்துக்குப் பொதுப்பட வழங்கும் நூல்களைக்கற்றுணர்ந்தாரும் தங்கள் தங்கள் சமய நூல்களைமாத்திரம் கற்றுணர்ந்தாரும், எல்லா நூல்களையு முட்புகுந்து உண்மையான பொருள்களை உணர்ந்தாரும், பலகற்றும் ஒன்றனையும் சொல்லாமலடங்கி யிருப்பாரும் கூடியுள்ள சபையிற் போய், தான் ஒன்றனைச்சொன்னல் அது வெல்லும் தோற்கும் என்று அறிந்து சொல்லுதலாம். இரவினை அஞ்சுவான் கல்விமுகத்தால் அரசன் பாற் பரிசு பெற்றுவாழ முயலும்போது அவ் அரசனோடிருந்த அவையினது இயல்பின் அறிதல் இன்றியமையாத தொன்றாக லின் இஃது இரவச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

311. உண்மையான ஞான நூல்களைக் கற்றவருடைய ஸபையிலே கலந்திருப்பதனைத் தவிர்ந்து, அவ்விடத்திலே ஞான மில்லாதபொருளைக் கொண்டுவந்து அவற்றினை மிகவும் பரக்கப் பேசித் தாம் சொன்ன அற்பப்பொருளையேகைக்கொண்டு ஒழுகும் மயக்கமான அறிவுடையார் முன் சான்றோர் தம்முடைய நல்ல ஞான உபதேசங்களைச் சொல்லாமல் நழுவ விடக்கடவர் என்க.

கோட்டி - ஸ்பை. உறழ்தல் - கலத்தல். கை - சிறுமை. இருள் என்னும் பொருள்தரும் கார் என்னுஞ் சொல் ஈண்டு மயக் கத்தை உணர்த்திற்று. 'வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்' என்றார் பெரியாரும்.

312. தன்னுடைய நாவுக் கிசைந்த பாடங்களைச் சொல்லி நூலின் நயத்தினை உணர்வார்போல நடித்துச் சம்பிரதாயமல்லாத பொருளை அந்நூற்குட் புகவிடும் வஞ்சகரான பொய்ப்புலவனை ஸபையிலே கற்றடங்கிய உண்மைப்புலவர் அணுகார்; அவ்வாறு

அணுகினால் அத்தீப்புலவன் அச்சபையிலே அவ்வணுகியார்குடியைச் சீர்குறையும்படி பழிக்கும்; அல்லது தன் தோள்களைத் தட்டிக்கொண்டு சண்டைக்கு எழுந்திருக்கும் என்க.

அணுகினால் என்பது அவாய் நிலையான் வந்தது. நாப்பாடம், செவியேறக் கற்றபாடம் என்பது ஒரு பழைய உரை.

**313.** தாம் சொன்னவழியையே பிடித்துக்கொண்டு, தம் நா சுனையெடுத்தாற்போல அதனையே பலகாலும் சொல்ல விரும்புவாரும், பிறர் கற்ற கல்வியின் அளவையாவது அவர் மற்றையோர் மனங்கொள்ளும் வண்ணம் பொருளை விரித்துரைக்கும் வல்லபத்தையாவது தெளிய அறியாரும், தாம் கற்ற சில விஷயங்களைப் பிறர்மனம் கொள்ளும்படி உரைக்கும் வழியை அறியாரும், இவற்றைச் சொல்லின் நாம் தோற்பது நிச்சயம் என்பதனை அறியாராய் மாபில்லாதன பலவற்றை உரைப்பாருமான மாந்தர் பலர் உண்டு என்க.

'சொற்றஆறு என்பது சொற்றாறு என்று அகரம் தொகுத்து, ஆறு கொண்டு என்பது ஆற்றுக்கொண்டு என்று வ்லிமிக்கு, 'சொற்றாற்றுக்கொண்டு' என்றாயிற்று. கற்ற ஆற்றல் என்றும் கற்றவன்மை யென்றும் கொள்ளப்பட்டது. சொல் தாறு என்று கொண்டு, சொல்லாகிய தாறு எனவும் ஆம். தாறு, யானை கன்னை முதலியவற்றைத் குத்தி ஓடச்செய்யும் முட்கோல்.

**314.** நல் ஆசிரியனிடத்துப் பொருள் விளங்க அறிந்த பாடத்தால் அல்லாமல் பேதையானவன் தான் பள்ளியிலே அபத்தமாகக் கற்ற பாடத்தால் ஒரு சூத்திரத்தைக் கற்றுக்கொண்டு அதனை நல்லறிவுடையோர் நடுவிலே புகுந்து கூசாமற் சொல்லித் தன்னுடைய புல்லறிவினைத் தெரிய அறிவித்துவிடும் என்க.

கணக்கு - ஆயர், கணக்காயர் என்றாயிற்று; கணக்கு நெடுங்கணக்கு எனப்படும் அரிச்சுவடி; ஆயர், ஆயத்தை உடையவர்; ஆயம் ஆவது கூட்டம்; எண்டுச் சிறுபிள்ளைகளின் கூட்டம்; சிறுபிள்ளைகளைக் கூட்டமாக வைத்துக்கொண்டு அரிச்சுவடி கற்பிக்கும் உபாத்தியாயர் என்பது கணக்காயர் என்பதன் பொருள்; இவ்வுபாத்தியாயர் பால் இளமையில் வழுப்படக் கற்ற பாடம்

என்க. பேதை நாணுது சொல்லுதல், 'ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்'கிஞல்.

315. தாம் வெல்லுகிறது காரணமாக விலங்குகளைப்போல உண்மைப்பொருளை மனத்துக்கொள்ளாமல் வெம்பிக் கொதித்து எழுந்து எரிந்துவிழுவாரோடு எதிர்த்துத் தமது சொல்லின் சதுரப்பாட்டினைக் கொண்டு செல்கின்றவர் தம்கையில் அவர்களால் அறைந்து உதிர்க்கப்பட்ட தம் பல்லைச் சுரையின் விதைபோன்று காண்பர் என்க.

ஒன்றுதல் - எதிர்த்து நெருங்குதல்; வித்தகம் - சதுரப்பாடு. பல்லுதிர அறையப்படுவர் என்பது கருத்து.

316. சுத்த பாடத்தைக் கற்று, அதன் பயனைத் தெளிய அறியமாட்டாத மூடர் வெறுக்கத் தக்கனவற்றைச் சொல்லும் போது, அழியாத சீர்மையினையுடைய சான்றோர். 'இப்படிக் கொத்த பிள்ளைகளைப் பெற்றவள் என்னபாவஞ் செய்தாளோ!' என்று மிக வருந்தித் தாமும் இப்புல்லிய சொற்களைக் கேட்டலாற் நாணி மௌனமாய் நிற்பர் என்க.

தேடருஞ்சீர் என்றும் பாடம். 'சான்றேனெனக் கேட்ட தாய்' 'ஈன்ற பொழுதிற் பெரிது உவ'த்தலால், மூடனெனக் கேட்ட தாய் 'குழவிஇறப்பினும் ஊன்தடிபிறப்பினும்' நலமன்றே என்றும், 'வாதுவல் வயிறே வாதுவல் வயிறே நோவேனத்தை நின்னின்றனனே.........எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த கல்லாக் காளையை யீன்ற வயிறே" என்றும், 'உண்ட என்முலை யறுத்திடுவென் யான்' என்றும் இறப்பத் துன்புறுவாள் என்று, இறப்பப்பரிந்து என்றார். சமழ்த்தல் - நாணல். கீழ் 155 ஆம் பாடலிலும் மூடர் சொற்கேட்டுச் சான்றோர் வருந்துவர் என்று கூறப்பட்டதூஉம் காண்க. ஈன்றாட்கு என்பது 'ஏவ லிளையர் தாய்வயிறு கறிப்ப' என்றாற்போலநின்றது.

317. பெறத்தக்க பரிசத் தொகையினைப் பெற்றுக்கொண்டு வழங்கும் பரத்தையரது தோள்போல வரன்முறையாகக் கற்பவர்க்கெல்லாம் நூல்கள் எளிதாய் வரும்; ஆனலும் தளிர்போன்ற

மேனியையுடைய அப்பாரத்தையாது உள்ளம் போல யாவரும் எளிதில் அறிய ஒண்ணாததாகும் அந்நூலின் உட்கருத்து என்க.

'பெறுவது' ஆவது நிர்ணயிக்கப்பட்ட பரிசத்தொகை என்க. அது 'மாதவிமாலைக்குக் கோவலன் கொடுத்து வாங்கிய பரிசம் ஆயிரத்தெண் கழஞ்சு பொன்' என்றாற்போன்றது. நெறிப்பட்டுக் கற்றலாவது ஆசிரியன் நின்றநெறியின்கட்பட்டு ஒழுகுதலும் பிற்றைநிலை முனியாது கற்றலுமாம். கல்வியிற் பெரியார் அயோத்திமாநகரைச் சூழ்ந்துள்ள அகழியை வருணிக்கு மிடத்து, அது "பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்" என்று அருளிச் செய்தமையால் (கம்ப. நகர. 14) அம்மகளிர் கருத்தின் ஆழத்தை அளவிடல் அரிதென்க. உலகத்தில் நூல்கற்றார்பலராக அவை யிலே தலைவராதற்குரியார் சிலரேயாதற்குக் காரணம் யாதென வினவினார்க்கு உத்தரமாக எழுந்தது இப்பாடல் என்க. மேற் பாடல்களில் இதனை விளக்குவர். முறி - மந்தளிருமாம். இது மாமை எனப்பட்டு, மகளிர்க்குச் சிறந்த மேனியழகாகும். பெறுவது கோடலாவது, கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளுதல் என்பர் பரிமே. (குறள். 813).

318. அறிவு ஊரத்தக்க புஸ்தகங்களையே மிகுதியாகச் சேகரித்து அவற்றினை அன்போடு சுமந்துகொண்டு தம்மில்லத்து நிறைத்து வைப்பினும் அவற்றின் பொருள் தெரியாராய் மூலபாடத்தினை மாத்திரம் மறவாமல் மனத்திற் போற்றியிருக்கின்ற புலவரும் வேறுவர்; அவற்றின் பொருளை அறிந்து தெளிந்தும் பிறர் ஐயங்களைத் தெளிவித்தும் சிற்றக்கவல்ல புலவரும் வேறுவர் என்க. புத்தகமே - ஏகாரம் பிரிநிலை. அவற்றை - அப் புஸ்தகங்களிலுள்ள பாடல்களை என்க. அகம், மனமுமாம். புலவர் பிறறைத்தேற்று மாற்றை அடுத்த பாடலிற் கூறுவர்.

319. பழிப்பற்ற காட்டுப்பசுக்களின் மந்தை தங்குகின்ற நெடிய மலைநாடனே! நூலின் பொருளைச் சங்கிரகமாகச் சொல்லுதல், விஸ்தாரமாகச் சொல்லுதல், உட்பொருளைச் சொல்லுதல், அதனில் இல்லாது குறைந்த பொருளை அழைத்துச் சொல்லுதல் ஆகிய இப்படிப்பட்ட நான்கு வகையாலும் ஆராய்ந்து விரிவுரை கூறமாட்டாதார் சொற்கள் நூலிற்கு நல்ல உரை ஆமோ என்க.

நூற்குப் பொருள் கூறுதல் நால்வகைப்படும் என்பதனை 'பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப், பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே' என்பதனால் அறிக. பொழிப்புரையாவது பாடம், பதப் பொருள், உதாரணம் என்ற மூன்றும் கூறுதல். அகலவுரையாவது எடுத்துக்கொண்ட நூலிலிருந்தாயினும், பிற நூல்களிலிருந்தாயினும் ஆக்ஷேபங்களைக் காட்டுதல். அவ்வாறு செய்து அவற்றிற்கு ஸமாதானங்கள் கூறித் தன் கோட்பாடைநிலை நிறுத்துதலும் நூலினுள் மறைந்துகிடக்கும் நுண்ணிய பொருளை எடுத்துச்சொல்லுதலும் முறையே நுட்பவுரை எச்ச வுரைகளாம். அடுத்த பாடலில் ஸபையில் தலைவராதற்குரிய நல்லாசிரிய ரிலக்கணங் கூறுவர்.

320. எவ்வளவுதான் அறிவு நூல்களைக் கற்று, பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் எனப்படும் உரை விசேஷங்களை அறிந்து கூறத்தக்காராயினும், நல்ல குடிபிறப்பில்லாதவர் ஒரு ஸபையிலே வழுச்சொல்லையுடைய கல்லாதவரை அணைத்துக் கொண்டு போகும் பொறுமையாகிய கருவியை உடையர் ஆவரோ ஆகார். நற்குடியிற் பிறந்த நல்ல அறிவாளர்களோவெனில் அவ்வறிவு நூல்களிற் பழகித் தெளியாதார்பால் காணப்படும் புல்லறிவினைத் தாம் காண்பதில்லை என்க.

எனைத்தென்பது அளவினையும் தன்மையினையும் காட்டிற்று. மேல் நூல் கற்பினும் என்று வந்தமையால், பிறர் என்பதற்கு நூல் கல்லாதார் என்று பொருள் கூறப்பட்டது. அவரைக்காத்த லாவது, அக்கல்லார் பல்லாருள் நாணல்பரிந்து கண்ணோடி அவ ருரையை வருந்தியும் கேட்டல். 'நீரொழியப் பாலுண் குரு'கே போன்றவராதலின், நல்லறிவாளர்கள் நூல்தேற்றாதாரின் புல்லறி வினை அறிவது இல் என்றார். தாம் என்றார், தம்மின் வேறான தீயறிவாளர் புல்லறிவே அறிவரென்பதுகருதி. 'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும், வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு, நிலம் படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும், திங்க ளன்ன கல்வியும் திங்களொடு, ஞாயி றன்ன வாய்மையும் யாவதும், அஃகாவன்பும் வெஃகா உள்ளமும், துலைநாவன்ன சமநிலை உளப்பட, எண்வகை யுறுப்பின ராகித் திண்ணிதின், வேளாண் வாழ்க்கையும்

தாஅ ளாண்மையும், உலகிய லறிதலும் நிலைஇய தோற்றமும், பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும், அறிவும் உருவும் ஆற்றலும் புகழும், சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன்மையும், கற்போர்நெஞ்சம் காமுறப்படுதலும், இன்னோரன்னதொன்னெறி மரபினர் பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியர்' என ஆத்திரேயன் பேராசிரியன் கூறிய பொதுப்பாயிரத்தானே அவையிற் றலைவரா தற்குரிய ஆசிரியரைக்கண்டுகொள்க. நவிறல் - பழகுதல்; 'நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்' (அகம். 16) என்புழியும் காண்க.

6. 'பகையிய'லாவது இம்மை மறுமை வீடுகட்கு உறுதி யாகிய புகழ் அறம் ஞானங்களை அடைய ஒட்டாமற் றடுக்கும் பொல்லா ஒழுக்கங்களைக் கூறும் இயலாம். அவ்வொழுக்கங்கள் புல்லறிவாண்மை, பேதைமை, கீழ்மை, கயமை என்னும் நான்கதி காரங்களாற் கூறப்படும். அவற்றுள்,

(33) 'புல்லறிவாண்மை'யாவது, அற்ப அறிவினை ஆளுந் தன்மை. அது தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து, உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல்லைக் கொள்ளாமை. அவையறிவானுக்குப் பகை புல்லறி வாண்மை யாதலின் அதன்பின் இஃது வைக்கப் பட்டது.

321. அருளினாலே தர்மத்தை உரைக்கும் அன்புடையவர் வாயினின்றும் வருஞ்சொல்லைப் பொருள்போலே மனத்திலே வைத்துச் சோர்வுபடாமற் காத்துக்கொள்வர் அறிவுடையோர்; ஒரு பொருளினும் வைத்து எண்ணத்தகாத அறிவிலியோ அச்சொல்லை இகழ்ந்து சொல்லும்; இஃதென்போல எனின், கூழ் போலக் காய்ந்த பாலைத் துழாவிய அகப்பை அப்பாலின் சுவையை அறியாததுபோல என்க.

பாற்கூழ், கூழ்ப்பால் என்று முன்பின்னாகத் தொக்க உவமைத்தொகை. கூழ் - சோறுமாம்; 'கூழுடைவியனகர்' (புறம் 70)

322. பொறுமை முதலிய குற்றமில்லாதவர் தர்மவழியைக் கூறும்போதும் செப்பமுடையா ரல்லாதார் அதனைச் செவியிலும் ஏற்றுக்கொள்ளார்; அஃதென்போல எனின் தோலைக் கவ்வித்

தின்னும் புலையர்நாயானது பாற்சோற்றின் ருசியை அறிந்து கொள்ள முடியாதவாறுபோல என்க.

தர்மோபதேசம் பண்ணுவார் குற்றமுள்ளவராயின் அவருப தேசத்தை ஒரு சிலர் கேளாதிருத்தல் கூடும், அங்ஙன மன்றென்பார் அவ்வியமில்லார் என்றார். அறத்தாறு உரைக்குங் காலும என்ற சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கதென்க. தோல் கவ்வித்தின்னும் என்றமையால், குணங்கர் நாய்க்குப்பிறவற்றினுங் காட்டில் தோலின்கண் விருப்ப மிகுதியைக் காட்டிற்று.

**323.** கண்ணிமைக்கும் முன்னே தம்முயிர் போகும் முறையினை எல்லா வகையாலும் தாம் கண்டிருந்தும், தினையளவும் நன்மையினைச் செய்யமாட்டாத நாணமில்லாத மூட ஜனங்கள் இருந்தாலென்ன இறந்தாலென்ன என்க. எனைத்து, எல்லாம்.

**324.** ஒருவனுக்கு ஜீவித்திருக்கும் நாளோ சில; அச்சில நாளும் உயர்க்குக் காப்பில்லை; ஆதலால், கண்டபேரோ டெல்லாம் கூடி மகிழாமல் பலரும் தூற்றும் நிரந்தரமான பழியோடு தான் ஒருவனாக விலகித் தனித்திருந்து யாவருடனும் பகைகொள்ளுதல் என்னகாரணமோ என்க.

ஏமம் - காப்பு. பழியால் என்புழி ஆல் ஓடுப்பொருளில் வந்த மூன்றும் வேற்றுமை உருபு. மற்ற இரண்டிடத்தும் ஆல் அசைகள். தண்டுதல் - நீங்குதல்.

**325.** ஒருவனை அவன் சென்றிருந்த சபைமுன்னே சென்று ஒருவன் அவமதித்து வைதானாக, அப்போது வையப்பட்டவன் 'இது நாம் முன்செய்த வினையின் பயன்' என்று பொறுத்துக் கொண்டு சும்மா இருப்பானாயின் அதன்மேல் வைதவன் வாழ்ந்திருப்பானெனில் அது அதிசயிக்கத்தக்கது தான் என்க.

வியத்தக்கான் - வியத்தற்குத் தகுதியுடையன். "மன்றிற் கொடும் பாடுரைப்பான்......எச்சமிழந்து வாழ்வான்" என்பவாதலின், வியத்தக்கான் வாழுமெனின் என்றார். புத்திர மித்திரகளத்திராதியரோடு நாசமுறுவான் என்பது கருத்து.

**326.** முதுமைப் பருவம் பின்னும் அதிகரிப்பதன் முன்னே அறச்செயல்களைச் செய்யப் பிறரையும் உத்ஸாகப்படுத்தித் தானும்

அதன் கண்முயலாதான், வீட்டிலுள்ள வேலைக்காரியாலும் எற்றித் தள்ளப்பட்டு, 'வெளிப்புறத்திரு போ' என்னும் பொல்லாத சொற்களைக் கூறப்படுவன் என்க. ஊக்குதல் - பிறரை உத்ஸாகப்படுத்துதல்; முயலுதல் - தான் முயன்று செய்தல். நூக்குதல் - தள்ளுதல். 'போகஎன்னும்' என்பது அகரம் தொக்குப், போகென்னும் என்றாயிற்று. 'இறக்கக்கடவாய்' எனலுமாம். இது வைதற்பொருளில் வந்த வியங்கோள். போ என்னும் பொருளாயின் விதித்தற் பொருளாய்.தொழுத்தை - வெள்ளாட்டி.

**327.** புல்லறிவினார் நல்ல நுகர்ச்சிகளைத் தாமும் பொசித்து நன்றாக விரார்; தகுதியுடைய பெரியோர்களுக்கு நன்மைகளைச் செய்யார்; தமக்கு அரணாகிய நல்ல அறத்தினது நெறிகளையுஞ் சேரமாட்டார்; ஸம்ஸார ஸம்பத்திலே ஆழ்ந்திருந்து மறுமைக்கு உறுதிகளைமறந்து வீணே தம்முடைய நாள்களைக் கழிப்பரென்க.

ஆக்கம் - ஈண்டு ஆக்கிக்கொண்ட குடும்பமாகிய செல்வம். மயங்குதல் ஸம்ஸாரம் ஸ்திரமென்று மயங்குதல். அவத்தமே வாழ் நாளைக் கழியாமற் பயன்படக் கழித்தல் 'கருமமுமுள்படாப் போகமுந் துவ்வாத் தருமமுந் தக்கார்க்கே செய்யா - ஒரு நிலையே முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்பபட்டினம் பெற்ற கலம்' என்பதனால் அறியப்படும்.

**328.** சிறுவயதிலே தொடங்கித்தாம் இறந்து போகுமிடத்துக்கு உணவாகிய அறத்தைச் சிக்கெனவே தேடிக்கொள்ளாமல் தேடிய பொருளை இறுக இறுக வைத்துக்கொண்டு அறத்தினைச் செய்தற்குப் பின்னை நினைப்போமென் றிருக்கும் அறிவில்லாதவர் தாமிறக்குங் காலத்து நாவிழந்து பேசவொண்ணாமையால் கையால் ஜாடைகாட்டின பொன்னும் புளித்த விளங்காயா மென்க.

"புளிவிளங்காயாவது அந்தியகாலத்திலே ஒருவன் வாயெழாமலிருக்கிறபோது பெண்டு பிள்ளைகளைப் பார்த்துத் தான் தேடின பொருள்களைத் தருமம் பண்ணச்சொல்லிக் கையால் சமிக்ஞை காட்டினால், அதனைப்பார்த்து அவர்கள் அவன் சொல்லுகிறதை யறிந்தும் அறியாதார்போல, 'ஐயா! விளாம்பழமா கேட்கிறீர்?'

அது கொடுக்கும் பக்குவதசையிலில்லையே! என் செய்வோம் ?' என்று மெய்யான உறவுபோல அழுவார்கள். (சிங். 1553) பொருளைக் கொடுக்கச் சொல்லுகிற வசனம் பொய்யாய்ப்போம்; ஆனபடியினாலே, பொருள் வந்து கிட்டினபோதே தருமத்தைப் பண்ணவேண்டு மென்பதாம்.'' வல்சி - உணவு; ஈண்டு அறமாம். தோட்கோப்பு - தோளிற் கோக்கப்படும் கட்டமுது.

**329.** சிற்றறிவினையுடையார் வறுமை வந்தவிடத்தும் தீராத பிணிவந்தவிடத்தும் மறுமைக்கு உறுதிவேணுமென்கின்ற மனத்தராய்த் தருமத்தைச் செய்யவேணுமென்றிருந்து, ஐசுவரியமும் உடல்வலிமையு முண்டானகாலத்திலே ஒரு சிறு கடுகளவானாலும் மறுமைக்கு உறுதியான தருமத்தைச் செய்யச் சிந்தியார் என்க.

விழுப்பிணி - பிழைத்தற்கு ஏதுவில்லாத பிணி. "விழுத்தொடை" (அகம் 53) என்புழிப்போல. ஆற்றிய காலமாவது ஐசுவரியத்தாலும் உடல்வலியாலும் அறஞ் செய்யச் சக்தி பெற்ற காலமாம். ஐந்தை - சிறுகடுகு.

**330.** அளவிறந்த காதலையுடைய தமது உயிரை ஒத்தாரைக் கொண்டு போகிறதற்கு முயற்சிசெய்யும் கூற்றத்தினைக் கண்டு வைத்தும், பெறுதற்கரிய மனுஷ்ய சரீரத்தைப் பெற்ற புல்லறிவாளர் அறஞ்செய்கிறதற்கு நினையாமல் ஒரு பயனுமில்லாமலே தம்முடைய வாழ்நாளைக் கழிப்பர் ஐயோ என்க.

என்னே, என்னும் வியப்பிடைச்சொல் உடம்பின் பெறற்கருமையை உணர்த்திற்று. கூற்றமுங் கண்டு என்னுமிடத்து உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது.

(34) 'பேதைமை'யாவது யாதும் அறியாமையாம்; "இந்த மனம் இந்திரியங்களின் வழியேயோடி அந்தந்த அனுபவங்களை உண்மையாகக் கருதி இந்தப்ரத்யக்ஷ ப்ரமாண மொன்றனையுமே துணிந்து மற்ற ப்ரமாணங்களான சாஸ்திர முதலானவைகளைத் தப்பறையென்று மயங்கி, மறுமைக் குறுதியை யிழந்து, இந்தப் பிறப்பிலே உலகத்துக்கு இயற்கையான முறைகளைத் தமக்குச் சிறந்தவர்கள் சொல்லக்கேட்டும் உட்கொள்ளாமல் இகழ்ந்து, பொல்

லாதவர்களுடன் இணங்கி, எல்லாராலும் இகழப்பட்டு இம்மைப்பயனையும் இழத்தலாம்" என்பது ஒரு பழைய உரை. புல்லறிவாண்மையின் மிகுதியே இஃதாகலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**331.** தம்மைக் கொல்லுதலில்வல்ல பெரிய கூற்றம் தமது உயிரைக் கொண்டுபோகிறதற்குக் காலத்தையும் உபாயத்தையும் பார்த்துத் திரிய, இந்தச் சமுசாரமென்னப்பட்ட வலையிலகப்பட்டு நின்று, மனைவாழ்க்கையின்கண்ணே ஒழுகி, அதிலுண்டாகிய இன்பங்களை யனுபவித்து, அதனை மெய்யாகக் கருதி இறுமாந்திருக்குமவர் பெருமையானது, யாமையைக் கொல்லுகிறவர்கள் தண்ணீரை உலையாகவைத்து அதினுள்ளே யாமையை விட்டுத் தீமூட்ட, அந்தயாமை தனக்குப் பின் வரப்போகிற நிலைமையை யறியாமல் அந்த நீரிலே முழுகி விளையாடினாற்போலும் என்க.

யாமையென்று மேல்வந்தமையால், கொலைஞர் என்பதற்கு யாமையைக்கொல்லுகிறவர்கள் என்று பொருள் கூறப்பட்டது. 'உலைப்பெய்து அடுவதுபோலுந் துயர்' என்று கீழ் 114 ஆம் பாடலில் வந்ததும் இச்செய்தியையே குறித்ததென்க. ஈண்டை வலையாவது ஸம்ஸாரவலை. செம்மாத்தல் - இறுமாத்தல்.

**332.** குடும்பத்துக்கு வேண்டுவனவெல்லாம் குறைவறச் செய்து நிரப்பிவிட்டு, தர்மத்தைப் பின்னர் அறிவோம் என்று குடும்ப பாரத்திலேயே மூழ்கியிருப்பவர் தன்மையானது பெரிய கடலிலே முழுகப்போனவர் ஓசை எல்லாம் ஒருங்கே அவிந்தபின் நீர் ஆடுவோம் என்றிருத்தலோடு ஒக்கும் என்க. மற்று கீழ்19 ஆம் பாடலிற்போல வினைமாற்றின்கண் வந்தது. உடன் - எல்லாம்.

**333.** குலமும் தவமும் கல்வியும் உயர்குடிப்பிறப்பும் பிராய முதிர்ச்சியும் ஆகிய இவ்வைந்தினையும் தடையில்லாமல் ஒருவன் அடைந்திருந்தவிடத்தும், நன்மையமைந்த குற்றமற்ற பழைய சிறப்பினையுடைய உலக வாழ்க்கையை வாழ அறியாமையானது நெய்யில்லாத பாற்சோற்றுக்கு ஒப்பு என்க.

உலகமறிதலாவது 'உலகத்தோடு ஒட்ட ஒழுக'லை அறிதல்; இதுகல்லார் கல்வி பலகற்றும் அறிவிலாதாராவர் என்க.

இனி, நலமந்த மில்லாத்தோர் மோக்ஷத்திற்கு உறுதியாவன அறியாமையுமாம். எல்லாவற்றிற்கும் கடையிலே மூப்பினை வைத்தார் 'மூப்பின்கண் நன்மைக்ககன்றான்.........கல்விப்புணை கைவிட்டான்' என்பவாகலான்.

**334.** அறிவுடையோர்கூறும் உறுதிச்சொற்களைக் கேளார்வாயினும் கற்கள் அதமரான மனிதர்களைக்காட்டிலும் மிகவும் நல்லன; ஏனெனில், அவை தம்மையடைந்தவர்க்கு நிற்றல், இருத்தல் கிடத்தல் நடத்தல் என்னப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும் நினைத்த போதெல்லாம் உதவி செய்தலான் என்க.

இன்னினி என்பதனைக் கீழ் 29 ஆம் பாடலிற் கூறி யாங்குக் கொள்க. 'கல்லை ஒருவன் ஒரு ப்ரகாரமாக வகுத்து அதற்குப் பிராணப்ரதிஷ்டை பண்ணினால் அவனுக்கு அது சொர்க்க மோக்ஷங்களைக் கொடுக்கும், ஒரு வாய்க்காலுக்குமேல் படுக்கச் செய்தால் அந்த வாய்க்காலிலே அவன் விழாமல் தன்மேல் நடந்து போம்படி உதவி செய்யும், தன்னை எதிர்த்துப் பகைவன் வருங்கால் அவன்மேலே எறிந்தால் அது அப்பகைவனைத் துன் புறுத்தி எறிந்தவனை ரக்ஷிக்கும்.' இவ்வாறான பல உதவிகள் அது செய்தலால், தீங்கினையேயன்றி உதவியே செய்யாத கடையரின் மேலானது என்றார்.

**335.** தான் பெறுவது ஒன்றுமில்லாவிட்டாலும் ஐசுவரியங்களைப் பெற்றவனையேபோலத் தம்மோடு எதிரிடாத பேரோடும் கோபங்கொண்டு வைரத்தினாலே பொல்லாத வசனங்களை உண்மைபோலப் புனைந்து கூறிவிட்டால் பேதைக்கு நாவானது தன்னைத் தின்னும்படியான கொடிய தினவுடைத்தாகும் என்க.

**336.** நல்ல கொழுந்துகளையுடைய புன்னைகள் மலர்ந்து பரிமளிக்கும் கடற்கரையையுடையவனே! தம்மிடத்திலே பிரியமில்லாதார் பின்னே திரிந்து அவர்களைத் தம்மிடத்திலே பிரியமுள்ளவர்களாகப் பண்ணிக் கொள்ளுவோமென்கிறவர்கள் ஆக்கிக்கொள்ள முயலும் புல்லிய நட்பானது கல்லைக் கிள்ளிக் கையை வேறுவேலை செய்ய வொட்டாதவாறு இழந்ததனோடு ஒக்கும் என்க.

தங்கண் அமர்வில்லார் என்று மூலபாடத்தினைத் திருத்திக் கொள்க. அமர்வு - விருப்பம் வணக்குதல் - வசப்படுத்துதல். கேண்மையை அறிவு என்பர் ஒரு பழைய உரைகாரர்.

**337** எறும்பு தனக்குக் குடிக்கிறதற்கு ஆகாவிட்டாலும் நெய்யிருக்கிற பானைப்புறத்தைவிடாமற் சுற்றிக்கொண்டிருக்கும்; அப்படிப்போல யாதொன்றனையும கொடாரானாலும் செல்வமுடையோரைச் சுற்றிக்கொண்டு விட்டுப்போகார் உலகத்துப் பேதையாயினர் என்க.

**338.** நல்ல ஸுகங்களைத் தினந்தோறும் அனுபவியாமலும், தர்மத்தைச் செய்யாமலும், இல்லாதவர்க்கு யாதாயினும் சிறிதும் ஈயாமலும், எல்லா வாற்றாலும் இனியவர்களான மனைவியரைக் கூடாமலும், புகழ்பட வாழாமலும் இருக்கும் பேதையார் தம் வாழ் நாளையும் வெறுரோ என்க.

அருந்ததிக் கற்பினர் தோள்...(சேர்தல்)........திரிகடுகம் போலும் மருந்து' என்றும் 'கற்புடையாட் பூப்பின்கட் சாராத் தலைமகன்........கல்விப்புணை கைவிட்டா'ன் என்றும் கூறப்படுதல்நோக்கி 'எல்லாம்.இனியார்தோள் சேரார் முனியார்கொல் தாம் வாழுநாள்' என்றார். இத்தகையார் இருத்தலினும் இறத்தல் நல மென்பது கருத்து. நாளையும் எனற்பாலதாய சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

**339.** ஒருவர் தம்மை விரும்பிக்கொண்டாட அதற்குமாறாக 'யாம் அவரை விரும்புகின்றிலேம்' என்றிருக்கும் ஆய்ந்த நன்மையில்லாத பேதையாரிடம் காணப்படும் தீநட்பானது, ஒலிக்கின்ற குரலோடு பாய்ந்து விழுகின்ற அலைகடல் சூழ்ந்த உலகம் கைவசமானாலும் இன்னாது என்க.

**340.** ஒருவன் விரிவாகக் கற்ற கல்வியும், பரந்த மென்மைக் குணமும், குடிப்பிறப்பும் அயலார் புகழவே பெருமை அடையும்; அவ்வாறன்றித் தான் புகழின் மைத்துனர்கள் பலருண்டாய் மருந்தினாலே தீராத பித்தன் என்று பலராலும் இகழப்படுவான் என்க.

ஈண்டுமைத்துனராவார் 'வரிசையறியாக் கல்லென் சுற்றமும்' விடரும் தூர்த்தரும் நடரும் வேழம்பருமாம். அவர் இவனை எப்பொழுதும் முகஸ்துதிசெய்து புறத்திற்புகழ்ந்து அகத்திற் பழிப்பர் என்பது கருத்து. பேதையர் தம்புகழ்ந்து தம்மையே ஏளனத்திற் குள்ளாக்குவர் என்க.

(35) 'கீழ்மை'யாவது குலமும் குடியும் உடையரேனும் அவையில்லாதார்போலப் பொல்லாத குணமுடைய கடையராயினார் தன்மையாம். பொல்லாத குணமாவன, ஒருவர் ஐசுவரியத்தைப் பார்த்துப் பொறாமல் அவர் செல்வம் கெடத்தக்க காரியங்களைப் பண்ணுதலும், தாம் பெற்ற அற்பத்தைக் கொண்டு தம்மைத்தாமே மதித்துப் பிறரை அவமதித்தலும், ஒருவர் செய்த நன்றியை நினையாமையுமாம். பேதையாருள் ஒரு சாராரே கீழாயினாராதலால் பேதைமையின் பின் இது வைக்கப்பட்டது.

**341.** அரிசிக் கப்பியை நாள்தோறும் ஒருபடியாகக் காலத்தாலே வாயிலே போட்டாலும் குப்பையைக் கிளறுகிறதை விடாத கோழிபோல மிக்க தர்மங்கள் அடங்கியுள்ள நூல்களை விரித்துச் சொல்லி அறிவித்தாலும் கீழானவன் தன் மனம்போன வாறே நடந்துகொண்டு போவான் என்க.

கடவது ஆ, கடமையாக. காலை, நாளின் காலைவேளையுமாம்.

**342.** உறுதியான நூல்களைக்கற்று அதன் பொருளை உட்கொண்ட தோஷமற்றவரிடத்திலே தாமதியாது போகவேண்டுமென்றுசொன்னால் கீழானவன் நித்திரைகொள்ளவேணும் என்று சொல்லி எழுந்து போய்விடுவான், அஃதல்லாவிடின் தனக்கு ஒரு நோயினைக் கற்பித்துச் சொல்லிகொண்டு போவான் என்க.

காழ் - உறுதி; மறங்குதல் - நோயுறுதல் என்பது ஒரு பழைய உரை.

**343.** மிகுதியாக விழுகிற அருவியையுடைய மலைநாடனே! தாம்பெரிய செல்வத்தைப் பெற்றாராயினும், தம்முடைய ஒழுக்கம் குன்றாமல் அந்த ஒழுக்கத்தின் வழியே நடந்துகொள்ளுவார்

சான்றோர்; பெரிய செல்வத்தைப் பெற்ற விடத்திலேயும் தாம் செய்யும் பொல்லாத குணத்தினைச் உடையவல்லவ னுவதல்லது செல்வமுடைமையால் பெருமைக்குணம் உடையனுகான் கீழா னவன் என்க.

நடை - செல்வம். பிறங்குதல் - மிகுதல். பிறங்குநீர்ப் பண்ணை' என்புழிப்போல.

344. தினையளவு நன்றி ஒருவர் செய்தால் அதனைப்பனை யளவு போலப் பெரிதாக நினைத்துக் கொண்டிருப்பார் சான்றோர். பனையளவாக நன்றியை எந்நாளுஞ் செய்தாலும் விளங்கும் அருவி யினையுடைய மலைநாடனே! ஒரு நன்மையினையும் அறியாத கீழான வனிடத்து ஒரு நன்றியும் இல்லையாய் விடும் என்க.

நன்றியில் என்றும் பாடம். செய்தநன்று என்று முன் வந்த மையால், 'பனையனைத்து' என்பதற்குப் பனையளவு நன்றி என்று பொருளுரைக்கப்பட்டது.

345. பொற்கலத்திலே சோறூட்டி அதற்குக் காவலாகப் புறத்தே மனிதர் காத்துக் கொண்டிருந்தாலும் நாயானது எச்சிலை எப்பொழுது போடுவார்களோ என்று இமை கொட் டாமல் பார்த்திருக்கும்; அதுபோலத் தன்னைப் பெருமையுடை யவனுகப் பண்ணிக் கொண்டிருந்தாலும் கீழானவன் செய்யும் காரியங்கள் அந்தக் கீழ்மைத் தொழிலேயாகும் என்க.

புறந்தருதல் - காத்தல். சீர் - தன்மை. பெருமையுடைத்தாக என்று முன் வந்தமைக்கு ஏற்பக் 'கருமங்கள் வேறுபடும்' என்ப தற்கு கீழ்மைத் தொழிலாகும் என்று பொருளுரைக்கப் பட்டது.

346. தேவேந்திரனுடைய ஐசுவரியத்தை ஒத்த செல்வத் தைப் பெற்றாராலும் சான்றோர் எப்பொழுதும் வரம்பு கடந்த வார்த்தைகளைச் சொல்லார்; காணிப்பொன்மேலே முந்திரிப் பொன் அதிகமுண்டாகில் கீழானவன் தன்னை இந்திரனைப் போல எண்ணிக்கொண்டு விடுவான் என்க.

சக்கரன் செல்வம் சக்கரச்செல்வ மென்க. வாசுதேவக் கோட் டம் என்பதுபோல; சக்கரன் - இந்திரன்; 'புருகூதன் சக்கரன்

புரந்தரன் மருத்துவன்......ஐந்தருநாதன் இந்திரன்பெயரே' என்பது பிங்கலம் இந்திரனாய் எண்ணிவிடும் என்று பின்னர் வந்தமைக்கு ஏற்ப. சக்கரச்செல்வம் என்பதற்கு இந்திரனுடைய ஐசுவரியம்என்று பொருள் கோடலே சிறப்புடைத்தென்க. முந்திரி என்பதுமுந்நூற்றிருபது கூற்றில் ஒன்று. காணி என்பது எண்பது கூற்றி லொன்று. காணிமேற் முந்திரிமிகலாவது காணிமுந்திரி; அல்லது கால்வீசமாம்; அறுபத்து நான்கு கூற்றிலொன்று; கால் வீசம் பொன் பெற்றானாயின், கீழாயினான் தன்னை இந்திரனாக மதித்துவிடும் என்க.

347. குற்றந் தீர்ந்த பசும்பொன்மேலே குணம் சிறந்த நவ மணிகளை அழுத்தி அழகுபெறச் செய்யப்பட்டதாயினும், செருப்பானது தன் காலுக்கல்லாமல் மற்ற உறுப்புக்களிற் பூணற்கு ஆபரணமாக ஆகாதவாறுபோல பெரிய செல்வத்தை யுடையனாயினும் கீழானவன் தான் செய்கிற தொழிலால் மதிக்கப்படுவான் என்க.

மைதீர் பசும் பொன்னாவது, கிளிச்சிறைப் பொன்; 'வீறுயர் பசும்பொன்' என்புழியும் காண்க (சிலப். அரங். 165). நவமணிகளாவன: வயிரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம் என்பன. அவற்றுள் வயிரத்திற்கு இந்திரசாபம்போல ஒளிவிடுதலும், எட்டுப்பலகையும், ஆறு கோடியும், தாரையும், சுத்தியும், தராசமும் உடைமை குணச்சிறப்பாம். மரகதத்திற்குப் பசிய ஒளி பரத்தலும், நெய்த்தலும், கிளிக்கழுத்தும் மயிலின்கழுத்தும் ஒத்தலும், பசும்பயிர்போலப் பசத்தலும், பொன்மையோடு கூடிப்பசத்தலும், பத்திபாய்தலும், பொன் வண்டின் வயிறுஒத்துத் தெளிதலும் குணச்சிறப்பாம். மாணிக்கம் நான்குவகை. அவையாவன பதுமராகம், நீலகந்தி, குருவிந்தம், கோவாங்கு என்பன. அவற்றுள் பதுமராகம் தாமரைப் பூ செங்கழுநீர்ப்பூ, சாதகப்புள்ளின் கண், இந்திரகோபம், மின்மினி மாதுளம்பூ, மாதுளவிதை, நெருப்புத்தழல் முதலியன போன்றிருத்தல் குணச்சிறப்பாம். நீலகந்தி அசோகந்தளிர் கோகிலக் கண் செம்பஞ்சு, பலாசம்பூ, அாளிப்பூ, இலவம்பூ என்ற ஆறும் போன்று ஒளிவிடுதல் குணச்சிறப்பாம். குருவிந்தம் செம்பஞ்சு, திலகம், உலோத்திரம், முருக்கமலர், குன்றி, முயல் உதிரம்

சிந்தூரம், குக்கிற்கண் என்ற எட்டும் போன்று ஒளிவிடுதல் சிறந்த குணமாம். கோவாங்கு கோவைக்கனி, செங்கல், குராமலர், மஞ்சள் என்ற நான்கும் போன்று ஒளிவிடுதல் சிறந்தகுணமாம், புருடராகத்திற்கு: 'பூச உருவிற் பொலங் தெளித் தனைய' நிறம் சிறந்தகுணமாம். வயிரேயத்திற்குத் தேன் துளிபோலவும் சூரியனொளிபோலவும் கலந்து விளங்குதல் சிறந்த குணமாம். நீலமணி நீலோற்பலம், சுரும்பு, காயாம்பூ முதலியனபோல நிறமுடைத்தாதல் சிறந்தகுணமாம். கோமேதகத்திற்கு மஞ்சளும் சிவப்பும் கலந்தாலொத்த நிறம் சிறந்த குணமாம். முத்துக்கு: வெள்ளியைப் போலவும், அங்காரகனைப் போலவும் வெண்ணீர்மை செந்நீர்மையுடைமையும் உருண்டை வடிவுடைமையும் சிறந்தகுணமாம். பவளத்திற்கு உருட்சியும், சிந்துரமும் ஈச்சங்காயும் முசுமுசுக்கைக் கனியும், தூதுளம்பழமும் போன்ற நிறம் சிறந்த குணமாம். இவ்வாறு மாண்டமணி அழுத்திச் செய்யப்பட்ட தெனினும் செருப்புச் செய்துகொண்டவன் காலுக்கு ஆவதல்லது அவனுடைய பிற உறுப்பிற்கு அணியாவதில்லை என்பார் தன் காற்கேயாம் என்றார். காகுத்தன் அடிநிலையும் (செருப்பும்) காண்ணப்பன் அடிநிலையும் முறையே பரதாழ்வாருக்கும் பரமசிவனுக்கும் சிரத்தே யணியத்தக்க மாண்புடைத் தாயினவே எனின், அவை காகுத்தற்கும் கண்ணப்பற்கும் காற்கேயாயினமை சிந்திக்கபபடும்.

348. காவலினாலே பிறரால் அழிக்க ஒண்ணாத மலை நாடனே! கீழானவன் குணமானது கண்ணோட்டமில்லாமல் ஒருவனைக் கடுமையான வசனங்களால் பேசவல்லதாம்; பிறருக்கு வந்த துக்கங்களைக் கண்டு சந்தோஷப்படும்; அடிக்கடி கோபாவேசமுடையதாகும்; அக்கோபத்தினை ஒருவன் ஆற்றவும் ஆறாமல் வெந்து அயலாரை இகழ்ந்து பேசும் என்க.

வேகம் சினவேகம்; வேகுதல் என்பது கோபத்தினாற் கொதித்தல். ஏகுமாம் என்று கண்ணழித்து நல்லோர் சமாதானம் செய்யவும் பகைமை ஒழியாது மீண்டும் சண்டைக்கு எழும் என்க. விறன்மலை, தன்பெருமையாற்பிற மலைகளை வெல்லும் வெற்றியினையுடைய மலையுமாம்.

349. மதுவினைப்பொழிந்து பரிமளியாநின்ற நெய்தற்பூவினை யுடைய ஒலியாநின்ற கடற்கரையை யுடையவனே! தம் பின்னே ஒருவர் ஒருநாள் நிற்பினும் அவரைச் சான்றோர் பலநாள் பழகிய பழைமையானவர் என்று அவரிடம் இனிய குணமுடையராவர்; கீழானவர்களோ தம்பின்னே ஒருவர் பலநாள் திரிந்துகொண்டு போனாலும் அவரை விரும்பாதே இகழ்வர் என்க.

பன்னாட் பின்னிற்பினும் கீழாயவர் விழையாதே எள்ளுவர் என்று கூட்டப்பட்டது. நிற்பினும் எனற்பால சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கீழாயினோர்பின் பன்னாள் நிற்பின் என்றற்கு ஏற்பச் சான்றோர் முன் ஒருநாள் நிற்பினென்று வருவித்துரைக்கப்பட்டது. கீழ் 154 ஆம் பாடலிலும் 'செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர், தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்' என்று கூறப்பட்டிருத்தலை நோக்குக. உயிர்த்தல் ஈண்டு மணம் வீசுதலுக்காயிற்று.

350. ஐயனே! கேளாய், காதுகொம்பு முதலிய உறுப்புக்களைக் குறைத்து, கொய்யத்தக்க இளம்புல்லைத் தினமும் கொய்து கொண்டுவந்து போகட்டு உண்பித்தாலும் சிறிய இடபங்கள் வண்டியைப்பூண்டு இழுத்தலைக் கற்கமாட்டா; அதுபோல, அடைவிக்கப்பட்டசெல்வ முடையராயினும், கீழ்மக்களை அவர்கள் செய்கிற தொழிலால் அறியப்படும் என்க.

குறைத்தலாவது, காளைக்கன்றுகள் வளரவேண்டி கொம்பைச் சூட்டுக்கோலால் தீய்த்தலும் காதுகளை அறுத்தலும் வால் மயிரைக் கத்தரித்தலும் மரபு. 'பெரிய எருது தின்கிற புல்லைக் குறைத்து' என்பது ஒரு பழைய உரை. தேற்றினும் என்றும் பாடம். இதற்குத் தெளியச்செய்தாலும் என்பது பொருள். வையம் - தேர் என்ப; கொல்லாவண்டி என்றும், கூடாரவண்டி என்றும் வழங்குப. இதனை 'மானமர் நோக்கியும் வைய மேறி' (சிலப். கடலா. 120) என்புழிக்காண்க. தீற்றுதல், உண்பித்தல்; 'நென்மா வல்சி தீற்றி' (பெரும்பாண் 343) என்புழியும் காண்க. கீழ் 347 ஆம்பாட்டிற் கீழ்மக்கள் நன்குமதித்தற்கு உரியரல்லர் என்றார் இப் பாடலில் அவர் பிறர்க்குப் பயன்படுதலுமிலர் என்றார்.

(36) 'கயமை' யாவது, "குலத்தாலும் குடியாலும் கல்வியாலுங் குறைவற்றிருக்கவும் அதனாலே ஒரு பயனுமில்லாதவ ராய்க் கீழானவர் செய்கையாயினவற்றைச் செய்தல். அவை: பிறருக்கு ஒரு கேடுவந்தால் தமக்கொரு நன்மை யாகக் கருதுதலும், பிறருக்கொரு நன்மை வந்தால் தமக்கு ஒரு கேடுவந்ததாக நினைத்தலும், தமக்கொருவர் நன்றி செய்தால் அவர்க்குத் தீங்குசெய்தலும், ஒருவரிடத்திலே தமக்கு ஒருகாரியம் ஆகவேண்டியிருந்தால் அஃது ஆக்கிக் கொள்ளுமளவும் அவர்க்கு உபசாரம் செய்து அந்தக் காரி யம் ஆனபின்பு அவரை அந்நியரைப் போலப்பார்த்தலும், தம்மைத் தண்டிக்கத் தக்கவர்க்கு உபசாரஞ் செய்து சிறிது பொருள் கொடுத்தலுமாம்" என்பது ஒரு பழைய உரை. கீழாயினாரின் ஒருசாராரே கயவராதலின், இது கீழ்மை யின் பின் வைக்கப்பட்டது.

351. நிறைந்த அறிவினையுடையவர் வயதிற் சிறியராயினும் தம்மனம் தீயவழியிலே செல்லாமற் காத்தும் நல்வழியிலேயே செல் லுமாறு வளப்படுத்தியும் தம்மை அடங்கச்செய்வர்; புல்லறிவி னாரோ பிராயம் முதிரமுதிர தீய தொழில்களில் தழும்பேறி தீயொழுக்கங்களிலே ஒழுகித்திரிந்து பருந்துபோல மனத்துள்ளே குற்றம் நீங்கார் என்க.

ஆர்ந்த என்பது ஆர்த்த எனவலித்தல் விகாரம்பெற்றது. காத் தலாவது ஐம்புலன்களையும் நெறியினின்றும் விலகாமற் காவல் செய்தல்; ஓம்புதலாவது நன்னெறியிலே மேலும் மேலும் செல் லுமாறு மனத்தை வளர்த்தல். எருவை - பருந்தின் ஒருசாதி. அது, மூட்டுவாயெல்லாம் கழன்ற மிக்க முடைநாற்றமுடைய தசையை மிகவிரும்பிக் கவரும் இயல்பின தென்பதும், இடுகாட்டிலும் சுடுகாட்டிலும் சென்று பிணத்தின் தலையைக்குத்திக் கண்மணி களைப் பிடுங்கிக்கொண்டு பறந்துசெல்லும் தன்மைய தென்றும் கூறுப. இதனை, 'செஞ்செவி எருவை.........புலிதுறந்த கலவுக்கழி கடுமுடை, கொள்ளைமாந்தரின் ஆனாது கவரும்' என்றும், 'ஆளழித் துயர்த்த அஞ்சுவரு பதுக்கைக், கூர்நுதிச் செவ்வாய் எரு வைச்சேவல், படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ, மல்லன்

மொசிவிர் லொற்றி மணிகொண்டு, வல்வாய்ப் பேடைக்குச் சொரியும்' என்றும் பயின்றுள்ளமை கொண்டு அறிக. (அகம். 3,215) புல்லறிவினரும் இவ்வெருவைபோலப் பல்லரும்வெறுத்து அஞ்சத் தக்க தீத்தொழிலை விரும்பிச்செய்வர் என்க. போத்து, பொத்து என்பதன் நீட்டல்விகாரம்; பொத்து - பொந்து; ஈண்டு மனக் குற்றமுடைமை; அறிவால் மனம் நிறைந்திராமையுமாம். திரிதந் தரிவைபோல் என்று பாடங்கொண்டு 'பொல்லாத தொழிலை நினைந்திருக்கிற வேசிகளைப்போல' என்பது ஒரு பழைய உரை இப்பாடலின் முன்னிரண்டடிகட்கு ப்ரஹ்லாதனையும் பின்னிரண்டடிகட்கு ஹிரண்யனையும் உதாரணங் காட்டலாம்.

352. நீர் அறாத வளமுடைய பெரிய பொய்கையிலே எப்பொழுதும் விடாமல் வாழ்ந்திருந்தாலும் தனக்குள்ள வழும்பினை அறுக்கமாட்டா, தேரையானவை. அதுபோலக் குற்றமற்ற சீர்மையினையுடைய நூல்களைக்கற்றாலும் அந்தநூல்கள் சொன்ன முறைமையிலே ஒழுகத்தக்க அடக்கமொன்று மில்லாதவர்கள் நல்ல குடியிலே பிறந்தவர் என்றாதல் நூல்கற்றவர் என்றாதல் சான்றோரால் தெளியப்படும் தன்மையராதல் அரிது என்க.

பொய்கைக்குச் செழுமையாவது நீர்வற்றாமையும் தாமரை செங்கழுநீர் முதலியன பூத்துப் பரிமளித்தலுமாம். தேரைக்கு வழும்பாவது அதன் மேலுள்ள வழுவழுப்பான பாசி. நூலுக்கு வழும்பாவது: கரவடர் (மூலதேவர்) இயற்றிய சிலநூல்கள்போலக் களவு, காமம் சூதுமுதலியவற்றைக்கூறுதல். ஞானமார்க்கத்தையே உபதேசிக்கும் நூலென்பார் வழும்பில் சீர் நூலென்றார். நுணுக்கமாவது ஈண்டு ஐம்புலன்களும் அடங்க ஒழுகுதல். கல்வி இல்லாராயிருத்தலினாலே கயவர் தீத்தொழிலிற் கன்றிப் பொத்து அறாராயினர், வழும்பில் சீர் நூல்கற்பின் நன்மக்களாகாரோ என்றுவினவினார்க்கு உத்தரமாக எழுந்தது இப்பாடல் என்க. "கற்றனர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ?" என்ற கல்வியிற் பெரியார் அருளிச்செயலும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. "ஓதி யுணர்ந்தும் பிறர்க் குரைத்தும் தானடங்காப் பேதையிற் பேதையா ரில்" என்றார் பெரியாரும்.

**353.** கூட்டமான மலைகளையுடைய நாடனே! ஒருவர்முன்னின்று கூச்சமின்றிக் குற்றமெல்லாம் மறையக் குணமே கூறுதற்கும் சான்றோர்க்கு அரிதாயிருக்க, எதிரில் நின்று தாக்ஷிணியமில்லாமல் குணமெல்லாம் அழியக் குற்றமே கூறும் சிறியவர்கட்கு நாவானது கல்லினாலோ விஷத்தினாலோ வேறு எதனாலோ பண்ணப்பட்டது அந்தோ! என்க.

கணம் - கூட்டம். கண் - தாக்ஷணியம். அழுங்குதல் - கெடுதல். ஒருவர் உழை நின்று கண் இன்று குணன் அழுங்கக் குற்றம் கூறும் சிறியவர் என்று கூட்டப்பட்டது. இதற்கேற்பச் சான்றோர்க்கு 'உழை நின்று கண் இனறு குற்றம் அழுங்க' என்று வருவித் துரைக்கப்பட்டது. குற்றம் மறைத்துக் குணத்தினை எதிரிற் புகழ்வதால் புகழப்பெற்றார் அப்புகழ்ச்சியினை வஞ்சப்புகழ்ச்சி என்று திரியக் கொள்ளுவாரோ வென்று சான்றோர் அஞ்சுவதால் 'குணனேயுங் கூறற்கு அரிதால்' என்றார். உம்மை சிறப்பும்மை. சான்றோரது நா செஞ்சொல்லோடே பயிலுமென்பதும் சிறியவர் நா அதனின் வேறான தீச்சொல்லேடே பயிலுமென்பதும் கருத்து. எற்று - எத்தன்மைத்தான பொருள். ஓ, இரக்கப்பொருளில் வந்தது. இக்கயவராற் பிறர்க்கு என்ன தீங்கு என்றார்க்கு உத்தரமாக இப்பாடல் எழுந்ததென்க.

**354.** இரண்டு புறமும் உயர்ந்து அகன்ற அல்குலையுடைய குலமகளிர் வெள்ளாட்டிகளைப்போலத் தமது உடைமேனி முதலியவற்றை அழுக்கடையப் பண்ணிக்கொள்வரே யன்றித் தம் பெண்மையினது அழகைப்பிறர் கண்டுமயங்குமாறு அலங்கரித்துக் காட்டலை அறியாராய், இற்கண்ணே உறைந்து அடங்கியிருப்பர்; அவரின் வேறான பரத்தையரோ வெனில் தம் பெண்மையினது அழகைப்புதுவெள்ளம் போலக் கஸ்தூரி, பூ, சந்தனம் முதலியவற்றால் அலங்கரித்துக் கொண்டு, பலருக்கும் விளங்கக் காட்டி தம்மைஒத்தார் பலரோடு கூடிச்செருக்கோடு இராசவீதி கடைவீதிகளில் நடந்துசெல்வர் என்க.

முன்னையதான பெண்ணீர்மை, கற்பு நாண்முதலிய நற்குணங்களமைந்த பெண்ணியற்கை. பின்னையதான பெண்ணீர்மை,

அக்குணங்கள் ஒழிந்த பெண்ணியற்கை. புதுப்பெருக்கு "பூ நிரைத்தும் மென்தாது பொருந்தியும் தேன்வளாவியும் செம் பொன் விராவியும், ஆனைமாமதம் ஆற்ற வளாவியும்", "மதமழ யானை யென்ன" (கம்ப. ஆற்று. 8,16)ச் சேறல் நோக்கி அது பரத்தையர்க்குத் தொழிலுவமமாகக் கூறப்பட்டது. மதித்தல் - செருக்குதல். இது 'மத' என்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது. 'மதித்துஇறப்பர் மற்றையவர்' என்பதற்கு இயையக் குலமக ளிர் இல்லினை இறவாது அடங்கியிருப்பர் என்று கூறப்பட்டது. அவர் இல்லினைக் கடவார் என்பதனைப் 'படிசொற் கடவாத பாவாய்' என்பதனால் அறிக.

பகைவர்பாலும் நொதுமலர் பாலுமே கயவர் குற்றங் கண்டு ரைப்பர் நட்டோர்பால் அவ்வாறு செய்யார் என்றார்க்கு, அவ்வா றன்று; அவர் நட்டோர்பால் சிலநாள் உறவு பாராட்டித் தம் காரி யம் ஆனபின்னர் அவரை அவமதிப்பர் என்றாராயிற்று. "புதுப்பு னலும் பூங்குழையார் நட்புமிரண்டும், விதுப்பறநாடின் வேறல்ல - புதுப்புனலும், மாரியறவே யறுமே யவரன்பு, வாரியறவே அறும்" என்று மேல் 370 ஆம் பாடலிற் கூறுவதும், "தலையும் ஆகமுந் தாளுந் தழீஇ யதன், நிலைநி லாதிறை நின்றது போலவே, மலையி னுள்ளவெலாங்கொண்டு மண்டலால், விலையின் மாதரை ஒத்ததவ் வெள்ளமே" (கம்ப. ஆற்று. 6) என்று கூறுவதும் நோக்கிப் புதுப்பெருக்கத்தைப் பரத்தையருக்கு உவமை கூறுங்கருத்தினைச் சிந்திக்க.

**355.** கயவர் தமக்கு நன்மையளிக்கும் உத்தமர்கள் ஏவிய எவ் வேலையையும் செய்யார்; தம்மைஅடித்து வருத்திப் பொல்லாங்கு செய்யவல்லாரைக் கண்டபோது அவர்க்கு எவ் ஏவலையும் செய் வார்; அதனால் அக்கயவர், தளிர்மேல் நின்றதாலும் பிறர் ஒரு என்று கொண்டு அடித்தாலன்றித் தானாக அத்தளிரின் உள்ளே பதியாத உளியின் தன்மையினை ஒத்தாராவர் என்க.

இனி அக்கயவர் தமக்கு உறுதியாயின சொல்வாரிடத்தும் இனி யரல்லரோ என்று வினாவினார்க்கு உத்தரமாக எழுந்தது இப்பா டல் என்க. தட்டுதல் - அடித்தல். "ஏவவுஞ் செய்கலான்" என்

றும் "கரும்புபோற் கொல்லப் பயன்படுங்கீழ்" என்றுங் கூறினார் பொய்யில் புலவரும் என்க.

**356.** மலையில்வாழும் குறவன் தன் மலைதந்த பொருளின் நலத்தினை நினைத்து அம்மலையைப் பாராட்டுவன்; நாட்டில்வாழும் உழவன் தனக்குப் பயன்படவிளைந்த விளைநிலத்தினை நினைந்து அதனைப் பாராட்டுவன், சான்றோர் தமக்கு ஒருவர் செய்தநன்மையை நினைத்துச் செய்தாரைச் சிறக்கப் பாராட்டுவர்; கீழானவன் தன்னை ஒருவர் ஒருகால் வைததனையே நினைத்து அவரைப் பகைப்பன் என்க.

உள்ளுதல் - நினைத்துப் பாராட்டுதல். குறவன், உழவன், சான்றோர் என்ற இவர் முறையே மலைநலம், நிலநலம் பிறர்செய்த நன்று ஆகிய இவைகளை நினைத்திருத்தல் இயல்புபோலக் கீழ் பிறர் வைததனை நினைத்திருத்தல் இயல்பென்பதும், குறவன் நில நலத்தை உள்ளுதலும், உழவன் மலைநலத்தை உள்ளுதலும் சான்றோர் பிறர் செய்த தீமையினை உள்ளுதலும், அரிதாயவாறு போலக் கீழ் பிறர் செய்த நன்றியை உள்ளுதல் அரிது என்பதும் கூறினாராயிற்று. "நேர்த்து நிகரல்லாற் நீரல்ல சொல்லியக்கால், வேர்த்து வெகுளார் விழுமியோர், - ஓர்த்ததனை, உள்ளத் தான் உள்ளி உரைத்துரா யூர்கேட்பத், துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்" என்ற 64ஆம் பாடலையும் நோக்குக. இதனால்,அற்பத்திற்கும் பெருங்கோபங் கோடல் கயவர் குணம் என்பது கூறப்பட்டது.

**357.** தமக்கு ஒரு நன்றி செய்தவர் பின்னர் ஒருசேர நூறு பிழைசெய்தாலும் சான்றோர் பொறுப்பர்; கயவர்களோ தமக்கு எழுநூறு நன்றியைச் செய்தவர் ஒரு தீங்கினை அறியாமையாற் செய்துவிடின் அவ்வெழுநூறு நன்றியினையும் தீங்காய் எண்ணி விடுவர் என்க,

ஒன்றுதல் - கூடுதல், ஒருசேர என்றபடி; ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன, விலங்கு, தாவரம், தேவர், மக்கள் என்ற பிறப்பு எழினும் பிறப்பொன்றுக்கு நூறு நன்றி விழுக்காடு எழுநூறு நன்றிசெய்து என்றார் போலும்! இது நன்றி மறத்தலும் கயவர்க்கு இயல்பென்பது கூறப்பட்டது.

358. வறுமையுற்ற காலத்தும் நற்குடியிற் பிறந்தவர் செய்கிற உதவியைப் பெருஞ்செல்வம் எய்தியவிடத்தும் அறிவிலியாகிய கயவர் செய்யமாட்டார்; கொம்பின்கண் இரும்பாலே யன்றி வயிரத்தாலே பூண்கட்டினாலும் பன்றியானது போரிற் பகைவர்க்கு வருத்தத்தைச் செய்யவல்ல யானை ஆகுமோ என்க.

எடு - பொல்லாங்கு; 'ஏடுநிலத்தில் இடுவதன்முன்னம்' என்றார் பெரியாரும். எடு ப்ருவம் எட்டுப்பவரும்; ஐகாரம் சாரியை. ஈண்டு வறுமையை உணர்த்திற்று. செயிர்த்தல் - வருத்துதல். யானைக்கொம்பில் இருப்புப்பூண் செறித்தலும், அதனைக்கொண்டு பகைவர் மார்பினை உழுவித்தலும், அவர்கோட்டை மதிலினை இடிப்பித்தலும் வழக்கு. 'வயிரம் செறிப்பினும்' என்பதற்கு வயிரம் முற்றினாலும்' என்பது ஒரு பழைய உரை. கீழ் இற்பிறப்பு என்னும் அதிகாரத்தில், 'செல்லாவிடத்துங் குடிப்பிறந்தார் செய்வன, செல்விடத்துஞ்செய்யார் சிறியவர் - புல்வாய், பருமம் பொறுப்பினும்பாய்பரிமா போற் பொருமுரண் ஆற்றுதலின்று' என்றுகூறப்பட்டதும் நோக்குக. கயவர் பெருஞ்செல்வ ராயினும் அறஞ்செய்வதிலர் என்றார்.

359. "இன்றைக்கே ஐசுவரியவானாவோம்; இவ் வைசுவரியம் மாறாமலே மேலும் விருத்தியாவோம்; இனிச்சிறிது தாழ்த்து விருத்தியாவோம்" என்று தமக்கு எய்தாத செல்வத்தை எய்தியதாகக்கருதி மனோராச்சியம்செய்து, அதையே தொடர்ந்து உரைத்தலினாலும் மகிழ்ந்து, கடைசியில் வேறு சம்பவித்தலால் மனம் வருந்தி, பூவினுட்சிறந்த தாமரை மலரோடு பிறந்த தாமரை இலை போலப் பயனின்றி அழிந்தார் பலர் என்க.

ஒன்றி ஒன்ற எனத்திரிக்க. ஒன்றி உரையின்மகிழ்ந்து உள்ளம் வேறாதலாவது, கிருபண சர்மனென்னும் பிரமசாரி தான் பிச்சை எடுத்து ஈட்டிய அரிசியினைப் பானையிற் சேமித்து, அதன் கீழ்ப்படுத்துக்கொண்டு, "நாட்டிற் சிறுவிலைக் காலம் எய்தின் இவ் வரிசியினை இருமடங்கு விலைக்கு விற்று, ஒருகாராடுவாங்கி, அது குட்டியீன்று பல்கியபின்னர் அவற்றினை ஓராவினுக்கு மாற்றி, அதுகன்றுகளோடு நிரையாயினவளவில், அவற்றினை ஒருகுதிரைக்

குமாற்றி, அது குட்டிகளீன்று பல்கியவிடத்து விற்றுப் பெருஞ் செல்வமுடையேனுகி, ஒருபார்ப்பனக் கன்னியை நாடி மணம்புரிவல்; அவள் வயிற்றில் ஒருமகன் பிறப்பான் ; அவன் தவழ்கற்றுச் செல்வுழி, 'நங்காய் மகனைஎடு' எனக்கூறியேற்கு, அவள் வேலைமிகுதியால் எடாளாக, அவளை இவ்வாறு உதைப்பல்'' என்று உதைத்து, அரிசிப்பானையை உடைத்து, அரிசியைத் தெருவிற் சிதைத்து மனம் வேறுகியது போன்ற கதையை யுட்கொண்டு இங்ஙனம் கூறினர் என்க.

''கயவர் உள்ளபொருளை வைத்துக்கொண்டு அறஞ்செய்யாமல் மறுமைக்கு உறுதியை இழந்து, தமக்குத் தகாத செல்வத்திற்கு ஆசைப்பட்டு இம்மைப்பயனையு மிழந்து பலராலும் இகழப்படுவர்'' என்பது ஒரு பழைய உரை.

360. நீரினுள்ளே பிறந்து பசுமை நிறமுடைய தாயினும் சடையகத்து ஈரம் தங்கியிருத்தல் இல்லையாதல்போல, நிறைந்த பெரிய செல்வத்திலே பிறந்து வளர்ந்திருந்த விடத்தும் மலையிடத் துள்ள பெருங்கல்லை ஒத்தாரை உலகம் உடையதாயிரா நின்றது என்க.

ஒரும், அசை. கிடை - நெட்டி. நிறைபெருஞ் செல்வம் எனற்பாலது எதுகை நோக்கி நிறைப்பெருஞ் செல்வம் என்றுயிற்று. கீழ் 'கல்நனி நல்ல கடையாய மாக்களின்' என்று கயவரைக் கல்லினும் கடையராகக் கூறியவர் ஈண்டு கல்லொடு அவரை நேரொப்பித்தது ஈரமின்மையின் கல்லும் கயமும் ஒக்குமென்று கருதின ரேனும், மற்றைக்கற்கள் போல இஃது ஒருவரால் எடுப்பித்துப் படிமம் வகுத்தலும் நிறுத்தலும் படுத்தலும் செய்து பயன் கோடற்கு ஆகாது என்பதனைவிளக்க அறைப்பெருங்கல் என்று அடைகொடுத்தார் என்க. இதனுல் கயவரது தயையின்மையும் எதற்கும் பயன்படாத தன்மையும் கூறப்பட்டன.

7. 'பன்னெறியிய' லாவது, தொடர்புடையன வல்லாத பல நெறிகளையும் கூறும் இயல் என்க. ''இந்த நூலை அதிகார அடைவு செய்த பதுமனுர் அதிகாரங்களின் மிகுத்த பாடல்களைச் பல நெறி

களையும் சோதித்துச் சேர்த்து ஓரதிகாரமாகப் பொருட்பாலிற் கோத்தார்." என்பது ஒரு பழைய உரை.

(37) 'பன்னெறி' யாவது, மேற்கூறியவாறு பல நெறிகளையும் கூறும் அதிகாரமாம். இதுகாறும் பெரும்பாலும் செய்வன தவிர்வனவான புருஷ தர்மங்களைக் கூறிவந்தார், இனிச் செய்வன தவிர்வனவான ஸ்திரீ தர்மங்களைக் கூறுகின்றா ராதலின். இவ்வதிகாரத்தினை அவ்விருவர் தர்மங்களும் கூறும் அதிகாரங்கட்கு இடையிற் பெய்து வைத்தா ரென்று கொள்ளப்படும்.

361. மேகமண்டலத்தினை உருவி உயர்ந்திருக்கிற மாளிகையாய், நல்ல காவலையுடையதாய், மாணிக்கமுதலிய நவமணிகளிழைத்தவிளக்கு அகண்டமாக எரிந்து கொண்டிருப்பதாய்ச் சிறந்திருந்தாலும் என்னபயன்? நற்குணங்களால் விரும்பத்தக்க மனையாளையில்லாதான் வீடானது பார்க்கிறதற்குப் பயங்கரமாயிருக்கிற காட்டினை ஒக்கும் என்க.

மழை - மேகம். திளைத்தல் - இடைவிடாது அம்மேகத்தோடு பயிறல். 'திளையா வரும் அருவிக் கயிலை' (திருக். 395) என்புழிப்போல. இழைவிளக்கு, வினைத்தொகை. விழை, முதனிலைத் தொழிற் பெயர். மாண்ட மனையாளாவாள் மேல் 39 ஆம் அதிகாரத்திற் கூறிய குணங்கள் நிறைந்த மனையாள் என்க. 'காண்டற்கரிய காடு' என்றார், முனிவரர் வாழுங் காடன்றிப் புலி முதலியன வாழுங் காடு என்னுங் கருத்தினால். இடுகாடு, சுடுகாடு எனினும் பொருந்தும்.

362. காவலிற் சற்றும் சோர்வில்லாத வாளோர் காவலுக்குள்ளே யிருந்தும், அக்காவற் சோர்வினைச் சிறிது பெறுவராயின் எவ்வளவாயினும் சோரஞ்செய்யாத காலம் சிறிதேயாம்; அம்மெத்தென்ற மொழியினையுடைய மகளிர் கற்பொழுக்கத்தினைக் கொள்ளாத காலம் (சோரஞ்செய்கிற காலம்) பெரிதேயாம் என்க.

வாள், ஆகுபெயரால் வாள்வீரரை உணர்த்திற்று. வழுக்கு எனைத்தும் இல்லாதவாளோர் ஆவார், 'துஞ்சாக்கண்ணர் அஞ்சாக் கொள்கையர், அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த, நூல்

வழிப்பிழையா நுணங்கு நுண்தேர்ச்சி.........ஊக்கருங் கணையி-னர்' என்று சான்றோர் கூறிய இலக்கணங்கள் அமைந்த வாள்வீரர் என்க. (மதுரை. அடி 644 - 647.) பாணி - காலம். அச்சின் மொழியார் என்புழிச் சுட்டு, பண்டறிசுட்டு; கீழ்ப்பாடலிற் கூறிய மாண்பிலா மனையாளுமாம். சின்மொழி - சிலவாய மொழி.

**363.** புருஷன் கோபத்துக்கு அஞ்சாமல் 'அடி' என்று எதிரே நிற்கிற மனைவி யம தூதனோடொக்கும்; விடியற் காலத்திலே சமையலறையிற் பிரவேசியாதாள் மருந்திலே தீராத நோயோ டொக்கும்; சமைத்த உணவினைப் புருஷனுக்கிடச் சம்மதியாது தானுண்பவள் இல்லிலே வாழும் பேயோடொக்கும்; இந்த மூன் றுபேரும் கொண்ட புருஷனைக் கொல்லத்தக்க ஆயுதம் போன் றவர் என்க.

கூற்றம், பிணி, பேய் என்ற மூன்றனுள் கூற்றமானது எய்தி யவனைப் பலநாள் வருத்தாது அணுகியவுடன் கொல்லும்; பிணி அவ்வெய்தியானைப் பலநாள் வருத்திக்கொல்லும்; பேய் அவனைப் பலநாள் வருத்திக் கொல்வதோடு, அவன் மனையகத்து மிருந்து அவன் வமிசத்துளார் யாவரையும் பீடித்து வருத்தும். இவ்வுவ மையின் தன்மையை உபமேயத்தினும் பொருத்திக் கொள்க.

**364.** கலியாணத்தை நீக்கிவிடச்சொல்லிக் கேட்டும் நீக்கா னாய், இருதயம் வெடித்துப்போக முழங்கிய சாப்பறையினது ஆர வாரத்தினைக் கேட்டுந் தெளியானாய், பின்னையுமொருத்தியை மனைவியாக மணந்துகொண்டு அவளையே மறுமைக்கு உறுதி என நம்பிமகிழ்ந்து ஒருவன்இருக்கும் இருப்பு,கல்லையெடுத்துத்தன்மேல் எறிகிறதவற்றையுடைய பித்தர்இருப்போடு ஒக்கும் என்பார் என்க

ஏமம் உறுதல் என்பது ஏமுறுதல் என்று குறைந்து நின்றது. ஏமம் - ரக்ஷை. என்பார் என்பதற்கு எழுவாய் பெரியோர்.

**365.** ஒருவர்க்குத் தலைமையானது தவத்தினை முயன்று செய்து வாழ்தல்; இடையானது நல்ல குணமுடைய ஸ்திரீ களுடன் கூடி இல்லறம் நடாத்துதல்; கடையானது பொருள் கூடவில்லை யென்று நினைத்து அந்த ஆசையால் தம்மை அறிய மாட்டாதார் பின்னே சென்று நிற்கும் நிலை என்க.

"உணரார்" ஆவார் தமது குடியும் குலமும், தன்மையும் முதலான நன்மைகளை அறியாதார்" என்பது ஒரு பழைய உரை.

**366.** பலநூல்களையுங் கற்றுப் பொழுதினை இனிது கழிப்பர் தலையான அறிவுடையார்; நல்ல காரியங்களைச் செய்வதனாலே வந்த பொருளை ஏற்றவர்க்கு இட்டும் தாமும் உண்டும் பொழுதினைப்போக்குவர் இடையாயினர்; இனிய வஸ்துக்களை உண்ணப் பெற்றிலேம் நிறையப் பொருள் பெற்றிலே யாம் என்னும் வெறுப்பினால் இரவிலும் உறங்கார் கடையாயினர் என்க.

**367.** செந்நெல்லா லுண்டாகிய நீண்டமுளை பின்னும் அச் செந்நெல்லினது தன்மை தப்பாமல் விளைதலால், அந்தச் செந்நெல் கழனி முழுதும் விளைகிற வளப்பத்தையுடைய ஊரனே! தகப்பனறிவே பிள்ளையின் அறிவாம் என்க.

நோக்கி யறிகல்லாத் தம்முறுப்புக் கண்ணாடி, நோக்கியறிப வதுவேபோல் - நோக்கி, முகனறிவார் முன்ன மறிப வதுவே, மகனறிவு தந்தை 'யறிவு' என்ற பழமொழிச் செய்யுளும் இக்கருத்தாதல் காண்க.

**368.** உடைமையுடைய பெரிய செல்வரும் பெருமையுடைய சான்றோரும் கெட்டு, வைப்பாட்டி மக்களும் கீழான சாதியும் பெருத்து, கடையாயினவர் தலைவராகி, குடைக்கால் போலக் கீழ்மேலாய் நிற்கும் உலகவியற்கை என்க.

**369.** தமக்கினிய ராகிய உறவின் முறையார் தம்முடைய மனத்திலே இருக்கிற குறையை வந்துசொல்ல, அந்தக் குறையை மாற்ற நினையாத மனமுடைய கொடியவர்கள், மாணிக்கங்களைக் கொழித்து விழுகிற அருவியினை யுடைய மலைநாடனே! உயிர்வாழ்வதினும் இறத்தல் நன்று என்க.

வரைபாய்தல் - இறத்தல்.

**370.** புதுவெள்ளமும் அழகிய குழையினை யுடையபொது மகளிரது நட்பும் இந்த இரண்டும் விரையாமல் நன்றாய் ஆராயுங்காலத்து வேற்றுமையில்லை; புதுவெள்ளம் மழையில்லை யாகில் இல்லையாம்; அந்தப் பொதுமகளிர் அன்பு பொருள் வரவு இல்லையாகில் இல்லையாம் என்க.

மேற் பொதுமகளிர் என்ற அதிகாரம் வருவதனாலும், பொருளையே கொண்டு கொடுப்பாரைக் கொள்ளாத அவர் இயல்பு கூறப்படுதலாலும் 'பூங்குழையார்' என்றதற்குப் 'பரத்தையர்' என்று பொருளுரைக்கப்பட்டது. விதுப்பு - விரைவு.

(38) 'பொதுமகளி' ராவது, நல்லார் தீயாரென்று எண்ணாமல் பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுப்பட நுகர் தற்குரிய உடம்பினை உடையராகி, குணத்தினா லல்லாமல் வடிவினால்மாத்திரம் மகளிர் வடிவுடையாரது இழிவான இயல்பு. கீழ் அதிகாரத்திற் 'புதுப்புனலும் பூங்குழையார் நட்பும்' என்னும் ஈற்றுச் செய்யுட்கருத்தோடு இவ்வியல் தொடர்புடைத்தாதல் காண்க.

371. விளக்கினுடைய ஒளியும் பரத்தையர் உறவுமாகிய இரண்டும் குற்றமற ஆராயுங்காலத்து வேறுபாடில்லை; விளக்கொளியும் நெய்யறுமாகில் அணையும், பரத்தையர் அன்பும் கைப்பொருளில்லையாகில் அறும் என்க.

துளக்கு - தளர்ச்சி; ஈண்டுக் குற்றத்தினை உணர்த்திற்று.

372. அழகிய புடைபரந்த அகன்ற அல்குலையும் ஆராய்ந்த ஆபரணங்களையுமுடைய ஒரு பொதுமகள் யாம் பொருள் மிக்குடையேமாயிருந்த காலத்து நம்மொடு, "ஐய! நுமக்கொரு கேடு எய்தின் யாம் ஆயத்தோடும் யாயோடும் வரைபாய்ந்து உயிர் துறப்போம்; இது திண்ணம்" என்றாள். இப்போது எம்மிடம் பொருள் இன்மையால் தன்காலில் வாதநோயினைக் கற்பித்துக் காட்டி வரக்கூட இல்லையே என்று அழுது மலைச்சிகரத்தினுக்கு ஏறாது கீழே நின்றொழிந்தாள்; இனி யாம் பொருள் பெற்று வருவேமாயின் வருவாள் போலும் என்க.

விலையினையன்றிக் கொடுப்பாரை விரும்புவது பரத்தையர்க்கு இயல்பல்லாதிருக்கவும், காமம் காழ்க்கொண்ட குலமாதரது செயலான 'சாவிற் சாதலையும் நோவின்நோதலையும் மேற்கொண்டார் போன்று 'செங்கோடு பாய்தும்' என்றது காமுகரைப் பொருள் பறித்தற்குச் செய்யும் உபாயங்கள் பலவற்றின் ஒன்று என்க.

காணம் - பொருள். மேவுதல் - விரும்பி ஏறுதல். கால் நோய், இரு பெயரொட்டுப் பண்புப்பெயர். கால் - வாயு; வாயு என்னும் நோய். இனிக் 'கோடு பாய்தும்' என்னும் சொல் கழிந்தது என்று பொருள் தருதலின் 'மன்' கழிவின்கண் வந்தது. 'பாய்துமே' என்புழி ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. தும் விகுதி முன்னிலையையும் படர்க்கையையும் தன்னொடு கூட்டிக்கொண்ட உளப்பாட்டுத் தன்மை; யானும் நீயும் என் யாயும் யாயமும் என்க. கலுழ்ந்தது, "இக்காமுகன் பொருளுடையனாகிய காலத்து வரவேணுமென்று" என்பது பழைய உரை. கோடுபாய்தல் - இறத்தல்.

**373.** அழகிய பரந்த சுவர்க்கத்திலே தேவர்களாற் பூசிக்கப்படும் தேவேந்திரனே யாகிலும் ஆகுக; கொடுக்கிறதற்குத் தம் கையகத்து ஒரு பொருளுமில்லாதவர்களைத் தளிர்போலும் நிறத்தினையுடைய அப் பொது மகளிர் இருகைகளாலும் தொழுது, தம்மிடத்தினின்றும் போகச் சொல்லி விடுவர் என்க.

மால் என்பது இந்திரனுக்கு ஒரு பெயராதலை, "அமராவதியோன் ஆயிரங்கண்ணன்.........காண்டாவனன் மால் வெள்ளை வாரணன்" என்பதனால் அறிக. (பிங்கல. வானவர்). மிக்க வியாமோகத்தினைத் தரத்தக்கவன் என்பார் 'செங்கண்மால்' என்றும் பெரிய அதிகாரம், பெருமை, கல்வி முதலிய எல்லாவாற்றானும் சிறந்தானென்பார் "அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்" என்றும் கூறினர். இத்தகைய தேவருட் சிறந்த புருஷனையாவது அவன் பாற் பெறத்தக்க காம போகத்தையாவது கொள்ளாது; பொருள் ஒன்றனையே கொள்ளுவர் பரத்தையர் என்று அவர் தொழிலை இகழ்ந்தா ராயிற்று. இந்திரன் சிறந்த சிருங்கார போகத்தை அளிக்கவல்லவனென்பதனை, "புக்கவளோடுங் காமப் புது மண மதுவின் தேறல், ஒக்க உண்டு" என்ற கல்வியிற் பெரியார் அருளிச்செயலினின்றும், 'போகி'யென்று அவனுக்கு ஒரு பெயருண்மையினின்றும் தெளிக. வனப்பு, போகம், பிறப்பு, தொழில் முதலியன வேண்டார் என்பது எஞ்சிற்றலின் மன் ஒழி யிசைக்கண் வந்தது. "தொழுதது, பொருளுடையனாயின காலத்து இவன் வரவேணுமென்று" என்பது ஒரு பழைய உரை.

**374.** நேசமில்லாத நெஞ்சினையும் அழகிய நீலோற்பலம் போன்ற கண்ணினையும் உடைய பொதுமகளிர்தமக்குக் கொடுப்பதற்குப் பொருளில்லாதார் விஷத்திற்கு ஒப்பாவர்; உலகம் காணச் செக்கினை ஊர்ந்துகொண் டிருப்பாரானாலும் ஈட்டிய செல்வமுடையார் அப்பரத்தையர்க்குச் சர்க்கரைபோல இனியவராவார் என்க.

ஆணம் - நேயம்; 'ஆணமில் பொருளெமக்கு அமர்ந்தனை' என்றார் கலியினும் (1). செக்கார் சாதியில் மிக இழிந்தனர் என்பதும், செக்கு மிருகவதை செய்யுமிடத்தினும் பதின்மடங்கு அசுத்தமுடைய தென்பதும் நூற்றுணிபு. காண என்பதற்கு, செக்கார் இழிகுலத்தினர் இழிதொழிலினர் என்று தாமும் உலகமும் அறிந்திருந்தும் என்றுமாம். அக்காரம் - சர்க்கரை.

**375.** ஒரு தலையைப் பாம்பிற்குக் காட்டி, தாமரை முதலிய பூக்களினின்றும் ஒழுகும் தேனோடு கலந்து தெளிந்த பொய்கையிலுள்ள மீனுக்கு மற்றொரு தலையைக் காட்டும் விலாங்கு மீன் போல அவரவர் மனம் ஒப்ப அன்பு செய்யும் பரத்தையர் தோளைச் சேர்வார் விலங்கு போன்ற வெள்ளிய அறிவினர் என்க.

விலாங்கு மீன், பாம்பு காணும்பொழுது பாம்பு போலவும், மீன் காணும்பொழுது மீன் போலவும வடிவு கொள்ளும் இயல்பினது என்ப. தேம் - இனிமை; மணமுமாம். வெள்ளறிவாவது - பேதைமை. பரத்தையர் ஆளுக்குத் தக்கபடி ஒழுகும் இயல்புடைய ரென்பதனை "மெய்வரு போகம் ஒக்க உடனுண்டு விலையுங் கொள்ளும், பையரவல்குலார்தம் உள்ளமும் பளிங்கும்போல, மையரி நெடுங்கண் நோக்கம் படுதலுங் கருகி வந்து, கைபுகிற் சிவந்து காட்டும் கந்துகம்" என்ற கல்வியிற் பெரியார் அருளிச் செயலினாலும் தெளிக. காமரசத்தை யறிய மாட்டாமலும், நாணிழந்தும் மெய்யிடைப் போகம் ஒன்றனையே விரும்புவதுபற்றிப் பரத்தையர் தோள் சேருங் காமுகரை விலங்கோடு ஒப்பிட்டார். "பொதுநலத்தார் புன்னலந்தோயார் மதிநலத்தின், மாண்ட அறிவினவர்" என்றார் பொய்யில் புலவரும் என்க.

**376.** நூலொடு கோத்த மணியும் இணை பிரியாத அன்றிலும் போல நித்தியமும் நம்மோடு கூடியிருந்து ஒருநாளும் நம்மைப்

பிரியமாட்டோம் என்று உரைத்த பொன் தொடியினை யுடையாளும் போர் செய்கின்ற யாட்டுக் கிடாயின் கொம்புபோல அன்பின்றித் திருப்பிவிட்டாள் ; நல்ல மனமே! அவள் பால் நயந்து நிற்பாயோ ; அன்றி நன்னெறியில் திரும்புவாயோ? என்க.

பொத்துதல் - கோத்தல் ; 'உள்ளம் பொத்திய உரஞ்சுடு கூர் எரி' என்புழிப்போல (அகம். 279) கல் - மாணிக்கக்கல். அன்றில் துணைபிரியாது; பிரியின் துயிலாதென்பதனை "அன்றில், துணை யொன்று பிரியினும் துஞ்சா காண்" (அகம். 50) என்பதனாலும் அறிக. ஆட்டுக்கிடாய் போர் செய்ய வல்லதென்பதும், அதன் கோடு பின் முறுக்குடையது என்பதும் "தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த, சுவன்மாய் பித்தைச் செங்கண் மழவர்" என்றும் (அகம். 101), "அருகோடி நீங்காது அணைதலு மின்றித் திரிகோட்ட மாவிரியச் சிறிப்—பொருகளம், புக்கு மயங்கப் பொருது புறவாயை, நக்குமாம் நல்ல தகர்" என்றும் பயின்றுள்ளவற்றான் அறிக. கீழே கூறியாங்குப் பல்லாற்றானும் சோதித்துப் பொது மகளிரது அன்பின்மையைத் தெளியு அறிந்தானொருவன் அப்பொது மகளிர்பால் விடாதே அன்பு செய்து ஒழும் தன் நெஞ்சினைக் கழறித் திருப்புவதாக இப்பாடல் செய்யப்பட்டுள்ளது.

**377.** பசுவைப்போலே நக்கிச் சுகம் கொடுத்து, காமுகர் கைப் பொருளைப் பறித்துக்கொண்டு, பின்னர் வண்டி இழுத்தலுக்கு உதவாது குதித்துத் துள்ளியோடும் காளைபோலும் இழிவாகிய பொதுமகளிருடைய அன்பினைச் சிறப்பாக எமக்கேயுரித்து என்று இன்பம் நுகர்தற்கு ஆசைப்பட்டிருந்தார் வறியராகிப் பின்னர் அப் பொது மகளிரால் துறக்கப்பட்டு வருந்தும்போது உலகத்திலுள்ள பலராலும் நகைக்கப் பெறுவர் என்க.

ஆமா சேமா - இருபெயரொட்டுக்கள். ஆவாகிய மா சேவாகிய மா என்க. ஆ - பசு; மா - மிருகம். சே - இடபம்! குப்புறுதல் - துள்ளுதல் ; குதித்தல். சில்லை - இழிவு ; இழிவுடைய பாத்தைக்கு ஆகுபெயர். ஏமாத்தல் - ஆசைப்படுதல்; 'அருந் தேமாந்த நெஞ்சம்' என்புழிப் போல.

**378.** காமுகராலே பொருள் பெற்று இன்புற்று வந்தபோது அவர்களுக்கு இனியார்போன் றிருந்து, அக்காமுகர் பொருளை

யெல்லாம் தாம் உண்டு அக்காமுகரை வறியராக்கியபோது, அக் காமுகருக்கு வேண்டாதவரே யாவதன்றி, யாட்டுக்கிடாய்க்கொம்பு போலத் திருகலுமுடையவராகும் மானபோன்ற நோக்கினை யுடைய தம் குலத்தொழிலான களவு மார்க்கத்திலேயே நிற்கும் பொதுப் பெண்டிர்களது பெரிய முலையைச் செவ்விய மார்க்கத் திலே ஒழுகுவேம் என்பவர் சேரார் என்க.

ஏமாத்தல் - இன்புறுதல்; 'காமர் நெஞ்சம் ஏமாந்துவப்ப' என்றார் புறத்தினும். தடம் - பெருமை; (தொல். சொல். 320.)

379. ஒளிபொருந்திய முகத்தினையுடைய பொது மகளிர் காமுகர்க்குப் பின்னர் துன்பஞ் செய்யப்போகிற தம் கருத்தினை உள்ளே அடக்கிக்கொண்டு, இப்போது அக்காமுகர் தெளியத் தக்கதாகச் சொன்ன சொற்கேட்டு நம்பி, 'இப் பொதுமகளிர் எமக்கு உற்ற உறவினர்' என்று திருப்தியடைகிற காமுகர்களும் திருப்தியடையட்டும்; அப்பொது மகளிர்களோ யார்க்கும் உண் மையான உறவினர் அல்லர்; அவர் தம் உடம்பினைத் தம் இலா பத்திற்கே கொண்டுள்ளார்கள் என்க.

ஒண்ணுதலாராக இருப்பது, ஊறு செய்கிற நெஞ்சத்தினை மறைத்தற்கு. உடம்பினர் என்பது, குறிப்பு வினைமுற்று.

380. ஒளிமிக்க முகத்தினையுடைய பொதுமகளிர் தம்முள் ளம் ஒருவன்பாலிருக்க, உடம்பினைப் பிறனொருவன்பால் இருத்தி, வஞ்சனை யாற்செய்கிற அன்பெல்லாம் தெளிய அறிந் திருந்தும் பாவஞ் செறிந்த பிறப்பினை யுடையாரே அக்கபட அன்பினை அறியாராவர் என்க.

உள்ளம் ஒருவன் உழையதாய் என்பதற்கு இயைய 'உடம்பு வேறொருவன் உழையதாய்' என்று வருவித்துப் பொருளுரைக்கப் பட்டது. பாவஞ்செறிந்த உடம்பு - பாவப்பிறப்பு. உடம்பு உடம் பெடுத்தலுக் காயிற்று. விலங்கினை வதைசெய்து ஊன்விற்கும் இடத்தினும் பதின்மடங்கு அசுத்தியானது செக்காட்டும் இடம்; அதனினும் பதின் மடங்கு அசுத்தமானது கள் விற்குமிடம்; அதனினும் பதின்மடங்கு அசுத்தமானது விலைமாதர் உடம்பு என்பது அறநூற்றுணிபு. இவ்வுடம்பினர் பொய்ம்முயக்கத்தினை உடையாரைத் திருநீக்கப்பட்டார் என்றார் பொய்யில் புலவரும்.

இவ்வதிகாரமும் மேல் இரண்டு அதிகாரங்களும் காமத்துப் பாலுள் அடங்குவன என்றும், அதனுள் முதலாவது இன்பத் துன்பவியல் என்றும், இவ்வியலுள் இப்பொதுமகளிர் என்ற அதிகாரம் அடங்குமென்றும் கூறுப. இவ்வதிகாரத்திற் கூறியபொது மகளிர், அகப்பொருளிலக்கணங்களுட் கூறப்படும் ஒப்பாரும் மிக்காருமிலாத தலைமகனாற் கொண்டு காமந் துய்க்கப்படும் காமக்கிழத்தி, சேரிப்பரத்தை முதலாயினார் போலாது, செக் கூர்ந்து கொண்டார் முதலான எல்லாரானும் பொதுவாகத் துய்க்கப்படும் இழிந்த குணத்தினாராதலின், எல்லாப் பொருட் கும் கேட்டினைத் தருதலோடு நரகிற்கும் ஏதுவாகிய இவரி யல்பினைக்கூறும் அதிகாரம் திருக்குறளிற்போல பொருட் பாலிலேயே நோக்கத்தக்கதென்க. பரிப்பெருமாளும் வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தைக் 'கேட்டுக்குக் காரணமாதலின், துன்பவியல்' என்று கொண்டார். பரத்தையரோடு தலைமகனுக் குள்ள கூட்டத்தினை மேலையோர் பாவமும் பழியுமெனக் கூறாது, தலைமகனுக்கு அப்பரத்தையர் குரவரால் வகுக்கப்பட்ட உரிமை கள் என்று அமைத்துக்கொண்டமையும் நோக்குக. இஃது இறை யனார்களவியல் 40 ஆம்சூத்திர உரைக்கண் தெற்றெனவிளங்கும்.

(39) 'கற்புடை மகளி'ராவது, கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்று எனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இரு முதுகுரவர் (தாயும் தகப்பனும்) கற்பித்தலானும், வேட்பித்த ஆசிரியன்கண்ணும், கற்பித்த ஆசிரியன்கண் ணும், சான்றோர்கண்ணும், தேவர்கண்ணும் ஒழுகும் ஒழுக்கத்தினைக் கணவன் கற்பித்தலானும் தெளிய அறிந்து, இல்லறத்தினைத் தான் வாழுமூரார் மெச்சும்படி நடாத்தும் நற்குணமுடைய மகளிரது தன்மையாம். கீழ் அதிகாரத்திற் செவ்விய நெறியில் ஒழுகுவார்க்குத் துணை ஆகாத தீயமகளிர் இயல்பு கூறினார், இவ்வதிகாரத்து அச் செவ்விய நெறிச் சேர்வார்க்குத் துணை ஆகின்ற நல்ல மகளிர் இயல்பு கூறுகின்றாராதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

**381.** அயோனிசத்துவமும், வனப்பும் முதலியன உடைமையால் தேவேந்திரன் மனைவிபோலும் பெருங் கீர்த்தியுடைய மனைவியே ஆனாலும், பெறுதற்கரிய தன் கற்பின் மகிமையினாலே தன்னை விரும்பி அடையும் ஆசையால் தன்னை வழிபடும் காமுகர் இல்லையாகத் தன்னைக்காக்கும், இயற்கைமணம் கமழும் நெற்றியினையுடையாளே, இல்லறமாகிய நன்மைக்குத் துணையாவள் என்க.

இதனால் பிறப்பு வனப்பு முதலியவற்றால் ஒருத்தி உத்தம மனைவியாகாள் என்றும், பிறனால் காமிக்கப்படாதவாறு அவன் நெஞ்சினைச் சுடுகிற அருங்கற்புடையாளே இல்லறத்திற்குத் தக்காள் என்றும் கூறினாராயிற்று. மருதி என்ற பார்ப்பனி காவிரி நீராடி வருகின்றாளைக் ககந்தன் மகன் காந்தமன் காமுற்று அழைத்தபோது, அவள் அஞ்சிக் கலங்கி, "மண்திணி ஞாலத்து மழைவளந் தரூஉம், பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்; புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன், முத்தீப்பேணும் முறையெனக்கில்லை" என்று அரற்றினமைகொண்டு, பிறனாற் காமிக்கப் படும் மனைவி இல்லறத்திற்குத் துணையாகாள் என்பதனை அறிக.

ஸர்வாங்க ஸௌந்தரியும் பூஷிதையுமாய் மண மண்டபம் வந்தணைந்த சீதாப்பிராட்டியாரின் வனப்பினை வருணிக்கப் புகுந்த கல்வியிற் பெரியார், "நைவள நவிற்றுமொழி நண்ணவர லோடும், வையநுகர் கொற்றவனு மாதவரு மல்லார், கைகள் தலை புக்கன" என அருளிச்செய்தமை கொண்டு, பிறர் நெஞ்சு சுடும் பெற்றியையுடைய கற்பின் இலக்கணத்தினை அறிக. ஐராணிக்குப் பெரும் பெயராவது, அமுதெழக் கடைந்த காலத்து, அதனோடு உடன் பிறந்தமையும், அநேகம் அச்சரப் பெண்களுக்கு நாயகமாய், அன்ன நடையினள் என்று பொருள் படும் 'சசி' என்ற நாமமுடைமையும் பிறவுமாம். இவ்வாறு சிறந்த அவளும் பிறர் நெஞ்சு சுடும் பெற்றியளன்றி, நகுஷன் நெஞ்சிற் புக்க எண்மை தோன்ற 'ஐராணியன்ன பெரும்பெயர்ப் பெண்டிரெனினும்' என்றார். உம்மை உயர்வு சிறப்பு. பின்னிற்பார் இன்மையாதற்கு அரும் பெறற் கற்புக் காரணமாயிற்று. பின்னிற்றலாவது - வழிபடுதல். நன்மைக்குத் துணை என்று நான்காவது விரிக்க. நன்மையாவது ஈண்டு இல்லறம். பின்னிற்பாரின்மையையுடைய நறுநுதலாள்

என்றும், (கணவனைப்) பேணும் நறுநுதலாள் என்றும் கூட்டலுமாம். பேணுதல் கணவனைப் புறந்தரும் விருப்பத்தை உடைத்தாதல். இன்மையே என்புழி ஏகாரம்பிரிநிலை; கற்பின் - கற்பால். 'பின்னிற்பாரின்மையே பேணும்' என்பதற்கு, "பின்னில்லாத படிக்குத் தன் மேனியை அழுக்கடையப் பண்ணிக் கொண்டிருக்கிற" என்பது ஒரு பழைய உரை.

இனி, 'காமஞ்சான்ற கடைக்கோட்காலை' என்ற சூத்திரத்திற்கு இப்பாடலை உதாரணமாகக் கொண்டு, "இதனுள் அருந்ததியைப்போலும், தமக்குப்பெரும் பொருள்களை நச்சுதலாலே இரப்பாரது வறுமையையே விரும்பிப் பாதுகாத்து, அவர்க்கு வேண்டுவன கொடுக்கும் மகளிர் நாம் செல்கின்ற வானப்பிரத்த காருகத்திற்குத் துணை ஆவர் எனத் தலைவன் கூறவே, தலைவியும் பொருள்களிற் பற்றற்றாளாய் யாமும் துறவறத்தின்மேற் செல்வாமெனக் கூறியவாறு காண்க" என்றார் நச். (தொல். பொருள். சூ. 192)

382. "ஒருகுடம் நீராற் சோறமைத்து உண்ணுமாறு மிடிப்பட்ட காலத்தும் மடங்கலந்த மொழியும், கணவன்மேற் காதலும் மனைக்கு மாட்சிமையும் உடையாள் கடல்நீரை எல்லாம் வற்ற உண்ணும் கேளிர் வரினும் முன்னம் செல்வமுள்ள காலத்திற் போல மகிழ்ச்சி யுடன் இல்லறம் நிகழ்த்துதலைத் தன்ஒழுக்க நெறியாகக் கொள்ளும்" என்க.

மிடிப்பட்ட காலத்தும் இல்லறம் நிகழ்த்துதலை நெறியாகக் கொள்ளும் என்றமையால், முன் செல்வமுள்ள காலத்து இல்லறம் நிகழ்த்தினமை உணரப்படும்; உம்மை இறந்தது தழீஇயது. கடன் நீர்மையாவது, இல்லறக் கடமைகளை நிகழ்த்தும் தன்மை. அக்கடன்களாவன, "அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்" ஆம். கேளிர் உண்டற்கே ஒரு கடல் நீர் முற்றும் வேண்டும் எனவே, அவர் பன்மை சிந்திக்கப்படும். மடமொழி என்றமையால், கேளிர்க்கு இன்சொற் கூறன்முதலியன கொள்ளப்படும். கையாறு - கைக்கு ஆறு என நான்காவது விரிக்க; ஒழுக்கநெறி என்க. 'மாதர், காதல்'. (தொல். சொல், 328). "நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளினும்

என்னும் பகுதிக்கு இதனை உதாரணமாகக் காட்டித் தன் மனைவி இவ்வாறு செய்ய வல்லவள் எனத்தலைவன் வியந்து கூறிய தென்பர் நச். (தொல். பொருள். 146)

383. தன் இல்லமானது நான்கு திக்கிலும் வழியாய், மிகச் சிறிதாய், மேலாகப் பெய்கிற மழை கூறைவழியாக எப்புறத்தினும் கொட்டினாலும் உத்தமமான இல்லற ஒழுக்கத்தினை ஒழுகுவதில் வல்லவளாய்த் தான் வாழுமூரார் தன்னைப் புகழும்படியான மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய மனைவி அமைந்து நின்றதே இல்லறமாவது என்க.

நாலாறு என்புழி, ஆறு - திசையினை உணர்த்திற்று. உறை - மழைத்துளி. மேலாய - மேலாய ஒழுக்கங்கள். இல் ஈண்டு இல்லறத்தினை உணர்த்தினது, ஆகுபெயர். இப்பாடலைப் 'பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றம் சான்ற பொருள் எடுத்துரைப்பினும்' என்னும் பகுதிக்கு உதாரணமாகக் காட்டி, 'இதனுள் மனைவி அமைந்து நின்ற இந்நிலையே இல்லறமாவ தெனவே, யாம் முன்னர் ஒழுகிய ஒழுக்கமும் இத்துணை நன்மை யாயிற்று என்றானாயிற்று. இது குறிப்பெச்சம்'' என்பர் நச். (தொல். பொருள். 146)

384. கண்ணுக்கு இனியவளும் காதலனது விருப்பின் வகை தன்னை அலங்கரித்துக் கொள்ளுகின்றவளும், தன்கற்பினால் தன்னையாரும் அஞ்சும் மதிப்பினை யுடையவளும், ஒப்புரவு செய்யும் இயற்கைக் குணமுடையவளும், கணவனைக் கண்டவிடத்துத் தலைநாளிற் போலக் கூசுபவளும், இடம் அறிந்து புலந்து, இன்பம் பயக்குமாறு புலவி நீங்குபவளும், மடப்பத்தினை யுடையமொழியினையுடையவளும், கணவனுடைய காதலையுடையவளுமே மனையறத்திற்குப் பொருந்திய மனைவி யாவள் என்க.

'காதலன் காதல் வகைபுனைவாள்' என்பதற்குக் 'கணவன் கண்டு காதலிக்கும் வகை புனைவாள்' என்பது ஒரு பழைய உரை. உட்குடைமை, இவளது கற்புச்சிறப்புப் பிறர்க்கு அச்சம்செய்தல் அஃது 'ஆண்மகன் கையி லயில்வாள் அனைத்து' என்பர் முன்னும் ஊராண் இயல்பாவது, முன் 'குடநீரட்டுண்ணும்' என்னும் பாடலிற்கூறிய இயல்புடைமை. தலைமகனை வணக்கஞ் செய்தும், தலை

மகற்கு எதிர்மொழியாது, வினையவழிப் பிறராற் கூற்று நிகழ்த்தியும், எதிர்ப்பட்டுழி எழுந்தொடுங்கியும் ஒழுகுதல் தலைமகளது இயல்பாதலால், 'உட்கி' என்றார். இடனறிந்து ஊடலாவது, தலைமகன் தவறிலனாயவிடத்து ஊடுதல்; அவன் அவ்வூடலை, "ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல் வெயர்ப்பக், கூடலிற் றோன்றிய உப்பு" என்று விரும்புவனாதலின். 'துனிநனி கன்றிடிற் காமங் கெடூஉம் (பரிபா. 6) என்பவாதலின் 'இனிதின் உணரும்' என்றார். மடமொழியாவது இராமபிரானுடன் காடு நோக்கிப் புறப்பட்ட சீதாப்பிராட்டியார், 'ஆண்ட நகர் ஆரையொடு வாயிலக லாமுன், யாண்டையது கானென இசைத்தது' போன்றது. பெண், மனைவி; இச்சொல் இப்பொருளில் வருவதனைக் கீழ் 87 ஆம் பாடலில் 'வம்பலன் பெண் மரீஇ' என்புழிக் காட்டினோம். ஊர் நாணியல்பினள் என்னும் பாடத்திற்கு ஊரார் தன் நற்குண நற் செய்கையைக் கண்டு நாணும்படியான நல்லியல்பினள் என்க.

"கழிவினும் வரவினும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்துக்கு இப்பாடலை உதாரணமாகக் காட்டி, "கட்கினியாள், இது காமம்; வகை புனைவாள், இது கற்பு; உட்குடையாள், இஃது ஒழுக்கம்; ஊராண்மை, இது சுற்றம் ஓம்பல்; ஊடி உணர்தல், இஃ தல்லவை கடிதல்" என்றார் நச். (தொல். பொருள். சூ. 153)

385. எம் கணவர் எந்நாளும் எம்முடைய தோளின் மேல் முயங்கிச் சிறப்புற்றாலும், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தநாளிற் கண்டேம்போல அவரைக் காணும் எந்நாளும் நாணுவேம், எம்மியல்பு இவ்வாறாக, பொருண்மேலுள்ள விருப்பத்தால் பலர் மார்பினையும் அணைத்து ஒழுகும் பரத்தையர் நம் கணவரோடு நாணாது உறவினராகின்றனரே! இஃது என்ன அதிசயங்கொல் என்க.

இனி, "பொருள் நசையால் பன்மார்பு சேர்ந்தொழுகும் நாணமற்ற பரத்தையர் நம் கணவர்க்கு நாண் கற்புமுதலிய குணங்களமைந்த நம்மினும் என்ன அதிகம் உறவினரோ!" எனலுமாம். இப் பாடலை, பரத்தையரோடுகூடிப் பிரிந்துவந்த தலைமகன் தலைமகளோடு தன்னைக் கூட்டுவிக்குமாறு தோழியை வேண்ட, தோழி மறுத்துச் செல்லியதாகக் கொள்க. கெழுவென்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நின்று பொருத்தத்தினை உணர்த்திற்று.

386. நாண்முதலிய குணங்கள் நான்கினையும் பெற்ற தலைவி இல்லறப் பகுதியை நிகழ்த்துமாறு தன்மனத்திற் பலவகையாகக் காணுமியல்பின் நலமானது, மனத்திலே உணர்வினை உடையவன் ஓதிய நூல் விரியுமாறுபோல விரியாநின்றது; கொடை நலமானது வள்ளன்மை பூண்டான் அறத்தான் ஈட்டிய பொருள்போலச் செவ்வியுறுகின்றது; கற்புநலம் பிறர்க்கு அச்சஞ் செய்தலின் அறிவுடைய ஆண்மகன் கையிலுள்ள கூரிய வாள்போன்றுளது என்க.

தெள்ளிய ஆண்மகன் என்றது, காப்பன காத்துக் கடிவன கடியும் விவேகமுடையானை. இதனால், தலைமகள் தன்மனத்தால் இல்லறம் நிகழ்த்துமாற்றைப் பலவகையாகக் காணலும், பிறர்க்குத் தான் கொடுத்தலும், கற்புச்சிறத்தலும் கூறப்பட்டன. "அஞ்ச வந்த உரிமைக்கண்ணும்" என்னும் பகுதிக்கு இப்பாடலை உதாரணமாகக்காட்டி, "இது தலைவன் தலைமகள் உரிமைகளை வியந்து கூறியவாறு" என்பர் நச்சினார்க்கினியர். (தொல், பொருள் 146.) கடிமனை புக்கசெவிலி அவ்வாறு வியந்து நற்றாய்க்குக் கூறியதாகக் கொள்ளலுமாம்.

387. என்னோடு வனப்பு கற்பு நாண்முதலிய எல்லாவற்றாலும் ஒருங்கு ஒவ்வாது முகம் ஒன்று மாத்திரம் அழகிய பரத்தையரை முயங்கிய மலைபோலும் மார்பினையுடைய தலைமகன் நீராடாது என்னையும் முயங்கவரும்; அஃது ஊரன் கருங்கொள்ளையும் செங்கொள்ளையும் ஒப்பக்கருதித் தூணிப்பதக்கு என்று விலைக்குக் கொண்டானாகும் என்க.

வரைமார்பின் என்னும் பாடத்திற்கு நன்னுதலாரைத் தோய்ந்த மார்பினோடு என்னையும் தோயவரும் என்று பொருள் கூறுக. உயர்ந்த சாதியான செங்கொள்ளை இழிந்த சாதியான கருங்கொள்ளோடு ஊரன் ஒப்பக் கருதினமைபோலக் குலமகளோடு பொதுமகளை ஒப்பக் கருதினான் என்று பிறப்புவமப் போலியாகக் கொள்க. "தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின், வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும், பிறப்பினும் வரூஉம் திறத்தியலென்ப" என்பது தொல்காப்பியம். குலத்தால் உயர்ந்த தலைமகனே! இழிந்தாரான பரத்தைமகளிரைத் தோய்ந்து எச்சிற்பட்டாய்; மேற்குலத்துப் பிறந்த எம்மைத் தீண்டல்; நீராடிவா

எனத் தலைமகற்கு வாயின் மறுத்ததாகக் கொள்க. பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது இப்பாட்டு. தூணி - நான்கு மரக்கால், பதக்கு இரண்டுமரக் கால்; தூணிப்பதக்கு ஆறுமரக்கால். சைனர்க்குக் கொள்ளின் கஞ்சி ஆகாரமாதலால், அம்மதத்தினரான இவ்வாசிரியர் கொள்ளை எடுத்தோதினரென ஊகித்தலுமாம். அஃதவர்க்கு ஆகாரமென்பு தனை மிருச்சகடிகை முதலிய வடமொழி நூல்களிலும் காண்க. 'நீராடாது' என்பதற்கு, தன் உயர்ந்த குலத்தின் தன்மையிற் பழகாது எனவுமாம். நீர் - தன்மை. 'நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநீர் போல' என்புழிப்போல (அகம் 62). ஆடுதல் - பயிலுதல்.

388. ஊரனை தலைவனுக்குத் துடியின் இடப்புறத்துக் கண்ணை ஒப்போமாதலால், பாணனே! நீ தலைவனைப் பற்றிக்கொடியவற்றை என்பாற் கூறுகின்றாய்; இனி அவ்வாறு கூறாதே கொள்; உனக்குத் தலைவன்மேற் கொடுமைகூற விருப்புளதாயின், மெல்ல அடியிட்டு விலகி, துடியின் வலப்புறக் கண்ணை ஒத்தாரான பரத்தையர் மாட்டுச் சென்று சொல்லு என்க.

இப்பாட்டு, தலைமகன் வாயில்பெற்றுப் புகுந்தது அறியாது வந்த பாணனுக்குத் தலைமகள் நகையாடிச் சொல்லியது. அஃதாவது வாயில்கள் பன்னிருவருள் ஒருவனை பாணன் தலைவியை ஊடல் தணிவித்துத் தலைமகனை அவளொடுங் கூட்ட எண்ணித் தலைமகன் கொடுமையைக் கூற, அவன் கருத்தினை அறிந்த தலைவி, தான் முன்னரே ஊடல் நீங்கித் தலைவனைக் கூடினமை தோன்றப் பாணனோடு நகையாடி, 'நீஎன்பால் தலைமகன் கொடுமையைக் கூறவேண்டா; அதை நான் கேட்டுப் பொறுத்திரேன்; மற்றும் அவன் இதுபோழ்து என்மாட்டுளன்; நீமெல்லச் சென்று பரத்தைக்குத் தலைமகன் கொடுமைகளைக் கூறுவாயாக; அவள் கேட்டுச் சகித்திருப்பள்' என்றாள். தலைமகன் கொடுமையைப் பிறர்கூறக்கேட்டுத் தலைமகள் சகியாது இயற்படமொழிதலியல்பாதலின் இவ்வாறுகூறினாள். துடியின் இடக்கண் அடித்துப் பயன்கொள்ளப் பெறாததுபோல யாமும் தலைவனால் தழுவிப்பயன் கொள்ளப்படாதேம் என்றும், அத்துடியின் வலக்கண் அடித்துப் பயன் கொள்ளப் பெறுதல்போலப் பரத்தை தலைவனால் தழுவிப்

பயன்கொள்ளப் பெறுகிருளென்றும் கூறினாளாம். கண் - துடி முழவு முதலியவற்றின் அடிக்கும் இடம். 'அடிபையவிட்டு ஓதுங் கிச்சென்று' என்ருள், நீ இவண் வந்ததனைப் பரத்தை அறியின் வெகுளுவாள் என்னுங் கருத்தால். 'நிலம் பெயர்ந் துறைதல் வரைநிலை யுரைத்தல், கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்த வென்ப' என்பதனுல் பாணன் கூற்று நிகழ்ந்தது.

389. நீர் ஒழுக்கிற்கு இடையூருயிருந்த கோரையைப் பறித் தெறிந்ததனுலே நீர் தடையின்றி ஒழுகும் தண்ணிய வயல்கள் சூழ்ந்த ஊரனை தலைவன்மீது ஒரு பெண் ஈப் பறந்து உட்கார வும் முன் புலந்து ஊடினவளும் யானே, இப்போது தீப்பறக்கு மாறு தாக்கிப் பரத்தையர் முலைகள் மோதிய தலைமகனது குளிர்ந்த சந்தன மணிந்த மார்பினை நோக்கியும் பிராணனை விடாமல் இருந் தவளும் யானே என்க.

இப்பாட்டு, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனேடு நீபுல வாமைக்குக் காரணம் யாதென்று வினவிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்று கொள்க. சாய் - கோரை. அதனைப் பறிக்க நீர்திகழும் ஊரன் எனவே தலைமகன் என்மேல் அன்புசெய்தற்குத் தடையாயிருந்த என் புலவியை நீக்க, அவன் பெரிதும் தலையளி செய்தானென்றவாறு. யான் புலந்தே நிற்பின், அவன் என்னை அகன்று பரத்தையர் மாட்டுச் செல்லவுங் கூடுமாதலால் என் புலவி கழிந்தது என்றமையால், மன் கழிவின்கண் வந்தது. ஈப் பறக்கவும் எனற்பால சிறப்பும்மை விகாரத்தாற் ருெக்கது. இது புலவி பொருளாகத் தோன்றும் அச்சமாம்; 'பிணங்கல் சாலா அச்சம்' (தொல். பொருள். 256) என்றமையான் இஃது அமைந்தது. உம்மைகளுள் முன்னையது எதிரது தழீஇயது; பின் னையது இறந்தது தழீஇயது. ஏகாரம் தேற்றம்.

390. அரும்பு மலரும் மாலையினனுகிய தலைவன் எம்மை அருளுமென்று பெரிய பொய் வார்த்தையை உரையாதேகொள், பாணனே! ஏனெனில் ஊரனுக்கு யாம் கரும்பின் நுனியிலுள்ள கணுக்கள்போல ருசியற் றிருக்கிறேம்; அக் கரும்பின் நடுப்பாகத் திலுள்ள கணுக்கள் போலத் தலைமகனுக்கு ருசி மிக்க அப்பரத் தையர்க்குச் சென்று அதனை உரைப்பாயாக என்க.

இப்பாட்டு வாயில் வேண்டிச்சென்ற பாணனுக்குத் தலைமகள் வாயில் மறுத்தது. அஃதாவது பாணன் தலைமகள்மாட்டு வந்து "தலைவீ! உன்னோடு கூட்டம் வேண்டித் தலைமகன் நின் தலைவாயிலின்கண் நின்றுகொண்டு, நீ அருள்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறான்; உன் குறிப்பென்னை?" என்றானாகத் தலைமகள் பாணனொடு வெகுண்டு மேற்கூறியவாறு கூறினாள் என்பது. மலராத பருவத்தினையுடைய அரும்பினை (வண்டு) அவிழ்க்குந் தாரினான் எனவே புலவி உணர்த்தவும் உணருஞ் செவ்வியில்லாத என்னைப் பயனின்றியே புலவி உணர்த்துவான் என்றாளாம். அன்றியும் அகமலர்ந்து எதிரேற்றுக் கொள்ளாத காமஞ்சாலா இளமையோளை நுகர்ந்தான் என்று புலந்தாளுமாம். அரும்பு, போதாய், அதன் பின்னரே மலருமென்ப. (குறள். 1227)

மூன்றாவது, 'காமத்துப்பா'லாவது காமத்தைப்பற்றிக் கூறும் பகுதியாம். காமமாவது ஈண்டு தர்மத்திற்கும் அர்த்தத்திற்கும் மாறுகோளில்லாத இன்பமாம். அஃது 'அகம்' என்று தமிழ் மொழியாளராற் கூறப்படும். அவர் கூறும் அகமாவது, "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்து உணர்வே நுகர்ந்து, இன்பம் உறுவதோர் பொருளாம்;" "அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு 'அகம்' என்றது ஓர் ஆகுபெயர்" என்பது. முதலில் அறப்பகுதியினைக் கூறியமுறையானேபின்னர்பொருட்பகுதியினைக் கூறினார், ஈண்டு முறையானே இன்பப் பகுதியினைக் கூறுகின்றார். "முன்னாலே இன்பப்பகுதியினைச்சொல்லி, பின்பு உலக முறைமையான் பொருட்பகுதியினைச் சொல்லி, அதன்பின்பு அறப்பகுதியினைச் சொல்லி, வீடுபேற்றிலே முற்றுவிக்க வேண்டாவோ எனில் அவ்வாறன்று, இளமைப் பருவத்திலே அறத்தினை உணர்த்தும் நூல்களைக் கற்பித்து, பின்பு மணஞ்செய்வித்து, அந்த இல்லற முறைக்கேற்க ஒழுகும்படிபண்ணி, பின்னர் உலகத்தினை நல்வழியில் நடாத்துதற்கு மநுமுதலிய நூல்களிற் கூறியபடி ஒழுகு

வித்து, பின்னர் இந்தப் பிரபஞ்சம் மேலுமுண்டாய் வருதற் பொருட்டு இன்பப்பகுதியினைச் சொன்னாரென்பது. அற்றாயின், வீடுபேறு சொல்ல வேண்டாவோ எனின், முன்பு சொன்ன முறைகளின்வழி வழுவாது ஒழுகி இன்பமனுபவித்து, அறுபது வயதின்மேல் முழுவதும் துறந்து, உண்மைப்பொருளை அறிந்து பற்றினை விடவே, வீடுபெறுமாதலால், அதற்கென ஒரு பகுதி உரைக்க வேண்டா என்பதாய்".

(40) 'காமநுதலிய'லாவது, காமத்தினைக்குறித்துக் கூறும் இயலாம். கீழ்க் கற்புடை மகளிர் அதிகாரத்துக் கூறப்பட்ட மாண்புடைய மனைவியோடு காமத்தினைக் கருதி அறத்திற்கும் பொருளுக்கும் விரோதமின்றி ஒழுகுதலாம். அவ்வாறு ஒழுக, இம்மை மறுமைப் பயன்களுளவாம்.

391. புணராவிடின் பசலைபாயும்; பிணங்கி மெலியாவிடில் காமம் சுவையினை யுடையதாகாது; ஆதலால், தெளிந்த கடல் ஒருபடியாக நில்லாமல் திரையால் அலைக்கின்ற நீண்ட கழியை யுடைய குளிர்ந்த கடற்கரையை யுடையவனே! புணர்ந்து பின்னும் புலப்பது காமஞ் சிறத்தற்கு ஒரு வழியாம் என்க.

இப்பாட்டு, தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழி உவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது என்க. இது, ஊடுதலின் கண்ணே உவகை பிறத்தலின் ஊடலுவகை என்க. பசலையாவது, மகளிர் கணவனைப் பிரிந்தகாலத்து அவர்க்கு முன்புள்ள நெற்றியின் ஒளிகெட்டுக் கண்ணாடியில் வாயினால் ஊதிய பொழுது ஆவிபடர்ந்து ஒளி மழுங்குவதுபோல வேறுபட்டுக் காட்டுந் தன்மை. உப்பு - இனிமை. காமத்திற்குப் 'புணர்தலின் ஊடல் இனிது' ஆகலான், 'புல்லாப் புலப்பது ஓர் ஆறு' என்றார். ஒருபடியாக நில்லாது அலைகள் மாறிமாறி அலைத்தலால் கழிசிறப்புறுதல்போல, ஒருபடியாக ஊடலாதல் கூடலாதல் இன்றி மாறி மாறிச் செய்தல் காமத்திற்குச் சிறப்பு ஆகின்றது என்பது உள்ளுறைப்பொருள். மற்று, வினைமாற்று; முயங்கும் வினையை மாற்றுதலின். "தலைமகற்கு வாயில்நேர்ந்த தோழி தலைமகள்புலவி நீங்கச் சொல்லியது" என்பது ஒரு பழைய உரை. உள்ளுறை இரண்டிற்கும் பொருந்துமாறு காண்க.

**392.** தம்மால் விரும்பப்பட்ட காதலரது தார்சூழ்ந்து அழகு பெற்ற மார்பினை முலைகள் விம்மப் புணருமளவு மில்லாத மகளிர்க்கு மேகம் இம்மென்று பெய்ய முழங்குகின்ற திசைகள் எல்லாம் சாப்பறை கொட்டினாற்போலும் தன்மைத்து என்க.

இது, "பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைவி தோழிக்குச்சொல்லியது." அஃதாவது, வினைமேலாவது பொருள் மேலாவது சென்ற தலைமகன், 'கார்காலத்து வருவேன்' என்று வற்புறுத்திப் பிரிந்தான், அக்காலம் வந்தும் அவன் வாராமையால், தலைமகள் பிரிவு ஆற்றாது தோழிக்குச் சொல்லியது என்க. 'வேந்துறு தொழிலே யாண்டினதகமே' என்பவாதலால், வினைமேற்பிரிவு ஆறுமாதம் இடையிட்டது. வினைமேற் சேறலாவது போர்க்குப் புறப்பட்டுப் போவது. பொருள்மேற் சேறலாவது, பொருள் ஈட்டி வரப் போவது. இப்பிரிவும் ஆறு திங்கள் இடையிட்டது. 'ஏனைப் பிரிவு மவ்வயி னிலையும்' என்பது தொல்காப்பியம். தார் - மாலை. அது மார்பில் அணிவது. 'இம்' ஒலிக்குறிப்பு.

**393.** கம்மத் தொழில் செய்கின்ற கம்மாளர்கள் தம் தொழிற் கருவியை ஒடுக்கி வேலையை நிறுத்தும் மயக்கஞ் செய்யும் மாலைப் பொழுதிலே நல்ல மலர்களைப் பொறுக்கி மாலை தொடுக்கின்ற தலைவி தான் தொடுத்த மாலையைக் கையினின்றும் நழுவவிட்டு, நாயகனாகிய துணையில்லாதவர்க்கு இம்மாலை என்னபயன் தருவது என்று சொல்லி அழுதாள் என்க.

இது, தலைமகள் செலவு உடம்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது. அஃதாவது, தலைமகன் வினைமேலாதல் பொருள்மேலாதல் செல்லவேண்டித் தோழிமூலமாகத் தன் நினைவினைத் தலைவிக்கு உணர்த்த, தலைவி அதற்கு உடன்படாது சொல்லியதனைத் தோழி தலைமகனிடம் வந்துகூறியதாம். கம்மம் - கம்மாளர் செய்யும் தொழில். கம்மஞ் செய் மாக்களும் கருவி ஒடுக்கினர் என்றமையால் தலைவனும் வினைமேற் சேறல் ஒழிவானாக என்பது உள்ளுறைப் பொருள். என்று - 'என்றுசொல்லி' எனப் பொருள் படுதலால் சொல்லெச்சம்.

**394.** அஸ்தமயமாகும் சூரியனை நோக்கி, வண்டு போன்ற, இரேகைகளையுடைய தன்கண்ணிலே கொண்ட நீரை மெல்லிய

விரலாலே முறையேவழித்துத் தெறித்து, சயனத்தின்மேலே தன் தோளை வைத்துக்கிடந்து விம்மி, கூறிய பருவத்து நாம் வாராது தாழ்த்துக்குற்றஞ்செய்த நாள்களாகச்சுவரின்கண் இழைத்தவற்றை மெல்லிய விரலில் வைத்து எண்ணுமோ தலைவி! அந்தோ என்க.

இது, வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது. அஃதாவது போரில் வெற்றிபெற்று மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்கும்படி சொல்லியதாம். செல்சுடர் - வீழ்கின்ற சூரியன்; சிதர் - வண்டு. சிதர்க்கண்; அரிக்கண் என்க. ஊழ் - முறை. நாள் - நாளை உணர்த்தும் சுவரிலுள்ள கோட்டுக்கு ஆகுபெயர். 'நாளொற்றித் தேய்ந்தவிரல்' என்புழிப்போல. வினை முடித்து மீளுந்தலைமகன் மாலைக்காலத்தே தன்பதி வந்தணைவதாகச் செய்யுள் செய்வது மரபாதலின் தலைவி மாலைக்காலத்தில் அவன் வரவை எதிர்நோக்கி யிருந்தாளென்க.

395. பாங்கனே! கேட்பாயாக; சிறு சிரலானது என் மனத்தைக் கவர்ந்துகொண்ட காதலி கண்ணைத் தன் உணவாகிய கயல் என்னும் விபரீத உணர்ச்சியால் அவள் பின்னே சென்றது; பின் சென்றும், முயற்சியோடு குத்த எழுந்தும் ஒள்ளிய வளைத்த புருவமானவை வில்வளைவாமென்று அறிந்து அஞ்சி, குத்தமாட்டாதாயிற்று என்க.

இது, தலைமகன் தானுற்றதனைப் பாங்கற்குச் சொல்லியது. அஃதாவது தலைமகன் தான் கண்ட தலைவியின் இயல்பு இன்னவாருகும் என்று தன் உயிர்ப்பாங்கனுக்குச் சொல்லியது என்க. பாங்கனுவான், பேரறிவும், பெருங் கல்வியுமுடைய பார்ப்பான்; அவன் தலைவனுக்கு இன்றியமையாதவன். அவன் அறியாதது தலைமக னிடம்ஒன்றுமில்லை யென்பது மரபு. சிரல் புருவத்தினை வில்லென்று அஞ்சி எறியாது விலகியதுபோல, தோழியையும் ஆயத்தினையுங்கண்டு அஞ்சாநின்றேன் யான், நீ என் அச்சத்தினை ஒழித்துத்தலைமகளுடன் என்னைக் கூட்டக்கடவாய் என்றுபாங்கற் கூட்டம் வேண்டினனுகக் கொள்க. சிரல் - சிச்சிலிப்புள்; அது மீனுண்ணும் பறவைகளுள் ஒன்று. அம்ம - கேள். 'எறிகல்லாது' எனற்பாலது கடைக்குறையாய் 'எறிகல்லா' எனநின்றது.

396. சிவந்தஆம்பல்போல மணங்கமழும் வாயையும் அழகிய மருங்குலையுமுடைய என்மகளின், சிவப்புமிக்க செம்பஞ்சிக் குழம்பினைப் பஞ்சினைக்கொண்டு ஊட்டினாலும் 'மெல்ல ஊட்டு மெல்ல ஊட்டு' என்று கூசி, உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும் அடிகள் இப்போது பரலையுடைய கானத்தை சகித்தனவோ ஐயோ! என்க.

இது, மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது; நற்றாய் சொல்லியதூஉமாம். அஃதாவது தலைமகனுடன் தலைமகள் இல்லவர் அறியாமல் இரவே தலைமகன் ஊர்க்குப் போய்விட, அவள் போன நெறி பாலை நிலமாதலால், அதன் கொடுமையைக் கூறி, இரங்கிச் சொல்லியதாம். இவ்வாறு நற்றாய் சொல்லியதும் ஆம். நற்றாய் ஆவாள் தலைவியைப் பெற்ற மனைக்கிழத்தி. செவிலியாவாள் தாயின் தோழி. மருங்கிற்கு அடிகள் கானம் ஆற்றின கொல்லோ என்று கூட்டுக. பஞ்சி ஊட்ட அடிகள் அஞ்சும் என்று அவற்றின் மென்மையை விளக்கினார். "பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவி" என்றார் கல்வியிற் பெரியாரும். மகளிர் வாயின் பரிமளத்திற்குச் செவ்வாம்பல் மலரை உவமைகூறுவது வழக்கு; "ஆம்பல் நாறும் தேம்பொதி கிளவி" என்றார் பிறரும். அன்னே, இரக்கம் குறித்துவந்தது. 'பையவென' எனற்பாலது பையென என்று தொகுத்து நின்றது.

397. ஓலைக்கணக்கு எழுதுவோர்களின் ஒலி அடங்குகின்ற புல்லிய சிவந்த அந்திப்பொழுதின்கண்ணே இயற்கைப் புணர்ச்சி புணர்ந்துபோன தலைமகனது பிரிவை நினைந்து, தன் அழகிய முலை மேற்பூசி அழகு செய்கின்ற சந்தனத்தோடு மாலையையும் வீசியெறிந்து அழுதாள் என்க.

இது, தலைமகன் ஒருவழித் தணந்து வந்தமையுணர்ந்த தோழி அவன் பிரிவை ஆற்றாத தலைவியின் நிலைமையைச் சிறைப்புறமாகக் கூறியது. அஃதாவது தலைமகன் தலைமகளைச் சிலநாள் நீங்கி மறுபடி அணைய, அவன் பிரிந்தகாலத்தில் தலைவி வருந்தியதைத் தலைமகன் கேட்குமாற்றால் மறைந்து நின்று கூறியதாம். வன முலைமேற் றிமிர்ந்து கோலஞ்செய் சாந்தோடு மாலை பரிந்திட்டு அழுதாள் என்று கூட்டுக. அஃதாவது இயற்கை யழகுள்ள முலை மேலே திமிர்ந்ததனால் செயற்கையழகும் செய்கிற சந்தனத்தோடு

மாலையையும் வீசி எறிந்து அழுதாள் என்க. நாயகன் இல்லாக் காலத்துச் செயற்கையழகு செய்வனவான சந்தனக்கோலமும் பூமாலையும் வேண்டாமென்று வீசினுள் என்பது குறிப்பு. இதனால் தலைமகனை வரைவொடு புகுமாறு (வெளிப்பட மணந்து கொண்டு போமாறு) குறிப்பா லுணர்த்தினாளாம்.

**398.** பிரகாசம் பொருந்திய தொடியினையுடைய தோழீ! மெல்லியல்புடைய மகளிரால் கடந்துசெல்ல ஒண்ணாத பாலை நிலத்துவழியில் காளைபோன்ற தலைவன் பின்னாலே நாளை நடந்து செல்ல மாட்டுவையோ என்று ஐயமுறுகின்றாய்; பெருங் குதிரையை ஒருவன் பெற்றானாகில், அப்போதே அதனை ஊரு மாற்றையும் அவன் கற்றுணுவான் என்க.

இஃது உடன்போக்கு நேர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. அஃதாவது தலைவனுடன் அவன் ஊர்க்குப் போக உடன்பட்ட தலைமகள் தோழிக்கு ஐயம்நீங்கத் தன் கடைப்பிடியைச் சொல்லியதாம். இது, தலைமகளையும் தலைமகனையும் உடன்போக்குப் பொருத்துவித்த தோழி செவிலியுழைச்சென்று அறத்தொடு நின்றாளாக, அவ்வறத்தொடுநிலை மாட்சிமைப் பட்டமையால், தலைமகளைநோக்கி, நீ, "நீரில் ஆற்றிடைப்போய் வருந்துங்குறையென்னை?" என்றாட்குத் தலைவி அறத்தொடுநிலை மாட்சிமைப் பட்டதறியாது கூறியதாம். "வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி" என்றதனால் இது பெறப்பட்டது. (இறை. களவு.சூ. 23)

காளை என்று தலைமகனைக் கூறினமையால் அவன் பாலை நிலத்துத் தலைவனாயினான். குதிரையைப் பெற்ற ஒருவன் அதனை ஊருமாற்றைக் கற்கவேண்டுவதுபோல நாயகனைப் பெற்ற யான் அவன் குறிப்பறிந்து ஒழுகும் கற்பொழுக்கத்தினை மேற்கொண்டேனென்று தான் பேரிற்கிழத்தி யாயினமை கூறினாளாம். கற்றான் என்பது துணிவு பற்றிவந்த காலவழுவமைதி.

**399.** பூவிலுறையும் பாவையாகிய திருமகள்போலும் என் மகள் நேற்று என் முலையின்கண்ணும் முத்துவடமும் தன் மெய் முழுவதும் பொருந்துமாறு தழுவிய குறிப்பினை யான் அது போழ்து சிறிதும் அறிந்தேனில்லை; அது கலைமானின் கூட்டங்கள்

வேங்கையை வெருவி ஓடும் நெறியிலே தலைமகனோடு செல்ல வேண்டிச்செய்த குறிபோலும் என்க.

இஃது உடன்போயின தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனையின்கண் மயங்கியது. நற்றாய் மயங்கியதூஉமாம். அஃதாவது, தோழியால் தலைமகள் தலைமகனுடன் போயினள் என்று சொல்லக்கேட்ட செவிலி முன்னாள் நடந்ததனை நினைத்துச் சொல்லியது. நற்றாய் அவ்விஷயத்தைச் செவிலிசொல்லக் கேட்டுச் சொல்லியதும் ஆகும்.

முத்து, அதன் வடத்துக்கு ஆயினது ஆகுபெயர். முழு மெய்யும், மெய்முழுதும் என்று மாறுக. இலக்கணம் - குறிப்பு 'கலைக்கணம் வேங்கை வெரூஉம்' என்றதன் கருத்து தலைமகனும் அவனைச் சார்ந்தாரும் சான்றோரை முன்னிட்டு வரைவொடுபுகுதற்குத் தலைமகள் தந்தையை அஞ்சினார்கள் என்றவாறு.

400. பொன்போலும் சுணங்கினையுடைய கோங்கரும்பு போலும் முலையினையுடை தோழீ! கண் மூன்றுடைய சிவபெருமானும், காக்கையும், படத்தினையுடைய பாம்பும், என்னைப்பெற்ற தாயும் எனக்குச் செய்த பிழை என்ன? பொருளை நாடிப்பிரிந்த தலைவர் சென்ற அங்நெடிய வழியே பிழைசெய்தது என்க.

இது, தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. ஈண்டுப் பொருள் வயிற் பிரிவு தலைமகன், 'யான் பொருள் ஈட்டிவந்து, தலைமகளை வரைவல்' (மணஞ்செய்வல்) என்று பிரிவது.

"பொன்போலும் நிறத்தையுடைய கோங்கினது அரும்பை ஒத்தமுலையினை யுடையாய்! காமனை உருவழித்துப் பின்னுமவனை உளனாக்கிய மூன்று கண்ணையுடைய சிவனும், குயிலை வளர்த்து விட்டகாக்கையும், மதியைஅடைய விழுங்கிப்பின்பு முளதாக்கி விட்ட படத்தையுடைய பாம்பும், இத்துன்ப முறுதற்கு என்னை ஈன்ற தாயும் எனக்குப்பிழை செய்ததென்னை? பொருள்வயிற் பிரிந்து நம்முடைய தலைவர் போயின நெறியன்றே பிழைசெய்தது என்றவாறு" என்பது ஒரு பழைய உரை.

பொன், அது போன்ற சுணங்கிற்கு ஆகுபெயர். பொன் போன்ற கோங்கு எனலுமாம். பாங்கனுர் - தலைவர்; அவர் சென்ற நெறி சேய்மைத்தாயிராமல் அணிமைத்தா யிருப்பின், இளவேனிற் பருவமாகிய இதனில் மன்மதனும் குயிலும் மதியும் அன்னையின் கொடுஞ்சொல்லும் எனக்குத் துன்பமா யிரா. அவை பெரிதும் விரும்பத் தக்கனவாகவே காணப்படும். எனக்குத் துன்பம் விளைத்துப் பிழைசெய்வது தலைவர்சென்ற நெடிய வழியே என்றாள் என்க. தலைமகன் சென்ற பாலை நிலம் தலைவியின் உள்ளத்து அகலாது நிற்றலின், அந்நிலத்து மலராகிய கோங்கினைத் தோழிமுலைக்கு உவமை கூறினாள். 'பொன்னின்ற' என்ற கருத்துந் தலைமகன் பொருள்வயிற் சென்றதனை உள்ளி என்க; 'தமிழ்கெழு மூவர் காக்கும், மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்து' தலைவர் சென்றாரென்று தலைவி வருந்துவது இயல்பாதலால், அந்நெடு நெறியே பிழை செய்ததென்றாள். அன்னை வேறுபட்ட தலைவியை ஐயுற்றுக் கொடுஞ்சொற் கூறுவது வழக்கென்பதனை, "உன்னங் கொள்கையொடுளங்கரந் துறையு,மன்னை சொல்லும் உய்கம்" என்று தோழியும் தலைவியும் கூறுமாற்றால் உணர்க. தலைமகன் அணுமைக்கண் நின்றபோது அன்னைசொல்லும் கொடுஞ்சொற்கள் தலைவிக்கும் தோழிக்கும் உள்ளத்துத் துன்பஞ் செய்யாது மகிழ்வூட்டு மென்பதனை "இல்வந்து நின்றோற் கண்டனள் அன்னை, வல்லே என்முகம் நோக்கி, நல்லைமன்னென நகூஉப் பெயர்ந்தோளே!" (அகம் 248) என்பதனுலறிக. காக்கை குயிலை வளர்த்து விடலாவது, குயில் தான் இட்ட முட்டையினைக் காக்கையின் கூட்டிற் போகட்டுவிட, காக்கை அதனை வேற்று முட்டையென்று அறியாது, தனதென்றே நினைத்து அடைகாத்துக் குஞ்சுபொரித்து வளர்க்குமென்ப. இக்கருத்தினைக் கொண்டே குயில் 'பரபிருதம்' என்றும், காக்கை 'பரபிருத்' என்றும் வடமொழியாளரால் வழங்கப்பெறும் பரபிருதம், பிறனுல் போஷிக்கப்படுவது, பரபிருத், பிறனைப் போஷிப்பது.

குறிப்புரை நிறைவேறியது

"கண்ணன் கழலிணை நண்ணு மனமுடையீ
ரெண்ணுந் திருநாமந் திண்ணம் நாரணமே"

ஸ்ரீ:

# குறிப்பு அகராதி

எண் - பாட்டெண்


அ, சுட்டுப் பொருளில் வருவது, 123, 171, 367, 369.
அஆ - ஐயோ, (அருளின்கட் குறிப்பு) 9.
அஃகுதல் - குறைதல் 12.
அக்காரம் - வெல்லம், 112, 206, 374.
அக்கார்மன்னாவர்க்கு, 374.
அக்கு - சங்குமணி, 123.
அகடு - நடுவு, 2.
அகத்தார் - வீட்டிலுள்ளார், 31
அகத்து - உள்ளே, 106, 126, 331, 337, 360; மனத்திலே, 308.
அகம் - வீடு, 303. 318.
அகல்நிலா, 151.
அகல்யாறு, 150.
அகல்வானத்து உம்பர் - அகன்றவானத்தின் அப்பால், 137
அகலம் - மார்பு, 389, 392. விரிவுரை, 319.
அகலல்குல், 354, 372.
அகழ்தல் - தோண்டுதல், 150.
அங்கண், 148, 151, 176, 373.
அங்கணம் - ஜலதாரை, 175,
அங்கை - உள்ளங்கை, 123.
அங்கோடு-அழகியபக்கம், 372.
அச்சத்தோடிந்நாற்பொருள், 82
அச்சம், 81, 82, 83. 84, 145, 299.
அச்சு - வண்டியச்சு, 48.
அசாஅ - தளர்ந்து, 201.
அசைஇ - தளர்ந்து
அசைந்த - நேர்மையினின்றுந் தளர்ந்த, 187.
அசையாது - தளராமல், 194.
அசைவு - தளர்ச்சி, 150.
அஞ்சிப்பின் வாங்குமடி, 396.
அஞ்சுதல், 74, 87, 172, 256, 297, 396.
அஞ்ஞானம், 311.
அட்டது - சமைத்தது, 271.
அட்டில் - சமையலறை 363.
அடக்கம், 65, 170, 242.
அடக்குதல் - புதைத்தல், 26; மறைத்தல், 105, 196, 221, 229.
அடக்குப - அடங்கச்செய்வர், 351.
அடகு - இலை, 289; இலைக்கறி, 207, 217.
அடங்கு, 74, 116, 171.
அடம்பம்பூ, 107.
அடாஅ அடுப்பு - சமைக்காத அடுப்பு, 94.

அடிபெயராது - அடிபெயர்க்க ஒண்ணாது, 62.
அடுதல் - சமைத்தல், 68, 114, 116, 271, 289, 363, 382.
அடுக்கன் மலை - பக்கமலையை யுடைய மலை, 203.
அடுக்கிய மூவுலகு, 100.
அடுத்தடுத்து, 203, 348.
அடுப்பு, 94.
அடுவதுபோலுந்துயர் - காய்ச்சுவதுபோலும் துன்பம், 114,
அடைக்குமா மாண்டைக்கதவு -சுவர்க்கவாசற்கதவு மூடப்பட்டிருக்கும், 271.
அடைத்திருந்துண்டல், 271.
அடைந்தக்கால் - வந்துசேர்ந்தபோது, 123.
அடையப்பட்டார் - சேரப்பட்டார், 287.
அடையாவாம் - மூடப்பெறுமல் திறந்திருக்கும், 91.
அடையாவாம் ஆண்டைக்கதவு -சுவர்க்கக்கதவு அடைபட்டிராவாம் 91.
அடைவொழிந்தா ரான்றமைந்தார் - சேர்தலை ஒழிந்தார் அறிவுநிரம்பினுர், 54
அண்ணு, 31.
அணங்கருந் துப்பினரா - பிறரைவருத்துகின்றவெல்லற்கரிய வலியுடையபாம்பு, 241.
அணங்கு - காமநெறியால் உயிர் வாட்டுந்தெய்வப்பெண், 14.
அணங்குதல்-வருத்துதல், 241,
அணிகலம் - ஆபரணம், 242.
அணிகிளர்வண்டினம்- அழகிய வண்டுக்கூட்டம், 290.
அணிநீலக்கண் - அழகிய நீலோற்பலம் போன்றகண், 374.
அணியகலம் - அழகிய மார்பு, 389, 392
அணியர் - சமீபத்திலுள்ளார்; 218, 261.
அணியாளோ, 251.
அணை - சேர்த்துக்கட்டு, 192; தடை 231, படுக்கை 394.
அத்து, - செந்நிறம், 281.
அதர் - வழி, 192.
அதனை அது, 276.
அந்தோ - ஐயோ, 394.
அபகாரம், 69.
அபராணம் - பிற்பகல், 207.
அம்பல் - சிலரறிந்தபழிச்சொல் 87.
அம்பு - பாணம் 89, 152.
அம்ம - கேட்பாயாக, 395
அம்மருங்கு - அழகிய இடையையுடைய மகள், 396
அம்மனைக்கோலாகிய ஞான்று- தாயின்கைக் கோலாகிய காலத்து, 14.
அம்மா, இடைச்சொல், 173.
அமர்தல் - விரும்பி இருத்தல், 383, விரும்புதல், 1, 392.
அமர்வு - விருப்பம், 336
அமரர் - தேவர், 373
அமரார் - விரும்பாதார், 206.
அமிழ்து, 200, 210, 217.
அமைந்த - பொருந்திய, 63.
அமைந்தார் -அடங்கியவர், 54.
அமைந்தான் - பொருந்தினவன், 240.
அமைவுடைய - பொருத்தமுடைய, 135.

அயர்தல் - விரும்புதல், 16.
அயல் - அயலார், 87.
அயிர் - கண்டு சர்க்கரை, (பா) (116)
அயிராணி - இந்திரன் தேவி, 381. (அருந்ததி என்பர் நச்)
அயில் - கூர்மை, 386.
அரக்கு - சிவப்பு, 396.
அரண், 164.
அரவு - பாம்பு, 400.
அாற்றுதல் - ஒலித்தல், கூவல், 41, 249.
அரா - பாம்பு, 241.
அரி - ரேகை 394.
அரிது, 74, 76, 109, 161. 184, 244, 352, 353, 361,
அரிமா சிங்கம், 141, 152, 198.
அரிமா கொடிப்புற் கறிக்குமோ 141.
அரிமாப் பிழைப்பெய்தகோல் - சிங்கம் தப்பி ஓடுமாறு குறி தவறியெய்த அம்பு, 152.
அரிய, 77, 282, 317,
அரியர், 162, 165, 224, 226.
அரியரோ - இலரோ, 77.
அருகலது - குறையாதது, 161
அருங்கலம் - அரிய ஆபரணம் 40.
அருத்தம் - செல்வம், 304.
அருந்ததி 381 (நச்)
அருநவை - தீர்தற்கரிய குற்றம், 295.
அரும்பிணி - தீர்தற்கரியநோய், 173, 363.
அரும்பு, 390, 400.
அரும்பெறல் யாக்கை - பெறற்கரிய உடம்பு, 34.
அரும்பெறற் கற்பு, 381.
அருமை, 56, 164.
அருவி, 71, 77, 79, 161, 228, 285, 231, 232, 290, 307, 343, 344, 369.
அருள், 7, 20, 273, 321, 390.
அருளில் கூற்று, 20.
அருளும் - அன்பு செய்யும், 390.
அருளு மவனை நகும் - அருளுடையாரும் அவனைச்சிரிப்பர் 273
அரோ (அசை), 211, 239, 266, 386.
அல்கு நிழல் - மாலைக் கால நிழல், 166.
அல்குல், 354, 372.
அல்லல் - வறுமை, 170, 252, 287.
அல்லல்களைபவெனின் - துன்பத்தை நீக்குவாராயின், 170.
அல்லலடையப் பட்டார் - துன்பமடையப்பட்டவர், 287.
அலகு - அளவு, 22, 140.
அலரி - பூ, 199.
அலவன் - நண்டு, 123.
அலறுதல், 20, 25, 29.
அலி - ஆணுறுப்பு மிகுத்துப் பெண்ணுறுப்புக் குறைந்த நபும்சகம், 85,
அலியாகி யாடியுண்பா - நபும்சகமாய்ப் பிறந்து கூத்தாடி ஜீவிப்பார், 85.
அலை - திரை, 107.
அலைத்தல் - ஆட்டுதல், 47, 128, 194, 224, 287, 391.
அவ்வியம் - மனக் கோட்டம், 322.
அவ்வும் - அவையும், 171.
அவத்தம் - பயனின்மை, 327.

அவமதிப்பு, 163.
அவா - ஆசை, 59, 181.
அவாய் - விரும்பி, 251.
அவிழ்தல் - நெகிழ்தல், 12, 390.
அவை - சபை, 325.
அவிதல் - அடங்குதல், 66, 332
அவிர் கதிர் ஞாயிறு - விட்டு விளங்குகின்ற கிரணங்களை யுடைய சூரியன், 89.
அழல் - தீ, 89, 124; சூரிய வெப்பம், 202.
அழித்தல், 92, 129, 238, 302.
அழித்துப் பிறக்கும் பிறப்பு - அழிந்து மறுபடி பிறக்கும் பிறப்பு, 302.
அழிதல், 33, 105, 141, 147, 252, 272, 293. 302, 309.
அழிந்தார் பழி கடலத்துள் - பழியாகிய கடலுள அழிந்தார், 272.
அழுகுதல், 123
அழுங்குதல் - கெடுதல், 111, 300, 353
அழுத்துதல் - பதித்தல், 347.
அள்ளிக் கொள் வன்ன - அள்ளிக் கொள்ளத் தக்க, 262.
அளத்தல், 7, 103.
அளவு, 81, 91, 190, 272, 323, 330.
அளாய - அளாவிய, 177.
அளாயற்று - வளாவியதுபோலும, 240
அளித்து - இரங்கத் தக்கது, 15.
அளியர் - இரங்கத்தக்கார், 298.
அளிய விகழ்தல் - நெஞ்சு நோவ இகழ்தல், 219.
அளிநீரார் - அருட் குணமுடையார், 355.
அற்புத்தளை -ஸ்நேகபந்தம், 12.
அற்றக் கடைத்தும் - இல்லாத போதும், 150.
அற்றம் - வறுமை 78.
அறங் கூறவேண்டா, 158.
அறத்தாறு - அறநெறி, 257, 322.
அறநெறி, 118, 172.
அறப்பயன், 38, 99.
அறம், 7, 10, 19, 29, 32, 32, 83, 99, 118, 158, 165, 172, 190, 257, 272, 321, 322, 326, 330, 332, 338.
அறவினை, 29, 326, 332.
அறவுண்ணும் - முழுதுமுண்ணும், 382.
அருச்சுடுவதோர்தீ - அணையாமற் சுடும்தீ, 310.
அறிதற்கரிய பொருள், 317.
அறிதிரேல் அறியவேண்டின், அறிந்தீரில்லையோ, 106, 252.
அறிதும் - அறிவோம், 272.
அறிமின், 172.
அறியா - அறிந்து (கடவுள்); அறியாத, 163, 171, 257.
அறியார் - அறியாதவராய், 48
அறியாருமல்லர், 108.
அறிவதறிதல் - அறியவேண்டுவன அறிதல், 74, 108.
அறிவனூல் - கடவுள் அருளிச் செய்தநூல், (பா)140.
அறிவினவர், 162, 187, 301, 351.

அறிவு நூல் - அறிவுதரும்நூல், 140.
அறுக்க கில்லாவாம் -நீக்கமாட்டாவாம், 352.
அறுநீர்ச் சிறுகிணறு - நீரறுகின்ற சிறு கேணி, 275.
அறுமிடத்தும் - நீரற்றவிடத்தும், 185.
அறைகடல் சூழ் வையம் நக - ஒலிக்கின்ற கடல்சூழ் உலகத்தார் சிரிக்கக்கடவர், 230
அறைப் பெருங்கல் - பக்கமலையிலுள்ள பெரியகல், 360.
அறைப் பெருங்கல் லன்னருடைத்து, 360. [377.
அன்பு, 305, 321, 370, 371,
அன்மை, 229, 262.
அன்றில், 376.
அன்னம், 107, (குருகு), 135.
அன்னே - ஐயோ, 162, 330, 396.
அனைத்து,239, 329,344, 386.
அனையம்- ஒப்பேம், 388, 390.
அனையர், (அனையார்)213,216, 218, 270, 390.
ஆ - பசு, 101, 115, 118,279.
ஆஅயக்கண்ணும் - செல்வமுள்ளவிடத்தும், 184.
ஆக்கம் - செல்வம், 129, 275, 301, ஸம்சாரம் 327.
ஆக்கும் - உண்டாக்கும், 124.
ஆகா - இயலாது, 104.
ஆகாதெனினும் - குடிக்கஇயலாவிட்டாலும், 337.
ஆகுவர் - சிறப்பர், 179.
ஆங்கு - போல, (உவமை இடைச்சொல்) 79, 171, 197, 201, 375.
ஆட்டுதல் - ஆலையிலிட்டுஅரைத்தல், 35,
ஆட்பார்த் துழலுங் கூற்று - ஆளைப்பார்த்துத் திரியும்யமதூதன், 20.
ஆடிய - நீராட, 332.
ஆடியற்று - விளையாடினாற்போலும், 331.
ஆடியுண்பார் - கூத்தாடிச் சீவனம் செய்வார், 85.
ஆடிவிட்டற்று - புணர்ந்து நீங்கினாற்போலும், 240.
ஆடு கோடு - ஆடுன்ற கொம்பு, 192.
ஆடுதும் - நீராடுவோம், 332.
ஆண்கடன் - புருஷலக்ஷணம், 98. [யவர், 351.
ஆண்டிளையர் - வயதினால்இளை
ஆண்டைக் கதவு - சுவர்க்கக் கதவு, 91, 271.
ஆண்மகன், 202 386.
ஆண்மை, 194.
ஆணம் - நேசம், 374.
ஆணிழந்தபேடி - ஆணுறுப்புக் குறைந்த நபும்ஸகம், 251.
ஆணின்மை - பௌருஷமின்மை 84. [181.
ஆது நாம் - நாம் வழ்வோம்,
ஆம்பல், 236, 396. [377.
ஆமா - பசுவாகிய விலங்கு319,
ஆமிடத்தேயாகும், 110.
ஆமை, 331.
ஆமையை உலைநீரிலிட்டுத் தீமடுத்தல், 331.
ஆய்ந்தமைந்த கேள்வி, 63.
ஆய்நல மில்லாதார் மாட்டு - உத்தமகுண மில்லாதாரிடம் 339.

ஆயிழை - ஆராய்ந்து பூண்ட ஆபரணம், 372.
ஆயுங்கால், 37. [161.
ஆர்க்கும் - சப்திக்கின்ற, 122,
ஆர்த்தல் - ஒலித்தல், 73, 122, 161,223,364; நுகர்வித்தல், 290, நிறைதல்,351.
ஆர்வர் - உண்பார், 200.
ஆரப்பெறேஎம் - செல்வம் நிரம்பப் பெற்றிலேம், 366.
ஆரவுணலின் - வயிறு நிறைய உண்டலின், 302.
ஆருயிர், 238, 330.
ஆலம் வித்து, 38.
ஆலமரம், 197.
ஆவதறிவார்ப் பெறின், 73,
ஆவதின் மாக்கள் - உறுதியாவன செய்துகொள்ளாத ஜனங்கள், 271,
ஆவாம் - விருத்தியாவோம்,32.
ஆவின் கன்று, 115.
ஆவுளுய்த்து விடினும் - ஆக்களின் மத்தியில் செலுத்தி விட்டாலும், 101.
ஆழ்கலத்தன்னகலி - கடலில் ஆழ்கின்ற மரக்கலத்திலுள்ளார்கதறும் ஒலிபோன்ற ஆரவாரம். 12,
ஆள்வினை - இடை விடாத முயற்சி, 195.
ஆளாய் - ஊழியனாய், 122.
ஆற்ற - மிக, 6, 7, 34, 62, 69, 78. [தாலும், 78.
ஆற்றப்பசிப்பினும் - மிகப்பசித்
ஆற்றாதார் - பிரதி உதவி செய்யமாட்டாதார் 98.
ஆற்றாமை - மாட்டாமை, சக்தியின்மை 67.
ஆற்றான் - செய்த தவப்பயத்தால், 103, 243.
ஆற்றுதல் - உண்பித்தல், 184; உதவுதல், 284; செய்தல் 295; 309. சகித்தல், 151, 303, 306; செலுத்துதல், 396, (அகம் 35)
ஆற்றிய காலம் - செயலாற்றிய காலம், (சக்தியுள்ள காலம்) 329.
ஆற்றுந்துணை, 75, 196.
ஆறுபோயற்று -யாற்றைக்கடந்தாற்போலும், 136.
ஆன்படுநெய்-பசுவின்நெய்,239
ஆன்ற - அகன்ற, 54, 106, 163, 252.
இகந்து - கடந்து, 33.
இகலிலார் - விரோத மில்லாதவர், 137.
இகவா - கடவா, 6.
இகழ்ந்த வினைப்பயத்தால், 58.
இகழ்தல் - மதியா திருத்தல், 58, 117, 136, 157, 159, 180, 219, 235, 253, 321.
இசைதல் - கூடுதல், 95, 111, 152, 181, 194.
இசையாவாகும் - ஒலியா நிற்கும், 257.
இசை தோறும் - பொருந்தும் போதெல்லாம், 60
இசைந்த சிறுமை - பொருந்திய சிறுமைக் குணம், 187,
இசைபட - புகழ் உண்டாக, 338.
இசையாதெனின் - கூடாவிட்டால் 95, 152, 181, 194.
இசையா வொரு பொருள் இல்லென்றல் - கொடுக்க

கூடாத ஒரு பொருளை இல்லையென்றல், 111.
இட்டஞான்று -வைத்தபோது, 216.
இட்டாறு (இட்டுஆறு) - நெருங்கியவழி, 288.
இட்டுக் கலுழ்ந்தாள் - நழுவ விட்டு அழுதாள், 393.
இடக்கண் அனையார் - (குடியின்) இடப்புறத்தினை ஒத்தார், 390.
இடம்- இடப்புறம், 300, 388; காலம், 91, 149, 384; பருவம் 11விசாலம், 116, 300.
இடம்பட - பரம்ப, 116.
இடித்தல் - நசுக்குதல், 156; மேகம் முழங்குதல், 100.
இடுக்கண் - துன்பம், 141, 328, 382, [உள்ளம், 274.
இடுக்குடை உள்ளம் - குறுகிய
இடுக்கு - லோபகுணம், 274
இடுகாட்டு ளேற்றைப் பனை - பிண மிட்டுப் புதைக்கும் மயானத்திலுள்ள ஆண் பனை, 96
இடுதலை-போடப்பட்டதலை,49
இடுநீற்ருற் பை யவிந்த நாகம்- இட்ட விபூதியினுலே கோபம் தணிந்த (படம் அடங்கிய) நாகம், 66
இடும்பை - துன்பம், 107,282.
இடும்பைகூர் நெஞ்சத்தார் - துன்பம் மிக்க நெஞ்சினை யுடையார், 107.
இடை - மத்திமத் தொழில், 365, மத்திமர், 297, 366.
இடைக்கண் - நடுக்கணு, 390..
இடைதிரிதல் - நடுவில் வேறுபடுதல், 212.
இடைதெரிந்து - அழிதலைத் தெரிந்து, 54.
இடைப்புகுதல் - நடுவிற் புகுதல், 254, 255, 314;
இடைமிடைதல் - இடையே கோத்தல், 80
இடையாக - ஆயுளின் இடைப்பட்டகாலத்திலே, 119.
இடையிடையே வைத்த - மத்தியில் வைத்த, 46
இதழ் - மடல், 221
இந்திரன், 346, 373.
இந்திரனுவெண்ணீவிடும், 346
இம்மாலை யென்செய்வதென்று 393
இம்மியரிசித் துணையானும் - மத்தங்காய்ப் புல்லரிசியே உணவுக்குத் துணை யானுலும், 94
இம்மென - இம் என்னும் அநுகரண ஒலியுடன், 392
இம்மை பயக்கும் - இம்மைப் பயனை விளைக்கும், 132
இமைத்தல் - கண்ணிமைத்தல், 302, 323, 345; பிரகாசித்தல், 127, 146; 361
இயக்குவான் - செலுத்துபவன் 136 [334
இயங்குதல் - சஞ்சரித்தல்,
இயல்பிலார் - நற்குணமிலாதார் 224
இயல்பு - குணம் 74, 205, 224, 244, 292, 384.
இயல்புடையார் - தன்மை யுடையவர், 74;
இயன்றது - செய்யப்பட்டது, 353

இயனெறி - கீர்த்தி, 294.
இயைந்தவளவு - கூடியவள்வு, 91; 272
இரட்டியுறும் - இருமடங்கு நன்மையாகும். 95
இரப்பார்க் கொன்றீயாமை யச்சம் - யாசிப்பவர்க்கு ஒரு பொருளைக் கொடாமை அச்சம். 145
இரப்பாரை எள்ளாமகன் இரப்பவரை இகழாத புருஷன், 307
இரவாதார் - யாசியாதவர், 296
இரவாமையீதல் - யாசியாது கொடுத்தல், 95
இரவென்னும் ஈனவிளிவு - யாசகம் என்னும் மிகத் தாழ்ந்த கருமம், 40
இரிதல் - ஓடுதல்; 212
இருக்கை எழல் குடிப்பிறந்தார் ஒழுக்கம், 143
இருங்கழி - பெரிய உப்பங் கழி, 168
இரு சிகையு முண்டீரோ - இரண்டு கவளமாகிலும் உண்டீரோ, 18
இருதலையுமெய்தும் - அறமும் இன்பமுமாகிய இருபக்கமும் பொருந்தும், 114
இருந்தன்று - இருந்ததில்லை, 258
இருந்தை - கரி, 258
இருந்தைக்க - இருக்க, 79.
இருப்பார்க்குங் காலர் - இருப்பு விலங்குகள் ஒலிக்கும் காலினர், 122
இரும்புனம் - பெரியகொல்லை, 178.
இருமை - இம்மை மறுமைகள், 129
இல்-இல்லறம், இல்வாழ்க்கை, 13, 182; 383; குடும்பம், 30, 332; நற்குலம், 146, 212, 320. 358; மனை, 198, 210; 225; 326; 363; மனைவி, 364.
இல்ல - இல்லாதன, 219
இல்லத்தி லாக்குதலால் - வீட்டிலுண்டாக்கிக் கோடலால் 225
இல்லா ளமர்ந்ததே இல் - மனையாள் அமைந்து நின்றதே இல்லறமாவது, 383
இல்லாளா - இல்லில் இருக்கையில், 86
இல்வாழ் பேய் - மனையில் வாழும் பேய், 363
இலக்கணம் - குறிப்பு, 399
இலங்குதல் - மிளிர்தல், 227, 344.
இலாஅஅர்க் கில்லை தமர் - பொருளில்லார்க்குப் பந்துக்களில்லை, 283
இழந்தாங்கு - இழந்ததுபோல, 199
இழிதக்க - பழிக்கத் தக்கன, 302
இழிந்தவை - இழிந்த வஸ்துக்கள், 259
இழிப்பு - அவமதிப்பு, 163.
இழுக்கு - குற்றம், 362
இழை - ஆபரணங்கள், 361
இழைத்த நாள்-அளந்து செய்த ஆயுள் நாள், 6.
இளம்பிறை, 241
இளமை கொன்னே கழிந்த

ன்று இளமைவீணே கழிந்தது, 55
இளமை மகிழ்ந்தார் - இளமைக்கு மகிழ்ந்தார்; இளமையில் அறஞ்செய்தலை மறந்தார், 11 (இனியது. 38)
இளியா - இகழ்ந்து, 253
இளிவந்த போழ்து - அவமானம் வந்தபோது, 62
இளையர் - சிறியவயதினர், 351
இளையானடக்க மடக்கம், 65.
இற்கொண்டு - மனைவியை மணந்துகொண்டு, 364
இற் சார்வு - இல்வாழ்க்கையிற் பொருந்துதல், 182
இற்செறிந்து - இல்வாழ்க்கையிற்பொருந்தி, 13
இற்பிறந்தார் கண்ணே யுள, 146
இற்றிதன்பண்பு - இதனியல்பு இத்தன்மைத்து, 49
இற்றிதன் வண்ணம்; 50
இற்றோன்றி - குடும்பத்தில்வந்து பிறந்து, 30
இறத்தல் - மிகுதல்; 38; 99; 174; 223; 228.
இறப்பச் சிறிது - மிகச்சிறிது, 99
இறுகாலத்து என்னை பரிவு - ஆயுள் முடியுங் காலத்துத் துக்கமேன், 110
இறுகிறுக - மிகஇறுக, (பரிப) 328
இறுகிறுகி - மிகஇறுக்கி, சிக்கனமா யிருந்தது, 328
இறும் அளவு - இறக்கும்வரை, 209
இறைஞ்சுதல் - வணக்குதல்; [304
இன்பத்தின் பக்கமிருந்தைக்க - இன்பத்தின் பகுதியிலே இருக்க, 79
இன்பமிடை தெரிந்து, - இன்பம் அழிதலையுணர்ந்து, 54.
இன்பமெனக் கெனைத்தாற் கூறு - இன்பம் எத்தன்மைத்து எனக்குக்கூறு, 84.
இன்பமே காமுறுவர் ஏழையர், 54, 60,
இன்ப மொழியாமைகண்டாலும் - இன்பம் நீங்காமையைக்கண்டாலும், 79,
இன்மை தழுவப்பட்டார்க்கு - வறுமையடைந்தவர்க்கு, 285
இன்னர் - இத்தகையார், 205.
இன்னுங்கெழுந்திருப்பார் - துன்புற்று எழுவார், 11.
இன்னுங்குசெய்வார்ப்பெறின் - துன்பஞ் செய்வாரைப்பெற்றால் 355.
இன்னுத செய்தாதார் யார் - துன்பமெய்தாதார் யார்? 119.
இன்னினியே - இப்பொழுதே, 29, 334.
இன்னே - இப்போதே, 55.
இனம் - கூட்டம், 283, 290. சுற்றம், 146, 179, 180, 204. 240, 244, 245.
இனியவொழிகென்று - இனியவாக ஒழியக்கடவன வென்று, 76.
ஈ, 41, 61, 218, 259, 389.
ஈக்காற்றுணை - ஈயின்காலளவு சிறுமை, 218.
ஈச்சிற கன்னதோர் தோலறினும், - ஈயின் சிறகளவாகிய

சிறுதோலற்ருலும், 41.
ஈதட்டுதல் - சம்பாதித்தல், 10. 280.
ஈண்டுங்காவீண்டும், 93.
ஈணடுதல் - நெருங்குதல், 38, 109, 245. பெருகுதல், 93.
ஈண்டுநீர்வையம், - மிக்கநீராற் சூழ்ந்த உலகம்109.
ஈண்டை வலே - இவ் வுலக வின்ப வலே, 331.
ஈதலிரட்டியுறும் - கொடுத்தலினும் இருமடங்கு நன்மை யுண்டாம், 95.
ஈர்க்கிலென் - இழுத்தாலென்ன, 26.
ஈர்ங்குன்றநாட - குளிர்ந்தமலே நாடனே, 113.
ஈர்ங்கோதையாள் - குளிர்ந்த மாலேயை யுடையாள், 46.
ஈரங் கிடையகத் தில்லாகும் - நெட்டியிடத்து ஈரமில்லாதாகும், 360.
ஈரமிலாளர்தொடர்பு - அன்பிலாதவர் நேசம், 138.
ஈவதுஆண்கடன் - கொடுத்தல் புருஷலக்ஷணம், 98.
ஈன்ருட்கு இறப்பப் பரிந்து - பெற்ற தாய்க்கு மிக இரங்கி 316.
ஈனம் - இழிவு, 40, 198.
உகிர் - நகம், 198, 206.
உகுதல் - உதிர்தல், 45, 292.
உசாவுதல் - க்ஷேமம் விசாரித்தல், 201.
உஞற்றுதல் - முயன்றுசெய்தல், 32.
உட்கான்பிறனில்புகல்- அஞ்சாமல் பிறன் மனேவியை விரும்பல், 83.
உட்கி - பேசுதலிற்கூசி, 384. (மெத்தெனப் பேசி என்றபடி)
உட்கு - அச்சம், 49, 50, 83, 164, பலருங்கூசத்தக்க மதிப்பு, 102, 384.
உட்குடைமை - பிரர் அஞ்சும் ஆற்றலுடைமை, 188.
உட்குடையாள் - பிறர்தன் கற்பினேக்கண்டு கூசும் மதிப்பைப்பெற்றவள்; பிறர்மதிக்கும் மதிப்புடையள்,(பழையவுரை) 384.
உடங்கு - ஒருசேர, 173.
உடம்பிட்டு - உடம்பைப்பெற்றிருந்து, 102.
உடம்பழிந்தக்கண்ணும், 141.
உடம்பிற்கே ஒப்புரவு செய்தல் - உடம்பை வள்ர்த்தற்கே வேளான்மை செய் தல், 37.
உடம்பின்பயன் கொண்டார் - உடம்பினலாகிய பயனேக் கொண்டவர், 35.
உடம்பு 10, 34, 35, 37, 40, 42, 80, 102, 120, 141, 173, 330, 379, 380; உடம்பையுடைய மக்கள், 258; பிறப்பு 380.
உடம்பு நீட்டித்து நிற்குமெனின்- உடம்பு நெடுநாள் இறவாதிருக்குமாகுல், 40.
உடன் - எல்லாம், 33?.
உடாஅது - ஆடையுடுக்காது, 10.
உடுக்கை - வஸ்திரம், 141.
உடுத்து, ?64.

உடைமை, 233, 251, 281.
உடைய பிலந் தலைப்படுதல் - மிக்கபொருளுடைய சுபங்கத்தை எதிர்ப்படுதல், 160
உடையார் - செல்வமுள்ளார், 160, 337.
உடையீர் - செல்வமுடையீர், 7.
உண்டல், 206, 217, 271.
உண்டாகவைக்கற்பாற் றன்று - செல்வமுண்டானல் தருமம் பண்ணமல் வைக்கத்தக்கதன்று, 1.
உண்டாநெறி - வழி யுண்டாகும், 154.
உண்டி, 1, 43, 363.
உண்டுண் டென்னு முணர்வு - இன்பம் நிச்சயமாக உண்டு என்னும் எண்ணம் 25.
உண்ணப்பண்ணப்படும் - அநுபவிக்குமாறு செய்க, 37.
உண்ணுட்டம் - உள்ளத்துள் ஆராய்ச்சி, 18. [303.
உண்ணுமின் - உண்ணுங்கள்,
உண்ணுர்கைத்து உண்ணற்க - உண்ணத்தகாதார் கைச்சோறுஉண்ணுதொழிக, 80.
உண்ணேம் - உண்டறியேம், 366.
உணக்குதல் - உலர்த்துதல், 258.
உணர்தல் - அறிதல், 4, 39, 106, 144, 173, 182, 239, 247, 292, 321; ஊடலொழிதல், 384.
உணர்வது உடையார் - அறியவேண்டுவென அறிந்தவர், 264,
உரையாமை முன் னுணரும் ஒண்மையுடையார் - சொல்லாமுன்னேயே அறியும்புத்தித்தெளிவுடையார், 292.
உணர்வுடையார் குறிப்பின்கீழ்ப்பட்டதுலகு, 196.
உணரார் - மதியாதார், 365.
உணரார்பின் சென்று நிலை - தம் தன்மையை அறியார்பின்சென்று இரந்து நிற்கும் நிலை 365. [334, 364,
உதவுதல் - பயன்படுதல், 218,
உதிர்ந்து உக்க பல், 45
உப்பிலிப்புற்கை - உப்பில்லாத கூழ், 206.
உப்பிலிவெந்தை - உப்பில்லாத வெந்த உணவு, 289.
உப்பு - இனிமை, 133, 391.
உபகாரஞ் செய்ததனை யோராதே - உதவிசெய்ததை நினையாது; 69
உபாயம் - முயற்சி, 119
உம்பர் - அப்பால், விண்ணுலகம், 37, 137,
உம்பருறைவார்பதி - (வானத்துக்கு) அப்பால் வசிப்பவராகிய தேவர் உலகு, 137.
உம்மை - பிற்பிறப்பு, 58; முற்பிறப்பு, 85, 94.
உமி - நெல்லினுமி, 221.
உய்த்திட்டுந் தேனீக்கரி, 10.
உய்த்தல் - எடுத்துக் கொண்டுபோதல், 10, 25, 318; செலுத்துதல், 59, 66, 101.
உய்தல் - பிழைத்தல் 23, 53, 90, 97, 277.
உய்ந்தபல - தப்பிப்பிழைத்தன பலவாம், 277

உய்ந்துபோமாறே வலிக்குமாம் மாண்டார் மனம் - பிழைத்துப்போம் வழியிலேயே மாட்சிமைப்பட்டார் மனம் இழுக்கும், 23.
உய்யக்கொண்டு - பிழைத்தலை மனத்துட்கொண்டு, 53.
உய்யுமாறு - பிழைக்கும் விதம், 97
உயங்குதல் - வருந்துதல், 391.
உயர்த்து நிறுத்தல் - மேமெலடுத்து நிறுத்துதல், 248
உயலாகும் - பிழைத்தலாகும், 90.
உயிர்போயார் - இறந்தவர், 50.
உயிர்த்தல் - பெருமூச்சுவிடுதல் 33;வாசனைவீசுதல்,108,349
உயிரைத்தாங்காது - உயிரைத் தரிக்காது,62.
உரங்கவரு - அறிவே பற்றுக்கோடாக, 153.
உரவுநீர் - உலாவும் நீர்; மிக்க நீருமாம், 175.
உரவோர் - அறிவுடையோர், 57, 88.
உரன் - வலிமை, 65.
உராய் - உராய்ந்து பரந்து, 64
